
# செங்குந்தர்

## வரலாற்று ஆவணங்கள்



வெளியீடு

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

செ. இராசு

# செங்குந்தர்
# வரலாற்று ஆவணங்கள்

ஆசிரியர்
புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் தலைவர்
கல்வெட்டு - தொல்லியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு
தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்
58, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை - 600 001.

# நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள் |
| நூல் பெருள் | : | வரலாறு |
| ஆசிரியர் | : | புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி.,<br>58/2 திரு.வி.க. நகர் முதன்மைச் சாலை<br>ஈரோடு - 11.<br>தொலைபேசி: 0424 2262664 |
| மொழி | : | தமிழ் |
| நூல் உரிமை | : | தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம் |
| பதிப்பு ஆண்டு | : | 2009 |
| நூலின் அளவு | : | 11 செ.மீ x 18 செ.மீ |
| பக்கங்கள் | : | 372 |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| விலை | : | ரூ. 200.00 |
| நூல் கிடைக்குமிடம் | : | 1. **தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்**<br>58, அரண்மனைக்காரன் தெரு,<br>சென்னை - 1.<br>தொலைபேசி : 52173733 / 52173735<br><br>2. **J. சுத்தானந்தன்,** B.Sc.,<br>145, திருநகர் காலனி,<br>ஈரோடு - 638 003.<br>தொலைபேசி: 0424 - 2210796, 2214779 |
| நூல் & அட்டை வடிவமைப்பு | : | சகூரா அச்சகம்<br>முத்துவேலப்ப வீதி,<br>ஈரோடு - 638 001. |



உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 வது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

தருமபுரம்

மயிலாடுதுறை (அஞ்சல்), 609 001.

*"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"*

தேதி : 08.09.2009

---

# ஆசியுரை

தமிழ் மக்களிடையே தெய்வ பக்தியில் சிறந்து விளங்கும் சமூகத்தினர் செங்குந்தர்கள் ஆவர். இவர்கள் கயிலையங்கிரியில் முருகப்பெருமான் திருஅவதாரத்தின்போது நவசக்திகளின்பால் சிவபிரான் அருளால் தோன்றிய நவ வீரவாகுதேவர்களின் மரபினர் எனக் கூறப்படுவர். இவ்வரலாற்றுக் கேற்ப இச்சமூகத்தினர் முருகப்பெருமான்மேல் மிக்க பக்தி உடையவர்களாக விளங்கக் காணலாம். கயிலையங்கிரியிலிருந்து செவ்வியகுந்தம் ஏந்தி வந்தவர்கள் ஆதலின் செங்குந்தர்கள் எனப்படுகின்றனர். சிக்கல் போன்ற தலங்களில் முருகப்பெருமானது கந்தசஷ்டி விழாவில் இவர்களும் படை வீரர்களாகச் செல்வதைக் காணலாம்.

இச்சமூகத்தினர் ஆலயத்திருப்பணி போன்ற சமயப்பணிகளில் ஈடுபாடு கொண்டு விளங்கி வருவதோடு பலரும் தமிழ்த்துறையில் மேம்பட்ட கல்வியாளர்களாக விளங்கி வருகின்றனர். இதுபோது இச்சமூகத்தினர் ஈரோட்டில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தலைவர் **திரு. ஜெ. சுத்தானந்தன் அவர்களின் 66வது பிறந்தநாள் விழாவை** செங்குந்த இளைஞர்களின் எழுச்சி நாளாகக் கொண்டாடுவதறிந்து மகிழ்கிறோம்.

செங்குந்த இளைஞர்கள் சைவசமயப் பற்றுடையவர்களாக பண்பாட்டில் சிறந்து விளங்குபவர்களாக உருவாக விழா பயன்படவேண்டும்.

செங்குந்தர்கள் நலமுடன் நீடுவாழவும், விழா சிறப்புற
நடைபெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவபெருமான் பேரருள்

தொலைபேசி :
0452 - 4377116
4381005



புனித மிக்க

**மதுரை ஆதீனம்**

262 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத**

**ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக**

**பரமாசாரிய சுவாமிகள்**

&

ஆதீனகர்த்தர்

தெற்காவணி முல வீதி,
மதுரை - 625 001

---

## ஆசியுரை

ஆசீர்வாதம் !

திரு. ஈரோடு பி. சத்தீஷ் அவர்களுக்கு தங்கள் 03/09/09 ஆம் நாளிட்ட மடல் கிடைத்து மகிழ்ந்தோம்.

செங்குந்தர் சமுதாயத்தின் வரலாற்றை பழங்காலக் கல்வெட்டுகள், செப்பேடு பட்டயங்களை ஆய்வு செய்து ஒரு சிறப்பான நூலை நமது **புலவர் திரு. செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி. அவர்கள் உருவாக்கியிருப்பதைக் கண்ணுற்று மிகுந்த மன நிறைவு கொண்டோம் ! எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூல், நமது அன்பிற்கும், பாராட்டுதலுக்கும் உரிய "செங்குந்த மக்களின் பெருந்தலைவர்" **திரு. ஜெ. சுத்தானந்தன் அவர்களின் 66 ஆவது பிறந்தநாள் விழாவில்** வெளியிடப்பெறுவது மிகவும் பொருத்தமானது.

செங்குந்தர் சமுதாயம், எல்லா வகைகளிலும் மேம்பட்டுத் திகழவும், பண்பாடு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் தன்மை, சிவபக்தி, ஒற்றுமை இவை அனைத்தையும் கடைப்பிடித்து, இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திடத் திருவருள் பாலிக்குமாறு எமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமானைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றோம் !

எல்லோருக்கும் ஆசீர்வாதம் !!

07/09/09 **ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்**

PHONE : 56655

"KAILAI MA MUNIVAR"

**THIRU VALAR THIRU KASIVASI**

MUTHUKUMARASWAMI TAMBIRAN

SWAMIGAL



SIVA SIVA

HEAD OF KASITHIRU MADAM

TIRUPANANDAL - 621 504

THANJAVUR DISTRICT

தேதி : 25. 08. 09

---

# வாழ்த்துரை

செங்குந்தர் சமுதாயத்தின் வரலாறு **புலவர் செ. இராசு** அவர்கள் தமிழ்க்கொடையாக **"செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்"** எனும் பெயருள்ள நூலாக மலர்வதும், அந்நூல் செங்குந்தமகாஜன சங்கத் **தலைவர் திரு. ஜெ. சுத்தானந்தன் 66 ஆவது பிறந்த நாளில்** வெளியிடப்பெறுவதும் அறிய மகிழ்ச்சி.

பல்வகை ஆவணங்களில் கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றின் வழியாக வரலாற்றைச் செய்துள்ள புலவர் செ. இராசுவின் நுண்மாண் நுழைபுலம் அந்நூலின் செறிவுக்கும் சீர்மைக்கும் வழிவகுத்து நூல் செம்மையுற வெளியிடப்பெறவும் அதன்வழி வரலாறு யாவர்க்கும் எளியதாய் வெளிப்படவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

ஜெ. /

சிவ சிவ

திரு. பி. சண்முகவடிவேல்,
ஈரோடு

☎ : 04144-222075

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



**ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள்**
ஸ்ரீ மௌன மடாலயம்
39, சபாநாயகர் தெரு, சிதம்பரம் - 608 001.

தேதி : 6.9.2009

---

## வாழ்த்துரை

சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த னடியிணை மறவாத

தருமைக் குருமணி அடிப்பொடி ஈரோடு பி. சண்முகவடிவேலுவுக்குத் திருவருளாலும் குருவருளாலும் நலம் வளர்க.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை முன்னாள் தலைவர் **புலவர் செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி. அவர்கள் அரிதின் முயன்று எழுதிய **செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்** என்ற நூலை 21.09.2009 அன்று ஈரோட்டில் நடைபெற உள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் **திருவாளர் ஜெ. சுத்தானந்தன் அவர்களின் 66வது பிறந்தநாள் விழாவில்** வெளியிட உள்ளதை அறிந்து கழிபேருவகைக் கடலில் திளைக்கின்றோம்.

நூலாசிரியர் திரு. செ. இராசு அவர்கள் தமிழகம், புதுவை, ஆந்திரம் ஆகிய இடங்களில் கிடைத்த இருநூற்றுப் பதினொன்று கல்வெட்டுகளையும், பதினான்கு பட்டயங்களையும் துணைக்கொண்டு செய்யப்பட்ட ஆய்வு பல்லாற்றானும் பாராட்டுதலுக்கு உரியது.

**செங்குந்தர் சிவாலய பரிபாலனச் சிறப்பு :**

விடங்கம் ஏழாதி வீதிவிடங்கம் ஆரூர் வெண்காடும்
நடங்கொளும் தில்லைமூதூர் பஞ்சநன் னதி சாய்க்காடும்
இடங்கொள் மாகாளம் ஏழும் இடைமருதூர் செங்காடும்
தொடங்கிய தரும ஆட்சித் தொகுதி செங்குந்தர் வாழி

(ஈட்டி எழுபது - செய் -5)

மலரிவரு கூத்தனாகிய ஒட்டக்கூத்தர் செங்குந்தர்கள் சைவத்திருக்கோயில்களில் ஆட்சி பரிபாலனம் செய்த மாட்சியை ஈட்டி எழுபது என்ற நூலில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்கள். வரலாற்று ஆவணங்களாக ஒருசில சான்றாதாரங்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றிருந்த நிலையில் செங்குந்த மரபினரின் மேன்மையைச் சென்றகாலத்தின் பழுதிலாத்திறத்தை வெள்ளிடை மலையென விளக்கமாய்க் காட்டிடும் காலக்கண்ணாடியாய் "செங்குந்த வரலாற்று ஆவணங்கள்" என்ற நூல் விளங்கிப் பொலிகின்றது.

திருத்தொண்டர் புராணம் அருளிச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் தெய்வச் சேக்கிழார் பெருமான் ஊர் ஊராகச் சென்று கோயில்கள் தோறும் கல்வெட்டுகளைக் கண்டு, ஊர்ச் சான்றோர்களை உசாவியறிந்து முழுமையான உண்மைச் செய்திகளையே புராணமாக்கித் தந்தனர். அஃதே போல் நூலாசிரியர் பெருமைக்கும் பாராட்டுதலுக்கும் உரிய திருவாளர். செ. இராசு அவர்கள் ஊர் ஊராகச் சென்று கோயில் கோயிலாக நுழைந்து செப்பேடுகளையும், பட்டயங்களையும், ஓலைச் சுவடிகளையும், கல்வெட்டுக்களையும் சேகரித்துப் படித்து ஆய்வு செய்து முழுமையான உண்மைகளையே வரலாற்று நூலாக வடித்துத் தந்துள்ளார்கள்.

மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்து பதிப்பித்துத் தமிழுலகிற்குப் பெருந்தொண்டு புரிந்ததைப் போன்றதொரு பெரும்பணியாக இப்பணியினை நாம் கருதலாம். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இருநூற்றுப் பதினொரு கல்வெட்டுகளின் தொகுப்பாக மட்டும் இல்லாமல், ஆய்வு நெறியில் நின்று கண்டறிந்து உண்மைகளின் களஞ்சியமாகவும் இந்நூல் திகழ்கின்றது எனலாம்.

வீரம், நம்பிக்கைக்குரிய சான்றாண்மை, கோயிற் பணிகள், சமுதாயப் பணிகள், இலக்கியப் பணிகள், அழகுக்கலைகளை வளர்த்தல், திருக்கோயில் நிர்வாகம், நெசவுத் தொழிலில் மேன்மை, மகளிர் செய்த திருப்பணிகள், புகழெனின் உயிரும் கொடுக்கும் தியாகம் போன்ற அனைத்து நிலைகளிலும் செங்குந்தர்கள் தலைமை பெற்று நின்றமையை சேதாரமில்லாத ஆதாரங்களோடு ஆழங்கால் பட்ட சிந்தனைத் தெளிவோடு நிறுவியிருக்கும் சமுதாய ஆய்வேடு என்றும் இந்நூலைப் புகழ்ந்து போற்றலாம்.

ஆந்திர மாநிலம் திருப்பதி திருச்சானூர் வாகன மண்டபத்து மேற்குச் சுவரில் உள்ள மூன்றாம் இராசராசனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி:பி 1221) திருச்சுகனூர் கைக்கோளர் ஆண்டார் மகன் பொக்காரன் பாண்டியதரையன் அழகிய பெருமான் செலவு செய்து ஏரி ஒன்று தோண்டி அதன் கீழ் ஆறுபட்டி நிலம் கொடையாக அளித்தார் என்ற செய்தியை இந்நூலில்தான் தெரிந்து கொள்ள முடிந்தது. அக்காலத்துச் செங்குந்தர்தம் சமுதாயப் பணியை இச்செய்தி உறுதிப் படுத்துகின்றது.

நாவினால் மழுஎடுத்த ஞானப்பிரகாசர் செப்பேடு "கொங்கு 72 நாட்டில் உள்ள கைக்கோளர்கள் அனைவரும் இரட்டை விளக்கும், இடங்கைப் பாவாடையும் இட்டு எண்கால் பீடத்தில் ஞானப்பிரகாசரை அமரச் செய்து பாதார்ச்சனை செய்ய வேண்டும் என்றும் அவருக்குத் தறிக்கு ஒருபணம், தலைக்கட்டுக்கு ஒரு பணம், நன்மைக்கு ஒருபணம், தீமைக்கு ஒரு பணம், மூக்குத்திக்கு ஒரு பணம் ஆக ஐந்துபணம் அளிக்க வேண்டும்" என்று கூறுகிறது. இக்கல்வெட்டுச் செய்தி பெண்மகவு பிறந்ததற்கும் வரிவிதிக்கப் பட்டமையைக் காட்டுதல் காணலாம்.

இந்நூல் சென்ற காலத்தின் பழுதிலாத்திறத்தை நினைவு கூர்ந்து எதிர்காலத்தை நன்கினிது உருவாக்கும் சிந்தனைக்கும், செயலுக்கும் பல்லாற்றானும் துணைபுரியும் என்பது உறுதி.

இந்நூலை யாத்தளித்த திருவாளர் செ. இராசு அவர்கட்கும் 66வது பிறந்தநாள் விழாக்காணும் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் திருவாளர் ஜெ. சுத்தானந்தன் அவர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீமத் ஆனந்த நடராஜப் பெருமானின் திருவருளையும் ஸ்ரீ மௌன தேசிகர் குருவருளையும் நீள நினைந்து வாழ்த்தும்

**ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

உ

குருபாதம்

பேணித்தொழுமவர் பொன்னுலகாளப் பிறங்கருளால்
ஏணிப்படி நெறியிட்டு கொடுத்திமையோர் முடிமேல்
மாணிக்க முத்து மரகதம் போன்று வயிரமன்னி
ஆணிக்கனகமு மொக்குமையாறனடித்தலமே

ஸ்ரீ திருநாவுக்கரசுநாயனார்

முனைவர். **ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்**
**கட்டளை விசாரணை** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி
**தருமபுர ஆதீனம் ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானம்**
திருவையாறு - 613 204. போன் : 04362 - 260332, Cell : 9443150332

---

தேதி : 3.9.2009

# வாழ்த்துரை

*வீதிகள் விழவின் ஆர்ப்பும்; விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்;*
*சாதிகள் நெறியில் தப்பா; தனயரும் ம(ன்)னையில் தப்பா;*
*நீதிய புள்ளும் மாவும்; நிலத்திருப்பு (உ)ள்ளு மாவும்;*
*ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்.*

கந்தபுராண வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஒரு சமூகம் வீரபாகு பரம்பரை எனும் பெருமையும் கொண்டது செங்குந்தர் சமூகம். இன்றும் முருகன் திருக்கோயில்களில் திரைச்சீலை (கொடியேற்றல்) மண்டகப்படி, வேல்வாங்குதல் மண்டகப்படி நடை முறையில் உள்ளதே சான்றாகும்.

செங்குந்தர் சமூகம் பற்றிய கல்வெட்டுகள், செப்பேடுகள் இவைகளை அரிதின் முயன்று ஆய்வு செய்து தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டு தொல்லியல்துறை முன்னாள் தலைவர் **புலவர் செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி. அவர்கள் **"செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்"** எனும் பெயரில் நூல் செய்துள்ளார்கள். செப்பேடு பட்டயங்கள் (14 ஆவணங்கள்) தமிழகம், பாண்டிச்சேரி, ஆந்திர மாநிலங்களிலிருந்து கிடைத்த 211 கல்வெட்டுகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளமை செங்குந்தர் சமூகம், சமயம், சமுதாயம், திருக்கோயில்த்திருப்பணி கொடைத்தன்மை, விருந்தோம்பல், முதலியனவற்றில் அர்ப்பணித்த பாங்கு வெளிப்படுகிறது.

இந்நூல் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் **திரு. ஜெ.சுத்தானந்தன் அவர்களின் 66 ஆவது பிறந்த நாளான**

**செங்குந்தர் இளைஞர்களின் எழுச்சிநாள்** அன்று செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி.

"**செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்**" ஆசிரியர் திரு. புலவர் செ.இராசு அவர்கட்கும், பிறந்தநாள் விழாக்காணும் **திரு. ஜெ. சுத்தானந்தன்** அவர்கட்கும் இந்நூல் வெளியீடு செய்ய விரும்பி வாழ்த்துரை கேட்டுள்ள ஈரோடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்க அமைப்பாளர் திரு. பி. சத்தீஷ் (சண்முகவடிவேல்) மற்றும் செங்குந்தர் மஹாஜனங்களுக்கும், வரலாற்றினை பெருமையோடு கொண்டு தனது பதிவினை வருங்கால சந்ததியினருக்கு ஆவணமாக வெளிவரும் மலருக்கும் எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளும் தருமையாதீன குருமணியின் குருவருளும் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

*ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்*
*காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன முன்னே*
*மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை*
*மாட்சியிற் காட்ட வைத்தேன் என்றனன் மாயைவல்லான்*

**குமாரசுவாமித்தம்பிரான்**

**Justice S. JAGADEESAN**
Former Judge, High Court of Madras.
Former Chairman,
Intellectual Property Appellate Board.

Ph: 24910737
Fax : 044 24452345
E-mail: sjj@tn.nic.in
Old # 23, New # 53, 3rd Main Road,
Gandhi Nagar, Adyar, Chennai - 600 020.

## அணிந்துரை

செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள் புத்தகத்திற்கு ஒரு அணிந்துரை கொடுக்க வேண்டும் என்று மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர் புலவர் இராசு கேட்டபோது புத்தகத்தை அனுப்பி வையுங்கள், நான் அணிந்துரை எழுதி அனுப்புகிறேன் என்றேன். நான் சொல்லிய போது புத்தகம் ஒரு சிறு நூலாக இருக்கும், செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள் தானே, ஒரு பார்வை பார்த்து “அணிந்துரை” அனுப்பிவிடலாம் என்று எண்ணி நான் அவருக்கு வாக்கு கொடுத்தேன். புத்தகம் வந்தது. பிரித்தேன். படித்தேன். படிக்கப்படிக்கப் பக்கங்கள் குறையவில்லை. ஒரு பார்வையில் படிக்க முடியாதபடி இப்புத்தகமே ஒரு வரலாறாக அமைந்து இருக்கிறது என்றால் மிகையல்ல.

ஊர் ஊராக சென்று கோயில் கோயிலாக நுழைந்து அங்குள்ள கல்வெட்டுக்களின் விவரங்களை கேட்டு அவற்றை படித்து அத்தனை கல்வெட்டு ஆவணங்களை சேகரித்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு செயல்.

ஒரு சிறந்த ஆவண நூலை ஆவலோடு படிக்கத் தந்த புலவர் இராசு போன்ற ஒரு நூலாசிரியர் இருப்பது நாம் பெருமைப்பட வேண்டியது. வரலாறு என்பது உண்மை. உண்மையை உண்மையாகக் கொடுப்பது என்கிற போது தனது கற்பனைத்திறனுக்கு வேலையில்லை. உண்மையைக் கண்டறியத் தேவையான ஆவணங்களைத் தேடி அலைந்து அதனைப் பார்த்த மாத்திரத்தில் மகிழ்ச்சியடையாது அதனைப் படித்து அதில் இருக்கும் விவரங்கள் தனக்கு தேவையானவை என்பதைக் கண்டறிந்து அதனைக் குறிப்பெடுத்த பின் பெறும் மகிழ்ச்சியே மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியைத் தானே அனுபவிக்க விரும்பாமல் நம் போன்றோருடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் மதிப்பிற்குரிய ஆசிரியர் இப்புத்தக வடிவில் அவரது மகிழ்ச்சியை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார் என்பது தான் உண்மை.

கோயிலுக்குச் சென்றால் அக்கோயிலின் வரலாறு, அங்கு வீற்றிருக்கும் இறைவனது புகழ், பெருமை, அருள்தன்மை, நம்பினோர்க்குக் காட்டும் கருணை, தம்மீது அன்பு செலுத்தும் பக்தர்களைக் காக்கும் பண்பு, வேண்டுவதை கொடுத்தருளும் சக்தி

இவற்றையெல்லாம் தான் கேட்டு அறிவோம். ஆனால் புத்தக ஆசிரியரோ ஒவ்வொரு கோயிலிலும் செங்குந்தரைப் பற்றிய கல்வெட்டுக்களைத் தேடிக் கண்டு பிடித்துப் படித்து ஆராய்ந்திருக்கிறார். அத்தோடில்லை, அந்த கல்வெட்டுக்களில் குறிப்பிட்டிருக்கும் செங்குந்தர் பெருமக்களின் பெயர்களைக் குறிப்பெடுத்து அவர்கள் அந்தந்த கோயில்களுக்குச் செய்த சிறந்த சேவைகளையும் மறக்காது நமக்கு அளித்திருக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள கோயில்களை மட்டுமின்றி ஆந்திரா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் உள்ள கோயில்களிலும் சென்று தேடி செங்குந்தர் குலத்தைப்பற்றிய கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்து ஆராய்ந்து தொகுத்திருக்கிறார்.

அத்தோடின்றி செப்பேடு பட்டயங்கள், ஓலைச்சுவடிகளையும் ஆசிரியர் விட்டு வைக்கவில்லை. சரித்திரம் படைத்த செங்குந்தர் யாரையாவது ஒதுக்கி விடுவோமோ என்ற ஐயத்தில் எதையும் விட்டு விடாமல் எல்லாவற்றையும் தேடிப்பிடித்து வேண்டுவதைப் பகுத்தெடுத்து நம்முன் வைத்திருக்கிறார். புகழோடு வாழ்ந்த முதலியார்கள், ஈகையிட்டு வாழ்ந்த முதலியார்கள், குலம் பெருமைப்பட வாழ்ந்த முதலியார்கள், ஆலயத்திருப்பணிக்கென; தொண்டாற்றிய முதலியார்கள் பலரையும் கல்வெட்டு, செப்பேடு பட்டயங்கள், சுவடிகளின் மூலம் கண்டெடுத்து நம் முன் வைத்திருக்கிறார்.

ஆசிரியர் அவர்கள் செப்பேடுகளை எங்கிருந்து வாங்கி விவரங்கள் சேகரித்திருக்கிறார் என்பதையும் தவறாது குறிப்பிட்டிருக்கிறார். மயிலாடுதுறையில் தருமபுரம் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. குருசாமி தேசிகர் வீட்டில் பூசையில் உள்ள செப்பேடு "நாவினால் மழு எடுத்த ஞானப்பிரகாசர் செப்பேடு". இது சமயச் செப்பேடு என்றும் அழைக்கப்படுவதாக சரித்திரம். நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டத்தில் உள்ள பழந்தின்னிப்பட்டி கிராமத்தில் அலைவாய்கிரி மலைச் சாரலில் குகையீசுவரர் மடத்தில் இருந்து அலைவாய்மலைச் செப்பேட்டினை ஆராய்ந்திருக்கிறார். ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் முகாசி அனுமன்பள்ளியிலுள்ள முதலியார் சகோதரர்களிடம் இருந்து பெற்ற ஓலைப் பட்டயம் அனுமன்பள்ளி செங்குந்தர் பட்டயம். ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் செங்குந்தர் வெற்றிப் பட்டயத்தினைக் கண்டிருக்கிறார். சுருக்கமாகச் சொல்வதானால் ஆசிரியர் அவர்கள் இந்தப் புத்தகத்துக்குக் கருவூலங்களைத் தேடிப் போகாத ஊர் இல்லை, சந்திக்காத நபர் இல்லை, படி ஏறாத கோவில் இல்லை, காணாத கல்வெட்டு இல்லை, படிக்காத ஓலைச்சுவடி இல்லை, கண்டறியாத செப்புப் பட்டயம் இல்லை. சென்றவிடமெல்லாம் காரியமே கண்ணாக

செங்குந்தர்களைப் பற்றிய விவரங்கள், அதற்கான ஆவணங்கள், அவற்றிலிருந்து வெளிப்படும் வரலாறு சேகரிப்பதிலேயே தன் நாட்டத்தை செலவழித்திருக்கிறார் என்பது உறுதி.

"செய்வதை திருந்தச் செய்", "எடுத்த காரியத்தை முடித்துக் காட்டு" என்பதினை மனதில் நிறுத்தி செங்குந்தர் மீது கொண்டுள்ள குறையில்லா அன்பால், மரியாதையின் காரணமாகவும் அவர்களது வரலாறைக் கண்டறிய முனைந்து இந்நூலின் வாயிலாக வரலாற்று ஆவணங்களையும் தெள்ளத் தெளிவாக குறையேதுமின்றி தவறாமல் நமக்கு அளித்திருக்கிறார் என்றால் அதுவே நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்று. இப்புத்தகம், ஆசிரியரது ஆய்வுத்திறனின் எடுத்துக்காட்டு, செங்குந்தருக்கு தனது இனத்தின் வரலாற்றின் வழிகாட்டி. யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் எழுதியிருப்பது ஆசிரியரின் நுண்ணறிவுத்திறனுக்கும் எழுத்துத் திறனுக்கும் சாட்சி.

வரலாற்று சிறப்பு மிக்க செங்குந்தர் பரம்பரையை பின் வந்தவர்கள் மறந்து விடக்கூடாது. இன்றைய செய்தி நாளைய வரலாறு என்று ஆகிவிடக்கூடாது. செங்குந்தர் இனம் என்றென்றும் செய்தியாகவே இருக்க வேண்டும். அதற்கு நாம் நம்மை நமது பழைய வரலாற்றினைக் கண்டு தயார் செய்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இப்புத்தகத்தை நமக்கு அளித்திருக்கிறார் என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

நமது இனத்தின் பாரம்பரியம், பெருமை, புகழ், முன்னோரது வாழ்க்கை வரலாறு, அவர்கள் படைத்த சரித்திரங்கள், அவர்கள் காட்டிய நட்பு, ஒற்றுமை இவைகளை நாம் என்றென்றும் பேசிப் பெருமைப்பட மட்டுமல்ல, நாமும் அப்படி வீரவாழ்வும், ஈகை வாழ்வும், பண்பட்ட வாழ்வும் வாழ்ந்து நமது பின் சந்ததியர் நம்மைக் கண்டு பின்பற்றும் ஒரு சரித்திரத்தைப் படைக்க இந்நூல் வழி வகுக்கும். ஒவ்வொரு செங்குந்தரும் இப்புத்தகத்தை வாங்கி படித்து வழி நடந்தால் ஆசிரியருக்கு அதுவே நாம் செய்யும் மரியாதை ஆகும். ஆவணங்கள் சேகரிப்பதில் ஆசிரியரது சிரமங்களை மனதில் நிறுத்தி எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கும் பெருமையை எனக்களித்த மதிப்பிற்குரிய ஆசிரியர் உயர்திரு. இராசு அவர்களுக்கும், நம் இனத்தலைவர் மரியாதைக்குரிய உத்யோக ரத்னா உயர்திரு. சுத்தாநந்தன் அவர்களுக்கும் எனது நன்றி.

16.03.2009

சென்னை

ஜெகதீசன்

கவிப்பேரருவி
ஈரோடு தமிழன்பன்

ஏ-3, இலாயிட்ச குடியிருப்பு,
சென்னை - 600 014.
தொலைபேசி : 2847 4926

# முழுமையின் வெளிச்சத்திற்குள்

வரலாறு என்பது
கடந்த காலத்தின் பதிவு மட்டுமில்லை !
அது
வேர்களை அறிய முயலும்
விழுதுகளுக்கு -
அடித்தளம் தனக்கு எதுவென்று
அறியத் துடிக்கும்
உச்சி முகடுகளுக்கு...
அவசியமாகின்ற ஒன்று.

வரலாற்றாசிரியன் என்பவன்
காலக் களிம் பேறிய
கல்லறை தோண்டி யவ்வன்...
நதிமூலம்
காணத் துடிக்கும் தாகத்திற்கு,
அதை நாடிய
பயணம் தனது வாழ்க்கை
எனத் தவிக்கும் தேடலுக்கு
வழிகாட்டும்
ஒளிவிளக்கு...

புலவர் செ. இராசு,
தாயின் வயிற்றிலிருக்கும் போதே
கல்வெட்டைத் தேடியவர்...
ஓலைச் சுவடிக்குள் உறங்குவார் :
செப்பேட்டில் கண்விழிப்பார்.

ஒருநாள்
சமணக் கல்வெட்டுகளில்
சம்மணம் போட்டு உட்கார்ந்திருப்பார் !
மறுநாள்
பிறைவெளிச்சத்தில்
இசுலாமியக் கல்வெட்டுகளைப்
படித்துக் கொண்டிருப்பார் !
அறிவுக்கும் ஆய்வுக்கும்
மதம் ஏது ? இனம் ஏது ? குலம் ஏது ?

காற்றில்
வெளிச்சத்தில், தண்ணீரில், நெருப்பில்
ககன வெளியில் -
மதம் இல்லை! இனம் இல்லை! சாதியில்லை!

பூத்து மலரும்
புலவர் இராசுவின் ஆய்வும் தோய்வும்
வேற்றுமை கடந்தவை
இதோ
இந்நூல்-211- கல்வெட்டுக்களால்
எடுத்துரைக்கிறது
இவ்வுண்மையை.

செங்குந்தர்கள்
சிறப்பை முரசறைய மட்டுமா முயல்கிறது
இந்நூல்?
தமிழ்ச்சாதியில் ஓர் அலகு..
முழுமையின் வெளிச்சத்திற்குள்
முற்றிலுமாய்க்
கலக்கிறது இந்நூலில்.

கைத்தறிக்காவலர்
முப்பாட்டுக்காரர் - மு.ப.நா
அவர்களின்
இரண்டாவது சிறப்புப் பதிப்பு
ஜெ. சுத்தானந்தன்.
தமிழ்மகன்-தறிமகன்.
ஈரோட்டுத்
தலைமகன்-தவமுடைய
அறுபத்தாறாம் பிறந்தநாள்
பரிசாக
வெளிவருகிறது இந்நூல்!
இப்படிப்
பிறந்தநாள் ஒவ்வொன்றையும்
சிறந்த நூல் வெளிவரும்நாளாக
நூறுநூறு முறை கொண்டாட
வாழ்த்துகிறேன் -
நூறாயிரம் முறை.

## தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்

58, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.



**J. சுத்தானந்தன்** B.Sc.,
தலைவர்

145, திருநகர் காலனி,
ஈரோடு - 638 003.
✆ : 0424 - 2210796,
2214779

---

# அணிந்துரை

நேற்றைய வாழ்க்கையின் அனுபவங்களை நினைந்து, நாளைய வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதை நிகழ்கால வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டுமென்று மேலோர் கூறுவர். இது எல்லாத் துறையினருக்கும் பொருந்தும், அம்முறையில் நம் செங்குந்தப் பேரினம் கடந்த காலத்தில் எப்படிப் பெருமைப்பட வாழ்ந்தது, இந்த இனம் எதிர்காலத்தில் இன்னும் எப்படிச் சிறக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நிகழ்காலத்தில் நாம் வாழ வேண்டும்.

கடந்த காலத்தில் நம் செங்குந்தரினம் சிறப்புற்றிருந்த தன்மையை நம் கண்முன்னே காட்டுவதுதான் இந்தச் 'செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்' என்னும் ஆய்வு நூல்.

நம் முன்னோர்கள் உலகுக்கு உதாரண புருஷர்களாக விளங்கிய விதம், எண்ணற்ற துறையில் ஈடின்றி வளர்ந்தவிதம் ஆகியவற்றை இந்த நூலின் வாயிலாக அறியும்போது அடக்கமான கர்வம் நம்மை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

யாரினும் யாரினும் நாம் உயர்ந்தவர்கள் என்பதை நம் எதிர்காலச் சந்ததிகள் உணர இந்நூல் ஒரு வரப் பிரசாதமாகும்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டு தொடக்க முதல் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களே இங்குக் குறிக்கப்பட்டுள்ளன. அதில் வீரத்தின் விளைநிலங்களாக நம்மவர் இருந்தனர் என்பதைச் சுமார் 30 கல்வெட்டுக்கள் (நெல்லை, தஞ்சை, மதுரை, கடலூர், நாகை, கரூர் போன்ற மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்டவை) விளக்குகின்றன.

அதுமட்டுமன்று, நம்மவரின் திறமைப்பாடுகள் கோயில் திருப்பணி செய்தல், திருவிளக்கு வைத்தல், நிலக்கொடை

வழங்கல், நீர்நிலைகள் அமைத்தல், இறைப் படிமங்களை எழுந்தருளச் செய்தல், கலைத்தொண்டு செய்தல், அரசர்களால் சிறப்புப் பெறுதல், கோயில் நிர்வாகத்தில் பங்கேற்றல் போன்ற தலைப்புகளில் அங்கங்கே விளக்கப்படுகின்றன.

ஏறத்தாழ 211 கல்வெட்டுக்கள், 5 செப்பேடுகள் 6 ஓலைப்பட்டயங்கள் நம்மவரின் பொருளாதார, சமய, அரசியல், சமூக வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அலைவாய்மலைச் செப்பேடு செங்குந்தர்களின் வீரம், ஈகை, பக்தி, நேர்மை, தியாகம், அரசர்க்கு உதவுதல், வல்லானை வெல்லுதல் போன்ற செய்திகளைக் கூறும்.

மேலும் கரூர் முதல் முட்டம் ஈறாக 35 ஊர்களில் திருக்கோயில்களில் சீர்பாதந் தாங்கும் சேவையில் செங்குந்தர் ஈடுபட்டிருந்த செய்தியை இந்த நூல்வழி அறிகிறோம்.

அதுமட்டுமா? சீர்காழி, சிதம்பரம், திருப்பதி, காசி, கதிர்காமம், காஞ்சிபுரக் கோயில்களில், கருமாரியம்மன் கோயில், விரிஞ்சிபுரம், மதுரை மற்றும் அறுபடைவீட்டுத் தலங்கள் உட்பட 22 ஊர்களில் கோவில் மணியம் கணக்கிற்கு நியமிக்கப் பட்டிருந்தனர் என்றால் கைக்கோளரின் கைச் சுத்தத்திற்கு வேறென்ன சாட்சி வேண்டும்?

ஆக, தரும சீலராக, சமூக வசீகரராக, நீதியரசச் சீர்நிறுத்துங் கையராக விளங்கிய நம் குல மரபின் பெருமையைப் பக்கத்துக்குப் பக்கம் பறைசாற்றுகிறது இந்த நூல்.

செங்குந்தரின் பெருமையை நம் பிள்ளைகள் அறியச் செய்வதற்கு அனுகூலமான ஆவணமிது. ஒவ்வொரு செங்குந்தர் இல்லத்தையும் அலங்கரிக்க வேண்டிய நூல் இது.

ஈரோடு இருமொழிச் சொற்கொண்டல் ஐயா எஸ். மீனாட்சி சுந்தரனாரால் கல்வெட்டுத் துறையில் அடையாளம் காட்டப்பெற்ற புலவர் செ. இராசு அவர்களை நாம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். அவரிடம் நான் தமிழ் பயிலாவிட்டாலும் ஏகலைவனைப் போல் அவரை ஆசானாக ஏற்றுக்கொண்டேன். அவர்தான் இந்நூலைப் படைத்து அளித்துள்ளார்.

நங்குலப் பெருமையைப் பட்டை தீட்டிக் காட்டிய கல்வெட்டறிஞர் புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி அவர்களை வாழ்த்தி மகிழ்கிறேன்.

சிறப்புமிகு இந்நூலின் மூலமாக நம் குலத்திற்கு ஆசியுரை அருளிய திருக்கயிலாயப் பரம்பரைத் தருமையாதீனம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பொன்னார் திருவடிகளையும், மதுரை ஆதீனம் 292 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் பொன்னார் திருவடிகளையும் மனம், மொழி, மெய்களால் ஒரு ஆயிரமுறை போற்றி மகிழ்கிறேன்.

மேலும் இந்நூலிற்கு வாழ்த்துரை வழங்கி ஆசிர்வதித்த திருப்பனந்தாள் காசிமடத்ததிபர் கயிலைமாமுனிவர் திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளின் திருவடிகளையும், சிதம்பரம் ஸ்ரீ மௌனமடாலய ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளையும், தருமபுர ஆதீனம் ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானக் கட்டளை விசாரணை முனைவர் ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகளின் திருவடிகளையும் வணங்கி அமைகிறேன்.

அருமையும் ஆழமும் பொருந்திய அழகிய அணிந்துரை வழங்கிய நீதியரசர் எஸ். ஜெகதீசன் அவர்கட்கும், சாகித்திய அக்காடமி விருது பெற்ற முனைவர் ஈரோடு தமிழன்பன் அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்நூலினை அழகாக வடிவமைத்த சாகர் பிரிண்ட்ஸ் ஈரோடு பி. சத்தீஷ் அவர்களுக்கும், சிறப்பாக அச்சிட்டுக் கொடுத்த சகூரா பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்குந்தர் குல மாண்பை எடுத்துரைக்கும் இந்நூலை படிக்கும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

செந்திலான் திருவருள் முன்னிற்க.

21.09.2009
ஈரோடு

ஜெ. சுத்தானந்தன்
தலைவர்
தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்

# செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்

## கல்வெட்டுகள்

பழங்கால வரலாற்றைத் தொகுக்க உதவும் பல சான்றுகளில் கல்வெட்டுகள் மிக முக்கியமானவை, கல்லில் வெட்டப்பட்ட எழுத்துக்களைக் கல்வெட்டுகள் என்று கூறுகிறோம். கல்லில் எழுத்துக்களைப் பொறித்தால் அவை அழியாமல் நிலைத்து நிற்கும் என்பதை முன்னோர் கண்டனர்.

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபதேசம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே"

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

என்ற தொடர்கள் இதனை விளக்கும்.

கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயிலுக்குக் கொடுத்த கொடைச் செய்திகளைக் கூறுகின்றன. அக்கொடைகள் இவ்வுலகப் புகழுக்கும், மறு உலகப் புண்ணியத்திற்கும் கொடுக்கப்பட்டவை. ஆனால் அவைகள்தாம் நம்முடைய பண்டை வரலாற்றைக் கூறும் ஆதாரங்களாகத் திகழுகின்றன.

இக்கல்வெட்டுகளை ஆதாரமாக வைத்து அரச மரபின் வரலாறுகள் சில எழுதப்பட்டுள்ளன. ஆனால் சமுதாய வரலாறு எதுவும் முறையாக இன்னும் எழுதப் பெறவில்லை. சமுதாய வரலாறு எழுதப்படும் பொழுதுதான் ஒரு நாட்டின் வரலாறு முழுமையடையும், அவ்வகையில் செங்குந்தர் சமுதாயத்தின் வரலாற்றைத் தொகுக்க உதவும் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இங்கு தொகுத்து ஒரு தொகுப்பாக அளிக்கப்படுகின்றன. தமிழகம் முழுவதும் பரவியுள்ள ஒரு சில தொன்மையான சமூகங்களில் செங்குந்தர் சமூகம் முதலிடம் பெறுகிறது. கடந்த 1100 வருடங்களுக்கு முன்னே பிற்காலச் சோழ, பாண்டியப் பேரரசுகள் எழுச்சி பெறும்போது அதற்கு முதற்காரணமாக விளங்கிய போர்ப்படைகளில் பெரும்பங்காற்றியது செங்குந்தர் சமூகம், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முயற்சிகளின் காரணமாக பக்தி இயக்கம் பெருகிக் கோயில்கள் உருவாகி வளர்ந்த போது அதைக் கட்டிக் காத்த சமூகம் செங்குந்தர் சமூகம். உழவுக்கு அடுத்தபடியாகப் பெரும் அளவில் நடந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டு, மக்கள் மானம் காக்க உடை அளித்ததுடன் தறிக்கடமை, தறிஆயம், தறிக்காணம், தறிக்காசு, நூல்ஆயம் முதலிய பல்வேறு வரிகள் மூலம் அரசின் செல்வ வளத்திற்கும் காரணமாக இருந்தது செங்குந்தர் சமுதாயம். இவற்றை இந்த

ஆவணங்கள் மூலம் அறிகின்றோம்.

ஏறக்குறைய 50 ஆண்டுகள் கடந்த என் கல்வெட்டுப் பயணத்தில் நான் முயன்று படித்த முதல் கல்வெட்டே செங்குந்தர் சமூகக் கல்வெட்டுத்தான். 1953-1955 ஆம் ஆண்டுகளில் ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் படித்த நான் 1959-1963 ஆண்டுகளில் அங்கு தமிழாசிரியராகவும் பணிபுரிந்தேன்.

அப்போது அப்பள்ளியின் மதிப்பியல் தலைமையாசிரியராகப் பணியாற்றிய இருமொழிச் சொற்கொண்டல் ஐயா திரு.எஸ்.மீனாட்சி சுந்தரனார் அவர்கள், தாம் ஆசிரியப்பயிற்சி பெறுமுன் ஈரோடு வ.உ.சி. பூங்காவில் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்ததாகவும், அங்குள்ள பாறையில் ஒரு கல்வெட்டு இருந்ததாகவும் போய்ப் பார்த்து விபரம் கூறுக என்று கூறினார்கள், அன்று மாலையே சென்று பார்த்தேன்.

"உ விப வருஷம் கார்த்திகை மாதம் புண்ணிய காலத்தில்
சந்திரமதி முதலியார் மடத்திற்கு விட்ட புன்செய் நிலம் இதுக்கு
அகிதம் செய்தார் கங்கைக்கரையில் காராம்பசுவைக்
கொண்ண தோஷத்திலே போவாராகவும்"

என எழுதப்பட்டிருந்தது. ஐயா அவர்கள் மிகவும் மகிழ்ந்து அதை நாளிதழ்களுக்குச் செய்தியாகவும் அறிவித்துவிட்டார்கள். இரண்டு நாள் கழித்து,

"கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவம்!
ஈரோடு கல்வெட்டில் சாபம்"

என்ற தலைப்பில் இதழில் செய்தி வெளியானது. செங்குந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் செ.இராசு அதை ஆய்வு செய்ததாகவும் எழுதியிருந்தது. நான் அன்று அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இன்று கல்வெட்டு ஆய்வாளராக அறியப்பட்டு அத்துறையில் ஓரளவு தடம் பதித்துள்ள எனக்கு அந்த நிகழ்ச்சியே தொடக்கமாகவும், தூண்டுகோலாகவும் அமைந்தது என்பதை நான் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளேன்.

பின் என் கல்வெட்டுப் பயணம் தொடர்ந்தபோது கிடைத்த கல்வெட்டுகளில் செங்குந்தர் சமுதாயம் பற்றிய கல்வெட்டுகளைத் தனித் தொகுப்பாக வைத்துக் கொண்டேன். நான் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றியபோது ஈரோடு கோட்டை திருத்தொண்டீசுவரர் திருக்கோயில் திருப்பணி நடைபெற்றுக் குடமுழுக்கு விழா 1961ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

1961ஆம் ஆண்டு திருப்பணியை முன்னின்று நடத்திய பெருமக்களில் ஒருவராகிய திரு.வி.அர்த்தனாரி முதலியார் அவர்கள் அக்கோயில் கல்வெட்டுகளைப் படித்து விளக்கம் கூறுமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார்கள்.

ஒரு கோயில் கல்வெட்டுகளை முழுமையாக ஆய்வு செய்த முதல் நிகழ்ச்சியும் அதுதான். அது எனக்கு ஒரு பயிற்சிக்களமாக அமைந்தது. 1976 ஆம் ஆண்டு ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் "தென்னிந்திய செங்குந்தர் சமூக கைத்தறி, மாதர் மாநில மாநாடு" நடைபெற்றது. அம்மாநாட்டு மலரில் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், பழந்தின்னிப்பட்டிக் கிராமத்தில் அலைவாய்கிரிமலைச் சாரலில் உள்ள செங்குந்தர்கட்குரிய குகையீசர் மடத்தில் நான் படித்த செப்பேடு பற்றிக் கட்டுரை ஒன்று எழுதினேன். அத்துடன் அப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் செங்குந்தர் சமூகம் தொடர்பான கல்வெட்டுச் செய்திகள், செப்பேட்டுச் செய்திகள் பலவற்றைக் காட்சிப்படுத்தியிருந்தேன்.

மாநாட்டிற்குச் சிறப்பு அழைப்பாளராக வருகைபுரிந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் அப்போதைய தலைவர் முனைவர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் அதைப் பார்வையிட்டு என் முயற்சியைப் பாராட்டி அக்குறிப்புக்கள் அனைத்தையும் பதிவு செய்து கொண்டார்கள். தொடர்ந்து அம்முயற்சியில் ஈடுபடுமாறும் வேண்டிக் கொண்டார்கள், சந்திக்கும் போது நினைவூட்டியும் வந்தார்கள்.

மதுரையில் தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்க 18ஆவது மாநில மாநாடு 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற போது மலர்ப்பொறுப்பை ஏற்றிருந்த முனைவர் அழகேசன் அவர்கள் வழியாக என்னிடம் "கல்வெட்டில் கைக்கோளர்" என்ற கட்டுரையைப் பெற்று வெளியிடச் செய்தவர்கள் தலைவர் ஜெ.சுத்தானந்தன் அவர்கள் ஆவார்கள். பல சந்தர்ப்பங்களில் இப்பணியைத் தொடருமாறு வேண்டிக் கொண்டார்கள். சில நிகழ்ச்சிகளில் அதுபற்றிய அறிவிப்பையும் செய்தார்கள்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், பாண்டிச்சேரி, ஆந்திர மாநிலங்களிலுமிருந்து கிடைத்த 211 கல்வெட்டுகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. முறைப்படி கள ஆய்வு செய்து தொகுத்தால் இன்னும் பல கல்வெட்டுகள் கிடைக்கக் கூடும். இக்கல்வெட்டுகளில் செங்குந்தர் சமூகம் பற்றிய பல அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன. அவற்றுள் ஒரு சில இங்கு தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

## வீரஞ்செறிந்த படையினர்

கி.பி. 10ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் தெரிஞ்ச கைக்கோளப்படை, ஆமட்டம் தெரிந்த கைக்கோளப் படை, மூத்த சமக்கட்டான ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை, இளைய சமக்கட்டான ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை, கைக்கோளப் பெரும்படை, குதிரைச் சேவகர், வில்லிகள் போன்ற பல படைப்பிரிவில் கைக்கோளர்கள் குறிக்கப் பெறுகின்றனர். ஒரு பிரிவினர் சேனைக் கைக்கோளர் என்றே அழைக்கப்பட்டனர்.

## தெரிஞ்ச கைக்கோளப்படை (தெரிந்த)

1. "அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் நம்பியாரூரன் ராசாதித்தப் பெருமாள்" (திருநெல்வேலி)
2. "அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் சோறன் பெரியாண்டான் சயசிங்கதேவன்" (திருநெல்வேலி)
3. "அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் கணபதி அழகனான களப்பாளன்" (திருநெல்வேலி)
4. "அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் மீனவன் மாராயன்" (திருநெல்வேலி)
5. "அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் கேசவன் ஆதித்தனான விசயராயர்" (தச்சனூர், மதுரை மாவட்டம்)
6. "அருமொழி தேவத் தெரிஞ்ச கைக்கோளரில் கற்றளி பட்டாலகன்" (திரிபுவனம், தஞ்சாவூர் மாவட்டம்)
7. "ஆதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் அயனடி நெருப்படை" (திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்)
8. "ஆதித்தத் தெரிந்த கைக்கோளரில் சங்கயன் ஒற்றி" (திருவாவடுதுறை, நாகை மாவட்டம்)
9. "கண்டராதித்தத் தெரிந்த கைக்கோளரில் காரி நொளம்பன்"
10. "கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் பிச்சனான யெங்கு அரையன்" (கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்)
11. "கரிகாலசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் காளி கற்றளி" (உடையார்குடி, கடலூர் மாவட்டம்)
12. "கரிகாலசோழத் தெரிந்த கைக்கோளரில் அரையன்" (மயிலாடுதுறை,

நாகை மாவட்டம்)

13. "கோதண்டராமத் தெரிஞ்ச கைக்கோளரில் தேசவலவன் சூரியன்" (உடையார்குடி, கடலூர் மாவட்டம்)
14. "சமரகேசரித் தெரிஞ்ச கைக்கோளரில் கூத்தன் நிகளங்கன்" (திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம்)
15. "சமரகேசரித் தெரிந்த கைக்கோளரில் மல்லன் அரையன்" (திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம்)
16. "சிங்களாந்தகத் தெரிந்த கைக்கோளரில் முத்தி திருவீரணன்" (கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்)
17. "சிங்களாந்தகத் தெரிஞ்ச கைக்கோளரில் பலதேவன் பனையன்" (உடையார்குடி, கடலூர் மாவட்டம்)
18. "சுந்தரசோழத் தெரிஞ்ச கைக்கோளப்படை" (சோமூர், கரூர் மாவட்டம்)
19. "தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் அரையன் கேயவிடங்கன்" (உடையார்குடி, கடலூர் மாவட்டம்)
20. "தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் தேவன் இராசாதித்தன்" (கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்)
21. "தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் பிராந்தகன் புருஷோத்தமன்" (சோமூர், கரூர் மாவட்டம்)
22. "பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப்படை" (சோமூர், கரூர் மாவட்டம்)
23. "பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளரில் ஆச்சன் பலதேவன்" (உடையார்குடி, கடலூர் மாவட்டம்)
24. "மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளரில் கோயில் நிலாவஞ்சி" (திருச்சேலூர், தஞ்சாவூர் மாவட்டம்).
25. "பாண்டிகுலாசனித் தெரிஞ்ச கைக்கோளப்படை" (சோமூர், கரூர் மாவட்டம்)
26. "பார்த்திபசேகரத் தெரிஞ்ச கைக்கோளரில் அய்யன் வேம்படியான்" (திருவெண்காடு, நாகை மாவட்டம்)
27. "விக்கிரமசோழத் தெரிந்த கைக்கோளரில் மல்லதாங்கி" (திருநெய்த்தானம், தஞ்சை மாவட்டம்)
28. "வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் கடிகாவன் கள்ளான்"

(கும்பகோணம், தஞ்சை மாவட்டம்)

29. "வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் குமரன் தூதுவன்" (கும்பகோணம், தஞ்சை மாவட்டம்)

30. "வீரசோழத் தெரிந்த கைக்கோளப்படை" (சோழூர், கரூர் மாவட்டம்)

**பிறபடைகள்**

1. "ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை நேரிய கங்கன்" (அன்னூர், கோவை மாவட்டம்)
2. "ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை சேனாபதி தனபாலன்" (அன்னூர், கோவை மாவட்டம்)
3. "ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை ஆண்டான்" (அன்னூர், கோவை மாவட்டம்)
4. "மூத்தசமக்கட்டான ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை"
5. "இளைய சமக்கட்டான ஆமட்டம் தெரிந்த கைக்கோளப்படை"
6. "திருமடை விளாகத்துக் குதிரைச் சேவகரில் பெருமாள் போத்தன்"
7. "கைக்கோளர் குதிரைப்படை வீரரில் பெரியான் ஆண்டான் பிள்ளை" (களந்தை, கோவை மாவட்டம்)
8. "கைக்கோளப் பெரும்படை" (திருவிடைமருதூர்)
9. "மூத்தவாள் பெற்ற கைக்கோளர் தேவடி வித்யாபரன்" (உடையார் குடி, கடலூர் மாவட்டம்)
10. "மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் அரையன் வேங்கடவன்" (உடையார்குடி, கடலூர் மாவட்டம்)

சிலர் படைத்தலைவர், சேனாபதிகள் என அழைக்கப்பட்டுள்ளனர். அகப்பரிவாரம், வேளம் முதலியவற்றின் காவலையும் மேற்கொண்டு ள்ளனர். மூவகைப்படை என்ற குறிப்பும் ஓரிடத்தில் காணப்படுகிறது.

**கோயில் திருப்பணி**

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று அவ்வையார் கூறினார். பண்டைய அரசர்கள் "காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி கோயிலொடு குடிநிறுவி" பணி செய்ததாக பட்டினப்பாலை கூறுகிறது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. அதற்கேற்ப செங்குந்தர்கள் பலர் புதுக்கோயில்கள் பல அமைத்தனர். பழைய கோயில்கட்கு ஏற்ற பல திருப்பணிகள் செய்தனர்.

பிறருடைய திருப்பணியில் தாங்களும் பங்கு கொண்டனர். பல கல்வெட்டுகளில இதைக் காணுகின்றோம்.

கோவை மாவட்டம் அவிநாசியில் திருமடை வளாகத்தில் கும்பிட்டிருக்கும் தவசியரில் "முதலி முதலியான முத்தின் சிவிகை பெற்றான்" இரண்டாம் பிரகாரம் வீரபாண்டியன் திருவோலக்க மண்டபத்தில் சோபானம், உபானம் தொடங்கி பாஅறுதியாகத் திருப்பணி செய்தார்.

கோவை மாவட்டம் சோழமாதேவி குலசேகர ஈசுவரமுடையார் கோயில் திருப்பணியின்போது "கைக்கோளரில் சிவிரி கூத்தன்" தூண்களைக் கொடையாக அளித்தார்.

கோவை மாவட்டம் போளுவாம்பட்டி நாகீசுவரன் கோயில் திருமடைவளாகத்தில் இருக்கும் "கைக்கோளர் கணபதியான சுந்தரப் பெருமாள்" கோயில் திருப்பணியின் போது திருநிலைகால்களை அளித்தார்.

கோவை மாவட்டம் இடிகரை வில்லீசுவரர் கோயிலில் "கைக்கோளர் நாட்டார் பிள்ளை சாத்தன் ஆன சம்பந்தப் பெருமாள்" கோயில் திருப்பணியின்போது கபோதப்படை, தெற்றி, மேலைக் கபோதப்படை ஆகியவைகளைக் கொடையாக அளித்தார்.

கோவை மாவட்டம் கொடுவாய் விண்ணிறைந்த பெருமாள் கோயில் முன்பு செங்கல்லாலும், மரத்தாலும் கட்டப்பட்டிருந்தது. "புஷ்பநாத முதலியார் மகன் வீரபத்திர முதலியார்" கல் திருப்பணியாகக் கட்டினார். வடசித்தூர் முத்துராம முதலியார் கரிவரதராசப் பெருமாள் கோயிலில் அம்மன் மண்டபம் கல்லில் கட்டினார்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் வீரபாண்டி கண்ணீசுவரர் கோயிலில் கைக்கோளர் "திருவுடையானான திருஞானசம்பந்தன்" அர்த்தமண்டபத் திருவாயிலை அமைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் கோயிலில் "கைக்கோளர் முருக்கன் கொண்டானான முடிகொண்ட சோழப் பல்லவரையன்" திருப்பணியின்போது தூண்கள் கொடையாக அளித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருவேங்கை வாசல் கோயிலுக்கு "கைக்கோளர் தில்லை பொன்னனான பொன்வேய்ந்த பெருமாள்" கோயிலுக்கு உத்திரம் அமைத்தார்.

இவ்வாறு கோயில் திருப்பணி செய்தவர்கள் பலப்பலர்.

## திருவிளக்கு வைத்தல்

விளக்கு இருளை நீக்கித் தன்னுடைய சுடரால் பொருள்களையும் சுற்றுப்புறத்தையும் விளக்கம் செய்வதால் விளக்கு என்று பெயர் பெற்றது. இயற்கையைப் பல்வேறு வகைகளில் வென்ற மனிதன் விளக்கைக் கண்டுபிடித்தது மனித வாழ்வின் திருப்பங்களில் ஒன்று. இருளைக் கண்டு பயந்த மனிதன் ஒளிகொடுத்த விளக்கை வணங்கினான். இறைவனையே "ஒளிவளர் விளக்கு" என்று போற்றினான். அருளாளர்கள் தீபசோதியில் இறைவனைக் கண்டனர். அருட்பெருஞ்சோதி என்று பாடிப் பரவினர்.

கோயில்களில் விளக்கு வைப்பது மிகப் பெரிய புண்ணியம் என்று கருதப்பட்டது. பூசை நேரத்திலும், வழிபடுகின்ற காலங்களில் எரியும் சந்திவிளக்குகளும், எப்பொழுதும் கோயிலில் எரியும் நந்தா விளக்குகளும் வைத்தனர். அதற்காக நிலம், நெல், பொன், காசு, ஆடு, மாடு, எருமை ஆகியவைகளைக் கொடுத்தனர். செங்குந்தர் குலப் பெருமக்களும் பலர் இவ்விளக்குகளைக் கொடையாகக் கொடுத்துள்ளனர். அவர்களில் சிலர் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தாராபுரம் வட்டம் தளவாய் பட்டணம் "கைக்கோளரில் கண்டன் கண்டறுசதி" பிடாரி நானாதேசி நங்கை கோயிலில் துளைகழஞ்சு பொன் கொடுத்து சந்தியா தீபம் வைத்தார்.

கோவை வட்டம் கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயிலில் "சேலம் நாட்டுச் சேலம் கைக்கோளன் பெரியான் ஆண்டான் பிள்ளையான சத்தியாபரணன்" பழஞ்சலாகை பொன் கொடுத்துச் சந்தியா தீபம் வைத்தார்.

அவிநாசி வட்டம் சேவூரில் அக்கசாலீசுவரர் கோயிலில் "கைக்கோளர் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன்" 2 பழஞ்சலாகை பொன் கொடுத்து விளக்கு வைத்தார்.

தாராபுரம் வட்டம் பிரமியம் கோயிலில் "பெருமாள் கைக்கோளரில் தேவன் கலிகடிந்த சோழ மாராயன்" 12 கழஞ்சு பொன் கொடுத்து நந்தா தீபம் வைத்தார். கீழப்பழுவூர் "பழுவேட்டரையர் கைக்கோளர் குஞ்சரமல்லன்" சிறுபழுவூர் திருவாலந்துறை இறைவர்க்கு இரவும் பகலும் எரிய நந்தா தீபம் வைத்தார். குஞ்சரமல்லன் யானைப்படையில் பணிபுரிந்தவராக இருக்கலாம்.

இவர்களைப் போலப் பலர் விளக்குகள் வைத்துள்ளனர். சிலர் அதற்காக 96 ஆடுகள் கொடையாக வழங்கியுள்ளனர்.

**நிலக்கொடை**

செங்குந்தர்கள் பலர் நில உடைமையாளர்களாகவும் இருந்துள்ளனர். தங்கள் நிலங்களில் ஒரு பகுதியைக் கோயிலுக்குக் கொடையாகக் கொடுத்துள்ளனர். சிலர் தங்களுக்குரிய நிலம் இல்லாவிடினும் நிலத்தை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குக் கொடையாகக் கொடுத்துள்ளனர்.

திருச்சி மாவட்டம் நெடுங்களம் நெடுங்களநாதர் கோயிலுக்கு "வடமலையப்ப முதலியார் மகன் சுப்பிரமணிய முதலியார்" மூன்று இடங்களில் உள்ள தன் நிலத்தில் 4 மா நிலத்தைக் கோயிலுக்கு அளித்தார்.

திருவள்ளுர் மாவட்டம் திருக்காரிக்கரை திருவாளன் மடம் முதலியார் சந்தானத்து ஊரில் உள்ள கைக்கோளக் குடிகள் தங்கள் காணியாட்சிக்குரிய காவண்ட நல்லூர் நத்தம், ஏரி, நன்செய், புன்செய், வெண்குளத்தூர் ஏரி நீரும் வாய்க்காலும் கொடையாகக் கொடுத்தனர்.

நாகை மாவட்டம் கோடியக்காடு அமிர்தகடேசுவரர் கோயிலுக்கு "முதலியார் சந்தானத்து எதிர் ஒப்பிலாதாரான சோமநாததேவ முதலியார்" நிலம் வாங்கி கோயிலில் திருமேனிகள் திருத்தொண்டு செய்கிற திருவாய்ப்பாடியான் பார்வையில் நந்தவனம் ஒன்றை அமைத்தார்.

**நீர்நிலைகள் அமைத்தல்**

ஆந்திர மாநிலம் திருச்சொகினூரில் "கைக்கோளன் ஆண்டான் மகன் பொக்காரன் பாண்டியதரையன் அழகிய பெருமாள்" என்பவர் ஏரி ஒன்றைத் தோண்டி அதன்கீழ் 6 பட்டி நிலத்தைக் கொடையாக அளித்தார்.

மாடக்குளக்கீழ் மதுரையில் "கைக்கோளர் செயமுடையார் விரதம் முடித்தான் ஆன விக்கிரம சிங்க தேவன்" மடை ஒன்றை அமைத்தார். அம்மடை (மதகு) "விக்கிரமசிங்க தேவன்" என்றே அழைக்கப்பட்டது.

**இறைபடிமங்கள் எழுந்தருளச் செய்தல்**

கோயில் திருப்பணி செய்து கொடை கொடுத்துத் திருவிளக்குகள் ஏற்றி வழிபாடு நடத்திய செங்குந்தர் குலப் பெருமக்கள் பலர் கோயில்களில் பல இறை படிமங்களையும் எழுந்தருளச் செய்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் திருவெண்காடு உடையார் கோயிலில் "பாண்டி மண்டலத்துக் கீழ்க்களக் கூற்றத்து சோழகுல மாணிக்க நல்லூர் ஆன மணப்படை வீட்டுக் கைக்கோள முதலிகளில் விரதமுடித்தான் ஆன திருநெல்வேலியுடையான்" விரதமுடித்த பாண்டீசுவரமுடையார் - புவனாபதி நாச்சியார் என்ற பெயர்களில் இறைவன் திருமேனிகளை எழுந்தருளச் செய்தார்.

திருவண்ணாமலை மாவட்டம், கோலியனூர் "கைக்கோளர் அகிலாத்திரை தேவர் மகன் திருமேனி அழகியாரான நாற்பத்தெண்ணாயிர மாராயன்" சிவன் கோயிலில் ரிஷப தேவரை எழுந்தருளச் செய்தார்.

கோவை மாவட்டம் அவிநாசிக் கோயில் "திருமடை வளாகத்தில் கும்பிட்டிருக்கும் தவசி முதலி முதலியான முத்தின் சிவிகை பெற்றான்" திருமடை விளாகத்தில் சண்டிகேசுவரரை எழுந்தருளச் செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டத் திருக்கட்டளையில் "கைக்கோளன் முடிகொண்ட சோழத் தென்கவிர நாடாழ்வான்" திருக்கற்றளி மகாதேவர் கோயிலில் கணபதியாரை எழுந்தருளச் செய்தார்.

**திருஞானசம்பந்தரிடம் ஈடுபாடு**

சைவத் திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவரும், சிவபெருமானின் பிள்ளை என உரிமை கொண்டாடி ஞானசம்பந்தப்பிள்ளையார் என்றும் பெயர் பெற்ற திருஞானசம்பந்தர் வரலாற்றில் ஈடுபட்டுப் பல செங்குந்தர்கள் அவர் பெயரைத் தங்கள் பெயராகச் சூட்டிக் கொண்டதுடன், திருஞானசம்பந்தர் படிமத்தையும் எழுந்தருளச் செய்துள்ளனர்.

தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம் வீரபாண்டி கோயில் திருப்பணி செய்து அர்த்தமண்டபம் திருநிலைகாலை அமைத்தவர் "கைக்கோளர் செல்வன் திருவுடையானான திருஞானசம்பந்தன்". கோவை மாவட்டம் இடிகரையில் வில்லீசுரமுடையார் கோயிலில் தெற்றி, கபோதப்படைகளை அமைத்தவர் பெயர் "கைக்கோளர் நாட்டார் புள்ளை சாத்தன் ஆன சம்பந்தப் பெருமாள்".

கோவை மாவட்டம் கொடுவாய்க் கோயிலில் திருப்பணி செய்தவர் "சொக்கன் புகலிவேந்தன் ஆன நாற்பத்தெண்ணாயிர மாராயன்"

சித்தலிங்கமடம் சிவன் கோயிலில் சிற்றிங்கூர் கைக்கோளர்கள் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரை ஏறியருளச் செய்தனர்.

**கலைத்தொண்டு**

கடலூர் மாவட்டம் உடையார்குடி அனந்தீசுவரர் கோயிலில் 60 காசுகள் கொடுத்து கால் செய் 6 மா நிலம் வாங்கிக் கொடையாகக் கொடுத்து அதன் வருவாயைக் கொண்டு காளம் ஊத இருவர், சேகண்டிகை அடிக்க ஒருவர், உவச்சர் நால்வர் ஆகியோரைக் கைக்கோளர் காளி கற்றளி வைத்தார்.

கோவை மாவட்டம் அன்னூர்க் கோயிலில் கைக்கோளர்

அவனியராயன் என்பவர் காளம் ஊத 50 பலம் எடையில் நாரைக்காளம் என்ற இசைக் கருவியைக் கொடையாகக் கொடுத்தார்.

தஞ்சை மாவட்டம் மணக்கால் கோயில் திருமடை வளாகத்து இருந்த கைக்கோளர், கூத்தன் மாராயன் என்ற பெயர் பெற்றிருந்தார். அவர் கூத்துக் கலையில் வல்லவராக இருந்திருக்க வேண்டும்.

கோவை மாவட்டம் சோழமாதேவி கோயிலில் சிவிரி கூத்தன் கலைத்தொண்டு புரிந்தார்.

கொழுமம் கோயிலில் கைக்கோள முதலிகளில் யாழ்வல்லான் பாண்டியன் ஆன விக்கிரம சோழ இருங்கோளன் என்பவர் கொடை கொடுத்துள்ளார்

**அரசரால் பெற்ற சிறப்பு**

செங்குந்தர் சமூகப் பெருமக்கள் பலர் அரசரால் அரையர், மாராயன், பல்லவராயன், நாடாழ்வார் முதலிய பல பட்டப் பெயர்களைப் பெற்று அரசு உயர் அலுவலர்களாக இருந்துள்ளனர். சிலர் "பெருமாள் கைக்கோளர்" எனப் பெயர் பெற்று அரசருடன் இருக்கும் பெருமை பெற்றுள்ளனர். இவர்களுடைய பெயர் அமைப்பே அவர்கள் அரசரால் பெற்றிருந்த சிறப்பைத் தெரிவிக்கிறது.

"கைக்கோளன் ஆண்டார் மகன் பொக்காரன் பாண்டிய தரையன்" - திருப்பதி

"பெருமாள் கைக்கோளரில் கலிகடிந்த சோழ மாராயன்" - பிரமியம்

"கைக்கோளன் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன்" - சேவூர்

"கைக்கோளரில் பிச்சைத் தேவன் ஆன கிடாரத்தரையன் சமய சேனாபதி" - அச்சிறுபாக்கம்

"கைக்கோளன் கருணாகரனான சொக்கன் கூத்தன் மாராயன்" - மணக்கால்

"கைக்கோளன் உய்யவந்தான் பாண்டியன் ஆன சுந்தர பாண்டிய வீரசிங்க தேவன்" - திருக்களக்குடி

என்பவர்கள் அவர்களில் சிலர், வேளைக்காரப்படைத் தலைவன் ஒருவர் "வேளைக்கார நாயகம் செய்வான் இராமன் பொன்னன் ஆன காடவராயன்" எனக் குறிக்கப்படுகிறார்.

**கோயிலைக் காத்த குடிகள்**

படைத் தலைமை பூண்டு அரசையும் நாட்டையும் காத்தது போல கோயில் வளாகத்திலேயே தங்கி கோயில் வழிபாடு, கோயில் உடைமை, கோயில் நிர்வாகம் முதலியவற்றையும் செங்குந்தர் குலப் பெருமக்கள் பாதுகாத்துள்ளதாக இத்தொகுதியில் பல கல்வெட்டுகள் குறிக்கின்றன. கோலியனூர், அவிநாசி, இராசிபுரம், மணக்கால், தளவாய்பட்டணம், போளுமாம்பட்டி முதலிய பல ஊர்களில் "திருமடை வளாகத்திருக்கும் கைக்கோளர்" என்றே அவர்கள் குறிக்கப் பெறுகின்றனர். அவர்களைப் பல கல்வெட்டுகள் "கோயில் கைக்கோளர்" என அழைக்கிறது. (கீரனூர், திருவண்ணாமலை). அவர்கள் கோயில் பண்டாரத்தையும் பாதுகாத்ததால் பொற்கோயில் கைக்கோளர் எனப்பட்டனர். அங்கு தறிகள் அமைத்து நெசவுத் தொழிலும் செய்துள்ளனர். மடம் அமைத்து தவசியராக, கும்பிட்டிருக்கும் ஆண்டார். கைக்கோளப் பன்மாகேசுவரர் ஆக விளங்கிக் கோயிலையும் காத்துள்ளனர்.

வரி அதிகம் ஆனதன் காரணமாக, வறுமையின் காரணமாக, பஞ்சத்தின் காரணமாக, கலகத்தின் காரணமாக, அன்னியப் படையெடுப்பின் காரணமாக மடவளாகக் கைக்கோளர்கள் வெளியூர் குடியேறிவிட்டால் கோயில்களில் பூசை நடைபெறாமல் பூட்டப்பட்டு விடுகிறது. சில இடங்களில் பல ஆண்டுகள் கூட பூசை நடைபெறுவதில்லை.

அந்நிலையில் கைக்கோளர்களை அழைத்துக் கொண்டு வந்து மடவளாகங்களில் குடியேற்றி அவர்கட்கு வரியைக் குறைத்தும், பலசலுகைகள் அளித்தும் ஆணையிடப் படுகின்றன. மீண்டும் பூசைகள் நடைபெறுகின்றன. எனவே இடைக்காலத்தில் கோயில்களைக் காத்தவர்கள் கைக்கோளக் குடிகளே என்று இத்தொகுப்பில் உள்ள பல கல்வெட்டுகள் கூறுகின்றன. மடவளாகங்கள் புதியதாக அமைக்கும் பொழுதும் கைக்கோளர்களே குடியேற்றப்படுகின்றனர்.

"இராசமகேந்திர நல்லூர் ஊரவரும் தானத்தாரும் இவ்வூர் நாயனார் திரு அகத்தீசுவரமுடைய நாயனார் திருமடை விளாகத்தில் கைக்கோளருக்குக் கல்வெட்டிக் குடுத்தபடி இவர்கள் இறை ஆற்றாமல் ஓடிப்போய் திருமடைவிளாகம் பாழாய் நாயனாரும் பூசை கொள்ளாமல் கோயிலும் அடைத்துக் கிடக்கையில் இந்நாள் முதல் திருமடை விளாகத்தில் குடியும் புகுந்து தறியும் இட்டு நெய்யக் கடவார்களாகவும்" (திண்டிவனம் வட்டம் ஒலக்கூர்)

"தூணாண்டார் தேவதானம் *சீயமங்கலத்தில்* கைக்கோளற்கு அடை ஓலை குடுத்தபடி இவ்வருஷம் இந்நாள் வரையும் கலகமும் கரிப்புமாய்

குடியுள்ளது கொள்ளை கொடுத்து நலங்கி பல இடங்களிலும் சிதறி குடிபோனடியாலே இந்நாள் முதலுக்கு ஊரிலே குடியும் புகுந்து தறியும் இட்டு நெய்யக்கடவார்களாகவும்" (வந்தவாசி வட்டம் சீயமங்கலம்)

**கோயில் நிர்வாகத்தில் பங்கு**

கோயில்களில் ஏற்படும் ஒப்பந்தம், நிகழும் வழக்கு விசாரணை முதலியவற்றில் கைக்கோளர்களும் பங்கு கொண்டுள்ளதைப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

தேவனூர், திருநாகீசுவரமுடையார் தேவதானம் பல ஆண்டுகள் பாழாய்க் கிடந்தது. பயிர் விளைச்சல் இல்லை. அப்பநாயன் தென்னவதரையர் என்பவருக்கு அந்நிலம் குடிநீங்காத தேவதானமாக அளிக்கப்பட்டு "சிங்காசன ஏந்தல்" என்ற ஏரி வெட்டி நிலமும் கிணறும் வெட்டிக் கொள்ளக் கொடுக்கப்பட்டது. கொடுத்தவர்கள் பற்றிக் கல்வெட்டு பின்வருமாறு கூறுகிறது. "நாகீசுவரமுடையார் கோயில் ஸ்ரீ மகேசுவரரும் தானத்தாரும், கைக்கோளரும் கைக்கோள முதலிகளும் மன்னரை முடிசூட்டும் பெருமாள் திருவோலக்க மண்டபத்தே நிறைவற நிறைந்து குறைவறக் கூடி இருந்து தானடைக்குக் குடுத்தபடி" என்பது கல்வெட்டுத் தொடர்களாகும்.

திருக்கழுக்குன்றத்தில் அர்ச்சகன் திருவெற்காவுடையான் மருதன் ஆய்த்தான் கோயில் கல்லறை திறந்து பொன் திருடிவிட்டான். கண்டிபிடிக்கப்பட்டதால் அவன் ஓடிப் போய்விட்டான். அவன் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அவன் பூசை நாட்களை மற்றவர்கட்கு விற்று இழப்பு ஈடுகட்டப்பட்டது. விசாரணை நடத்தித் தண்டணையளித்து நடவடிக்கை எடுக்க தொண்டர்கள் நாயன் திருக்காவணத்துக் கூடியவர்கள் (1) ஸ்ரீருத்திரமகேசுவரர், (2) இந்நாட்டு செங்கலன்கிழான் திருப்பிலவாயுடையார் வென்றாபரணன் ஆதித்த தேவர், (3) தனவான் அமராபதி காத்தார், (4) காரை கிழான் பொன்னம்பலக் கூத்தர், (5) கைக்கோளரும் கைக்கோள முதலிகளும் ஆவர். (திருக்கழுக்குன்றம் கல்வெட்டு)

கரூர் அருகில் உள்ள சோழூரில் சூரிய கிரகணத்தன்று அம்மன் திருவுருவத்தை எழுந்தருளச் செய்யாததற்காக அர்ச்சகர்கட்கு அபராதம் மூன்று கழஞ்சு விதிக்கப்படுகிறது. அரசு அதிகாரியுடன் கைக்கோளரும் சேர்ந்து அபராதம் விதித்துள்ளனர்.

**புதுக்குடியேற்றம்**

ஒரு ஊர் பாழடைந்திருந்தாலோ அல்லது புதுஊர் ஏற்படுத்தினாலோ

அங்கு புதியதாய்க் குடியேற்றும் மக்களில் கைக்கோளர்களே முதன்மையானவர்கள்.

"நயினார் வசவப்ப மழவராயர் திருவையாறு உடைய நயினார் கோயில் வந்தேறு குடியளுக்குக் கட்டளையிட்டபடி திருவாண்டார் கோயிலில் குடியிலிபாழாய் இருக்கையில் அண்ணமாரையன் குடியேற்றிக் கொள்ளச் சொல்லி இருக்கையில் நம் குடியளுக்கு கட்டளையிட்டபடி கைக்கோளர் வியாபாரிகள் உண்டான பலபட்டடை காசாவர்கத்துக்கும் குடியளுக்கும் இவ்வருஷம் ஒன்றுக்கு மானியம் அதுக்குமேல் மாதம் ஒன்றுக்கு அரைக்கட்டணம்" (புதுச்சேரி மாநிலம் திருவாண்டார் கோயில்)

கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவர் காரியத்துக்குக் கர்த்தர் சாமநயினார் என்பவர் சாமசமுத்திரம் என்ற ஊரை ஏற்படுத்தினார். கைக்கோளர் முதலிய குடிகள் இரண்டு வருடம் வரி இல்லாமல் குடியேறலாம் என்று ஆணைவிட்டார். (திருச்செங்கோடு பாவடிக் கல்வெட்டு)

**நெசவுத்தொழில்**

"செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கில்
நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை"

என்பது ஒரு பாடல்பகுதி. நெய்யும் தொழிலை ஏன் செங்குந்த முதலியார்கள் ஏற்றார்கள் என்பதற்கு பெருந்துறை வட்டம் வெள்ளோட்டில் வாழ்ந்த குமாரசாமிப் புலவர் என்பவர் ஒரு காரணத்தைக் கூறுகிறார்.

முப்பத்து முக்கோடி தேவர்கள் பணிந்து போற்றக் கந்தன் தோன்றினார். பின் காமாட்சி உமை சிலம்பில் நவ வீரர்கள் தோன்றினர். அசுரர் வம்சம் அழிக்கப்பட்டு தேவர்கள் சிறை மீட்கப்பட்டனர். பின் நவ வீரர்கள் தங்கள் சீவனத்துக்கு என்ன செய்வதென்று இறைவனைக் கேட்க "மனிதர் மானம் காக்கும் நெசவுத் தொழிலைச் செய்க" என்று அவர் கூறினார். எனவே செங்குந்தர்கட்கு நெசவுத்தொழில் உரியதாயிற்று என்பது அவர் கூற்று.

இதை அவர் தாம் இயற்றிய வெள்ளோடு சருவலிங்கர் நீதிச் சதகத்தில் கூறுகிறார்.

"கயிலாய கிரியதனில் முப்பத்து முக்கோடி
கடவுளர் பணிந்துபோற்ற
கந்தர்உற் பத்தியாகிப் பின்னும்நவ வீரர்கள்
காமாட்சி உமைசிலம்பில்

செயமொடு பிறந்துஅசுரர் வங்கிஷம் அழித்துநல்
தேவர்சிறை மீட்டுநன்றாய்
சீவனம் செய்வதற்கு உரியதொழில் யாதெனச்
செய்வதும் நெய்தொழில்என

வயனமொடு உகந்துமா னிடவர்க்கு அபிமான
மதுகாத்து மகிமைபெறவே
வந்தசெங் குந்தமா முதலிகள் இவர்என
விடுத்தனர்கள் ஆதிநூலோர்

தயவுடன் நடம்புரி சிதம்பர புராதன
தண்டமிழ்வெள் ளோடைவாழும்
தருமபா டகவல்லி உமைதலைவ னேபரம
சருவீசு ரக்கடவுளே"

என்பது அவர் கூறும் பாடலாகும்.

இத்தொகுதியில் நெசவுத்தொழில் பற்றியும் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. உழவர்கட்குப் பயிர்பார்த்து விளைந்த நிலத்துக்கு வரி விதிக்கப்பட்டது போல "நெய்யும் தறிக்கு" மட்டும் வரி விதிக்கப்பட்டது. நெசவு நெய்யாத தறி "மடிந்த தறி" எனப்பட்டது. மேல்தறி, முழுத்தறி என்னும் சில தறிகள் குறிக்கப்பட்டுள்ளன.

தறி, கீழ்த்தறி, அடைசல் தறி, அடைதறி, அடைப்புத் தறி, எதிர்த்தறி, புதிய தறி ஆகியவை கூறப்படுகின்றன. பல்வேறு சந்தர்ப்பங்களில் கைக்கோளர்கள் வரிச்சலுகை பெற்றுள்ளனர். நூலாயம், தறிக்கடமை, தறிஆயம், தறிக்காணம், தறிக்காசு முதலிய வரிகள் குறிக்கப்பட்டுள்ளது. தறிக்கு விதிக்கும் வரியில் அடைப்பு அல்லது அடை தறிக்குப் பாதி வரியே குறிக்கப்பட்டுள்ளது.

நெசவு நெய்வோர் ஊர்ப் பொது வரியும் சிலர் கொடுத்துள்ளனர். தறிக்கு வரி நாடு-ஊர்கட்கு ஏற்றாற்போல விதிக்கப்பட்டுள்ளது. அரைப்பணம் முதல் 5 பணம் வரை வரி விதிக்கப்பட்டுள்ளது. "வாசல் வரி" என ஒன்று கூறப்பட்டுள்ளது. அது தறிக்கு வீதியைப் பயன்படுத்துவதற்காக இருக்கலாம்.

நெசவு நெய்து பிற இடங்கட்கும், பட்டணத்துக்கும் எடுத்துக் கொண்டுபோய் விற்றுள்ளனர். கடைத்தெருவில் விற்பதற்குச் செலுத்தும் வரிக்கு சூலவரி என்று பெயர். சில இடங்களில் அவ்வரியும் நீக்கப்பட்டுள்ளது.

திருக்கழுக்குன்றம் போன்ற சில ஊர்களில் கிராமத்திலிருந்து

பட்டணத்திற்குப் புடவைகளைக் கொண்டு போகும் நெசவாளர்கள் மீண்டும் வரும்போது கிராமத்துக்கு வேண்டிய பலசரக்குகளை விற்பனைக்காக வாங்கி வந்துள்ளனர். பொதுவாக நாட்டுக்கு வரி மிகுதியும் கொடுக்கும் தொழிலாக நெசவுத் தொழில் இருந்துள்ளது.

**பெயர்க்குறிப்பு**

கல்வெட்டுக்களில் கைக்கோளர், கைக்கோள முதலி, கைக்கோள முதலியார், முதலியார் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. அலகுமலைக் கல்வெட்டில் "வீரபாகு தேவர் காசாவர்க்கம்" என்ற தொடர் காணப்படுகிறது.

திருவெண்காட்டுக் கல்வெட்டில் ஆலமத்தான் ஆன கலியுக ஈஸ்வரன் என்பான் கொடுத்த கொடை பற்றிக் கூறியபின் கல்வெட்டில் "இவன் கைக்கோளன்" என்று குறிக்கப்பட்டுள்ளது. சென்னை காரணீசுவரர் கோயில் கல்வெட்டில் "செங்குந்த சாதி வீரபத்திரசுவாமி கோத்திரம் ஆறுமுக முதலியார் மகன் சுப்பராய முதலியார்" என்ற பெயர் காணப்படுகிறது. மற்றொரு சென்னைக் கல்வெட்டில் "செங்குந்த குலம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. மேலே கண்ட சுப்பராய முதலியார் தன் கையெழுத்தை "செங்குந்தினர் ஆ. சுப்பராயர்" என்று எழுதியுள்ளார்.

சென்னை கல்வெட்டில் "திருக்கயிலாய பரம்பரை தேவ சத்திரிய வருணம் செங்குந்த குலம் நவவீரர் புத்திரர்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

**பெண்கள் பணி**

இன்றைய திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் மடம் என்ற ஊர் உள்ளது. அங்குள்ள திரு அக்கினீசுவரர் கோயிலுக்கு மானிய பூமிகள் எதுவும் இல்லாமல் இருந்தது. அக்கோயில் கைக்கோளர் அமரகோனார் கொளந்தையாண்டார் என்பவரின் தமக்கை அறம்வளர்த்த நாச்சியார் கண்ட மாணிக்கம் என்பவர் விசயநகரம் சென்று மன்னர் தேவராய உடையாரிடம் (1422-1446) விபரம் கூறி மானியம் அளிக்கப்பட்டு அதற்குரிய செப்பேட்டுடன் வந்தார் (1433).

அதைப் பாராட்டி அவருக்கு நாள்தோறும் பதக்கு நெல் கொடுக்கப்பட்டது. மாதம் 2 பணம் கொடுக்கப்பட்டதுடன் அவர் கோயிலில் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்ற உரிமையையும் பெற்றார்.

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள காரணீசுவரர் கோயிலுக்குச் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டியப்ப முதலியார் மனைவி அம்மாயி அம்மாள் சென்னை நகரில் உள்ள தன் இரண்டு வீடுகளைக்

கொடையாக அளித்துள்ளார். நாகபட்டினத்தில் நாச்சியப்பமுதலியார் பேத்திகள் சவுந்தரவல்லியம்மாள், சுவர்ணத்தம்மாள் ஆகியோர் கவுந்தரராசப் பெருமாள் கோவிலில் துவஜஸ்தம்பம், பலிபீடம் ஆகியவைகளை அமைத்தனர்.

**தியாகதீபங்கள்**

"புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனில் உலகுடன் பெறினும் கொள்ளலர்"

என்று சங்க இலக்கியம். செங்குந்த குலப்பெருமக்கள் இம்மொழிக் கேற்ப நடந்துகாட்டியுள்ளனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஆறகளூர் திருக்காமீசுவர முடையார் கோயிலில் பாண்டியர் நாள்முதல் பூசையே நடைபெறவில்லை. பூசை நடைபெற வேண்டும் என்று கூறி "கைக்கோளரில் பெருமாள் மகன் பறையன்" என்பவன் தன்னைத்தானே பலிகொடுத்துக் கொண்டான். இதை அறிந்த விசயநகர அலுவலர் எறமாஞ்சி திம்மய்ய நாயக்கர் பூசைக்கு ஏற்பாடு செய்ததுடன் தற்கொலை செய்து கொண்டவரின் குடும்பத்துக்கு உதிரப்பட்டியாக நிலம் கொடுத்தார். உதிரப்பட்டி என்பதை "வீரபோகம்" என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியாமலையில் உள்ள அகிலாண்டேசுவரி கோயில் திருப்பணி நடைபெற்றது. கோயில் திருவாசலில் முகவணை என்ற பகுதியைக் கட்டியபோது அது நிற்காமல் விழுந்து விட்டது. யார் முயன்றும் முகவணை நிற்கவில்லை. அதைக் கண்ட உடையநாச்சி என்பவர் மகன் கூத்தன் என்பவன் முகவணை நிற்கும் பொருட்டுத் தன்னைப் பலி கொடுத்துக் கொண்டான். முகவணை நின்றது. கோயில் நிர்வாகிகள் 2 மா நிலம் உதிரப்பட்டியாகக் கொடுத்தனர்.

திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் வீற்றிருந்தான் சேமன் ஆன ஆகளங்க நாடாழ்வான் என்ற அரசுத் தலைவன் ஒருவன் இருந்தான். அவனிடம்

"உலகனான அழகானை சோழமாராயன்"
"நாயனான அழகிய மணவாளமாராயன்"
"அரியானான கிடாரத்தரையன்"

ஆகிய மூன்று கைக்கோள சமூக வீரர்களும் படை வீரராகத் தலைவனுக்கு மெய்க்காப்பாளனாக இருந்தனர். அம்மூவரும் "தலைவன் இறந்தால் அப்பொழுதே நாங்களும் எங்களைப் பலி கொடுத்துக் கொள்வோம்" என்று திருவரங்கம் கோயிலில் கல்வெட்டி வைத்தனர்.

## முடிவுரை

இத்தொகுதியில் 211 கல்வெட்டுகள் உள்ளன. ஏற்கனவே கூறியது போல இன்னும் முறைப்படி கள ஆய்வு செய்தால் பல கல்வெட்டுகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

ஒரு சமுதாயத்தின் பன்முக மாட்சியைப் பற்றி அறிந்துகொள்ள இவை போன்ற ஆவணங்கள் தொகுக்கப்படுவது மிக அவசியம்.

இக்கல்வெட்டுகளைத் தொகுக்கக் கால்கோள் அமைத்து, கட்டுரை எழுதும் வாய்ப்பை ஏற்படுத்தி, இப்பணியில் என்னை ஊக்கப்படுத்தி இத்தொகுதி வெளிவரக் காரணமாக அமைந்தவர்கள் தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கத் தலைவரும், ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி, சென்னிமலை எம்.பி. நாச்சிமுத்து முதலியார் எம்.ஜெகநாத முதலியார் பொறியியல் கல்லூரிகளின் தாளாளரும் ஆகிய **உத்தியோக் ரத்னா ஜெ. சுத்தானந்தன்** அவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

ஈரோடு

அன்புள்ள,

14.01.2009

(செ.இராசு)

## 1

இடம் : திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குருக்கைபாளையம், காசி விசுவநாதர் கோயில் வெளிப்புறப் பலகைக் கல்

காலம் : கர வருடம், பங்குனி 5.

செய்தி : பிரானூர் சைவமுதலியார்கள் ஒரு மா தரமுடைய 10 குழிக்காட்டை மடப்புறமாக அளித்தனர். 100மார் கயிற்றால் அளந்து நிலம் கொடுக்கப்பட்டது. மடத்தின் பெயர் குறிக்கப் பெறவில்லை.

### கல்வெட்டு

1. கர வரு
2. ஷம் பங்
3. குனி மா
4. தம் 5 தேதி
5. பொங்கலூர்க்கா நாட்டு
6. பிரானூர் சைவமுதலியார்
7. கள் ஸ்ரீ பண்டாரத்து ம
8. டப்பிறத்துக்கு சதுர் சீமை
9. ஒரு மாத் தரமும் பத்து
10. குழிக்காடும் நூறுமா
11. று கயிற்றாலே அளந்து யி
12. துக்கு நாப்பாங்கு எல்
13. லை தெக்கு கரைக்கு வட
14. க்கும் மேற்கு முன்குள
15. த்து பள்ளத்துக்கு வட
16. க்கும் பகுடி கிணத்துக்குக்
17. கிழக்கும் வடக்கு இட்டே
18. றிக்கு தெற்கும்
19. சுங்கம் மகமை
20. உளதாகக்
21. குடுத்தோம்
22. இந்தத் தன்
23. மத்தை விலக்கின
24. வன் ஆரும் கெங்கை
25. கரையில் பிரா
26. மணரைக் கொன்ற
27. பாவத்திலே போவான்
28. காராம்பசுவைக் கொன்ற
29. பாவத்திலே போவான்
30. சைவ முதலியார்கள்
31. இப்படி விட்டது.

2

இடம் : திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தளவாய்ப் பட்டணம் பிடாரியம்மன் கோயில் தெற்குச் சுவர்.

காலம் : சுந்தரபாண்டியனின் 24 ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1309

செய்தி : சிவன் கோயிலைச் சேர்ந்த வீரசோழன் திருமடை வளாகத்தில் இருக்கும் கைக்கோளரில் கண்டன் கண்டறுசதி என்பவர் தளவாய்ப்பட்டணம் பிடாரியான நானாதேசி நங்கைக்குச் சந்தியா தீபம் வைக்க மாடை துளை கழஞ்சு பொன் அளித்தார். 'நானாதேசி' என்பது வணிகக் குழுவின் பெயர். அக்குழுவினர் எழுந்தருளச்செய்த பிடாரியாக இருக்கலாம்.

## கல்வெட்டு

1. கோச்சடைய பன்மரான திரிபுவனச்
2. சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய
3. தேவர்க்கு யாண்டு 24 வது...
4. .......................
5. த்து வீரசோழன் திருமடை வி
6. ளாகத்து கைக்கோளரில் கண்டன் கண்ட
7. றுசதியேன் இவ்வூர்ப் பிடாரி நா
8. னா தேசி நங்கைக்கு இட்ட சந்தியா தீ
9. ப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின பொ
10. ன் மாடை துளை கழஞ்சு இது இவ்வூர் பிடாரி
11. .....................

### 3

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பவானி செல்லாண்டியம்மன் கோயில் முன் மண்டபம்

காலம் : கி.பி. 19 ஆம் நூற்றாண்டு

செய்தி : பவானி செல்லாண்டியம்மன் கோயில் முன் மண்டபத்தை கீழ்வானியிலிருக்கும் குட்டி முதலியார் மகன் செங்கோட முதலியார் கட்டியதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## கல்வெட்டு

1. கீவானி குட்டி முதலியார்
2. குமாரன் செங்கோட
3. முதலியார் உபயம்.

(கீழ்வானி, மேல்வானி என்பன பவானியாற்றங்கரை ஊர்கள், மக்கள் அவ்வூர்களைக் கீவானி, மேவானி என்று அழைப்பர்).

### 4

இடம் : திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், மடவிளாகம் பச்சோட்டு ஆவுடையார் கோயில் தீபத்தம்பம்

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு; கி.பி. 1794

செய்தி : ஆனந்த வருடம் மார்கழி மாதம் 19ஆம் தேதி வங்கராயர் காலத்தில் தாமோதர முதலியார் மகன் வைத்தியலிங்க முதலியார் தீபத்தம்பம் அமைத்த செய்தி கூறப்படுகிறது. இவ்வூர் பாப்பினிக் கிராமத்தின் ஒரு பகுதியாகும்.

## கல்வெட்டு

1. ஆனந்த வருஷம் மார்கழி மாதம் 19 தேதி வங்கராயரவர்கள்
2. காங்கய நாட்டுத் ............. தாமோதர முதலியார் மகன் வைத்தியலிங்க முதலியார் தர்மம். அழித்தவன் ........... கவண்டன்.

## 5

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், மலையப்பாளையம் முத்து வேலாயுதசுவாமி கோயில் நுழைவாயில் எதிரில் உள்ள விநாயகர் கோயில் மேடை

காலம் : விரோதிகிருது வருடம் தைமாதம் 5ஆம் தேதி

செய்தி : காவுடியப்ப முதலியார் மகன் திருநீலகண்ட முதலியார் கோயில் நிர்வாகம் செய்யும் போது பெருமாநல்லூர் அலுவலர்கள் பாரபத்தியம் நாராயண முதலியாரும், சேனபோகம் அப்பன் திருநீலகண்ட முதலியாரும் முத்து வேலாயுத சுவாமிக்கும், விநாயகருக்கும் உள்ளூர்ச் சந்தையின் சுங்கத்தைக் கொடையாக அளித்தனர்.

### கல்வெட்டு

1. விரோதி
2. கிருது வருஷம்
3. தை மாதம் 5
4. முத்து வே
5. லாயுத
6. சுவாமி
7. யார்க்கு
8. காரியத்
9. துக்கு
10. கற்த்தரா
11. ன காவு
12. டியப்ப
13. முதலியா
14. ரவர்கள்
15. குமார
16. ன் திருநீ
17. லகண்ட
18. முதலியா
19. ரவர்கள்
20. காரியத்து
21. க்கு கர்த்த
22. ரான பெ
23. ருமாந
24. ல்லூர் சு
25. ங்கத்து
26. பாரபத்திய
27. ம் நாராய
28. ண முதலி
29. யார் சேன
30. போகம் அப்
31. பன் திருநீ
32. ல கண்ட
33. முதலியார்
34. காரியத்
35. துக்கு பெருமா
36. நல்லூர்க்கு
37. சேந்த ம
38. லையப்பாளை
39. ம் சந்தை மு
40. த்து வேலாயு
41. த சுவாமிக்கு
42. ம் கணபதிக்
43. கும் உபயம்
44. ரட்சை

## 6

இடம் : திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் வடுகநாதர் கோயில், சுப்பிரமணியர் சன்னதி

காலம் : ஆங்கிரச பங்குனி 13; கி.பி. 18ஆம் நூற்றாண்டு

செய்தி : நாகலிங்கபுரம் வீரபத்திர முதலியார் சுப்பிரமணியர் கோயிலைக் கல்லால் கட்டினார்.

## கல்வெட்டு

1. ஆங்கிரச வருஷம்
2. பங்குனி மாதம்
3. 13 தேதி
4. நாகலிங்கபுரம்
5. புஷ்பநாத
6. முதலியார் குமாரர்
7. வீரபத்திர முதலியார்
8. புதுசாக கல்லினால்
9. சுப்பிரமணியர்
10. கோயில் கட்டப்பட்டது.

## 7

இடம் : ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கொடிவேரி விநாயகர் கோயில் கல்.

காலம் : சர்வதாரி, ஐப்பசி 20; கி.பி. 14ஆம் நூற்றாண்டு

செய்தி : ஊரைக் காவல் செய்யும் தந்திரிமார் எனப்படும் வீரர்கட்குக் கைக்கோளக் குடிகள் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறப்பட்டுள்ளது. (அத் தந்திரிமார் கைக்கோளக் குடியினராக இருக்கலாம்)

### கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சர்வதாரிச
2. ம்வத்சரத்து ஐப்பசி 20
3. தியதி ஒடுவங்க நாட்
4. டுக் கொடுவேலியி
5. ல் ஊரும் ஊராளிகளோ
6. ம் எங்க ஊரில் தந்
7. திரிமார்க்கு உபைய
8. ப்ரமாணம் பண்ணி
9. க்குடுத்த பரிசாவது
10. எங்கள் ஊரில் இரு
11. க்கும் கைக்கோளக்குடி
12. களுக்
13. கு ஒ
14. ன்று
15. ம் கெ
16. ாள்ள
17. க்கட
18. வரல்
19. லவா
20. கவும்
21. கி .........
22. குடிக்கு
23. ஒன்றுக்கு மூன்று
24. விலங்க
25. ளஞ் சொன்
26. னாருண்டா
27. கில்
28. கெங்கைக் கரையிற் குரா
29. ற் பசுவைக் கொன்ற பாவ
30. ம் கொள்வர்.

## 8

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நல்ல கிணற்றுப் பிள்ளையார் கோயில் முன் மண்டபம் மேல் விதானம்

காலம் : கி.பி. 1910; சௌமிய புரட்டாசி

செய்தி : தேவஸ்தான விசயமங்கலம் சின்னப்ப முதலியார் மகன் சபாபதி முதலியார் விசயமங்கலம் முத்து விநாயகன் கோவிலுக்கு மூங்கில்பாளையம் கிராமத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தைப் பூசைக்காக அளித்தார். கூனம்பட்டி ஆதீனம் மாணிக்கவாசக சுவாமிகள் ஆணைப்படி இக்கொடை கொடுக்கப்பட்டது. சபாபதி முதலியார் மகன் கஸ்தூரி முதலியார் அக்கோயிலைப் புதியதாகக் கட்டிக் குடமுழுக்கு விழாவும் செய்தார். கோயிலில் பூசை செய்பவர் பழனிவேல் முதலியார் என்பவர்.

### கல்வெட்டு

1. கலியுக சகாப்தம் 5011 சௌமிய வருஷம் புரட்டாசி மாதம் 11ஆம் தேதி மடாதிபதியா
2. கிய கூனம்பட்டி ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமி அவர்கள் கட்டளை
3. தேவஸ்தான விசயமங்கலம் சின்னப்ப முதலியார் மகன் சபாபதி முதலியார்
4. முத்து விநாயகனுக்கு மூங்கில்பாளையம் கிராமத்தில் 71 நெம்பர் ஏக்கர் 1
5. 72 நெம்பர் ஏக்கர் 1 ஆக இரண்டு ஏக்கர் பூமியை விநாயகனுக்கு பூசைக்கு மானியம்
6. விடப்பட்டது.

## 9

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் குன்றபுரீசுவரர் கோயில் முகமண்டபம் மேற்கு, தெற்குச்சுவர்

காலம் : வீரவல்லாள தேவர் காலம், ஆங்கிரச ஆண்டு; கி.பி. 1332

செய்தி : குறுப்புநாட்டுக் குன்றத்தூர் கைக்கோளர் வாமதேவன் சைவன் என்பவர் குன்றமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைக்க பன்னிரண்டு பணம் கொடையளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க ஸ்ரீ வீரவல்லாள தேவர் பிருத்வி ராச்சியம் பண்ணியருளாநின்ற ஆங்கிரச சம்வத்சரத்து ஆவணி மாதம் முதல் குறுப்பு நாட்டு குன்றத்தூர் இருக்கும் கைக்கோளரில் வாமதேவன் சைவனேன் ஆளு

2. டைய நாயனார் குன்றமுடையார்க்கு சந்தியா தீபத்துக்கு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சிய கோத்திரத்துப் பன்றிபட்டன் உய்யவந்த பட்டன் உள்ளிட்டாரும் அழகன் காளியாழ்வாரும்

3. ........... உத்திராபதி உள்ளிட்டாரும் இவ்வனைவோமும் வாங்கின பணம் 12 இப்பணம் பன்னிரண்டும் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்துவோமாக இத்தன்மம் ஸ்ரீபன்மாகேஸ்வரர் ரட்சை.

## 10

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரிய மாணிக்கப் பெருமாள் கோவில்

காலம் : சுந்தரபாண்டியனின் 24ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1309

செய்தி : விசயமங்கலம் கைக்கோளரில் குமரன் எடுத்தான் ஆன சிங்கப்பெருமாள் என்பவர் விசயமங்கலம் கருமாணிக்காழ்வார் கோயிலில் சந்தியா தீப விளக்கு வைக்க பொன் அச்சு ஒன்று கொடுத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டி
2. ய தேவற்கு யாண்டு 24வது தைத்திங்கள் முதல் குறுப்புநாட்டு விசையமங்கலத்துக்
3. கைக்கோளரில் குமரன் எடுத்தானான சிங்கப் பெருமாள்
4. கருமாணிக்காழ்வார்க்கு சந்தியா தீப விளக்கு ஒன்றுக்குக் குடுத்த அச்சு
5. ஒன்றும் கைக்கொண்டு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிபகோத்திரத்து அழகிய பெரு
6. மாள் ஆன சிங்கப் பெருமாளேன் குடங்கொண்டு கோயில் புகுவாந் சந்திராதித்தவரை
7. எரிப்பதாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

## 11

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் : விக்கிரம சோழனின் 7ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1263

செய்தி : விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலில் விசயமங்கலம் கைக்கோளரில் மகிழன் தேவன் என்பவர் சந்தியாதீபம் வைக்கப் புதுச்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார். குலோத்துங்க சோழனின் 14ஆம் ஆட்சியாண்டில் அளிக்கப்பட்ட இக்கொடை முதல் பிரகாரம் இறக்கி, விக்கிரம சோழன் காலத்தில் திருப்பணி செய்த போது மீண்டும் படி எடுத்து வெட்டப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு ஏழாவது சகரையாண்டு ஆயிரத்தொரு நூ
2. ற்றெண்பத்தைஞ்சு குறுப்புநாட்டு விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமுடை
3. யார் கோயில் முதல் பிரகார மண்டப மிறக்கித் திருப்பணி செய்யக்கொண்
4. டபடியால் மண்டபஞ்செய்து முன்னாள் வைத்த சந்தியா தீபங்கள் பழங் கல்வெட்டி
5. ன் படிபெயடுத்து இம்மண்டபத்தில் வெட்டினபடியாவது
6. ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு பதினாலாவது விசை
7. ய மங்கலத்துக் கைக்கோளன் மகிழன்தேவன் ஆளுடையார் திருநாகீசுவரமுடையார்க்கு வை
8. த்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின புதுச்சலாகை அச்சு ஒன்று.

## 12

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி திரு அனந்தீசுவர சுவாமி கோயில் மேற்குச்சுவர்

காலம் : கோப்பகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளரில் படையார், ஆச்சன் பலதேவனுக்காக திருவனந்தேசுவரத்து ஆழ்வார்க்கு ஒரு நந்தாவிளக்கு வைக்க 12½ கழஞ்சு பொன் வைத்தனர். படையாரில் ஒருவரான ஆச்சன் பலதேவன் இறந்திருக்கலாம். அவர் நினைவாக விளக்கு வைக்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு
2. யாண்டு 2ஆவது வடகரை பிரமதேயம் வீரநா
3. ராயணச் சதுர்வேதி மங்கலத்து திருவ
4. னந்தேசுவரத்து ஆழ்வார்க்கு பராந்தகத் தெரிஞ்
5. ச கைக்கோளரில் ஆச்சன் பல தேவனுக்காக
6. இப்படையார் வைத்த திருநொந்தாவிளக்கு 1க்கு ஆச்
7. சந்திராதித்யவல் வைத்த திருநொந்தாவிளக்கு 1க்கு வை
8. த்த பொன் பன்னிரு கழஞ்சரை.

## 13

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி திருஅனந்தீசுவர சுவாமி கோயில் கருவறை தென்சுவர்

காலம் : கோப்பகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் அரையன் கேயவிடங்கன், ஆடி அருளுகிற கூத்தர், கணபதி, பிச்சதேவர் ஆகியோருக்குக் கோயில் கட்டினார். கோயில் பண்டாரத்தில் 10 காசுகள் மூலப்பொருள் வைத்து இரண்டு பரியட்டம் (பரிவட்டம்) சாத்த ஏற்பாடு செய்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு
2. யாண்டு 2ஆவது வடகரை பிரமதேயம் வீர நாராயண
3. சதுர்வேதிமங்கலத்து திருவநந்
4. தேசுவரத்து ஆழ்வார்க்கு திருக்கற்றளியி
5. ன் தென்பக்கத்து ஆடி அருளுகின்ற கூத்த
6. ப் பெருமாளுக்கு தானதொங்கத் தெரிஞ்ச கைய்கோ
7. ளரில் அரையன் கேயவிடங்கனேன் சாத்தியருளு
8. ம் பரியட்டத்துக்கு வைத்த காசு பத்து இப்பத்துக் காசின் பலி
9. சையாலும் ஓரிணைப் பரியட்டம் சார்த்துவிப்போமா
10. னோம் தேவர் பண்டாரத்தே அன்று சீகாரியம் செ
11. ய்யும் தேவர் கன்மிகளோம் இப்பரியட்டம் வை
12. த்த அரையன் கேயவிடங்கனேன் கூத்தர்க்கும் க
13. ணபதியார்க்கும் பிச்ச தேவர்க்கும் ஸ்ரீ கோயி
14. ல் எடுப்பித்தேன் அரையன் கேயவிடங்
15. கனேன் இவை பன்மாகேசுவரர் ரட்சை.

## 14

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி திருஅனந்தீசுவர சுவாமி கோயில் வடக்கு, மேற்கு தெற்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் தேவடி வித்யாபரன் உடையார்குடி அனந்தீசுவரர் கோயிலில் சந்திரசேகர தேவர்க்கு ஒரு நந்தாவிளக்கெரிக்க 12½ பொன் கொடுத்து 96 ஆடுகளும் கிடாய் ஒன்றும் வாங்கிக் கொடையாக அளித்தார். அவற்றின் மூலம் அவ்வூர் மன்றாடிக் கலனையார் நாள்தோறும் உழக்கு நெய் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 2ஆவது வடகரை பிரமதேயம் வீர நாராயண சதுர்வேதிமங்கலத்து திருவனந் தேசுவரத்து சந்திரேசுவரப் பெருமாளுக்கு மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் தேவடி வித்யாபரன் சந்திராதித்ய

2. வல் 1 நொந்தா விளக்கெரிப்பதற்கு குடுத்த பொன் 12½ இப்பொன்னால் 96 ஆடும் தகர் 1ம் கொண்டு நிசதம் உழக்கு நெய் அட்டுவோமானோம் இவ்வூர் மன்றாடிக் கலனையோம்.

## 15

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி திருஅனந்தீசுவர சுவாமி கோயில் மேற்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் அரையன் வேங்கடவன் 12½ பொன் கொடுத்து 96 ஆடுகளும் கிடாய் ஒன்றும் வாங்கி உடையார்குடி திருஅனந்தீசுவரருக்குக் கொடையாக அளித்தார். இவ்வூர் மன்றாடி கலனையார் அவைகளைப் பெற்று நாள்தோறும் ஒரு உழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 2ஆவது ஸ்ரீ வீர நாராயணச் சதுர்வேதி மங்கலத்து திருவனந்தேசுவர ஆழ்வார்க்கு சந்திராதித்யவல் 1 நொந்தாவிளக் கெரிப்பதற்கு மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் அரையன் வேங்கடவன் குடுத்

2. த பொன் 12½ இப்பொன்னால் 96 ஆடும் தகர் 1ம் கொண்டு நிசதி உழக்கு நெய் அட்டுவோமானோம் இவ்வூர் மன்றாடிக் கலனையோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 16

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி அனந்தீசுவரசுவாமி கோயில் வடக்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : சிங்களாந்தகத் தெரிஞ்ச கைக்கோளரில் பலதேவன் பனையன் (தன் தந்தை) பல தேவனுக்காக அனந்தேசுவர ஆழ்வார்க்கு ஒரு நந்தா விளக்கு எரிக்க 12½ கழஞ்சு பொன் கொடுத்து 96 ஆடுகளும் கிடாய் ஒன்றும் வாங்கிக் கொடையாக அளித்தார். அதைக் கொண்டு மன்றாடி கலனையார் நாள்தோறும் ஒரு உழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யா
2. ண்டு 2 ஆவது ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதிமங்கலத்து திரு
3. வனந்தேசுவரத்து ஆழ்வார்க்கு சந்திராதித்யவல் ஒரு நொந்தாவி
4. ளக்கெரிப்பதற்கு சிங்களாந்தகத் தெரிஞ்ச கைக்கோளருள் ப
5. லதேவன் பனையன் பலதேவனுக்காகக் குடுத்த பொன்
6. பன்னிரு கழஞ்சரைக்கும் ஆடு தொண்ணூறும் தகர் 1 கொண்டு
7. இவ்வூர் மன்றாடி கலனையோம் நிசதம் உழக்கு நெய் அட்டுவோமானோம்.

## 17

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி அனந்தீசுவரசுவாமி கோயில் கருவறை தெற்குச் சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : கோதண்டராமத் தெரிஞ்ச கைக்கோளரில் சிந்தவாய் நாட்டு வானவ மங்கலமுடையான் தேசவலவன் சூர்யன், உடையார்குடி அனந்தீசுவரர் கோயிலில் ஒரு நந்தியா தீபம் வைக்க 12½ கழஞ்சு பொன் கொடுத்தார். அப்பொன் கொண்டு 96 ஆடுகளும் கிடாய் ஒன்றும் வாங்கிக் கோயிலுக்கு விடப்பட்டது. அதன்மூலம் நாள்தோறும் ஒருஉழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு
2. 2 ஆவது ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதிமங்க
3. லத்து திருவனந்தேசுவர தேவர்க்கு சந்திராதித்யவல் ஒரு நொ
4. ந்தா விளக்கெரிப்பதற்கு கோதண்டராமத் தெரிஞ்ச
5. கைக்கோளருள் சிந்தவாய் நாட்டு வானவமங்கலமுடையா
6. ன் தேச வலவன் சூர்யன் குடுத்த பொன் பன்னி
7. ரு கழஞ்சரைக்கும் தொண்ணூற்றாறாடு தகர் 1ம் கொ
8. ண்டு நிசதம் உழக்கு நெய் அட்டுவதானோம் மன்றா
9. டி கலனையோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 18

இடம் : கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், உடையார்குடி அனந்தீசுவரசுவாமி கோயில் கருவறை முன் மண்டபம் வடசுவர்

காலம் : கோப்பரகேசரியின் 14ஆம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : கரிகாலசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் காளி கற்றளி என்பவர் அறுபது காசு கொடுத்து கால் செய் ஆறுமா நிலம் வாங்கினார். அதன் வருவாயிலிருந்து காளம் ஊத இருவர், சேகண்டிகை அடிக்க ஒருவர், உவச்சர் நால்வர் ஆக மொத்தம் ஏழு பணியாளர்கள் நியமித்துச் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டது. சபையார் இதை நடத்த ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 14வது வடகரை காநாட்டு பிரமதேயம் முள்ளூராகிய சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்து திருமுள்ளூருடைய பரமேசுவரர்க்கு உடையார் கரிகால சோழத் தெரிஞ்ச கைக்கோளரில் காளி கற்றளியேன் இவ்வூர் சபையார் பக்கல் நான் விலைகொண்டுடைய நிலம் இவ்வூர் கீழில் ஸ்ரீ வீர நாராயணச் சதுர்வேதிமங்கலத்து எல்லை வரம்புக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஊர்வேலி வரம்புக்கு

2. வடக்கும் மேற்பாற்கெல்லை இந்நிலத்துக்குப் பாயும் உட்சிறு வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை காரம்பி செட்டர் நிலத்துக்கு தெற்கும் இவ்விசைந்த நாலெல்லையிலும் அகப்பட்ட நிலம் அறுமாவும் இவ்வூர் வட கழனி ஓடை வாய்க்காலுக்கு மேற்கு தென்பாற்கெல்லை முருக்கண்டி திருவிக்கிரம பட்டன் நிலத்துக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை ஆநிசித்தர் நிலத்துக்கும் குளத்துக்கும் கிழக்கும் வடபாற்கெல்லை ஸ்ரீ வீர நாராயணச் சதுர்வேதி மங்கலத் தெல்லை வரம்புக்குத் தெற்கும் இந்நாலெல்லையில் அகப்பட்ட நிலம் கால் செய்

3. இக்கால் செய்யும் அறுமாச் செய்யுமாக அரையே ஒருமா நிலம் இந்நிலத்துக் குளத்து நீர் இறைக்கப்பெறுவதாகவும் இச்சுட்டப்பட்ட இந்நிலம் இப்பரமேசுவரர்க்குக் காளம் இரண்டும் செய்கண்டிகையும் உவச்சு நாலுமாக இவ்வேழாளுக்கும் சந்திராதித்தவல் ஸ்ரீ பலிறமாக இத்திருமுள்ளூருடைய பரமேசுவரருக்கு குடுத்தேன் காளி கற்றளியேன் இக்காளி கற்றளியிடை ...... சபையோம் இந்நிலம் அரையே ஒரு மாவுக்கும் இறை காத்துக் குடுப்பதாக இவன் பக்கல் கொண்ட

4. காசு அறுபதும் இவ்வறுபது காசின் பலிசையாக சந்திராதித்தவல் இறை

5. காத்துக் குடுப்போமானோம் இத்திரு முள்ளூர் பரமேசுவரர்க்கு சபையோம்

6. இவை பன்மாகேசுவரர் ரட்சை.

## 19

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், சோமூர் சோமீசுவரம் உடையார் கோயில் கருவறை முன்மண்டபத் தென்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் ஆறாம் ஆட்சியாண்டு, 10ஆம் நூற்றாண்டு

செய்தி : திருநொம்பலூர் மகாதேவர்க்குத் தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் பராந்தகன் புருஷோத்தமன் மூன்று சந்தியும் சந்தியா தீபம் வைக்க இரண்டரைக் கழஞ்சு பொன் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு ஆறாவது இவ்வாண்டு திருநொம்பலூர் மகாதேவர்க்கு தானதொங்கத் தெரி

2. ஞ்ச கைக்கோளரில் பிராந்தகன் புருஷோத்தமன் வைத்த சந்தி விளக்குக்கு பொன் இருகழஞ்சரை இப்பொன் கொண்டு சந்தி

3. ராதித்தவரை மூன்று சந்தியும் எரிப்போமானோம் இத்திருக் கோயிலுடையோம் பன்மாகேசுவரர் ரட்சை.

## 20

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், சோமூர் சோமீசுவரர் கோயில் தெற்குச் சுவர்

காலம் : முதல் இராசராசனின் 20ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1005

செய்தி : கேரளாந்தக வளநாட்டு தட்டைகளநாட்டு தேவணப்பள்ளி திருநொம்பலூர் பரமேசுவரர் கோயிலில் சூரிய கிரகணத்தன்று நம்பிராட்டியாரை (அம்மனை) எழுந்தருளச் செய்யத் தவறியமைக்காக திருக்கோயிலுடையார்க்கு கைக்கோளப் படையினரும், நாடு வகை செய்கிற குழலூர் உடையாரும் மூன்று கழஞ்சு தண்டம் விதித்து அப்பொன்னால் அம்மனுக்குப் பட்டம் ஒன்று செய்தளித்தனர்.

### கல்வெட்டு

1. கோவிராஜராஜகேசரிபன்மரான ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யா
2. ண்டு 20 தாவது கேரளாந்தக வளநாட்டுத் தட்டைகளநாட்டு தேவணப்
3. பள்ளி திருநொம்பலூர் பரமேஸ்வரர்க்கு ஸ்ரீ ராஜராஜதேவர் கைக்
4. கோளப்படை பிராந்தக தெரிஞ்ச கைக்கோளரும் சுந்தரசோழத் தெரிஞ்ச
5. கைக்கோளரும் பாண்டி குலாசனித் தெரிஞ்ச கைக்கோளரும் இஞாடு வகை
6. செய்கிற குழலூருடையாரும் திருக்கோயிலுடையார்களை சூற்றி
7. யக் கிராணத்தின் ஞான்று நம் நம்பிராட்டியாரை வாராவிட்ட குற்றத்தால் தண்டம்
8. கொண்ட பொன் காசுக்கல்லால் 3 கழஞ்சு இப்பொன் முக்கழஞ்சால்
9. பட்டம் 1 இது தேவணப்பள்ளி ஊரார் கைக்கோள பன்மாகேசுவரர் ரட்சை.

## 21

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் சொக்கீசுவரர் கோயில் தென்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் 15 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : காஞ்சிபுரம் மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் ஆச்சன் சேனாச்சன் விலை கொடுத்து நிலம் வாங்கி காஞ்சிபுரம் கடும்பிடுகு மேற்காப்பில் தெற்கிருந்த நக்கர் கோயிலில் கரிகாலச் சோழப் பிள்ளையார்க்குத் திரு அமுது படைக்க ஏற்பாடு செய்தார். மூன்று பழங்காசு கொடுத்து சந்தி விளக்கு வைக்கவும் ஏற்பாடு செய்தார். நிலம் காஞ்சிபுரம் மாநகரத்தாரிடமிருந்து வாங்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு பதினஞ்சாவது காஞ்சிபுர மாநகரத்தோம் இந்நகரத்தில் கோனேரியார் எல்லைக்குத் தெற்கு இந்நிலம் உடையார் மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் ஆச்சன் சேனாச்சன் இந்நகரத்து கடும்பிடுகு மேற்காப்பில் கரிகாலப் பிள்ளையார்க்கு திருவமுதுக்கு மாநகரத்தோம் விற்றுக் குடுக்கிற நிலமாவது வடபாற் கெல்லை
2. கோநேரியார் நிலத்துக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை பெருவழிக்கு மேற்கும் தென்பாற் கெல்லை திருவூரகத் தாழ்வார் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை குழிக்குக் கிழக்கும் இந்நாற்பாற் கெல்லையுள் அகப்பட்ட நிலம் உடையார் மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் ஆச்சன் சேனாச்சன் பக்கல் பெறுவிலைக்
3. க்குப்பட்ட நிலம் முன்னூறும் விற்று விலையாவணம் செய்து செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள்வதாகவும் செய்து குடுத்தோம் கடும்பிடுகு மேற்காப்பில் தெற்கிருந்த நக்கர் கோயிலில் கரிகால சோழப் பிள்ளையார்க்கு ஆச்சன் சேனாச்சனேன் தெற்கிருந்த நக்கர்க்கு வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கும் இக்கோயில் காணியுடைய பாதபதி எங்குச்சோழ தரணேந்திர பட்டனும் இவன் தம்பி திருவேகம்ப
4. பட்டனும் கைக்கொண்ட பழங்காசு மூன்றும் கைக்கொண்டோம் இவை தரணேந்திர பட்டஸ்ய
5. சிலாலேகை பண்ணினேன் திருவேகம்ப பட்டஸ்ய.

## 22

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், திருக்கழுக்குன்றம், பக்தவத்சலசுவாமி கோயில் வாயிற்படி துவாரபாலகருக்குத் தெற்கே சுவரில் உள்ள கல்வெட்டு

காலம் : வீர கம்பண்ண உடையார் காலம்; கி.பி. 1374

செய்தி : திருக்கழுக்குன்றம் கைக்கோளர்க்கு பட்டடை, நூலாயம், ஆட்டைச் சம்மாதம் முதலிய வரிகள் விதிக்கப்பட்டிருந்தது. கைக்கோளர்கள் பட்டணத்திற்குப் புடவை கொண்டு சென்றும், பட்டணத்திலிருந்து பலசரக்குகள் கிராமத்துக்கு வாங்கிவந்தும் வியாபாரம் செய்தனர். நெல்லும் கொள்முதல் செய்தனர். எல்லாவற்றிற்குமாக மொத்தம் 70 பணம் வரியாக நிச்சயம் செய்யப்பட்டது. ஆடி முதல் ஆனி ஈறாக ஆண்டு கணக்கிடப்பட்டது.

### கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரகம்பண்ண உடையார்க்குச் செல்லாநின்ற ஆனந்த வருஷத்து புரட்டாசி மாதம் 8ஆம் தேதி திருக்கழுக்குன்ற நான்கெல்லைக்குட்பட்ட கைக்கோளர் பேர்க்குப் பட்டடை நூலாயம் ஆட்டைச் சம்மாதம் பேர்ச்சம்மாதம் மாசவட்டி அதிக சம்மாதம் மற்றும் எப்பேர்ப்பட்ட உபாதியும் உள்படவும் இவ்வூர் கைக்கோளர் பட்டணத்துக்குக் கொண்டு போகும் புடவைக்கும் இவர்கள் பட்டணத்திலிருந்து கொண்டுவரும் பலசரக்குக்கும் பலபத்தில் கொண்ட நெல்லுக்கும் ஆடி மாதம் முதல் ஆனி ஈறாக கட்டுக் குத்தகையாக நிச்சயித்த பணம் 70 இப்பணம் எழுபதும் ஒழிய வேறொன்றும் கொள்ளக்கடவரல்லாதாகவும் இம்மரியாதி சந்திராதித்தவரைக்கும் நீர் பத்திக் கொள்ளவும். யித்தன்மத்துக்கு அழிவு சொன்னவன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்றவன் பாவங்கொள்வன் அருளிச்செய்தபடிக்கு யிவை நாகுழகன் எழுத்து.

## 23

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மாடம்பாக்கம் தேனுபுரீசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

காலம் : வீரகுமார தேவராயர் காலம், கி.பி. 1426

செய்தி : கைக்கோளர் மனையுள்ள இடத்தில் தானத்தார்க்கு மனை மாற்றம் செய்தது கைக்கோளர்க்கும் விரிவான இடம் அளிக்கப்பட்ட குறிப்பும் தெரிகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாம
2. ண்டலேசுவரன் பாஷைக்
3. குத் தப்புவராயர் கண்
4. டன் வீரஸ்ரீகுமாரதேவ
5. ராயர்க்குச் செல்லா நின்ற
6. பவ வருஷத்துக் கும்ப
7. ப் பஞ்சமியும் திங்கட்கிழமையு
8. ம் பெற்ற திருவோணத்து நாள் செயங்
9. கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க்
10. கோட்டமான குலோத்துங்க சோ
11. ழ வளநாட்டு ஆயிரவேலிப் பற்றில்
12. நெடுங்குன்ற நாட்டில் மாடன்பாக்கமா
13. ன உலகுய்ய வந்த சோழச் சதுர்வேதி மங்கல
14. த்து ஆளுடையார் சிற்றேரி ஆளுடைய
15. நாயனார் திருக்கோயில் தானத்தார்க்கும் இக்
16. கோயில் கைக்கோளற்கும் மனைமாற்ற
17. ச் சிலாலேகை பண்ணிக் குடுத்தபடி தான
18. த்தார் முன்பு இருந்த மனை சுவாத்திக மில்
19. லாதபடியாலே குடியிருக்க கைக்கோளர்க்கு இ
20. டம் போதாதபடியாலும் கைக்கோளர் கா
21. ணியாட்சியான தெற்குத் தெருவில் தேவ .....

## 24

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நெரும்பூர் திருவாலீசுவரர் கோயில் கருவறை மேற்கு, தெற்குச்சுவர்.

காலம் : கி.பி. 1436, சகம் 1358, நள தை

செய்தி : கோயில் திருமடைவளாகத்தில் உள்ள குடிக் கைக்கோளர்க்கும், இனிப் புதியதாகக் குடியேறும் கைக்கோளர்க்கும் வரி நிர்ணயம் செய்தமை கூறப்படுகிறது. "மரியாதி" என்ற சொல் "மதிகாரி" என எழுதப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமது மகாமண்டலேசுவரன் மூவராயர் கண்டன் பாசைக்குத் தப்புவராயர் கண்டன் ராய பரமேசுவரன் வீரப் பிரதாப கஜவேட்டைக்கார தேவராயர்க்குச் செல்லா நின்ற சகாப்தம் 1358 க்கு மேல் செல்லா

2. நின்ற நள வருசம் தை மாதம் சங்கிரம புண்ணியகாலத்தில் களத்தூர்ப் பற்றில் நெருமூரில் உடையார் திருவாலீசுரமுடைய நாயனார் கோயில் திருமடை விளாகத்தில் கைக்கோளர்க்குப் பட்டடை நூலாயத்துக்குத் தறி ஒன்றுக்கு வருசம் ஒன்றுக்குக் கொள்ளுவதாக நிச்சயித்த பணம் 2 இப்படிக்கு ஒன்றுக்கும் அஞ்சாமல் எந்த எந்த வருஷம் மலையாங்குடிக்கு குத்தகையாகக் கொள்ளும் இப்ப

3. டிக்கு ஒன்றுக்கும் அஞ்சாமல் ஏறும் குடியும் ஏற்றிக்கொண்டு இம்மதிகாரிக்கு சந்திராதித்தவரை நடத்தக் கடவதாகவும் இம்மதிகாரிக்கு கல்வெட்டுக்கு அகிதம் பண்ணினவருண் டானால் கெங்கைக்கரையில்

4. காராம்பசுவை கொன்ற பாவத்திலே போகக்கடவாரா

5. கவும்.

## 25

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், வேதகிரீசுவரர் கோயில் மூன்றாம் பிரகார கிழக்குச்சுவர் உட்பக்கம் (வாயிலுக்குக் கிழக்கில்)

காலம் : வீரகுமார கம்பண்ணர் காலம்; ஆனந்த வருடம் கி.பி. 1374

செய்தி : திருக்கழுக்குன்றம் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயில் அர்ச்சகர் திருவெற்காவுடையான் மருதன் ஆய்த்தான் கோயில் கல்லறை திறந்து இறைவன் திருவாசியிலிருந்த பொன்னை எடுத்துவிட்டு சாந்திட்டு அடைக்கும்போது மெய்காவல் முதலியான் திருக்கழுக்குன்ற பட்டன் பார்த்து விட்டார். தானே அதற்குப் பொறுப்பேற்று எழுதிக் கொடுத்தார். பொன் எடுத்த ஆய்த்தான் ஊரைவிட்டு ஓடி விட்டார். அவருடைய மனையையும், அவர் வர்க்கத்தார் மனைகளையும் விற்றுப் பண்டாரத்தில் சேர்த்தனர். கோயில்பூசையில் 16½ நாள் அவருக்குப் பங்கு இருந்தது. அந்த பூசை உரிமை நாட்களையும் பல அர்ச்சகர்கட்கு விற்று வந்த 850 பணத்தில் திருப்பணியை மேற்கொண்டனர். இதனை முடிவு செய்த சபையில் கைக்கோளரும், கைக்கோள முதலிகளும் இருந்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயகண்டன் ஸ்ரீ வீரகுமார கம்பண்ணர்க்குச் செல்லாநின்ற யாண்டு ஆனந்த வருஷத்
2. துக் கன்னிநாயற்று அபரபட்சத்துத் தசமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டல
3. த்து களத்தூர்க் கோட்டத்துத் திருக்கழுக்குன்றத்து உடையார் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயில் தொண்டக நாய
4. ன் திருக்காவணத்து ஸ்ரீருத்ர மகேசுவரர்களும் இன்னாட்டு செங்கயன் கிழான் திருப்பிலவாயிலுடையார் வென்றாபரணன்
5. ஆதித்த தேவரும் தனவான் அமராபதி காத்தாரும் காரைகிழான் பொன்னம்பலக் கூத்தரும் கைக்கோளர் கைக்கோள முதலிகளும்
6. நிறைவற நிறைந்து இருந்து முன்னாள் பிரமாதி வருஷத்து கல்லறை திறந்து குன்றவாணப்பெருமாள் திருவாசியிலே நூற்று ஐம்பது
7. பொன் சோருகையில் இதுக்கு மெய்காவலான திருக்கழுகுன்றபட்டன் முதலியானைக் கேட்ட அளவில் திருவெற்காவுடையான் மருதன்

8. ஆய்த்தான் கல்லறை திறந்து பொன் உரித்து மீள அடைத்து சாந்து இடுகைக்கே முதலியான் கண்டுபிடிக்கையில் இந்தச்சொரிந்த பொன்னும்
9. இத்தால் வந்த அத்தஹாணி பிராணஹாணி மானஹாணி இனக்குப் பரம் என்று தன் கையெழுத்தாலே முதலிடுகையில் இந்த முதல் இற்றைநாள்
10. முதலியான் காட்டுகையில் ஆய்த்தான் ஓடிப் போகையில் இந்த சிவத்துரோகத்துக்கு இவனுடையவும் இவன் பிராப்திஆளர் உடையவும் ஆன
11. மனையும் இறங்கல் இட்டு விற்று பண்டாரத்து ஒடுக்கி நிருபப்படிக்கு பொக்க அண்ணர் திருப்பணி ஆள் அறுவரைத் திருப்பணிக்கு
12. இப்பணம் 850 இப்பணம் எண்ணூற்றைம்பதுக்கும் நாற்பத்திஎட்டு வட்டத்து இவன் காணியான நாள் ஆறரையும் முப்பது வட்டத்து
13. ப்பூசை நாள் பத்தும் மனை நாலும் சண்டேசுவரப் பெருவிலை யாவதாகவும் இக்காணி நாள் பதினாறரைக்கு பரமேசுவர பட்டர் கொண்ட
14. நாள் ஒன்றே காலும் உருத்திர பண்டிதர் கொண்ட நாள் ஒன்றே முக்காலும் குன்றபட்டன் கொண்ட நாள் ஒன்றும் மகதேவ பட்டர் கொண்ட
15. நாள் ஒன்றும் பரமேஸ்வர பட்டர் கொண்ட நாள் அரையும் திருநா.... முடையார் கொண்ட நாள் ஒன்றும் பூசை நாளில் உருத்திர பண்டிதர்
16. கொண்டநாள் மூன்றும் சந்திரமவுலிபட்டர் கொண்டநாள் மூன்றும் மாதேவபட்டர் கொண்ட நாள் நாலும் ஆக நாள் பதினாறரையும்....
17. ற்றும் விற்று திருப்பணிக்கு இட்டபணம் எண்ணூற்று ஐம்பதும் ஒடுக்கினமைக்கு ஆதிசண்டேசுவரவேளான் எழுத்து இவை
18. பன்மாகேஸ்வர வேளான் எழுத்து சீகாழிநாடன் எழுத்து இவை பன்மாகேசுவர பட்டர் எழுத்து இவை உருத்திரபண்டிதன் எழுத்து
19. இவை மாதேவபட்டன் எழுத்து இவை வெங்காலபட்டன் எழுத்து இவை குன்ற பட்டன் எழுத்து இவை திருச்சிற்றம்பல பட்டன் எழுத்து
20. இவை சந்திரமவுலிபட்டன் எழுத்து இவை திருக்கழுக்குன்றபட்டன் முதலியான் எழுத்து இக்கோயில் கணக்கு இவை ஆதியூர் உடைய ..
21. மூவேந்த வேளான் எழுத்து இவை சித்திரமேழி வேளான் எழுத்து இவை அபிமான பூஷண வேளான் எழுத்து இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

## 26

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் ராஜசிம்மபன்மேசுவரர் கோயில் மண்டபம் முன்புள்ள தூண்

காலம் : குமார கம்பண்ண உடையார் காலம், கி.பி. 1364

செய்தி : ராஜசிம்மபன்மேசுவரர் கோயில் கட்டி சன்னதித்தெரு வடபக்கம் உள்ள ஆண்டார் சுந்தரப் பெருமாள் மடத்தையும், திரு அகத்தீசுவரம் உடைய நாயனார் கோயிலுக்குக் கிழக்கும் திருமஞ்சனப் பெருவழிக்கு மேற்கும் உள்ள எல்லா வீடுகளையும் கைக்கோளர்க்கும், கைக்கோள முதலிகட்கும் நூற்றைம்பது பணத்துக்குக் கொடுக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகா
2. மண்டலீசுரன் அரியராய
3. விபாடன் பாசைக்கு
4. தப்புவராய கண்ட
5. ன் பூருவ பச்சிம சமுத்தி
6. ராதிபதி ஸ்ரீவீர குமார
7. கம்பண உடையார் பிரு
8. த்வி இராச்சியம் பண்
9. ணி அருளாநின்ற சகா
10. த்தம் ஆயிரத்து இருநூ
11. த்து எண்பத்து ஆறின்
12. மேல் செல்லாநின்ற
13. விசுவாவசு வருஷம் ஆடி
14. மாதம் முதல் ஸ்ரீமது
15. கோப்பணங்கள்
16. காஞ்சிபுரத்தில் உடையார்
17. இராஜசிம்மபன்மீசுவரம்
18. உடையார் ஆக எடுத்
19. தது ஆயிரம் உடைய
20. நாயனார் கோயில் தா
21. ணத்தாற்கு நிருபம்
22. சந்நதித் தெரு வடசிற
23. கில் முன்னால் இருக்கும்
24. ஆண்டார் சுந்தரப்பெ
25. ருமாள் மடமும் திரு
26. வகத்தீசுரம் உடை
27. ய நாயனார் கோயி
28. லுக்கு கிழக்கு திருமஞ்
29. சனப் பெருவழிக்கு
30. மேற்கும் உள்ள மனை நீங்
31. கலான மனை அட
32. ங்கலும் இன்னாள்
33. முதல் என்றும் கைக்கோ
34. ளற்கும் கைக்கோள மு
35. தலிகளுக்கும் இந்த வட
36. சிறகில் உள்ள மனை

37. யும் மனைப்படப்
38. பையும் சண்டே
39. சுர விலையா
40. க விற்று இவர்கள்
41. பக்கல் வாங்கி கோ
42. யில் பண்டாரத்தில்
43. முதல் இட்ட பணம் 150 இப்ப
44. ணம் நூற்று ஐம்பதுக்கு
45. ம் இந்த மனைகளும் ம
46. னைப் படப்பைகளும்
47. மனைப் பிராப்த்திகளும்
48. முதல்மையும் அடை
49. ப்பும் கைக்கோள்மை
50. யும் தாங்கள் நின்ற
51. அடைவுகளிலே வி
52. ற்றும் ஒற்றி வைத்து
53. ம் கொள்ளக்கடவர்
54. கள் ஆகவும் ஊர் பொ
55. ருந்தினது அடைப்பு
56. ஆகக் கடவதாகவும் இ
57. ப்படிக்கு இன்னாள் முத
58. ல் சந்திராதித்தவரை
59. யும் செல்லக் கல்லிலு
60. ம் செம்பிலும் வெட்டிக்
61. கொள்ளவும் இவை கோப்பணன் எழுத்து
62. இப்படிக்குக் கல்வெட்டிக் குடுத்தோம்
63. இவை கம்பாண்டான் எழுத்து
64. இப்படிக்கு இவை இறங்கல் மீட்ட சீயன் எழுத்து
65. இப்படிக்கு இக்கோயில் தேவகன்மி காஞ்சிக்குறி வைப்பன் வீர
66. சம்பப் பிரமராயன் எழுத்து
67. இப்படிக்கு இவை காஞ்சிக்குறி பாரத்துவாசி விடங்கப்பட்டன்
68. எழுத்து இப்படிக்கு இவை நாறபத்தெண்ணாயிரக் காவான் எழுத்து
69. இவை இராகுத்தராயக் காவான் எழுத்து
70. இப்படிக்கு இவை இக்கோயில் கணக்கு உத்திரன்மேரூர் உடையான்
71. திருவேகம்பனான ஆதித்த தேவன் எழுத்து.

## 27

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், திருக்கழுக்குன்றம், பக்தவத்சலேசுவரர் கோயில் மடைப்பள்ளி வடசுவர்

காலம் : வீரவிஜய பூபதிராயர்; கி.பி.1406

செய்தி : திருக்கழுக்குன்றத்தில் உள்ள செட்டிகள், கைக்கோளர், கவறைகள், தச்சவடி வாணியர், செக்கு வாணியர், சேனைக்கடையர் மற்றும் பல தொழில்புரிவோரின் பட்டடை, நூல்ஆயம், செக்குஆயம், எருத்துச் சம்மாதம்.. ஆட்டைச் சம்மாதம், பேர்ச் சம்மாதம் மற்றும் பலவரிகள் தைத் திருநாளில் இறைவன் எழுந்தருளுவதற்கு அளிக்கப்பட்டது. இந்த வரிக்கு உண்டான தொகையை பண்டாரத்தில் அரசு பெற்றுக் கொள்ளலாம்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலீசுவரன் ஸ்ரீ வீரவிஜய பூபதிராயர் அருளிச்செயல்படிக்கு அரைசர் காரியத்துக்குக் கடவ ஸ்ரீ நாகீசுவரமுடையான்
2. வில்லவராயன் தன்மசாதனம் குடுத்தபடி விஜய வருஷம் ஐப்பசி மாதம் 21 தேதி உடையார் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் தைத்திருநாள் திருவெழிச்
3. சி உபையத்துக்கு நடக்கும்படி திருக்கழுக்குன்றத்திலும் இருக்கும் செட்டியள் கைக்கோளர் கவறையள் தச்சவடி
4. வாணியர் செக்குவாணியர் சேனைக்கடையர் மற்றும் பல காசாயவர்க்கத்துக்கும் கொள்ளும் பட்டடை நூல்ஆயம் செக்குஆயம் எருத்
5. துச் சம்மாதம் ஆட்டைச் சம்மாதம் பேர்ச்சம்மாதம் மற்றும் ஆயவகை உபாதிகளும் உட்பட
6. சருவமானியம் ஆகிவிட்ட அளவுக்கு இந்த உபையத்துக்கு இவ்வகையில் ஆயத்தில் ஆகிறமுதல் கோயில் பண்டாரத்திலே
7. பற்றிக்கொண்டு பண்டாரத்திலே சந்திராதித்தர் வரையும் செல்லும்படிக்கு சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணி
8. னவர் கெங்கைக்கரையில் காராம்பசுவை கொன்ற பாவத்தைப் பெறுவான்.

## 28

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சரப்பாக்கம், அட்சேசுவரர் கோயில் கோபுர வடசுவர்

காலம் : திரிபுவன வீரதேவரின் 35ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1213

செய்தி : திருவைச்சிறுபாக்கம் ஆட்சிகொண்டருளிய தேவர் கோயில் கைக்கோளரில் பிச்சைத் தேவனான கிடாரத்தரையன் சமய சேனாதிபதி 15 பொன் கொடுத்து கோயிலில் நந்தாவிளக்கு ஒன்று வைத்தார். மூலப்பொருளை ஏற்றுக்கொண்டு விளக்கெரிக்கச் சிவபிராமணர் ஒப்புக்கொண்டனர். திரிபுவன வீரதேவர் - மூன்றாம் குலோத்துங்க சோழன்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் திரிபுவன வீரதேவற்கு யாண்டு முப்பத்து அஞ்
2. சாவது செயங்கொண்ட சோழ மண்டலத்து திருவைச்சிறுபாக்கத்து உடையார்
3. ஆட்சிகொண்டருளிய தேவர் கோயில் சிவப்பிராமணரோம் திருநொந்தா விளக்கு உபையங்
4. கொண்ட பரிசாவது இன்னாயனார் கோயில் கைக்கோளரில் பிச்சைத் தேவனான கிடாரத்தரைய
5. னேன் சமைய சேனாபதி இன்னாயனார்க்கு வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றுக்கும் கொண்ட பொன் 15
6. இப்பொன் பதினைஞ்சும் கைக்கொண்டு இத்திருநுந்தா விளக்கொன்றுஞ் சத்திராதித்தவரை
7. செலுத்தக் கடவோமாகச் சம்மதித்தோம் இக்கோயில் சிவப்பிரா மணரோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 29

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கடப்பேரி சுவேதாரண்யேசுவரர்கோயில் இரண்டாம் பிரகார தெற்குச்சுவர் உட்பக்கம்

காலம் : குலசேகரதேவர்க்கு - 40 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1229.

செய்தி : பாண்டிமண்டலத்துக் கீழ்க்களக் கூற்றத்து சோழகுலமாணிக்க நல்லூரான மணப்படை வீட்டுக் கைக்கோளரில் திருநெல்வேலி உடையான் தன் தந்தை விரதமுடித்த பெருமாள் பெயரில் விரதமுடித்த பாண்டீசுவரமுடைய நாயனார் - புவனாபதி நாச்சியாரை எழுந்தருளச் செய்தார். ஒன்றேகால் பாடகம் பூமியை மூன்று சிவபிராமணர் சகோதரர்களிடமிருந்து விலைக்கு வாங்கி அமுதுபடி முதலியவற்றிற்காகக் கொடை கொடுத்தார். மத்கீத்தி முன்னாக - அரசரின் மெய்க்கீர்த்தியைக் குறிக்கும் தொடர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மத்கீத்தி முன்னாக கோமாறபன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு 40 மீன நாயற்று பூர்வ பட்சத்து த்வதியையும் சனிக்கிழமையும் பெற்ற ரேவதிநாள்

2. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து உடையார் திருவெண்காடுடைய நாயனார் கோயில் திருநடை மாளிகையிலே பாண்டி மண்டலத்து கீழ்களக் கூற்றத்து சோழகுல மாணிக்க

3. நல்லூரான மணப்படை வீட்டில் கைக்கோள முதலிகளில் விரதமுடித்த பெருமாள் மகன் திருநெல்வேலி உடையானேன் எழுந்தருளுவித்த உடையார் விரதமுடித்த பாண்டீசுவர முடைய நாயனார்க்கும் புவனாபதி நாச்சியார்க்கும்

4. திருநாமத்துக் காணியமாக ஸ்ரீ பராந்தகச் சேரி இராயூர்ச்சொட்டை ஸ்ரீ வாசுதேவ பட்டன் பிள்ளைகளில் இளைய ஸ்ரீ வாசுதேவ பட்டனும் இவன்தம்பி மூத்த நாராயண பட்டனும் இவன் தம்பி இளைய ஸ்ரீ ராம பட்டனும் இம்மூவர்

5. பக்கலும் விலைகொண்டு இறையிழிச்சி வைத்த பூமி விளை நிலமாவது இவ்வூர் திலைப்பாடகம் வீரசோழவாய்க்காலுக்கு தெற்கு மூன்றாங் கண்ணாறு ஸ்ரீ வீர நாராயண வதிக்கு மேக்கு முதல் சதுரத்து வடக்கி லெட்டில்

6. கீழை நாலில் வடக்கடைய தாக்கு இரண்டுநால் பாடகம் 1¼ ப்பாடகம் ஒன்றேகாலும் இன்னாயனார்க்கும் நாச்சியார்க்கும் பூசிக்கும் அமுதுபடி கறியமுது திருப்பணிக்கும் உடலாக சந்திராதித்தவரை செல்வதாக

7. கொண்டு இறை இழிச்சிக் குடுத்தேன் திருநெல்வேலி உடையானேன் இப்படிக்கு இவை திருநெல்வேலியுடையான் எழுத்து.

## 30

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புலிப்பரக்கோயில், வியாக்ர புரீசுவரர் கோயில் மகாமண்டபம் கிழக்குச்சுவர்.

காலம் : இராசநாராயணச் சம்புவராயர் ஆட்சியாண்டு 8.

செய்தி : திருப்புலிப்பகவர் கோயில் திருமடை வளாகத்தில் குடியுள்ள கைக்கோளர், சாலியர், வாணியர், கோயிலங்காடி, சேனையங்காடி முதலிய அனைத்துப் புறக்கலனையார் வரியைக் கோயில் பூசை முதலியவற்றிற்கு அளித்தது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்தி இராச நாராயண சம்புவராயர்க்கு யாண்டு 6 ஆறாவது.
2. வ்ருசப நாயற்று பூருவபட்சத்துத் துவாதெசியும் திங்கட் கிழமையும் பெற்ற சோதி நாள் ஜயங்
3. கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து ஸ்ரீமதுராந்தக சதுர்வேதிமங்கலத்து
4. வட பிடாகை மாத்தூர் உடையார் திருப்புலிப்பகவ நாயனார்க்கு திருமடைவிளாகம் புலிப்பகவர்கோயில்
5. நான்கெல்லைக்குட்பட்ட கைக்கோளர் சாலியர், வாணியர் சேனையங்காடி கோயிலங்காடி மற்றும் எப்பேறபட்ட
6. புறக்கலனையும் உட்பட முன்பு உள்ள குடியும் பின்பு ஏறும் குடியும் ஏற்றிக்கொண்டு தறிக்கடமை பேறகடமை மற்
7. றும் இப்பற்றில் கொள்ளும் பல வரிகளும் பல உபாதிகளும் உட்பட இந்நாயனார்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும்
8. திருநாமச் சிறப்புக்கும் இந்நாள் முதல் சந்திராதித்தவரையும் சர்வமானியமாக முதலடங்க இறையிலி ஆக குடு
9. த்தோம்.

## 31

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புலிப்பரக்கோயில் வியாக்ரபுரீசுவரர் கோயில் கருவறை மேற்குச் சுவர்

காலம் : சுபானு வைகாசி 18, 15 ஆம் நூற்றாண்டு

செய்தி : கைக்கோளர் முதலியார்கட்கு வரிக்குறைப்புச் செய்தமை கூறப்படுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் விஜயபூபதிராய உடை யார்க்குச் செல்லாநின்ற விளம்பி வருசம் தை மாதம் 5ந் தேதி உடையார் திருப்புலிப்ப
2. கவ நாயினார் திருமடைவிளாகம் புலிப்பகவர் கோயில் தானத்தார் இவ்வூர்க் கைக்கோளர்க்குக் கல்வெட்டிக் குடுத்தபடி நாட்டில் கோயில் பற்று அற்ற மரி
3. ஆதி வாசல்ப் பணம் கழிக்க வேணுமென்று புறநாட்டிலே சந்திரகிரிச்சாவடிஇலே போயிருக்கையில் பூர்வத்தில் கடமை பணம் 95க்குத் தறிக்கடமை வாசலுக்கு
4. வாசல் பணம் மூன்றும் கழித்துக் கொண்டு தறிக்கு தறி ஒன்றுக்குக் கொள்ளும் 65 சேணைக் கடைக்கும் வாசல் பணம் 3ம் கழித்துக் கொள்ளும் பணம்
5. 65க்கு கச்சவட வாணிகர் பேர் ஒன்றுக்குக் கொள்ளும் செம்படவர் பேர் ஒன்றுக்குக் கொள்ளும் 2½ இன்னாள் தானத்தார்க்கு நடந்து
6. வரும் புடவை முதல்பணம் 40ம் காத்த காணிக்கைக்குப் பணம் 4ம் இறுக்கக் கடவர்கள் ஆகவும் உபாதி நாட்டில் கோயில்
7. பற்று மா ஆகி இறுக்கக் கடவர்கள் ஆகவும் இம்மரியாதி சந்திராதித்யர் வரையிலும் நடக்கும்படிக்குக் கல்வெட்டிக் குடுத்தோம் இவ்வூர் ஊரவற்கு
8. உடையார் திருப்பலிப்பகவ நாயனார் கோயில் தானத்தார்.

## 32

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், விரிஞ்சிபுரம் மார்க்கசகாயேசுவரர் கோயில் கோபுரச்சுவர்

காலம் : வீரவெங்கடபதிதேவ மகாராயர் காலம்; கி.பி. 1605

செய்தி : பாலாற்றின் தென்கரையில் உள்ள விரிஞ்சிபுரம் வழித்துணை நாதசுவாமிக்கு விரிஞ்சிபுரம் கீழைத்தெரு மேலைத்தெருவில் உள்ள வியாபாரிகள், கைக்கோளர், சேனைக்கடையார் மற்றும் சில்லறைப் பட்டடையார் கொடுக்க வேண்டிய வரியை அப்பகுதியில் ஆட்சி புரிந்த சிற்றரசர்கள் நிர்ணயம் செய்தனர். அதன்படி, கைக்கோள முதலிகள் நெய்யும் தறிக்கு மாதம் ஒன்றுக்குத் தறி ஒன்றுக்கு அரைப்பணமும், தலைக்கட்டுக்கு மாதம் ஒன்றுக்கு ஒன்றேகால் பணமும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

### கல்வெட்டு

1. சுபமஸ்து ஓம் ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் ராசாதிராசன் ராசபரமேசுவரன் ஸ்ரீ வீரப்பிரதாபன் ஸ்ரீ வீரவெங்கடபதி
2. தேவ மகாராயர் பிருத்விராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாகன சகாப்தம்
3. 1527ன் மேல் செல்லாநின்ற விசுவாவசு சம்வத்சரத்து ரிஷபநாயற்று பூர்வப
4. ட்சத்து ...... தசமியும் சுக்ரவாரமும் பெற்ற அத்தத்து நாள் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து படுவூர்க்
5. கோட்டத்துக் கரைவழியான நாட்டு பாலாற்றுக்குத் தென்கரை திருவிரிஞ்சிபுரம் உடையார் வழித்துணை
6. நயினார் கோயில் தானமாயேசுரர் கீழைத்தெரு மேலைத்தெரு மன்றாடிகள்
7. வியாபாரிகள் கைக்கோளர்கள் சேனைக்கடையார் மற்றும் சில்லறை பட்டடையார்க்கும் ஸ்ரீ மன் மகா
8. மண்டலேசுவரன் சில்லேளுள் ஒபளதேவ மகாராயனவர்கள் கிருஷ்ணம ராஜயனவர்களுக்கு புண்ணியமாக

9. யிருந்த ..... வரைக்கு நடந்து ....... பொறுப்ப ........
10. ம் சருவமான்யமாக கட்டளையிட்டு கைக்கோள முதலியார்
11. நெய்யிற தறிக்கு மாதம் ஒன்றுக்கு தறி ஒன்றுக்கு பணம் ½ ஆகவும்-கொ-தலைக்
12. கட்டுக்கு மாதம் ஒன்றுக்கு பணம் ஒன்று காலும் வியாபாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு....
13. ம் முக்காலாகவும் மன்றாடிகள் சேனைக்கடையார் செம்படவர் தலைக்கட்டுக்கு மாதம் ஒன்றுக்கு
14. தலைக்கட்டுக்கு மாதம் ஒன்று பணம் அரையாகவும் இடையர் புலவர் தலைக்கட்டுக்கு இந்தப்படி கட்டளை
15. பண்ணிக்குடுக்கச் சொல்லி ராசாவையனவர்கள் பாரபத்தியம் பெரிய கேசவ நாய
16. க்கர்க்கு உத்தாரமிட்டபடியினாலே இப்படியே கீழைத் ....... விரிஞ்சி
17. புரத்திலே சாதனம்பண்ணிக் குடுத்தார் ஓபள ....... சாதனப்
18. படியே ஆசந்திரார்க்கமாக சந்திராதித்தவரையும் ..... டவதாகவும்
19. யிந்த தன்மத்துக்கு யாதொருவர் அகிதம் நினைத்தபேர் கெங்கை
20. கரையிலே மாதாபிதாவைக் கொன்ற பாவத்திலே போகக் கடவ
21. தாகவும்.

## 33

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வெளிச்ச குளத்தூர், குடியானவர் தெருவில் உள்ள கல்வெட்டு

காலம் : அரியப்பகவுண்டன் நிருவாக காலம், 16ஆம் நூற்றாண்டு

செய்தி : வெளிச்ச குளத்தூரில் கைக்கோளர் உள்ளிட்ட காசாயவர்க்கம் பலபட்டடையாருக்கு வரி நிர்ணயம் செய்து எழுதிக் கொடுத்து அடை ஓலையும் கொடுத்தனர். கைக்கோளர் ஒவ்வொரு வருக்கும் தறிக்கடமை, காணிப்பேறு, கற்பூரக்காணிக்கை, வட்ட கம்பட்டம், ரேகைக் காணிக்கை, அதிகார சோடி, முகம்பார்வை, நல்லெருது, நற்பசு, நெய், எண்ணை, கட்டாயக்கொள்ளு, சந்திரகிரி ராச்சியத்தில் உள்ள பழயவரி, புதியதாகத்தோன்றும் வரி இவை அனைத்திற்குமாக தறி ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு 5 பணமும், பல காணிக்கைக் கட்டாயத்துக்கு பணம் 7ம் ஆக 12 பணம், எச்சோறு 12 கொடுக்க வேண்டும். அடைசல்தறி நெய்தால் இதில் பாதி கொடுத்தால் போதும். வியாபாரிகள், மீன் பள்ளிகள் முக்கால் பங்கு தர வேண்டும். தெரு மானியம் பத்தில் ஒன்று கொடுக்க வேண்டும். இவை அடை ஓலையில் எழுதப்பட்டிருந்தன.

### கல்வெட்டு

பார்த்திப வருடம் ஆடி மாதம் 12ம் தேதி ஸ்ரீ மது அரியப்பகவுண்டன் வெளிச்சகுளத்தூர் காசாயவர்க்கம் பலபட்டடையார்க்கு அடை ஓலை நிர்ணயம் இட்டபடி, கைக்கோளர் பேர்க்கு தறிக்கடமை காணிப்பேறும் கர்ப்பூரக் காணிக்கை வட்ட கம்பட்டம் ரேகைக் காணிக்கை அதிகாரசோடி முகம்பார்வை நல்லெருது நற்பசு எண்ணை நெய் கட்டாயக் கொள்ளு சந்திரகிரி வாசலில் பிறக்கும் பழவரி புதுவரி மற்றும் எப்பேர்ப்பட்ட சகல உபாதியும் உள்பட மலையாங்கட்டுக் குத்தகையான தறி 1க்கு வருஷம் 1க்கு கடமை காணிப்பேற்றுக்குப் பணம் 5ம் பல காணிக்கை கட்டாயத்துக்குப் பணம் 7ம் ஆக பணம் 12ம் எச்சோறு பனிரண்டும் கொள்ளக்கடவோமாகவும் ஒரு வீட்டில் அடைசல் தறி நெய்தால் இதில் ஒன்று பாதி கொள்ளக்கடவதாவும் வியாபாரிகள் மீன்பள்ளிகள் பேருக்கு தீத்த அந்த மதிகாரியில் ஒன்று முக்கால் கொள்ளக்கடவதாகவும் தெரு மானியம் பத்தில் ஒன்று விடக்கடவதாகவும் சந்திராதித்தவரையும் இந்த நிர்ணயம் நடக்கக் கடவதாகவும் இந்த நிர்ணயத்துக்கு யாதாமொருவர் அகிதம் பண்ணினார் ஒருகாசு ஒரு பணம் கொண்டவர்கள் உண்டானால் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொண்ண தோஷத்தில் போகக் கடவதாகவும்.

## 34

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூர், கச்சபேசுவரர் கோயில் வெளிப்பிரகாரத் தென்சுவர்

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியன் (II), 14ஆம் ஆண்டு; கி.பி.1290

செய்தி : திருக்கச்சூரில் தொழில் புரிவோரிடம் வரி வாங்கும் முறை கூறப்பட்டுள்ளது. வியாபாரிகள் ஒவ்வொருவரிடமும் ஆறு பணமும், கைக்கோளரிடம் தறி ஒன்றுக்கு ஆறு பணமும், சாலியரிடம் தறி ஒன்றுக்கு ஆறு பணமும், வாணியர் ஒவ்வொருவரிடமும் ஆறு பணமும் ஆண்டுக்கு வசூல் செய்ய வேண்டும்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு 13வதுக்கு எதிராமாண்டு முதல் திருக்
2. கச்சூர் ஆயம் புறக்கலனை கடமை கொள்ளுமிடத்து ஸ்ரீ பண்டாரப்பாதி உள்ள வியாபாரிகள் பேர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்
3. றுக்கு ஆறுபணம் கொள்ளவும் கயிக்கோளர் தறி ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆறு பணம் கொள்ளவும் சாலியர் தறி ஒன்றுக்கு ஆ
4. றுபணம் கொள்ளவும் வாணியர் பேர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆறுபணம் கொள்ளவும் இப்படி
5. கடமை கொள்ளக்கடவது இவை பொத்தப்பிராயன் எழுத்து.

## 35

இடம் : காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூர், மருந்தீசுவரர் கோயில் தெற்கு, கிழக்குச்சுவர்

காலம் : நரசிங்கராயர்; 1489 மே 14

செய்தி : நரசிங்கராயர் முதல்பாவாடை நாகமநாயக்கர் காரியத்துக்குக் கர்த்தரான கோடத்திம்மு நாயக்கர், கரணிக்கம் சிலுமரசன் ஆகியோர் நரசிங்கராயர், நாகமநாயக்கர் தர்மமாக திருக்கச்சூர் மலைமேல் மருந்துக்கு நாதயபுரம் (திருமடை வளாகம்) ஏற்படுத்தி அதில் குடியேறுவோருக்கு ஆறுமாதம் வரியில்லை. பின்னர் மாதம் கால்பணம் வரி செலுத்த வேண்டும்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவர மேதினி மீசுரகண்ட கட்டாரி சாளுவ நரசிங்கராயர்க்குச் செல்லாநின்ற சகாப்தம் 1411 மேல் செல்லாநின்ற சௌம்ய வருஷம் இஷப ஞாயற்று பூர்வ பட்சத்து பூர்ணையும் வியாழக்கிழமை நாள்

2. நரசிங்கராயர் முதப்பாவாடை நாகமநாயக்கர் காரியத்துக்குக்கடவர் கோடத்திம்மு நாயக்கரும் கரணிக்கர் சிலுமரசரும் நரசிங்க நாயக்கருக்கும் நாகமநாயக்கருக்கும் தன்மமாகத் திருக்கச்சூர் மலைமேல்

3. மருந்துக்கு நாதயபுரமாக புதுசாக வாஸ்து இட்டு பலபட்டடையான குடிகளுக்கு சிலாலேகை பண்ணிக்குடுத்தபடி இவ்வருஷம் ஆடி மாதம் முதல் ஆறு மாதம் வரைக்கும் சர்வமானியம் இதற்கு எதிராம்

4. வருஷம் முதலாக மாதம் ஒன்றுக்கு கைக்கோளக்குடி பலபட்டடைக்குடி சர்வகத்துக் குடிக்கும் கால்பணம் கொள்ளக்கடவோம் ஆகவும் இம்மதத்தார் ஒழிய அன்னியர் மடம் பண்ணிக் கொள்ளக்கடவோம்

5. அல்லவாகவும் கொண்டவர்கள் கங்கைக்கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்களாகவும் இந்த தர்மத்துக்கு இராசகரம் நடக்கும் பேர் தானத்தாரும் மற்றும் விக்கிரப் பெரும்

6. ....... கொண்டால் சிவத்துரோகி ஆகக்கடவர்கள் வந்து ஏறின பள்ளக்குடிக்கு வாசல் பணம் சர்வ மானியம் ஆகவும்.

## 36

இடம் : கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், பெண்ணேசுவர மடம் ஈசுவரன் கோயில் கருவறை மேற்குச்சுவர்

காலம் : கி.பி. 14ஆம் நூற்றாண்டு; பிரதானி சோமய தண்ணாயக்கர் காலம்.

செய்தி : கைக்கோளர்கள் சோமப்பள்ளி என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்த விவரம் குறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. ஸ்ரீமனுமகாப் பிரதானி சோமய தண்ணாயக்கர் ............
2. விசுவாவசு வருஷம் ஆவணிமாதம் 15 தியதி ...........
3. கைக்கோளருமாகக் குடுத்த ஊர் சோமயபள்ளி ..........

(சோமய தண்ணாயக்கர் போசள மன்னன் மூன்றாம் வீரவல்லாளனின் படைத்தளபதி ஆவார். சோமய தண்ணாயக்கர் பெயரால் ஏற்படுத்தப்பட்ட ஊராக சோமயப்பள்ளி இருக்கலாம்)

## 37

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசி ஆளுடையார் கோயில் கல்யாண மண்டபம்.

காலம் : சுந்தர பாண்டியனின் 28ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1313

செய்தி : திருமடை வளாகத்தில் கும்பிட்டிருக்கும் தவசியரில் முதலி முதலியான முத்தின் சிவிகை பெற்றான் என்பவர் சண்டிகேசுவரரை எழுந்தருளச் செய்து இரண்டாம் பிரகாரம் வீரபாண்டியன் திருவோலக்க மண்டபத்தில் செய்த திருப்பணிகளைக் குறிக்கிறது. முத்தின் சிவிகை பெற்றார் என்பது திருஞான சம்பந்தரின் சிறப்புப் பெயர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 28வது
2. அவிநாசியாளுடைய நாயனார் கோயில் திருமடைவிளாகத்து கும்பிட்டிருக்கும் தவசியரில் முதலி முதலியான முத்தின் சிவிகை பெற்றானேன் திருநடைமாளிகையில்
3. சண்டேசுர நாயனாரை ஏறியருளப் பண்ணினேன் இரண்டாம் பிரகாரத்து வீரபாண்டியன் திருவோலக்க மண்டபத்தே
4. சோபானம் உபானம் துவங்கி பாவறுதியாக உள்ள திருப்பணிகள் செய்வித்தேன் முதலி முதலியான
5. முத்தின் சிவிகை பெற்றானேன் இது என் தன்மம் பன்மாகேசுவரர் ரட்சை.

## 38

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் கபாலீசுவரமுடையார் கோயில் மகாமண்டபத் தென்சுவர்

காலம் : வீரநஞ்சராய உடையார் காலம்; கி.பி. 1509

செய்தி : கொங்கு நாட்டில் வேறு எங்கும் இல்லாத சூளைத்திறை என்றவரி வடபரிசார நாடு, குறுப்பு நாடு, நாலூர்ப்பற்று நாடு, பேரூர் நாடு, வீரசோழ வளநாடு, ஒடுவங்க நாடு, வெங்கால நாடு ஆகிய நாடுகளில் இரண்டு ஆண்டுகளாக விதிக்கப் பட்டிருந்தது. சூளைத்திறை என்ற வரியை நீக்கிக் கைக்கோளருக்கு அரசன் ஆணை அளித்தார். சூளைத்திறை என்பது கடைவீதியில் விற்பனை செய்ய வசூலிக்கும் ஒரு வரி. எவரும் அவ்வரி வாங்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரநஞ்சராய உடையார்க்குச் செல்லாநின்ற சுக்குல வருஷத்து
2. மாசிமாதம் 16 ஸ்ரீமது ஆழ்வார் வடபரிசார நாடு
3. குறுப்பு நாடு நாலூர்ப்பற்று நாடு பேரூர் நாடு வீரசோழ வளநாடு
4. ஒடுவங்க நாடு வெங்கல நாடு யின்னாட்டிலுள்ள கைக்கோளற்கு
5. நிருபம் குடுத்தபடி கொங்குமண்டலத்து வேறு ஒரு நாட்டிலும்
6. இல்லாத கட்டளை இந்த நாட்டிலே இரண்டு வருஷம்
7. சூளைதிறை என்று நடந்த அளவுக்கு இவ்வருஷம் முதல்
8. என்றென்றைக்கும் நாம் இந்த நாடுகளுக்கு சூளைதிறை
9. விட்டோம் இந்த மானியம் இவ்வருஷம் முதலாக என்றும் நடக்கக் கடவதாகவும்
10. இது மீறி சூளைதிறை கொண்டவர்களுண்டாகில் நஞ்சன
11. உடையார் பாதத்துக்குத் தப்பியவர்கள் ஆகக்
12. கடவதாகவும் இப்படிக்கு ஆழ்வான் எழுத்து.

## 39

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் கருவறை வடசுவர்

காலம் : வீரராசேந்திரசோழனின் 22ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1229

செய்தி : அன்னூர் ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளரில் நேரிய கங்கன் என்ற படைவீரர் மன்னியூருடைய சிவபெருமானுக்குச் சந்தியாதீபம் வைக்க ஒன்றேகால் பொன் கொடையளித்தார். சித்திரமேழி பட்டன் என்பவர் வேளாளரால் சிறப்பிக்கப் பட்டவராக இருக்கக்கூடும்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர
2. தேவற்கு யாண்டு இருபத்திரன்
3. டாவது மந்நியூரிலிருக்கு
4. ம் ஆமட்டம் கண்டன் தெரி
5. ந்த கைக்கோளரில் நேரிய கங்
6. கனேன் மந்நியூராளுடையார்க்கு
7. வைத்த சந்தியாதீபம் ஒன்றுக்கு
8. பொன் கழஞ்சேகாலும் இக்கோயி
9. யிற் காணியுடைய விக்கிரமசோ
10. ழப் பட்டனும் சித்திரமேழி பட்ட
11. னும் கைக்கொண்டு குடங்கொடு
12. கோயில் புகுவார் சந்திராதித்தவ
13. லுஞ் செல்வதாக இது பன்மகேசு
14. வரர் ரட்சை.

## 40

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், இலுப்பநத்தம், ஊருக்குத் தெற்கே தீனப்பகவுண்டர் தோட்டத்தில் உள்ள கல்

காலம் : போசள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன், கி.பி. 1338

செய்தி : போசள மன்னன் மூன்றாம் வீரவல்லாளனின் கொங்கு மண்டல ஆட்சியாளன் சிங்கய தெண்ணாயக்கர் இலுப்பநத்தம் அழகிய சொக்கனார் கோயில் திருமடை வளாகத்தில் கைக்கோளர் குடியேற அளித்த ஆணை. குடியேறும் கைக்கோளர்கட்கு முதல் ஆண்டு எந்த வரியும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவ
2. ல்லாள தேவர் பிருத்வி
3. ராஜ்யம் பண்ணியரு
4. ளாநின்ற ஈஸ்வர சம்வத்ச
5. ரத்து தை மாதம் பதினொன்றாந்
6. தேதி வடபரிசாரநாட்டு இலு
7. ப்பையில் ஊரும் ஊராளிகளு
8. மாகக் கூடி நாக்கரும் உடையா
9. ர் அழகிய சொக்கனார்க்கு சிங்கய
10. தெண்ணாயக்கர் தம்மமாக திரு
11. மடை விளாகத்து கைக்கோளர்
12. சுவந்தரியம் குடுத்த பரிசாவ
13. து வரும்குடிக்கு ஒரு வருஷம்
14. மானியம் இரண்டாம் வருஷ
15. த்துக்கு ஒன்றிலிரண்டு மேல்
16. சந்திராதித்தர் வரைக்கு ஒ
17. ன்றரைப் பணம் நாலு
18. ம் இத்தன்மத்தை இர
19. ட்சித்துக் கொள்ள
20. மாக்கய நாயக்கர்
21. எழுத்து இப்படிக்கு
22. சேரமான் எழுத்து இப்படி
23. க்கு தேவர் எழுத்து இப்படி
24. க்கு காமிண்டர் எழுத்து
25. இப்படிக்கு அடைக்கலங்
26. காத்தார் எழுத்து இப்படிக்கு
27. வாணராயன் எழுத்து
28. தன்மத்தைக் குறைத்
29. தான் தன் தாய்க்குத் தான்
30. மிணாளன்.

## 41

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் வடக்குச் சுவர்

காலம் : வீரராசேந்திரனின் ஆட்சியாண்டு 23; கி.பி. 1230

செய்தி : அன்னூரிலிருந்த ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளரில் தனபாலரையன் என்பவர் மன்னியூர் சிவபெருமானுக்குச் சந்தியாதீபம் வைக்க ஒன்றேகால் கழஞ்சு பொன் கொடையாகக் கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசே
2. ந்திர தேவற்கு யாண்டிரு
3. பத்து மூன்றாவது மந்நியூ
4. ரிலிருக்கும் ஆமட்டம் க
5. ண்டன் தெரிந்த கைக்கோள
6. சேனாபதிகளில் தனபாலரைய
7. னேன் மந்நியூராளுடையார்க்கு
8. வைத்த சந்தியா தீபம் ஒ
9. ன்றுக்குப் பொன் கழஞ்சே
10. காலும் இக்கோயில் காணி
11. யுடைய சிவப்பிராமண
12. ரில் பெருமாளும் மாதவப்
13. பெருமாளும் கைக்கொண்டு கு
14. டங்கொண்டு கோயில் புகுவா
15. ர் சந்திராதித்தவல் செலுத்
16. த இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 42

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அக்கசாலீசுவரர் கோயில் கருவறை மேற்குக் குமுதவரி

காலம் : வீரராசேந்திரனின் ஆட்சியாண்டு 28; கி.பி. 1235

செய்தி : வடபரிசார நாட்டுச் சேவூர் கைக்கோளர் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன் சேவூர் அக்கசாலீசுவரமுடையார் கோயிலில் சந்தியாதீபம் இரண்டு வைக்க பழஞ்சலாகை பொன் இரண்டு அச்சு கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தெட்டாவது மார்கழி மாதம் முதல் வடபரிசார நாட்டுச் சேவூரில் இருக்கும் கைக்கோளரில் காளி அவிநாசி
2. யான எல்லாம் வல்ல சோழகங்கனேன் ஆளுடையார் அக்கசாலீசுவர முடையார்க்கு சந்தியா தீபவிளக்கு இரண்டுக்கு வச்ச பழஞ்சலாகை அச்சு இரண்டும் கைக்கொண்டோம் சேவூரிலிருக்
3. கும் சிவபிராமணரில் காசுவகோத்திரத்தில் திருநட்டன் சீவல்லவனும் ஆழ்வான் திருநட்டனும் கங்கன் புகலியும்... வடுகன் நால்வோமும் இவ்விரண்டச்சும் கைக்கொண்டு சந்தியா
4. தீபம் எரித்துவருவோமாகவும் சந்திராதித்தவரை இக்கோயிலுக்குக் குடமுங் குச்சியும் கொண்டு கோயில் புகுவாரே செலுத்தக் கடவோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 43

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் தெற்குச் சுவர்

காலம் : வீரராசேந்திர தேவன் ஆட்சியாண்டு முப்பதாவது; கி.பி. 1237

செய்தி : அன்னூர் ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளர்களும், சேனாபதிகளும் மன்னியூராளுடையார் கோயிலில் இடங்கை நாயகர் படிமம் எழுந்தருளச் செய்து நாள்தோறும் கோயில் செம்பால் இருநாழி அரிசியில் அமுது செய்விக்க 24 அச்சு கோயில் கருவூலத்தில் மூலப்பொருளாக வைத்தனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதுக் கெதிராவது
2. ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளரும் சேனாபதிகளோமும் ஆளுடையார் மன்னியூராளுடையார் கோயிலில்
3. நாங்கள் எழுந்தருளுவித்த இடங்கை நாயகர்க்கு அமுதுபடி நாளொன்றுக்கு
4. கோயில் செம்பால் அரிசி இருநாழியும் கறியமுது விஞ்சனத்துக்கும் நாங்கள்
5. ஒடுக்கின அச்சு இருபத்துநாலு இந்நாயனார் பண்டாரத்தில் தேவகன்மிகள்
6. வசம் ஒடுக்கினமைக்கு இது சந்திராதித்தர்வரை செல்வதாக இது
7. பன்மாகேசுவரர் ரட்சை.

## 44

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன் பூண்டி முருகநாதர் கோயில் முகமண்டபப் பட்டிகை வரி

காலம் : வீரராசேந்திரனின் 35ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1242

செய்தி : வடபரிசாரநாட்டு சாலியநகரத்தாரும், வாணிக மடிகையாரும், அக்கசாலையாரும், மேல்தலைத் தஞ்சாவூரான மன்னியூர் அடிக்கீழ்த்தளம் படையில் மூத்த சமக்கட்டான ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளரும், இளைய சமக்கட்டான வீரராசேந்திரத் தெரிந்த கைக்கோளரும், சாமந்த சேனாபதிகளும் இணைந்து திருமுருகன்பூண்டி திருக்காமக்கோட்டத்து நாச்சியார் இடுகு நுண்ணிடை மங்கையாரை எழுந்தருளச் செய்து விழா நடத்த தென்கரை எம்மான்பூண்டியான *வீரராசேந்திர நல்லூர் வரிகளைக் கொடையாக அளித்தனர்.*

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் சிரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவதுக் கெதிர் ஆறாவது அற்பிசைத் திங்கள் முதலாக வடபரிசார நாட்டில் சாலிய நகரத்தோமும் வாணிக மடிகையோமும்

2. அக்கசாலையோமும் மேத்தலைத் தஞ்சாவூரான மன்னியூர் அடிக்கீழ்த்தளத்தில் மூத்த சமக்கட்டான ஆமட்டன் கண்டன் தெரிந்த கைக்கோளரோமும் சாமந்தர் சேனாபதிகளோமும் இளைய சமக்கட்டான வீரராசேந்திரத் தெரிந்த கைக்கோள ரோமும்

3. வந்த கோனேரின்மைகொண்டான் ஆளுடையார் திருமுருகன் பூண்டி ஆளுடைய நாயனார் ஆண்டவனுக்கு நன்றாக திருக்காமக்கோட்டத்து நாச்சியார் இடுகு நுண்ணிடை மங்கையாரை எழுந்தருப் பண்ணி இந்த நாச்சியார்க்கு நம்மோலை கொடுத்தபடியாவது இந்நாச்சியார்க்கு அமுது படிக்கும் பூசைக்கும் முப்பத்திரண்டு அறத்திற்கும் திருப்பணிக்கும் உடலாக விட்டுக் குடுத்த வடபரிசார நாட்டு தென்கரை எம்மான் பூண்டியான வீர ராசேந்திர நல்லூர்

4. கொள்வார்களாகவும் இவ்வூர்க்கெல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சையால் வந்த இறைபுரவு சிற்றாயம் எலவை உகவை தெண்டங்குற்றம் வேண்டுகோள் வரி சூளைத்திறை சுமை சுங்கம் சாரிகை மற்றும் எப்பேர்ப்பட்டனவும் இந்நாச்சியார்க்கு

5. உதகம் பண்ணிக்குடுத்தமையில் இவ்வூர்க்கு நம் சாமந்தர் கண்மிகள் புக்கு ஆராயக் கடவதல்லராகவும் இந்நாச்சியார் கன்மிகள் ஆராயக் கடவாராகவும் இதற்கு மன்றாட்டு ஊர்க் கொத்தில் கோயிலான் மன்றாட்டு ஒன்றும் அரு

6. பிரம்மராயருக்கு மன்றாட்டொன்றும் ஆத்திரேய கோத்திரத்து நக்கன் தேவனுக்கு மன்றாட்டொன்றும் ஆத்திரேய கோத்திரத்து நக்கன் தோன்றிக்கும்

7. பெரிய செட்டிப்பிள்ளனுக்கும் செட்டி கேசவனுக்கும் செட்டி சிங்க கேசனுக்கும் மன்றாட்டொன்றும் ஊராண்டை பூலுவ வேட்டுவரில் ......

## 45

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் தெற்குச் சுவர்

காலம் : விக்கிரம சோழ தேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1261

செய்தி : சேவூரைச் சேர்ந்த கைக்கோளரில் கரிகாலன் என்பவர் மன்னியூராளுடையார் கோயிலில் இரண்டு சந்தியாதீபம் வைக்க இரண்டரைக் கழஞ்சு பொன் கொடையாகக் கொடுத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரசோழ தேவர்க்கு யாண்டு அஞ்சாவது ஆளுடையார்...
2. காணியுடைய சிவபிராமணர் காசுவ கோத்திரத்தில் சீவலவன் உள்ளிட்டாரும்
3. வீராண தேவன் உள்ளிட்டாரும் சேவூர் கைக்
4. கோளரில் கரிகாலனேன் ஆளுடையார் மந்நியூராளுடையார்க்கு
5. சந்தியா தீபம் இரண்டுக்கு ஒடுக்கின பொன் இரு கழஞ்சரையும் கைக்கொண்டோம்
6. குடங்கொடு கோயில் புகுவார் சந்திராதித்தர்வரை செலுத்து
7. வோமாகவும் .... கொள்கையில் பொன் அச்சுக்கொள்கையில் வாங்கியிட்டோம்.

## 46

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் கிழக்குச் சுவர்

காலம் : குலோத்துங்க சோழனின் 5ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1153

செய்தி : அன்னூர் ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளரில் ஆண்டான் கறுத்தான் என்பவர் மன்னியூர்ச் சிவபெருமானுக்குச் சந்தியா தீபம் வைக்க ஒன்றேகால் கழஞ்சு பொன் கொடை கொடுத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ
2. தேவற்கு யாண்டு அஞ்சா
3. வது ஆளுடையார் மந்நியூர் ஆ
4. ண்டார்க்கு மந்நியூரில் ஆமட்டம்
5. கண்டன் தெரிந்த கைக்கோள
6. ரில் ஆண்டான் கறுத்தானேன் சந்
7. தியா தீபம் ஒன்றுக்கு காணியாள
8. ரில் வீரப் பெருமாளும் பெருமா
9. ளாண்டார் வசமும் ஒடுக்கின
10. பொன் கழஞ்சே காலும் குடங்
11. கொண்டு கோயில் புகுவான் சந்திரா
12. தித்தர்வரை செலுத்த இது பன்
13. மாகேசுவரர் ரட்சை.

## 47

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் கிழக்குச் சுவர்

காலம் : கி.பி. 14ஆம் நூற்றாண்டு

செய்தி : வெள்ளலூரைச் சேர்ந்த கைக்கோளரில் அவனியராயன் என்பவர் மன்னியூர் ஆளுடையார் கோயிலுக்கு நாரைக்காளம் என்ற இசைக்கருவியை அளித்தார். அதன் எடை 50 (பலம்?)

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஆளுடையார் மந்நியூ
2. ராண்டார்க்கு வெள்ளலூர் கைக்கோ
3. ளரில் அவனியராயன் இட்ட நாரைக் காளம்
4. ஒன்றும் இடை ஐம்பது.

(காளம் என்பது, ஊதும் ஒரு வகைக் கருவி)

## 48

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில்

காலம் : கோனேரின்மை கொண்டான் (ஒரு சோழமன்னன்), 13ஆம் நூற்றாண்டு

செய்தி : கரையூர் தலைநகரில் காணி உடைய பாரசிவரில் புண்டரிகன் பெரியனான ஆமட்டம் தெரிந்த கைக்கோளரில் சோழன் வடுகனான இடங்கையார் அன்னூர்க் கோயிலில் கைமத்தளம் வாசிக்கவும் நாட்டியமாடவும் உரிமை பெற்றிருந்தார். அவர் இறந்துவிடவே அவருடைய மக்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்து அரசன் ஆணையிட்டான். (பாரசிவர் - தலையில் லிங்கம் தாங்கும் சைவ சமய மரபினர்).

### கல்வெட்டு

1. கோநேரின்மைகொண்டான் கரையூர் தலைநகரில் .....
2. உடைய பாரசிவரில் புண்டரிகன் பெரியனான ஆமட்டம் தெரிந்த ....
3. கைக்கோளரில் சோழன் வடுகனான இடங்கையார் பாண நிருத்த ....
4. (அ) னுபவித்து வந்த அவன் அந்தரப்பட்டமையில் ....
5. யார் மன்னியூராண்டார் கோயிலுக்கும் சேவூரில் ஆளுடையார் .....
6. வாரியக் கைமத்தளமும் நட்டுவக்காணியும் மற்றும் தொ.....
7. ம் இவர்களுக்கும் இவன் மக்கள் மக்களுக்கும் .....

## 49

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி முருகநாதர் கோயில் முகமண்டப மேற்குச்சுவர் வடபகுதி

காலம் : வீரராசேந்திரதேவனின் 27ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1234

செய்தி : இக்கல்வெட்டில் இரண்டு செய்திகள் கூறப்பட்டுள்ளன.

1. வடபரிசாரநாட்டுச் சேவூர்க் கைக்கோளர் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன் என்பவர் இறைவன் வழிபாட்டுக்கு 50 குடம் திருமஞ்சனநீர் கொண்டு வருவானுக்குச் சீவனத்துக்கு சிரீயக்கி பழஞ்சலாகை பொன் 12 அச்சு கொடுத்தார்.
2. இப்பன்னிரண்டு அச்சும் பழங்கரை ஊராளிகள் பெற்றுக் கொண்டு ஆண்டுதோறும் இருபது கலம் நெல் வட்டியாக அளிப்பதாக ஒப்புக்கொண்டனர். அச்சு 12 பெற்றுக் கொண்டமைக்குத் தங்கள் நிலத்தைக் கோயிலுக்கு அடைமானம் (ஒற்றி) வைத்தனர்.

### கல்வெட்டு

1. கோவிராசகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திரதேவற்குத் திருவெழுத்திட்டுச்
2. செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபத்தியேழாவது .... சித்திரை மாதம் முதல் வடபரிசார நாட்டுச் சேவூரிலிருக்
3. கும் கைக்கோளரில் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன் ஆளுடையார்
4. திருமுருகன்பூண்டி நாயனார்க்கு நாள் ஒன்றுக்கு அஞ்சுபதின்குடம் திருமஞ்சனம் எடுப்
5. பானுக்குச் சீவனத்துக்கு ஒடுக்கின ஆனைஅச்சு சிரீயக்கி பழஞ்சலாகை பனிரண்டு தர்
6. மத்துக்கு ஒடுக்கின அச்சு மேற்படி நாட்டில் பழங்கராய நல்லூர் ஊராளிகளோம் ஆளுடையார் திருமுருகன்
7. பூண்டி ஆளுடையார் பண்டாரத்தில் தேவகன்மிகள் கையால் நாங்கள் கொண்டு கடவ ஆனையச்சு சிரீயக்கி
8. பழஞ்சலாகை அச்சு பனிரண்டும் கொண்டோம் கொண்ட படியாவது

இவ்வச்சுக்குப் பலிசை

9. யாவது ஆண்டுவரை தென் ..... காணி நெல்கண்ட பொந்நாடு நாழியால் பத்திருகலம் அளந்து

10. வருவோமாகவும் இவ்வச்சுக்கு ஒற்றிவைத்த நிலம் படைவீட்டு வழி இட்டலுக்கு மேற்கும் தண்டிக்கும் குடத்

11. தாற்றுக்குத் தெற்கும் தநிஞ்சியான் ..... குடித்தாற்றுக்கு வடக்கும் மேற்கு அசலோகாதெளங்கே பாளைக் கப்பால்

12. படைவீட்டுக்குப் ..... மேற்கும் சுந்தரப்பர் பொன்குடத்தாற்றுக்குத் தெற்கும் வளகாண்டார் ஒற்றி

13. கொண்ட தாற்றுக்கு வடக்கு .... க்கச் சலோகரி இந்நான்கெல்லைக்குட்பட்ட நிலமும் படைவீட்டு வழிக்கு எல்லைக்கு மாற்றம்

14. சேரமான் சோழன் குடித்தாற்றுக்கு வடக்கும் அவிநாசியாண்டான் குடித்தாற்றுக்கு தென்மேற்கும் ஆக

15. லோகரி இந்நான்கெல்லைக் குட்பட்ட நிலம் பனிரண்டு பணத்தாலும் நியமமாக சந்திராதித்தவரை அளந்து

16. வருவோமாகவும் இது செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வதாக ஓலை

17. இட்டுக் குடுத்தோம் பழங்கராய நல்லூர் ஊராளிகளோம் இந்நாயனார் தேவகன்மிகளுக்கு

18. பன்மாகேசுவரர் ரட்சை இது மாற்றுவான் ஏழெச்சம் அறுவான்.

## 50

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி முருகநாதர் கோயில் மேற்கு, தெற்கு ஜகதிப்படை

காலம் : வீரராசேந்திரதேவனின் ஆட்சியாண்டு 27; கி.பி. 1234

செய்தி : சேவூர் கைக்கோளர் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன் என்பார் திருமுருகன் பூண்டிக்கோயிலில் நாள்தோறும் 50 குடம் திருமஞ்சனம் அளிக்க பழஞ்சலாகை ஆனை அச்சு மூன்று கொடையாக அளித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற நல்லியாண்டு இருபத்தியேழாவது ஸ்ரீ முருகன்பூண்டி
2. ஆளுடைய நாயனார்க்கு சேவூரிலிருக்கும் கைக்கோளரில் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கனேன்
3. பூண்டி நாயனார்க்கு நாளொன்றுக்குத் திருமஞ்சனம் ஐம்பதிங்குடம் எடுப்பான் ராசராசபுரத்து பிராமணன் அவிநாசி தேவன் ஆனை அச்சு பழஞ்சலாகை அச்சு
4. மூன்றும் கொண்டு அவிநாசி தேவனேன் சந்திராதித்தவரை குடங்கொண்டு கோயில் புகுவாரில் தட்டாரில் பறையன்
5. கொண்டனான சேனாபதித் தட்டானும் ...........

## 51

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பழங்கரை, முன்தோன்றீசுவர முடையார் கோயில் கருவறை தெற்குச்சுவர்

காலம் : வீரராசேந்திரன் ஆட்சியாண்டு 25; கி.பி. 1232

செய்தி : கைக்கோளரில் காளி அவிநாசி கற்பகம் என்பவர் பழங்கரை தோன்றீசுவரரைத் திருவீதி உலாச் செய்யும்போது சிறப்பு அமுதுபடிக்காக பழஞ்சலாகைப் பொன் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்குத்
2. திருநல்லியாண்டு இருபத்தைஞ்சாவது வடபரி
3. சாரநாட்டில் பழங்கரையான நல்லூர் ஊரும் ஊரி
4. லிருக்கும் கைக்கோளரில் காளி அவினாசி
5. கற்பகம் பக்கல் பழஞ்சலாகை கைக்கொண்ட
6. படியாவது எங்கள் நாயனார் தோன்றீசுவரமுடையார்
7. எழுந்தருளுகைக்கு சிறப்பமுது செய்ய யாண்டு வரை
8. தோறும் இந்த நெல் சந்திராதித்தவரை பிடிபாடாகக்
9. கொண்டு தன்மமாகச் செலுத்துவதாக இது
10. பன்மாகேஸ்வரர் ரட்சை.

## 52

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், கடத்தூர், திருமருதுடையார் கோயில் மகாமண்டபத் தென்சுவர்

காலம் : வீரராசேந்திரனின் 12ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1219

செய்தி : திருமடைவளாகத்துக் கைக்கோளரில் குதிரைச்சேவகர் பெருமாள் போத்த வீரன் கடத்தூர் திருமருதூருடையார் கோயிலில் இறைவனுக்கு அமுதுபடியாக அவலமுது படைக்க நெல் மூன்றரையே அரைக்கால் கலம் கொடையாக அளித்தார். அரிசியால் செய்யப்பட்ட அவலமுதில் தேங்காய், கருப்பட்டி, மிளகு, சீரகம் ஆகியன சேர்க்கப்பட்டிருந்தன.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பனிரண்டாவது ஆளுடையார் திருமருதுடையார் திருக்கார்த்திகைக்கு அதிராசராசன் திருமடை வளாகத்து கைக்கோளர் குதிரைச் சேவகரில் பெருமாள் போத்த வீரன் அமைத்த தன்மமாவது

2. அவலமுது கலத்துக்கு நெல் இருகலனே தூணிப்பதக்கும் தேங்காய் எட்டுக்கு நெல் இரு தூணியும் கருப்புக்கட்டி முப்பதின் பலத்துக்கு நெல் இரு தூணிப்பதக்கு அறுநாழியும் மிளகமுதுக்கு நெல் குறுணியும் சீரகம் முன்னாழிக்கு நெல் குறுணியும் இலையமுது ........... அமுது

3. படி அரிசி பதக்கு .... நெல் தூணிப்பதக்கும் இப்படிக்கு மூன்றரையே அரைக்காலும் கொண்டு இத்தன்மம் செலுத்துவோமானோம். கோயிலில் சிவப்பிராமணன் ராஜராஜபட்டனும் சைவச் சக்கரவர்த்தியும் எங்கள் .........

## 53

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம். கண்ணாடிப்புத்தூர், திருஅந்தீசுவரமுடையார் கோயில் நுழைவாயில் நிலை

காலம் : விக்கிரம சோழதேவரின் இருபதாம் ஆட்சியாண்டு; கி.பி.1275

செய்தி : மூத்தவாள் படையைச் சேர்ந்த கைக்கோளர் வீரன் கோவன் என்பார் மூன்று பழஞ்சலாகை அச்சுக் கொடையாக அளித்து விளையும் பருவந்தோறும் பருவத்திற்கு இருகல விதை நெல் அளிக்கவும், அமுது செய்யவும் கண்ணாடிப்புத்தூர் அந்தீசுவர முடையார் கோயிலில் ஏற்பாடு செய்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்
2. கிரம சோழதே
3. வர்க்கு யாண்
4. டு 20வது கரை
5. வழிநாட்டுக் கண்
6. ணாடிப்புத்தூர் ஆ
7. ளுடையார் தி
8. ரு அந்தீசுரமுடை
9. யார்க்கு திரு
10. ப் புதியது அ
11. முது செய்தரு
12. ள மூத்தவாள் கை
13. க்கோளரில்
14. கோவன் வீர
15. னேன் இக்கோயி
16. லில் காணி உ
17. டைய சிவ பி
18. ராமணன் கரிகா
19. லசோழபட்ட
20. ன் வசம் ஒடுக்கி
21. ன பழஞ்சலா
22. கை அச்சு மூன்றுக்
23. குப் பூவில் இருகலவி
24. ரை நெல்லு பூத்தோறும்
25. செலுத்தி வ
26. ருவதாகவும்
27. இது குடமும்
28. குச்சிகையு
29. ம் கொண்டு
30. புகுவான் சந்தி
31. ராதித்தியவல் செலு
32. த்தி வருவதாக
33. வும் இது பன்
34. மாகேஸ்வ
35. ர ரட்சை.

## 54

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், சங்கிராம நல்லூர், சோழீசுவரர் கோயில் வடக்குச் சுவர்

காலம் : விக்கிரசோழ தேவனின் 23 ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1296

செய்தி : பொங்கலூர்க்கா நாட்டுக் கீரனூரில் ஊர் அதிகாரியாக இருந்த யாழ்வல்லான் பாண்டியன் ஆன விக்கிரமசோழ இருங்கோளன் என்னும் கைக்கோள முதலியார் கொழுமம் வீரசோழீசுவர முடையார் கோயிலில் திருக்கார்த்திகை விழா நடத்தி இறைவனைத் திருவீதி உலாவாக எழுந்தருளச் செய்யப் பல இடங்களில் ஒன்றரை மாவும் முந்திரியும் அளவுள்ள நிலம் கொடையாகக் கொடுத்துள்ளார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ
2. விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 22
3. ரண்டாவதின் எதிராவது கைக்கோள
4. முதலிகளில் யாழ்வல்லான் பாண்டியன் ஆன
5. விக்கிரம சோழ இருங்கோளனேன்
6. கரைவழிநாட்டுக் கொழுமத்து ஆளு
7. டையார் வீரசோழீசுவரமுடையார்க்கு
8. எனக்கு நன்றாக நான் கண்ட திருக்கார்த்திகை தன்ம
9. த்துக்கு வேண்டுவனவையிற்றுக்கு நான் விட்ட நிலமாவ
10. து பொங்கலூர்க்கா நாட்டுக் கீரனூரில் ...... விட்ட
11. இந்நிலம் அரை மாவுக்கு நான்கெல்லையாவது வேளான்
12. நிலத்துக்கு வடக்கும் ........ பல்லவரையன் நிலத்துக்கு
13. கிழக்கும் கொம்பூதி செய்க்குத் தெற்கும் குலோத்துங்கப்
14. பல்லவரையன் நிலத்துக்கு மேற்கும் இந்நான்கெல்
15. லைக்கு உட்பட்ட நிலம் அரைமாவும் பூலுவன் எம்பெருமாள்
16. நிலத்துக்கு நான்கெல்லை கூடி மாகாணிக்கு ....... கீழ் ........ பி

17. ள்ளையன் செய்க்கு மேற்கும் நடுவுள்பட்ட நிலம் அரைக்
18. காணியும் சிறுக்குளத்து வீரபாண்டி நிலத்துக்கு நான்கெல்லை
19. சிங்காதன் செய்க்கு மேற்கும் என் ஊராண்மைக் காணிக்கு
20. கிழக்கும் பந்தலூர் ஊரான் மகன் உடையான் செய்
21. க்குத் தெற்கும் அழகிய சோழ .... யரையன் செய்க்கு வடக்கும் இ
22. ந்நான்கெல்லைக்குட்பட்ட நிலம் காணியும் கொங்கூரில் தி ......
23. ....... பத்தன் நிலத்துக்கு நான்செல்லை ஞானவேந்தன் செய்க்
24. குக் கிழக்கும் திருவானைக்காவுடையான் செய்க்கு வடக்கும்
25. கீரனூர் மருத்துக்கோழியாண்டான் செய்க்கு தெற்கும் ஊராண்மை
26. கண்ணாற்றுக் கவருக்கு மேற்கும் இந்நான்கெல்லை வடநிலம் மா
27. காணியும் மேற்படி நான்நிலம் கோவன் தக்கன் செய்க்கு மேற்
28. கும் சேனை அங்கராயன் செய்க்கு தெற்கும் சேரமான் தோழன்
29. செய்க்குக் கிழக்கும் அவனாசி ...... செய்க்கு வடக்கும் ஆக
30. இந்நான்கெல்லைக்குள்பட்ட நிலம் காணி அரைக்காணி மு
31. ந்திரிகையும் ஆக நிலம் ஒரு மாவரை முந்திரியும் இக்
32. கோயில் தானத்தார் தாங்களே அடையக்கொடுத்துத் திருக்கலத்தினை.
33. த் தாமம் இந்நிலத்தால் உள்ள நெல்லுக்கு நெற்க வேண்டும
34. ருப்பண்ணிகாரம் விஞ்சனங்கள் அமுதுபடி திருவிளக்கு உட்ப
35. டவும் நாயகரை ஊரிலெழுந்தருள்விப்பாராகவும் இப்படித்
36. தர்மம் செய்கைக்கு இ.........

## 55

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், சோழமாதேவி, குலசேகர ஈசுவரமுடையார் கோயில் தூண்

காலம் : விக்கிரம சோழன் இருபதாம் ஆட்சியாண்டு; கி.பி. 1293

செய்தி : சோழமாதேவி குலசேகர ஈசுவரமுடையார் கோயில் திருப்பணியின்போது சோழமாதேவிக் கைக்கோளர் சிவிரிகூத்தன் என்பவர் ஒரு தூண் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம
2. சோழ தேவர்க்கு யா
3. ண்டு 20வது சோழ
4. மா தேவி நல்லூர்
5. இருக்கும் கைக்கோள
6. ரில் சிவிரி கூத்தன்
7. இட்ட தூண்

## 56

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், இக்கரை போளுவாம்பட்டி நாகீசுவரம் உடையார் கோயில் கருவறை நிலை

காலம் : வீரராசேந்திரனின் 17ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1224

செய்தி : போளுவாம்பட்டி நாகீசுவரர் கோயில் திருப்பணியின் போது கோயில் திருமடைவளாகத்தில் இருக்கும் கைக்கோளர் கணபதியான சுந்தரப் பெருமாள் என்பவர் திருநிலைகால் இரண்டு கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசே
2. ந்திர தேவர்க்கு யா
3. ண்டு 17வது ஆ
4. ளுடையார் திருநா
5. கீசுவரமுடையார்
6. கோயிலுக்கு திருநிலை
7. காலிண்டும் செய்
8. வித்தேன் அதிராச
9. ராசன் திருமடை
10. வளாகத்திலிருக்கும்
11. கைக்கோளரில்
12. கணபதியான
13. சுந்தரப்பெரு
14. மாளேன்.

## 57

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், இடிகரை, வில்லீசுவரமுடையார் கோயில் கருவறைச் சுவர்

காலம் : வீரபாண்டியனின் 12ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1277

செய்தி : வடபரிசாரநாட்டு இடிகரை வில்லீசுவரமுடையார் கோயில் திருப்பணியின் போது இடிகரைக் கைக்கோளர் நாட்டார் பிள்ளை சாத்தன் ஆன சம்பந்தப் பெருமாள் என்பவர் கபோதப்படை, மேலைத்தெற்றி ஆகியன அமைக்கக் கொடை கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 12வது
2. வடபரிசார நாட்டு இடிகரையிலிருக்கும் கைக்கோளரில் நாட்டார் பிள்
3. ளை சாத்தன் ஆன சம்பந்தப் பெருமாளேன் ஆளுடையார் கோயில் கபோதப்படை மேலை தெற்றி போந்த பூமி இதுக்கு இட்ட பொன் 10 சுபமஸ்து.

## 58

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், இடிகரை, வில்லீசுவரமுடையார் கோயில் கருவறைச் சுவர்

காலம் : மூன்றாம் வீரவல்லாள தேவன் காலம் (1292-1341) பராபவ, கி.பி. 1306.

செய்தி : கொடுவாய் கைக்கோளர் சொக்கன் புகலி வேந்தனான நாற்பத் தெண்ணாயிர மாராயன் இடிகரை வில்லீசுவரமுடையார் கோயிலில் உள்ள திருக்கால்வளிப் பிள்ளையார் சன்னதியில் நாள்தோறும் அமுதுபடி கொங்குப் படியால் தூணிப்பதக்கு அரிசி வழங்க 20 பணம் கொடையாக அளித்தார். புகலிவேந்தன் என்பது திருஞானசம்பந்தர் பெயர். மாராயன் என்பது அரசன் அளிக்கும் உயரிய பட்டங்களில் ஒன்று.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் திருவிராச்சியம் பண்ணியருளா நின்ற பராபவ வருஷத்து பங்குனி மாதம் வடபரிசார நாட்டு இடிகரையி
2. ல் நாயனார்
3. வில்லீசுவர
4. முடையார்
5. கோயில் திருக்கால்வளிப் பிள்ளையார்க்கு பொங்கலூர் நாட்டுக் கொடுவாயில் கைக்கோளன் சொக்கன் புகலி வேந்தனான நாற்பத்தெ
6. ண்ணாயிர மாராயனேன் நித்தப்படி தூணிப்பதக்கு அரிசி கொங்கு படிக்குப் பற்றின பணம் 20 இப்பணம் இருபதும் கைக்கொண்டோம் இக்கோயில காணியுடை
7. ய சிவப் பிராமணன் கா
8. சிவ கோத்திரத்து அ
9. கத்தீசுவரமுடையா
10. ன் திருநட்டன் உள்ளிட்ட
11. சித்திரமேழிப் பட்டரோம்
12. குடங்கொடு கோயில்
13. புகுவான் சந்திராதித்தவரை
14. செலுத்துவதாக இது பன்
15. மாகேசுவரர் ரட்சை.

## 59

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், கோயில்பாளையம், காலகாலேசுவரர் கோயில் சுவர்

காலம் : விக்கிரசோழ தேவரின் 22ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1295

செய்தி : சேலம் நாட்டுச் சேலத்தைச் சேர்ந்த கைக்கோளர் பெரியான் ஆண்டான் பிள்ளையான சத்தியாபரணன் என்பவர் காலகாலேசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைக்க பழஞ்சலாகை பொன் அச்சு ஒன்று கொடையாக அளித்தார். இவர் குதிரைச் சேவகராகப் பணியாற்றியவர் என்பது களந்தை ஆதீசுவரர்கோயில் கல்வெட்டு மூலம் தெரிகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது சேல நாட்டில் சேலத்திலிருக்கும் கைக்கோள
2. ரில் பெரியான் ஆண்டான் பிள்ளையான சத்தியாபரணனேன் ஆளுடையார் கால கால தேவர்க்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்று
3. க்கு யிக்கோயில் காணியுடைய சிவப்பிராமணர் வசம் குடுத்த பழஞ்சலாகை அச்சொன்று இவ்விளக்கொன்றும் சந்திராதித்த
4. வரை செலுத்துவதாக குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்துவான் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 60

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், பேரூர் பட்டீசுவரர் கோயில் மண்டப வடசுவர்

காலம் : கரிகாலசோழ தேவர்க்கு ஆட்சியாண்டு நான்காவது

செய்தி : கொழுமத்தில் உள்ள இராசாதித்தன் அடியார் வேளைக்காரர் என்ற படைப்பிரிவின் தலைவனாகிய இராமன் பொன்னன் காடவராயன் என்னும் கைக்கோளர் பேரூர் திருவான்பட்டி உடையார் கோயிலில் ஒரு சந்தியா தீபம் வைக்க ஒரு கழஞ்சு பொன் கொடையாக அளித்தார். காடவராயன் என்பது அரசன் அளித்த பட்டப்பெயர். நாயகம் செய்வார் என்பது தலைமைப் பொறுப்பைக் குறிக்கும்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கரிகால சோழ தேவர்க்கு யாண்டு 2வது எதிர் எதிர் கொழுமத்திருக்கும் கைக்கோளரில் இராசாதித்தன் அடியார் வேளைக்கார நாயகம் செய்வார்களில் இராமன் பொன்னனான காடவராயனேன் பேரூர் நாட்டில் பேரூர் ஆளுடையார் திருவான்பட்டி உடையார்க்கு சந்தியா தீபம் எரிக்க ஒடுக்கின பொன்

2. கழஞ்சும் இக்கோயில் குடமும் குச்சியும் கொடு புக்கவர்கள் இப்பொன் கழஞ்சுக்கு சந்தியா தீபம் எரிக்கக் கடவாராக கல் வெட்டித்து.

## 61

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம் பேரூர் பட்டீசுவரர் கோயில் மண்டப வடசுவர்

காலம் : விக்கிரம சோழ தேவரின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1287

செய்தி : பேரூர் கைக்கோளர் குலையன் பொத்தியன் ஆன செல்வ ஞானசம்பந்தன் என்பார் பேரூர் திருவான்பட்டி ஆளுடையார் கோயிலுக்கு ஆனை அச்சு ஸ்ரீ யக்கிபழஞ்சலாகை பொன் நான்கு கொடையாகக் கொடுத்தார். திருப்பங்குனித் திருநாள் உற்சவம் நடத்தும் முறைமையும், அப்போது படைக்க வேண்டிய திருஅமுது பற்றியும் வரையறை செய்துள்ளார். நெல்லை கல் பதர் செத்தல் முளை நீக்கி கோயிலில் சூலக்கால் என்னும் மரக்காலால் அளக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 12 வதின் எதிர் எதிர் பேரூர் நாட்டுக் கோரப்பாடியான அம்மடி சதுர்வேதி
2. மங்கலத்து ஆளுடையார் ஸ்ரீ கரணீசுவரமுடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் ஆண்டான் மாமுனி
3. யான தில்லைநாயக பட்டனும் இக்கோயில் காணியுடைய சிவபிராமணன் ஆளுடையான் உய்யக்கொண்டானும்
4. இவ்விருவோம் பேரூரிலிருக்கும் கைக்கோளரில் குலையன் பொத்தியன் ஆன செல்வ ஞானசம்பந்தன் பக்கல்
5. நாங்கள் கைக்கொண்ட ஆனை அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு நாலு இவ்வச்சு நாலுங் கொண்டபடியாவது ஆண்டொன்றுக்கு
6. அச்சின்வாய்க் கலனே தூணி நெல்லாக ஆட்டைக்கு ஐங்கலனே தூணியும் ஆளுடையார் திருவான்பட்டி உடையார்
7. திருப்பங்குனித் திருநாளில் தீர்த்தத்தினன்று திருத்தெப்பம் திருவயனம் செய்த அவிக்கு அரிசிக்கு அத்து ....... க்கு
8. விஞ்சனம் உட்பட நெல்லு முக்கலமும் உடையார்க்கு ஸ்தபனம் ஆடி அமுது செய்ய அரிசி தூணிப்பதக்குக்கு விஞ்சனம் உட்பட
9. முக்கலனே தூணிப் பதக்கும் திருமேற்பூச்சுக்கு நெல் தூணிப்பதக்கும் இளநீர்க்கு நெல்லு தூணியும் ஆக நெல்லு ஐங்கலனே

தூணியும்

10. கல் பதர் செத்தல் முளைப்படிக்கு சூலக்காலாலே அளப்போமாகவும் அளக்குமிடத்தில் இக்கோயில் குடங்கொடு குச்சியும்

11. கொண்டு கோயில் புகுவானே அளப்போமாகவும் இப்படி சம்மதித்து கல்வெட்டிக் குடுத்தோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 62

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், பேரூர் பட்டீசுவரர் கோயில் மண்டப மேற்குச்சுவர்

காலம் : விக்கிரமசோழ தேவரின் 19ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1292

செய்தி : பேரூர் கைக்கோளரில் குலையன் பொத்தியன் செல்வ ஞானசம்பந்தன் என்பவர் பேரூர்க் கோயிலில் அரை சந்தியா தீபம் வைக்க ஒரு அச்சுக் கொடை கொடுத்தார். (மற்றொருவர் கொடுக்கும் அரை சந்தியா தீபத்துக்குரிய ஒரு அச்சும் சேர்த்து ஒரு விளக்கு எரிக்கப்படும்).

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தியின் ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பதினேழாவதின்

2. எதிர் எதிர் ஆளுடையார் திருவான்பட்டி உடையார் கோயிற் காணியுடைய சிவப்

3. பிராமணரில் விக்கிரம சோழபட்டனும் இராக பட்டனும் மருதவனப்

4. பெருமாளும் இந்நால்வோம் பேரூரிலிருக்கும் கைக்கோளரில் குலையன் பொத்தி

5. யன் ஆன செல்வ ஞானசம்பந்தன் பக்கல் கொண்ட அச்சு ஒன்றுக்கு நித்தமரை சந்தியா தீபம்

6. கோயில் குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவல் செலுத்துவோமாக

7. கல்வெட்டிக்குடுத்தோம் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

## 63

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம், பேரூர் பட்டீசுவரர் கோயில் மண்டப வடசுவர்

காலம் : விக்கிரமசோழ தேவரின் 27ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1300

செய்தி : பேரூரிலிருக்கும் கைக்கோளர் குலையன் பொத்தியன் ஆன செல்வ ஞானசம்பந்தன் என்பவர் ஸ்ரீயக்கி இடைச்சலாகை நான்கு கொடுத்து நாள்தோறும் இரண்டு நாழி அரிசியால் இரண்டு சட்டிச்சோறு திருஅமுது படைக்க கோரப்பாடியான அம்மடி சதுர்வேதமங்கலத்து ஸ்ரீ கரணீசுவரமுடையார் கோயிலில் ஏற்பாடு செய்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்
2. திகள் ஸ்ரீ விக்கிரம சோழதேவர்க்கு
3. யாண்டு 27வது பேரூர்நாட்டு கோ
4. ரப்படியான அம்மடி சதுர்வேதமங்கலத்து
5. ஆளுடையார் ஸ்ரீ கரணீசுரமுடையார் கோ
6. யிற் காணியுடைய சிவப்பிராமணர் ஆ
7. ண்டான் மாமுநியான தில்லை நாயக பட்டனேன் பேரூரி
8. லிருக்கும் கைக்கோளரில் குலையன் பொத்தியன் ஆன செல்வ
9. ஞானசம்பந்தன் பக்கல் நான் கொண்டு கடவ ஆனையச்சு ஸ்ரீ
10. யக்கி இடைச்சலாகை நாலும் கொண்டு யிந்நாயனார்
11. கோயிலில் என் ஒபாதி காணியில் நித்தம் இருநாழி அ
12. ரிசி சோறும் இரண்டு சட்டி இட்டு வருவேனாக
13. வும் இந்நாயனார் கோயிலில் குடங்
14. கொடு குச்சி புகுவார்க்குச் சட்டி இரண்டும் இட்டு
15. வருவானாகவும் சந்திரர்தித்தர் வரை
16. செல்வதாகக் கல்வெட்டிக் குடுத்தேன்
17. தில்லை நாயக பட்டனேன் இத்தன்மம் பன்மா
18. கேசுவரர் ரட்சை.

## 64

இடம் : திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், அலகுமலை கைலாசநாதர் கோயில் பெரிய நாயகியம்மன் கோயில் முன் குத்துக்கல்

காலம் : கி.பி. 1641; மதுரை திருமலை நாயக்கர் காலம்

செய்தி : அலகுமலைக் குமரர் கோயிலில் சீர்பாதம் தாங்கும் உரிமை சமயமுதலிகள் ஆகிய வீரபாகுதேவர் காசாவர்க்கத்தார் ஆகிய செங்குந்த முதலியார்கட்கு உரியது என்று அரசு அதிகாரம் செய்பவர்கள் உறுதி செய்து அளித்த ஆணை.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கலியுக சகார்த்தம்
3. நாலாயிரத்து எழுநூ
4. ற்றி நாற்பத்திரண்டு
5. க்கு மேல் செல்லா நின்
6. ற விக்கிரம வருஷம் ஆவ
7. ணி மாதம் 11 தியதி பொங்கலூர்
8. கா நாட்டில் அலுகுமலை குமா
9. ரர் திருவுளத்தினாலே சுவாமி
10. க்கு சீர்பாதம் தாங்குகிற சமை
11. ய முதலியளுக்கு சருவமானி
12. யமாக அலகுமலை குமார சுவா
13. மியார் திருவுளப்படிக்கு
14. வீரவாகு தேவர் காசாவர்க்
15. கத்திற்கு பட்டையங்
16. குடுத்தபடிக்குத் திருமலை
17. நாயக்கரய்யனவர்
18. கள் புண்ணியமாக கு
19. ருவப்பன் வெங்கடாத்
20. திரி அய்யன் வட்டமணி
21. அய்யன் திருவேங்
22. கடய்யன் கரணிக்கம்
23. சொக்கப்ப முதலியார்
24. பொங்கலூர்க்கா நாட்டார்
25. அனைவரும் சாட்சி இந்தப்
26. புண்ணிய தனாதி விலகின
27. வன் கெங்கைக் கரையி
28. ல் காராம் பசுவையு
29. ம் குருக்களையும் தன்
30. மாதாபிதாவையும்
31. கொண்ண பஞ்சமா பாதகனாக சந்திராதித்தவரைக்கும் அனுபவிப் பானாகவும்

## 65

இடம் : திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், கொடுவாய் விண்ணிறைந்த பெருமாள் கோயில்

காலம் : கி.பி. 1872

செய்தி : கொடுவாய் பெரிய பெருமாள் சன்னதி செங்கல்லால் கட்டப்பட்டிருந்தது. அதைக் கல் திருப்பணியாகச் செய்தவர், கொடுவாய் நாலுகிராமக் கணக்கர் புஷ்பநாத முதலியார் மகன் வீரபத்திர முதலியார் என்பவர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கலியுகாதி வருஷம் 4973ல் பிரசோத்பத்தி
2. வருஷம் ஆவணி மாதம் 13 தேதி கொடுவாயில்
3. பெரிய பெருமாள் சந்நதி முன்னிருந்த பெரியோர்கள்
4. மரத்தாலும் செங்கல்லாலும் கட்டியிருந்ததை சீரண
5. உத்தாரமாக்கி கல்லினால் கொடுவாயைச் சேர்ந்த
6. நாலுகிராமத்துக்கும் ஆதீனக்கணக்கு புஷ்பனாத
7. முதலியார் குமாரர் வீரபத்திர முதலியார் உபையம்.

## 66

இடம் : திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் உத்தமசோழீசுவரர் கோயில், சண்டிகேசுவரர் சன்னதி கிழக்குச்சுவர்

காலம் : தாரண, ஆவணி 15; கி.பி.18 ஆம் நூற்றாண்டு

செய்தி : பெருமாநல்லூர் உத்தம சோழீசுவரர் கோயிலில் சண்டிகேசுவரர் சன்னதியை பேரூர் சேவப்பநாத முதலியார் மகன் உத்தண்டியப்ப முதலியார் கட்டினார்.

## கல்வெட்டு

1. தாரண வருஷம் ஆவணி
2. மாதம் 15 பேரூரிலிருக்
3. கும் சேவப்பநாத முதலி
4. யார் மகன் உத்தண்டி
5. யப்ப முதலியர் உபை
6. யம்.

## 67

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கிணத்துக்கடவு சிவன்கோயில் கருவறை தெற்குச்சுவர்

காலம் : கி.பி. 1845

செய்தி : ஆனைமலை வெங்கிடாசல முதலியார் 3153 ரூபாய் செலவில் சத்திரம் கட்டினார்.

### கல்வெட்டு

1. இந்தச் சத்திரம்
2. ஆனைமலை வெங்கி
3. டாசல முதலியார்
4. கட்டலாச்சுது
5. இதற்கு மேற்படியாரா
6. ல் சிலவாயிருக்க
7. ப்பட்டது ரூபாயி
8. 3153
9. 1845 வருசம்.

## 68

**இடம்** : கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வடசித்தூர் கரிவரதராசப் பெருமாள் கோயில் விளக்கு மண்டபம் மேல் விதானம்.

**காலம்** : கி.பி. 18ஆம் நூற்றாண்டு; 1719

**செய்தி** : விளக்கு மண்டபத்தைச் செங்குந்தர் கட்டிய செய்தி கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. சாலிவாகன சகாத்தம் 1641 .....
2. கண் சமயத்தில் செல்லாநின்ற கீலக வருசம் வைகாசி மாதம் 12
3. திங்கட்கிழமை பெற்ற சுபதினத்தில் சித்திரை ..... நாட்டு சத்திரமும்
4. ...... யாகம் பெற்ற சுபதினத்தில் செங்குந்த முதலி
5. ராமக்கொண்ட முதலி மகன் பரிசல்லம முதலியார்

## 69

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வடசித்தூர் கரிவரதராசப் பெருமாள் கோயில் அம்மன் சன்னதி வடக்குச்சுவர்.

காலம் : கி.பி. 1848 கீலக வைகாசி 10.

செய்தி : மலையாண்டி முதலி மக்கள் இருவர் அம்மன் கோயில் மண்டபம் செங்கல்லால் கட்டப்பட்டிருந்ததை கல் மண்டபமாகக்கட்டியது கூறப்படுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்ரீ சகாத்தம் 1770 கலியுக சகாத்தம் 4949.
2. கீலக வருசம் வைகாசி மாதம் 10 தேதி திங்கட் கிழமை தின
3. சித்திரை நட்சத்திரம் ......
4. கால .... பெற்ற சுப தினத்தில் செங்
5. குந்த மலையாண்டி முதலி மகன் முத்துவீர முதலி முத்து
6. ராம முதலி நாச்சியார் அம்மன் செங்கல் மண்
7. டபத்தை சீறனம் உத்தாரம் கல் மண்டபம்
8. உபயம் லட்சுமி விலாச்சு .......

## 70

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய களந்தை, ஆதீசுவரர் கோயில் தூண்

காலம் : விக்கிரம சோழனின் ஆட்சியாண்டு 12, கி.பி. 1285

செய்தி : பெரிய களந்தை ஆதீசுவரர் கோயில் திருப்பணியின்போது சேலம் நாட்டைச் சேர்ந்த கைக்கோளரில் குதிரைப்படை வீரனாகிய பெரியான் ஆண்டான்பிள்ளை என்பவர் ஒரு தூணும், திரு நிலைகாலும் கொடையாக அளித்தார். இவர் பின்னாளில் சத்தியாபரணன் என்று பட்டப்பெயர் பெற்றார் என்பது கோயில்பாளையம் கல்வெட்டால் தெரிகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. விக்கிரம
3. சோழ தேவ
4. ற்கு யாண்
5. டு பன்னிரண்
6. டாவது சே
7. லநாட்டிலி
8. ருக்கும் கை
9. க்கோளரி
10. ல் குதிரை
11. ச் சேவகன்
12. பெரியான்
13. ஆண்டான்
14. பிள்ளை த
15. ன்மம்
16. மண்டபத்தில்
17. திருநிலைகால்
18. இத்தூணும்
19. செய்வித்தான்
20. தமையன்
21. தன்மம்
22. பன்மாகேசுவரர்
23. ரட்சை.

## 71

இடம் : சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், சோழபுரம், விக்ரமபாண்டீசுவரர் கோயில் கருவறை வடசுவர்

காலம் : குலசேகரப்பெருமாள் (பராக்கிரம மாறன் அழகிய சொக்கனார்) கி.பி. 1573 நவம்பர் 15

செய்தி : ஆரிய நாட்டு வாசுதேவநல்லூரில் சிந்தாமணிநாதன் கோயில் கைக்கோளரில் பட்டன் அழகருக்கு, சோழபுரம் விக்கிரம பாண்டீசுவரர் கோயிலில் மட உரிமையும், மடாதிபத்தியக் கணக்கும் காணியாட்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளதென அரசனின் ஓலை வந்தது. அதனைத் தானிகரும் கணக்கரும் காட்டினர். அவருக்கு இரண்டு மாநிலமும், நாலு பணத்துக்காக இரண்டு கோட்டை நெல்லும், இரண்டு பணமும், இருநாழிசோறும் அசல் தானிகர், கணக்கருக்குரிய எல்லா உரிமைகளும் அளிக்கப்பட்டன.

### கல்வெட்டு

1. ஆதி சண்டேசுவர ஜெயம்
2. சகாப்தம் 1495ன்
3. மேல் செல்லாநின்ற நம் குமாரன் குலசேகரப் பெருமாள் ஆன பராக்கிரமமாறன் அழ
4. கிய சொக்கனார்க்கு யாண்டு 2வது ஸ்ரீமுக வருஷத்து தட்சிணா யனத்து வர்ஷ
5. ரிது விருச்சிகம் 16 தேதியும் சுக்ல பட்சத்துத் தசமியும் ஆதித்ய வார
6. மும் சுபயோகமும் நாகரி கரணமும் பெற்ற மகத்து நாள் நம் குமாரன் பரா
7. க்ரம மாறன் அழகிய சொக்கனார் நம் ஆலயத்தில் தானிகர் கணக்கர் ஓலைவரக்
8. காட்டுகையில் ஆரிய நாட்டு வாசுதேவநல்லூரில் சிந்தாமணி நாதன் கோயில்
9. கைக்கோளரில் பட்டர் அழகருக்கு நம் ஆலயத்தில் மாடாபத்தியமும் மாடா
10. பத்தியக் கணக்கு காணியாட்சையாகக் குடுத்த நிலம் இரண்டு

மாவுக்கு ஆண்மா நாட்

11. டு சோலைசேரிப் பற்றில் முடிவிளங்கும் பாண்டியன் குளப்பற்றில் நிலம் ஒரு மாவும்

12. இந்நிலம் ஒரு மாவும் மாதம் ஒன்றுக்கு நாலு கோட்டை நெல்லும் நாலுபணத்துக்

13. கும் இரண்டு கோட்டை நெல்லும் இரண்டு பணமும் நாளொன்றுக்கு நானாழி சோற்றுக்கு

14. இருநாழி சோறும் மற்றும் அசல் தானிகர் கணக்கருக்கே சர்வ சுதந்திரங்களும் பற்றிக் கொண்டு

15. இன்னாள் முதலுக்கு ஆசந்திராதித்தவல் சந்ததிப் பிரவேசம் சிலையிலும் செம்பிலும்

16. வெட்டிக் கையாண்டு கொள்ளவும் ஆதிசண்டேசுவரன் எழுத்து.

## 72

இடம் : சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருக்களக்குடி சிவன்கோயில் மண்டபத் தென்சுவர்

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 19ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1359

செய்தி : மாடக்குளக்கீழ் மதுரை சிறு வெண்குன்றம் கைக்கோளரில் உய்யவந்தான் பாண்டியன் ஆன சுந்தர பாண்டிய நரசிங்க தேவன் மேல்வாரத்தைக் கோயிலுக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு எழுதிய கல்வெட்டு.

### கல்வெட்டு

திரிபுவனச் சக்கரவர்த்திகள் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 19ஆம் ஆட்சியாண்டில் கறகடக மாதம் 5ஆம் தியதி புதன்கிழமை அத்த நட்சத்திரத்தன்று மாடக்குளக் கீழ் மதுரையில் சிறுவெண் குன்றத்தில் உள்ள கைக்கோளரில் உய்யவந்தான் பாண்டியன் ஆன சுந்தரபாண்டிய நரசிங்க தேவன் தான் பெறும் மேல்வாரத்தைக் கோயிலுக்குக் கொடுப்பதாகக் கோயில் தானத்தார்க்கு எழுதிக் கொடுத்த கல்வெட்டு. எல்லாந்தலையான பாண்டிய பிரமாதிராயன் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளார்.

## 73

இடம் : சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் திருத்தளிநாதர் கோயில் முதல் பிரகார மேற்குச்சுவர்

காலம் : சடையவர்மன் சீவல்லபபாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1321

செய்தி : கோயிலில் சுந்தரபாண்டிய பட்டன் மனைவி விஷம் அருந்தி உயிர் நீத்ததற்காக உதிரப்பட்டியாக திருமடை வளாகத்தில் இருக்கும் கைக்கோளரால் நிலம் கொடுக்கப்பட்டது.

### கல்வெட்டு

திரிபுவனச் சக்கரவர்த்திகள் சடையவர்மன் சீவல்லவ பாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டில் ஐப்பசி மாதம் 16ஆம் தேதி தேவதான நிலம் திருநாமத்துக் காணியாக மாற்றப்பட்டுத் திருமடைவளாகத்திலிருக்கும் கைக்கோளரால் கோயிலில் விஷம் குடித்து இறந்த மனைவிக்காக சுந்தரபாண்டியபட்டன் என்ற பிராமணனுக்கு உதிரப்பட்டியாக வழங்கப்பட்டது. இதைச் செய்தவர்கள் கோயில் மூலபருடைப் பெருமக்கள்.

## 74

இடம் : சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பிரான்மலை மங்கை நாதர்கோயில் சுப்பிரமணியர் சன்னதி மேற்குச்சுவர்

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி.1346

செய்தி : மாடக்குளக்கீழ் உள்ள மதுரை, இராசிங்க மங்கலத்தின் கிழக்கில் உள்ள திருப்பூவனம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த கைக்கோளர் இருவர் பாக்குடி என்ற ஊரில் உள்ள நிலத்தை வாங்கிக் கோயிலுக்குத் தேவதானமாக விட்டனர்.

### கல்வெட்டு

திரிபுவனச் சக்கரவர்த்திகள் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 6ஆம் ஆட்சியாண்டில் கற்கடக மாதம் ரோகினி நட்சத்திரம் அட்டமி நாள் புதன் கிழமை மாடக்குளக்கீழ் மதுரை, இராசிங்க மங்கலம் கீழ் உள்ள திருப்பூவனம் என்ற இரண்டு ஊரைச் சேர்ந்த கைக்கோளர் இருவர் பாக்குடி என்ற ஊரில் மூன்று இடங்களில் உள்ள நிலங்களை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குத் தேவதானமாக அளித்தனர். அந்நிலத்தின் வருவாயிலிருந்து கோயில் செலவுகட்கும் மாதம் தோறும் 120 பணம் அளிக்கவும் ஏற்பாடு செய்தனர்.

## 75

இடம் : சென்னை மாநகரம், சைதாப்பேட்டை, மணிமங்கலம், தன்மீசுவரர் கோயில் தெற்குச்சுவர்

காலம் : சீரங்கநாதர் ஆன யாதவராயர் ஆட்சியாண்டு 17, கி.பி.16ஆம் நூற்றாண்டு

செய்தி : மணிமங்கலம் தன்மீசுவரமுடையார் கோயிலில் ஸ்ரீருத்ர மகேசுவரர், கைக்கோளர், கைக்கோள முதலிகள் கூடி எடுத்த முடிவின்படி திருமடைவளாகத்தில் கொல்லப்பட்டவனுக்காக அளித்த நிலம் குறிக்கப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்தி நாயனார் சீரங்கநாதர் ஆன யாதவராயர்க்கு இயாண்டு பதின் ஏழாவது மணிமங்கலத்தில் உடையார் தன்மீ
2. சுரமுடையநாயனார் கோயிலில் ஸ்ரீருத்ரமாகேசுவரரும் கைக்கோளரும் கைக்கோள முதலிகளும் இவ்வனைவரும் இவ்வாண்டை ஆனி மாதம் தம்மில் பொருந்தி அறுதி
3. இட்டபடி மன்னனார் திருநாள் முன்பிலாண்டு மரிகாதி ஒழிந்து புதுமையாக எழுந்தருளினபடியினாலே ஆணை இட்ட அளவில் இவர்கள் ஒருத்த
4. ரை வெட்டித் திருமடைவிளாகத்திலே இட்டு வைக்கையில் கோயில் திருக்காப்புக் கொண்ட இது திருக்காப்பினுக்கு செத்த செம்பாதிக்கு சந்திராதித்தவரையும் நடத்....
5. மேட்டில் நாரணி குண்டில் குழி இருநூறும் குற்றேவல் தடி ஒன்....

## 76

இடம் : சென்னை மாநகரம், சைதாப்பேட்டை, காரணீசுவரர் கோயில் மகாமண்டபத் தென்புறச்சுவர்

காலம் : 15.3.1886 (கல்லில் பொறித்தது நவம்பர் 1887)

செய்தி : சைதாப்பேட்டையைச் சேர்ந்த காரணி கிராமம் செங்குந்த சாதி வீரபத்திரசுவாமி கோத்திரத்தைச் சேர்ந்த ஆறுமுக முதலியார் மகன் சுப்பராய முதலியார் பறங்கிமலை கண்டோன்மென்ட் மவுண்ட் ரோட்டில் உள்ள தன் பங்களாவை காரணீசுவரருக்குத் தானம் செய்து பதிவும் செய்தார். பங்களா வாடகையிலிருந்து வரும் வருமானத்தில் ஆதைப் பழுது பார்ப்பது போக மீதியுள்ள தொகையில் காரணீசுவரருக்குப் பிரம்மோத்சவம் நடத்தவும், செல்வவிநாயகர், ஞானவிநாயகர், சுப்பிரமணியர், இராமசாமி கோயில்களில் நெய்விளக்கேற்றவும் வேண்டும் என்று எழுதியுள்ளார்.

### கல்வெட்டு

1. சர்வஜித்து வருஷம் கார்த்திகை மாதம் 4தேதி
2. சைதாப்பேட்டையைச் சார்ந்த காரணி
3. கிராமத்திலிருக்கும் செங்குந்த ஜாதி வீர
4. பாகுசுவாமி கோத்திரம் வா. ஆறுமுக முத
5. லியார் குமாரர் சுப்பராய முதலியார் 1886
6. மார்ச்சு மாதம் 15 தேதி பரங்கிமலை கன்டோன்
7. மெண்டு மவுண்டு ரோட்டில் கீழ்க்கண்ட வா
8. டை 6வது நெம்பர் என் பங்களாவை
9. காரணீசுவரர் பேரால் ரிஜிஸ்டர் செ
10. ய்து வைத்திருக்கிறபடியால் அதில்
11. வரப்பட்ட குடகூலியை மேற்படி பங்களாவின்
12. மராமத்து சிலவு போக மீதியை
13. காரணீசுவரர் பிரம்ம உற்சவம்
14. செய்வதற்கும் மேற்படியூர் செல்வ விநாய

15. கர் ஞானவிநாயகர் சுப்பிரமணியர்

16. இராமசாமி சன்னிதானங்களுக்கும் நெய்

17. தீப தர்ம கைங்கரியத்திற்காக நான் மனப்

18. பூர்வமாய் ஏற்படுத்தியிருக்கிறபடியால்

19. இதை என் வம்சத்தாரும் காரணீசுவர

20. சன்னிதான தர்மகர்த்தாக்களும் சந்திர சூரி

21. யருள்ள வரைக்கும் குறைவில்லாமல்

22. நடத்திக்கொண்டு வரவேண்டியது இந்த

23. பங்களாவை கோது வைத்த

24. வனும் விக்கிரயம் செய்யவும் கூடாது இந்த

25. தர்மத்துக்கு வில்லங்கனம் செய்

26. யப்பட்டவர்கள் கவர்ன்மெண்டாரால்

27. தண்டிக்கப்பட்டு மீளா நரகத்திற்கும் உள்ளாவார்கள்

28. 1887 நவம்பர்

இப்படிக்கு,

செங்குந்தினர், ஆ.சுப்பராயர்

## 77

இடம் : சென்னை மாநகரம், சைதாப்பேட்டை, காரணீசுவரர் கோயில் மகாமண்டபத் தென்புறச்சுவர்

காலம் : 4.11.1919

செய்தி : காரணி கிராமம் செங்குந்த குல ஆண்டியப்ப முதலியார் மனைவி அம்மாயி அம்மாள் தேர்ப்பேட்டையிலும், குடியம்மன் பேட்டையிலும் உள்ள இரண்டு வீடுகளை காரணீசுவரர் கோயிலுக்குத் தானம் செய்து அதைப் பதிவும் செய்தார். குடியம்மன் பேட்டை வீட்டை விற்று அதன் தொகையை 1918ல் கோயிலுக்குக் கொடுத்தார். தேர்ப்பேட்டை வீதி வருமானத்திலிருந்தும், குடியம்மன்பேட்டை வீட்டை விற்ற தொகையின் வட்டியிலிருந்தும் காரணீசுவரர் கோயிலில் ஒரு காலப் பூசை நடத்த வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார்.

### கல்வெட்டு

சிவமயம் - திருச்சிற்றம்பலம்

1. கலியுகாதி வருஷம் 5021 சித்தாத்திரி வருஷம் ஆனி மாதம் 20
2. சைதாப்பேட்டை காரணி கிராமத்திலிருக்கும் செங்
3. குந்த குலம் பி. ஆண்டியப்ப முதலியார் பாரியாள் அம்மாயி
4. அம்மாள் 25.6.1912 தேர்ப்பேட்டையில் 53. நெ.வீடு 1 குடி
5. யம்மன் பேட்டையில் 4 நெ. வீடு 1 ஆக இரண்டு வீட்டை
6. யும் ஸ்ரீ காரணீசுவரர் பேரால் தானப்பத்திரம் ரிஜிஸ்டர்
7. செய்திருக்கிறேன். மேற்படி 4 நெ. வீட்டில் சரியான வரும்படி
8. வராததினால் நான் 29.4.1918ல் ரூ. 400க்கு விற்பனை
9. செய்து மேற்படி துகையை மேற்படி தேவஸ்தானத்தின் பேரால்
10. அடமானம் வாங்கியிருக்கிறேன் மேற்படி 53 நெ. வீட்டின்
11. வரும்படியினாலும் மேற்படி துகை வட்டியினாலும் மேற்படி வீட்
12. டின் மராமத்து வரி போக மிகுதியை மேற்படி காரணீசு
13. வரருக்கு நடந்துவரும் 1வது காலபூஜை நடத்த ஏற்

14. படுத்தி இருக்கிறபடியால் இதை மேற்படி தேவஸ்தான
15. த்தார் சூரிய சந்திரர் உள்ளவரையில் நடத்தி வர
16. வேண்டியது மேற்படி வீட்டை விற்றொற்றி செய்யவும் மேற்படி
17. ரொக்கத்தை பராதீனம் செய்யவும் யாருக்கும் ச
18. ம்மந்தப்படமாட்டாது மேற்படி தர்மத்தை வில்லங்
19. ஙனம் செய்யப்பட்டவர்கள் கவர்ண்மெண்டாரால்
20. தண்டிக்கப்படுவதும் தவிர மீளா நரகத்திற்
21. காளாவார்கள் இந்தப்படிக்கு என் மனப்பூர்வ
22. மாய் எழுதி வைத்த சிலா சாசனம்.

சைதாப்பேட்டை — இப்படிக்கு

4.11.1919 — ஆ. அம்மாயி அம்மாள்

## 78

இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆறகளூர், திருக்காமீசுவரமுடையார் கோயில் கருவறை வடபுறச்சுவர்

காலம் : கிருஷ்ண தேவராயர் காலம்; 30.8.1514

செய்தி : எறமாஞ்சி அக்கி திம்மய்யநாயக்கர் மகதமண்டலத்து ஆற்றூர்க் கூற்றத்தில் ஆறகளூரில் நத்தத்தின் வடபுறம் பாழாய்க் கிடந்த பகுதியில் இம்மடி துலுக்கணநாயக்கன் பேட்டை என்ற ஊரை அமைத்து அதில் கைக்கோளக் குடிகளைக் குடியமர்த்தி குடியேறும் கைக்கோளர்க்குப் பாதிவரி என்று அறிவித்தார். தறிக்கு மூன்று பணம் வரி என்றும் அறிவிக்கப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமது மகா மண்ட
2. லேசுவரன் பாஷைக்குத்
3. தப்புவராயர் கண்டன் இராய
4. கண்டன் மேதினி மீசுர கண்டன் கட்
5. டாரி சாளுவன் கிருட்ணதேவ மகா
6. ராயர் பிருத்விராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகா
7. ப்தம் 1436 இதின்மேல் செல்லாநின்ற பவ சம்
8. வத்சரத்து சிங்க நாயற்று பூர்வ பட்சத்
9. து ஏகாதசியும் புதவாரமும் பெற்ற சோதி
10. நாள் ஸ்ரீமன் மகா நாயகாச்சாரியன் பாஷைக்குத்
11. தப்புவராயர் கண்டன் நரலோக கண்டன்
12. சம்புவராய சர்வாங்க வயிரி யாதவராய ஸ்தாபனா
13. சாரியன் சாடிக்காரர் கண்டன் ஸ்ரீமது எறமாஞ்சி அக்கி
14. திம்மைய நாயக்கர் மகதை மண்டலத்து ஆற்றூர்க் கூற்றத்து
15. ஆறகளூர் நயினார் திருக்காமீசுவரமுடைய தம்பிரான் திருநாமத்
16. துக் காணி ஆன தேவதானம் சர்வ மானியம் ஆறகளூர் நத்தத்தின் வடக்கில் நத்தம்

17. பழங்கடைப் பாழாகையில் இந்த நத்தம் இம்மடி துலுக்கண நாயக்கன்
18. பேட்டை என்று கட்டி இதுக்கு எல்லை கிழக்கு ஆற்றுக்கு மேற்கு தெற்கு முட்டைக் கிண
19. ற்றுக்குத் தெற்கில் கரைக்கு வடக்கு மேற்கு துர்க்காதேவி கரைக்குக் கிழக்கு ஆற்றுக்குத்
20. தெற்கு இந்நான்கெல்லைக்குட்பட்ட இந்நத்தத்தில் வந்தேறும்
21. கைக்கோளரும் இராச்சோறு வரிசோறு அமஞ்சி நாட்டுக்குப் பிறக்
22. கும் பழவரி புதுவரி கூடுவர்க்கம் அரைவாசி இனிமேல் பிறக்கும் வரி உள்பட
23. மலையாங்கட்டு குத்தகையாக தறிக்கு மூன்று பணமும் யெருதுக்கு மூன்று
24. போதுக இவை வாணகோவரையன் எழுத்து இவை விழுப்பாதராயன் எழுத்து
25. இது கருகாலமுடையார் கல்வெட்டு.

## 79

இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆறகளூர், திருக்காமீசுவரமுடையார் கோயில் கருவறை மண்டபத் தென்சுவர்

காலம் : எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் காலம்; கி.பி. 1508

செய்தி : ஆறகளூர் திருக்காமீசுவரர் கோயிலில் பாண்டியர் ஆட்சிக் காலத்திலிருந்து திருநாள் நடைபெறாமல் இருந்தது. எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் தேர் செய்து மாசித் திருநாள் நடத்த ஆணையிட்டார். திருநாள் நடக்கவில்ளலை என வருந்தி இறந்த கைக்கோளர் பெருமாள் மகன் பறையனுக்கு உதிரப்பட்டியாக நன்செய், புன்செய் நிலமும், மனையும் அளிக்கப்பட்டு பரம்பரையாக அனுபவிக்க உரிமை கொடுக்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமது சகாத்தம் 1430 இதன்மேல் செல்லாநின்ற விபவ சம்வத்சாத்து கும்ப நாயற்று பூர்வ பட்சத்து தெசமியும்
2. ஆதித்தவாரமும் ஆயிலியத்து நாள் மகதை மண்டலம் ஆறகளூர் நாயனார் திருக்காமீசுவரமுடைய நாயனார் பாண்டியன் நாள்முதல் இந்நாள் வரைக்கும்
3. திருநாளும் நடவாதிருக்கையில் சுவாமி நரலோக கண்டன் வங்கி நாராயணன் மறைபுக்கார் காவலன் வல்லாள இளைய பயங்கரன் சாடிக்காரர் கண்ட
4. ன் ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் நாயனார் திருக்காமீசுவர முடைய நாயனார்க்கு தேரும் சமைத்துத் திருநாளும் மாசித் திருநாளாக ஆயிலியத்தில் கண்ட
5. மகத்திலே திருமஞ்சனமும் ஆக கட்டளை பண்ணி திருநாள் நடக்கையில் தாமதநல்லூரில் கைக்கோளன் பெருமாள் மகன் பறையற் பறை எடுத்து முதலியார் சன்னகமல
6. நாயனார் ஆதி சண்டேசுவர நாயனாரும் மாகேசுவரரும் ஆக ஆறை நாயகன் மண்டபத்து நிறைவற நிறைந்து குறைவறக் கூடியிருந்து ஆதிசண்டேசுவர நாயனார்

7. திருவாய் மலர்ந்தருளினபடி இந்த பறையனுக்கு உதிரப்பட்டி ஆக ஆறகளூர் நன்செய் நிலத்தில் காளி அம்மை உடைப்புக்கு மேற்கு தியாகன நல்லூர் வாய்க்

8. காலுக்குக் கிழக்கு நன்செய் குழி 250 ஓர் இணை ஏர் நடந்தமட்டும் நன்செய் மாநிலமும் ஒரு மனைவும் ஒரு மாணிபமும் திருமஞ்சனவழிக்குத் தெற்கு இரண்

9. டு ஒரு தோட்டமும் கோயிலிலே நிற்றம் இருநாழி அரிசியில் சோறும் மனையாவது சன்னதித் தெருவில் வட சிறகில் ஒரு மனையும் குடுத்தருளி

10. ஆதிசண்டேசுவரர் திருவாய் மலர்ந்தருளினபடியாலே இம் மந்திரம் உண்டானது இவர் பெருமாளும் இவன் வர்க்கத்தாரும் சந்திராதித்தர் வரையும்

11. அனுபவித்துக் கொள்ளக் கடவர்களாகவும் இவை திருஞானசம்பந்த பண்டிதர் எழுத்து இவை பலமுதல் கங்காணி பெரிய நயினார் எழுத்து.

## 80

இடம் : சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், அமரகுந்தி விநாயகர் கோயில் வாயிற்படி

காலம் : 19ஆம் நூற்றாண்டு; கி.பி. 1854

செய்தி : கோவாண்டை முதலியார் மகன் செங்கழனி முதலியார் விநாயகர் கோயில் கட்டினார். திருவணைமகால், படி, கோணாவட்டம் ஆகிய பகுதிகள் குறிக்கப்பட்டுள்ளன.

## கல்வெட்டு

1. ஆனந்த வருஷம்
2. ஆனி மாதம் 3 கோ
3. வாண்டை முதலியார் ம
4. கன் செங்கழனி முதலியார் பா
5. வை விநாயகன் திருவணை மகா
6. லும் படியும் கட்டி முகி
7. ஞ்சு கோணா வட்டமும்
8. சதா சேர்வை.

## 81

இடம் : சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நங்கவள்ளி, விநாயகர் கோயில்

காலம் : 14.7.1854

செய்தி : கோவாண்டை முதலியார் மகன் செங்கழனிமுதலியார் விநாயகர் கோயில் கட்டினார்.

## கல்வெட்டு

1. ஆனந்த வருஷம்
2. ஆனி மாதம் 22
3. கோவாண்டை முதலியார்
4. மகன் செங்கழனி முதலியார்....
5. பணொட விநாயகன் திருவுளம்.

## 82

இடம் : சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மாறமங்கலம் தெருவில் நடப்பட்டுள்ள கல்

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : மாறமங்கலம் பனையீசுவரமுடையார் கோயிலுக்கு அறம் செய்தவர்களில் ஆகாச கமலம் அட்டமாசுத்தி போனாரும், பல மண்டலத்துத் தேசாந்திரிகள், கோவணர், மத்தகம் வெட்டிகள், குடல்பிரிகள், கவரிப் பிணாக்கர், பிச்சிமார், தானத்தாரோடு பொற்கோயில் கைக்கோளரும் கூறப்படுகின்றனர்.

### கல்வெட்டு

1. தண்டீசுரன் ஓலை ஆகா
2. ச கமலம் அட்டமா சு
3. த்தி போனாரும் பலமண்ட
4. லத்து தேசாந்திரிகளும் கோவ
5. ணரும் மத்தகம் வெட்டிகளும் குட
6. ல் பிரிகளும் கவரிப்பிணா
7. க்கரும் பொற்கோயில் கைக்
8. கோளரும் பிச்சிமாரும் தா
9. னத்தாரோம் பனையீசுரமுடை
10. யாற்கு மாறீசுரமுடையாற்
11. கு அறம் குடுத்தோம்.

## 83

இடம் : சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கருப்பூர், கைலாசநாதர் கோயில் கருவறை தெற்குக் குமுதப்படை

காலம் : மூன்றாம் ராசராசனின் 26ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1244

செய்தி : சேலம் சுற்றிய சேலநாட்டுப் பொன்பரப்பியில் பொன்பரப்பீசுவரமுடையார் கோயிலில் சேரமான் பெருமாள் திருக்காவணத்தில் இறைவனுக்கு அறம் கொடுக்கக் கூடிய கூட்டத்தில் சிரீருத்திரர், சிரீமகேசுவரர், பலமண்டலத்து தேசாந்திரிகள், வீரபத்திரர், மத்தகம் வெட்டிகள், கூடல் பிறிகள், மூல சேதிகள், நம்பிள்ளைகள், தொண்டும் பிசகுப் பெற்றார், கவரிப்பிணாப் பிள்ளைகள் கூடிய கூட்டத்தில் பொற்கோயில் கைக்கோளரும் கலந்து கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சண்டேசுரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்து கண்டீசன் கருமம் ஆராய்க பண்டேய் அறம் செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து ஆதித்தனடித் திரிபுவனச்

2. சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு 26வது சேலஞ்சுற்றிய சேலநாட்டுப் பொன்பரப்பியில் நாயனார் பொன்பரப்பீசுவரமுடையார் கோவிலில் சேரமான் பெருமாள் திருக்காவ

3. ணத்து சிரீருத்திரரும் சிரீமாகேசுவரரும் பலமண்டலத்து தேசாந்தரத்தாரும் வீரபத்திரரும் மத்தகம் வெட்டிகளும் கூடல்பிறிகளும் மூல சேதிகள் நம்பிள்ளைகளும் தொண்டும் பிசகுப் பெற்றாரும் கவரிப்பிணாப் பிள்ளை

4. களும் பொற்கோயில் கைக்கோளரும் மற்றும் மேமார்க்கத்துக் கடவாரும் நிறைவற நிறைந்து குறைவறக் கூடி இந்த நாட்டுக் கருப்பூரில் உடையார் உய்யக் கொண்ட நாயனார்க்கு அறங்குடுத்த பரிசாவது இந்தக் கருப்

5. பூரில் ஆட்டுத்திறத்தால் ஆட்டைக்கு ஒரு...... நெய்யும் குடுப்பதாகவும் இவர்களாட்டு வளாகத்து ஆடு கொண்டாருண்டாகில் சிவத்துரோகிகள் பட்டதும் சிரியர்ச்சினை சேர்க்க நாயனாராணையும்

6. மறுத்தார் பட்டது படுவார்களாகவும் வைகத் தங்கப் புலரப்பேர் மாகேச்வரர்களைச் சோறிட்டு வருவார்களாகவும் இப்படி அருளில் நாற்பத்தெண்ணாயிர சீர் கரணத்தான் எழுத்து.

## 84

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நாகேசுவரர் கோயில் மேற்கு, தெற்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு (அரிஞ்சயன்), கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் தேவன் ராசாதித்தன் குடந்தை கீழ்க்கோட்டத்துப் பரமசுவாமி கோயிலில் நந்தாவிளக்கு வைக்க 90 ஆடுகள் அளித்தான். அதனை ஏற்று மன்றாடி தேவடி திருவியலூரும், கொற்றன் திறலனும் ஒவ்வொருவரும் முந்நாழி மூவுழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்
2. டு 2வது வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவ
3. தானம் திருக்குடமூக்கில் திருக்கீழ்க் கோட்டத்து
4. பரமசுவாமிக்கு திருநொந்தாவிளக்கு வைத்த உடை
5. யார் தாநதொங்கத் தெரிஞ்ச கைக்கோளரில்
6. தேவந் ராஜாதித்தன் வைத்த விளக்கு ஒன்று இதினா
7. லாடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறிலும்
8. இவ்வூர் மன்றாடி தேவடி திருவியலூரும் கொற்றன் திறலனு
9. ம் இவ்விருவோம் பாதிப்பாதி நெய் ஓரொத்தர்
10. முந்நாழி முழாக்காக இருவோமாய்
11. திங்கள் எழுநாடுரி நெய் யட்டுவதானோம்.

## 85

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நாகேசுவரர் கோயில் தெற்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : உடையார் வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் கடிகாவன் கள்ளான் திருக்குடமூக்கு கீழ்க்கோட்டப் பரமசுவாமிக்கு நந்தா விளக்கு வைக்க 90 ஆடுகள் அளித்தான். அதை ஏற்று மன்றாடி கண்ணன் மன்றனும், சங்கன் மாதேவனும் நாள்தோறும் ஆழாக்காக மாதம் தோறும் முன்னாழி மூவுழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 2 ஆ
2. வது வடகரைப் பாம்பூர் நாட்டுத் தேவதானம்
3. திருக்குடமூக்கில் திருக்கீழ்க் கோட்டத்து பரமசுவாமி
4. க்கு திருநொந்தா விளக்கு வைத்த உடையார்
5. வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் கடிகாவன்
6. கள்ளான் சந்திராதித்யவற்கு வைத்த நொந்தா
7. விளக்கு 1க்கு வைத்த ஆடு தொண்ணூறு இத்
8. தொண்ணூறும் இவ்வூர் மன்றாடி கண்ணன் மன்ற
9. னும் சங்கன் மாதேவனும் வசம் வைத்த ஆ
10. டு தொண்ணூறு இவையிற்றினால் நிசதம் ஆழாக்கா
11. க ஓரொத்தர் முந்நாழி மூழாக்காக இருவருமாய் திங்க
12. ள் எழுநாடுரிநெய் அட்டுவதானோம் இப்பரிசு
13. சந்திராதித்யவற்கு வைத்தேன் கடிகாவன் க
14. ள்ளானேன் இது பன்மாகேசுவர ரட்
15. சை

## 86

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நாகேசுவரர் கோயில் தெற்குச்சுவர்

காலம் : பரகேசரியின் நான்காம் ஆட்சியாண்டு, உததம சோழன் 22.4.975

செய்தி : திருக்குடமூக்கு மூலபருடைப் பெருமக்கள் அறிவாளன் அழித்தான் கண்கண்டான் என்பவன் கைக்கோளன் காரி கொழம்பனுக்காக கீழ்க்கோட்டப் பரமசுவாமிக்கு நந்தாவிளக்கு வைக்க நிலம் விற்றனர்.

### கல்வெட்டு

1. கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 4 ஆவது வடகரைப்
2. பாம்பூர் நாட்டுத் தேவதானம் ................
3. மேஷ நாயற்று வியாழக்கிழமையும் நவமியும் பெற்ற மகத்தன்று திருக்குடமூக்கில் மூலபருடைப் பெருமக்களோம்
4. அறிவாளனழித்தா .................. கண்கண்டா ..................... கைக்கோளரில் காரி கொழம்பனைச் சார்த்தித் திருக்கீழ்க்கோட்டத்து பரமசுவாமிக்கு வைத்த திருநொந்தா விளக்கு ஒன்றினுக்கு ......... விற்றுக்கொடுத்த நிலமாவது .......

## 87

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நாகேசுவரர் கோயில் கருவறை வடசுவர்

காலம் : கோப்பரகேசரியின் எட்டாம் ஆட்சியாண்டு; உத்தம சோழன், கி.பி. 978

செய்தி : உடையார் கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் பிச்சனான யெங்கு அரையன் திருக்குடமூக்குக் கீழ்க்கோட்டப் பரமசுவாமிக்கு நந்தாவிளக்கு வைக்க 96 ஆடுகள் கொடையாக அளித்தார். மன்றாடி மாதேவன் காரி அவைகளைப் பெற்று நெய் அளிப்பதாக ஒப்புக் கொண்டார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர
2. கேசரிபன்மர்க்கு யா
3. ண்டு 8 எட்டாவது இ
4. வ்வாண்டு வடகரைப் பா
5. ம்பூர் நாட்டுத் தேவதா
6. னம் திருக்குடமூக்கில் திருக்
7. கீழ்க் கோட்டத்தில்
8. பரமசுவாமிக்கு இவ்வாட்டை கும்
9. ப நாயற்றில் வியாழக்கிழமை பெ
10. ற்ற அவிட்டத்தினான்று உடை
11. யார் கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோ
12. ளரில் .......... தன் பிச்சனான செ
13. யங்கு அரையன்
14. வச்ச திருநொந்தாவிளக்கு 1 ஒன்
15. றுக்கு விட்ட சாவா மூவாப் பேராடு 96 இவய்
16. கொண்டு .......... தேவன்புறம்
17. மன்றாடி மாதேவன்
18. காரி அட்டக் கடவ நெய் ........ பன்மகேசுவரர் ரட்சை.

88

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நாகேசுவரர் கோயில் கருவறை வடசுவர்

காலம் : இராசகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டு (பராந்தகன் II) கி.பி.960

செய்தி : வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் கைக்கோளன் குமரன் தூதுவன் குடந்தைக் கீழ்க்கோட்டப் பரமசுவாமிக்கு நந்தாவிளக்கு வைக்க 90 ஆடுகள் கொடையளித்தார். அவற்றை ஏற்று மன்றாடி சோமாசி ஆச்சன், சேந்தன் அடியான் இருவரும் ஒவ்வொருவரும் மாதம்தோறும் முந்நாழி மூவுழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி ப
2. ன்மார்க்கு யாண்டு 3வது இவ்வா
3. ண்டு கார்த்திகைத் திங்கள் கீழ்க்
4. கோட்டத்து பரமசுவாமிக்கு வீரசோ
5. ழ தெரிஞ்ச கைக்கோளரில் தஞ்சாவூ
6. ர் கூற்றத்து தஞ்சாவூர் கைக்கோளன்
7. குமரன் தூதுவன் வைத்த தி
8. ரு நொந்தா விளக்கு ஒன்று ஒன்
9. றினாலும் ஆடு தொண்ணூறு
10. இவ்வாடு தொண்ணூறும் மன்றாடி சோ
11. மாசி ஆச்சன் 45 நாற்பத்தஞ்சும் சேந்தனடி
12. யான் நாற்பத்தஞ்சும் 45 இவ்விருவரும் இவ்
13. விளக்கால் திங்கள் எழுநாடுரி நெய்யட்டுவதா
14. கவும் இதில் பாதியாக ஓரொத்தர் முந்நா
15. ழி மூழாக்காக திங்களறுதி அட்டுவதாகவும் சாவா
16. மூவாப் பேராடாக சந்திராதித்தவல் எரிய அட்டக்
17. கடவோமாகவும்.

## 89

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் கருவறை தென்சுவர்

காலம் : கோப்பரகேசரி இரண்டாம் ஆட்சியாண்டு; (முதலாம் இராசேந்திரன்), கி.பி. 1014

செய்தி : கைக்கோளப் பெரும்படையினர் திருவிடைமருதூர் பெருமான் அடிகள் கோயிலில் பெரியமண்டபத்தின் முன் பலகணியும் (சன்னல்), கதவும், நிலையும், படியும் செய்து அவற்றிற்குத் திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர் என்று பெயர் வைத்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மற்கு யாண்டு 2 ஆவது திருவிடை மருதில்
2. ஸ்ரீமூலஸ்தானத்தில் பெருமான் அடிகள் கோயிலில் பெரிய மண்டபத்தில் முன்
3. பில் திருப்பலகணியும் திருக்கதவும் நிலையும் படியும் கைக்கோளப் பெரும்படை
4. யோமினால் சமைப்பித்து எங்கள் ஆச்சமார் திசை ஆயிரத்தைஞ்ஞூற்றுவர் தம்
5. பேர் சாத்தினமையில் இந்த தர்மம் திசை ஆயிரத்து ஐஞ்ஞூற்றுவர் ரட்சை
6. இந்த தர்மத்தினை ரட்சித்தார் ஸ்ரீபாதம் எங்கள் சிரத்தின.

## 90

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் கருவறை தென்சுவர்.

காலம் : கோப்பரகேசரி இரண்டாம் ஆட்சியாண்டு; (அரிஞ்சய சோழன்), கி.பி. 958

செய்தி : சிங்களாந்தகத் தெரிந்த கைக்கோளரில் முத்தி திருநாரணன் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயிலுக்கு ஸ்ரீ கண்டம் கோத்த செம்முனை வாள் ஒன்று கொடையாகக் கொடுத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர
2. கேசரிபன்மற்கு யா
3. ண்டு 2 ஆவது சிங்க
4. ளாந்தகத் தெரிந்த கைய்
5. கோளரில் முத்தி திருநா
6. ரணன் குடுத்த வாள் ஸ்ரீக
7. ண்டம் கோத்த செம்முனை வாள் 1

## 91

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம் தெற்குச்சுவர்

காலம் : விக்கிரமசோழ தேவரின் 6ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1124

செய்தி : நம்பிராட்டியார் நேரியன் மாதேவியார் அகப்பரிவாரத்துக் கைக்கோளர் சோறுடையான் அருக்கனான அன்பராபரண மாராயன் திருவிடை மருதூருடையாருக்குச் சந்தியா தீபம் வட்டியைக் கொண்டு வைக்க மூலப் பொருளாக 1 பொற்காசு வைத்தார். சந்தியா தீபம் எரிக்க 46 (பலம்) எடையுடைய குத்துவிளக்கு ஒன்றும் அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 6ஆவது
2. நம்பிராட்டியார் நேரியன் மாதேவியார் அகப்பரி
3. வாரத்து கைக்கோளன் சோறுடையான் அருக்கனான
4. அன்பராபரண மாராயன் உடையார் திருவிடைமருதூருடை
5. யர்க்கு சந்திராதித்தவல் பலிசை செகுத்துச் செல்வதாக
6. வைத்த சந்தி விளக்கு 1 பண்டாரத்து ஒடுக்கின காசு 1க்கு இது எரிக்க
7. ஒடுக்கின குத்துவிளக்கு 1ல் நிரை 46 பன்மாகேசுவர ரட்சை.

## 92

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் முதல் பிரகாரம் கிழக்குச்சுவர்

காலம் : முதலாம் குலோத்துங்க சோழனின் 41ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1111-1112.

செய்தி : கங்கைகெண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழ வேளத்திலிருக்கும் கைக்கோளன் அரையன் சோறுடையான் சந்திவிளக்கு ஒன்று கொடையாகக் கொடுத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ
2. தேவர்க்கு யாண்டு 41 ஆவது கங்கை கொண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழன்
3. வேளத்திலிருக்கும் கைக்கோளன் அரயன் சோறுடையான் உடையார் திருவிடை மருது
4. டையார்க்கு சந்திராதித்தவல் பலிசையால் ஒரு சந்தி விளக்கு செல்கை
5. க்கு ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின காசு 1 இக்காசு கொண்டு ........

## 93

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நாகேசுவரர் கோயில் கருவறை மேற்கு, தெற்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரி ஆண்டு 4, கி.பி. 974

செய்தி : தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் கற்றளிப் பிராட்டி அறிவாள் நமித்திரவல்லி தன் மகன் கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் காரி கொழம்பனுக்காக திருக்குடமுக்கு கீழ்க்கோட்டப் பரம சுவாமிக்கு நந்தாவிளக்கு வைக்க மூலபரடைப் பெருமக்களிடம் 25 பொன் கொடுத்தாள்.

## கல்வெட்டு

1. கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 4ஆவது வடகரைப் பாம்
2. பூர்நாட்டு தேவஸ்தானம் திருக்குடமூக்கில் மூலபரடைப் பெருமக்களோம் இயாண்டு மேஷநாயற்று வியாழக்கிழமையும் நவமியும் பெற்ற மகத்தினான்று திருக்குடமூக்கில் மூலபரடைப் பெருமக்களோம் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் கற்றளிப் பிராட்டி
3. அறிவாள் நமித்திரவல்லி தன் மகன் கண்டராதித்த தெரிஞ்ச கைக்கோளரில் காரி கொழம்பனைச் சாத்தி திருக்கீழ்க்கோட்டத்துப் பரமசுவாமிக்கு வைத்த திருநொந்தாவிளக்கு ஒன்றினுக்கு இவளுக்கு விற்றுக் கொடுத்து நிலமாவது ....... அபி
4. ஷேக தட்சணை பெற்ற சன்ன ....... மேற்காவிரி திருக்கீழ்க் கோட்டத்து பரமசுவாமிக்கு விற்றுக் குடுத்த நிலத்தில் அளந்து மேகாற்செய் விற்றுக் குடுத்ததற் கெல்லை இத்தேவர் நிலத்துக்கேய் மேற்கு தென்பாற்கெல்லை பள்ளிகொண்டருளுகின்ற பரமசுவாமி நிலத்துக்கு வடக்கு மேற்பாற்கெல்லை இந்நிலத்துக்குப் பாயும் வாய்க்காலுக்குத் கிழக்கும் வடபாற்கெல்லை இப்பெருமாள் நிலத்துக்கேய் தெற்குமாக இவ........
5. ட்ட நிலம் அளந்து 1/4 காற்செய் ..... குடுத்து இக்காற்செய்யில் போக நெல் கொண்டு சந்திராதித்தவல் இ ...... நொந்தா விளக்கு எரிப்பதாக இவளிடைக் கொண்ட பொன் 25 இப்பொன் இருபத்தைங் கழஞ்சு ஆவணக்களத்தே கைச்செய்யக் கொண்டு இப்பொன் இருபத்தைங் கழஞ்சும் ஸ்ரீ பண்டாரத் ..... ப்பித்து இத்திருநொந்தா விளக்கு ஒன்றும் அவ்வவ் ஆண்டு ஸ்ரீகார்யஞ்செய் ............
6. ப்பக்கடவாராகவும் பணித்தோம் மூலபரடைப் பெருமக்களோம் மூல ...... பெருமக்கள் பணியால் இ........னேன் இவ்வூர்த் தச்சன் பிராந்தகன் அரி... னேன் இவை என் எழுத்து.

## 94

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் முதல் பிரகாரம் வலப்பக்கச்சுவர்

காலம் : முதலாம் குலோத்துங்க சோழனின் 41ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1112

செய்தி : கங்கைகெண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழன் வேளத்தைச் சேர்ந்த கைக்கோளன் சீராளன் நாராணன் உடையான் திருவிடைமருதூருடையார்க்கு உச்சிச் சந்தியில் திருமஞ்சன நீர் ஒரு குடம் அளிக்க 1 காசு வைத்து அதன் வட்டி மூலம் ஏற்பாடு செய்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 41 ஆ
2. வது கங்கை கொண்ட சோழபுரத்து விக்கிரம சோழன் வேளத்து கைக்கோளன்
3. சீராளன் நாராயணன் உடையான் திருவிடைமருதூருடையார்க்கு உச்சிச்சந்தி
4. திருமஞ்சனக்குடம் பலிசைக்குச் சிலவாக சந்திராதித்தவரை...
5. க்கு ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின காசு 1 இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 95

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம் கிழக்குச்சுவர்

காலம் : முதலாம் குலோத்துங்க சோழ தேவரின் 49ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1119.

செய்தி : கங்கைகெண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழன் வேளத்தில் உள்ள கைக்கோளன் சீராளன் நாராயணன் திருவிடைமருதூர் உடையார்க்கு வட்டியைக் கொண்டு நந்தா தீபம் எரிக்க 10 காசுகள் மூலப் பொருள் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஶ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு
2. யாண்டு 49 ஆவது கங்கை கொண்ட சோழபுரத்து விக்கிரம
3. சோழ வேளத்துக் கைக்கோளன் சீராளன் நாராயணன்
4. உடையார் திருவிடைமருதூர் உடையார்க்கு சந்திராதித்தவல்
5. பலிசையால் ஒரு திருநுந்தாவிளக்கு செல்கைக்கு ஶ்ரீ பண்டாரத்து
6. ஒடுக்கின காசு 10 பன்மாகேசுவரர் ரட்சை.

## 96

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவாவடுதுறை கோமுக்தேசுவரர் கோயில் மூன்றாம் பிரகாரத் தென்சுவர்

காலம் : முதல் குலோத்துங்க சோழனின் 47 ஆட்சியாண்டு, கி.பி.1117.

செய்தி : விருதராச பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டுச் சிறுதனம் அகம்படியக் கைக்கோளர்க்கு வீரபோக நிலம் கொடுத்தது, அவர்கள் போரில் வெற்றி பெறுதல் போல வீரச்செயல் புரிந்தமைக்காகக் கொடுக்கப்பட்ட கொடையாகும்.

### கல்வெட்டு

1. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 47 ஆவது கந்நி நாயற்று அமர பட்சத்து தெசமியும் திங்கட்கிழமையும் பெற்ற பூசத்து நாள் விருதராச பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டுச்சி

2. றுதனத்து அகம்படியக் கைக்கோளர்க்கு விட்ட வீரபோகம் குலோத்துங்க சோழ நல்லூர்க்கும் வல்லப பல்ல.............ர்க்கும் உள்ள ஊர்க்கும் சாந்துக்குமோம் பழையாறு சீமை(ம) .................ங் குடையாமை நல்லூர்நாட்டு வேளாண்மை பண்.........

## 97

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூர் மகாலிங்கேசுவரர் கோயில் ,இரண்டாம் பிரகாரம் கிழக்குச்சுவர்

காலம் : குலோத்துங்க சோழ தேவரின் 49ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1119.

செய்தி : கங்கைகொண்ட சோழபுரத்துப் பழைய வேளத்துக் கைக்கோளர் பெற்ற திருநள்ளாறன் திருவிடைமருதூர் உடையார்க்கு உச்சி சந்தியின் போது ஒரு குடம் திருமஞ்சனம் ஆடியருள ஒரு கழஞ்சு பொன் வைத்தார். இம்மூலப் பொருளின் வட்டி மூலம் திருமஞ்சனநீர் அளிக்க வேண்டும்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு
2. யாண்டு 49 ஆவது கங்கை கொண்ட சோழபுரத்து பழைய
3. வேளத்து கைக்கோளன் பெற்ற திருநள்ளாறன் உடையார் திருவிடை
4. மருதூருடையார்க்கு உச்சிச் சந்தி திருமஞ்சனமாடியருள ஒரு குடம் சந்திராதித்தவல் பலிசைக்குச் சிலவாகச்
5. செல்ல ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின காசு 1 கழஞ்சு இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 98

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருப்பழனம் ஆபத்சகாயேசுவரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்

காலம் : கோப்பரகேசியின் இரண்டாம் ஆட்சியாண்டு

செய்தி : உடையார் அருமொழிதேவத் தெரிஞ்ச கைக்கோளரில் கற்றளி பட்டாலகன் தேவதானம் திருப்பழனமுடையார் கோயிலில் நாள்தோறும் நான்கு பிராமணர் உண்ண நிலம் விலைக்கு வாங்கிக் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 2 ஆவது மிறைக் கூற்றத்து தேவதானம் திருப்பழனமுடையார் கோயிலிலே நிசதி நால்வர் பிராமணர்
2. சந்திராதித்தவல் உண்ண இவ்வூர் தேவதானம் பேரங்காலக்குடி எலியூது புன்செய்த்திடல் இவ்வாதி சண்டேசுவரரிடையிலும் பதிபாத மூலத்தாரிடையும் உ
3. டையார் அருமொழிதேவத் தெரிஞ்ச கைக்கோளரில் கற்றளி பட்டாலகன் விலைகொண்டு மயக்கின நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை பெற்றான் மயக்கலுக்கும் நற்
4. காரி மயக்கலுக்கும் மேற்கு தென்பாற்கெல்லை நங்காரி மயக்கலுக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை மாதேவி மயக்கலுக்குப் பாய்ஞ்ச உள்சிறு வாய்க்காலுக்குக் கிழ
5. க்கு கீழ்பாற்கெல்லை..... திடல்க்கா .......... காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சிறுவாய்க்காலுக்கு
6. வடக்கும் மேல்பார்க்கெல்லை ........ க்கும் வடபாற்கெல்லை சாத்தி மயக்கலு ........ இவ்விசைந்த
7. பெருநான்கெல்லை .......... னும் இவனுக்கே விற்றுக்குடுத்த நிலத்துக்கு கீழ்பார்க்கெல்
8. லை முன் ....... லை ஒருமாவரைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை சிறுவாய்க்காலுக்கு
9. கிழக்கும் வடபாற்கெல்லை நா
10. ற்றுக் காலுக்குத் தெற்கும் இவ்விசைந்த
11. பெருநான்செல்லையுள் அகப்பட்ட நில

12. மும் இதுவல்லது இன்னும் இவனுக்கே விற்றுக்குடுத்
13. த நிலம் கீழ்பாற்கெல்லை கிழான் காணிக்கு
14. ம் மேற்கும் தென்பாற்கெல்லை பழஞ்செய்க்
15. கு வடக்கும் மேல்பாற்கெல்லை தேரடி மூன்று மாவுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ஒரு மாவரைக்கும் திட
16. லுக்கு திருவடி மயக்கலுக்கும் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லையுள்ளகப்படட நில
17. மும் இதுவல்லது இன்னும் இவனுக்கே மண்ணிவையாக
18. விற்றுக் குடுத்த புன்செய் திடல் இரண்டு மாவும் .......

## 99

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு தென்கயிலாயமுடையார் கோயில் முன்மண்டபத் தென்சுவர்

காலம் : வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி, ஆதித்த கரிகாலன்

செய்தி : திரிபுவன மாதேவி வேளத்தில் இருக்கும் ஒருவர் ஆதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் அயனடி நெருப்படைக்காகத் திருவையாற்று மகாதேவர்க்கு ஒரு நந்தா விளக்கு எரிக்கப் பொருள் கொடுத்து 170 பலம் எடையில் தராநிலை விளக்கு ஒன்றும் அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிபன்மற்கு
2. ............. திருவையாற்று மகாதேவ பட்டாரகர்க்கு சந்திராதித்தவல் நிசதம் உழக்கு நெய்யால் இரவும் பகலும் ஒரு நொந்
3. தா விளக்கு ......... ஆதித்தத் தெரிஞ்ச கைக்கோளரில் அயனடி நெருப்படைக்காக திரிபுவன மாதேவியார் வேளத்து
4. .......... வச்ச சாவா மூவாப் பேராடு 96 இவனே வய்ச்ச தராநிலை விளக்கு உட்கருவு
5. ........ நிறை 170 பலம்.

## 100

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தில்லைஸ்தானம் கிரித்தானேசுவரர் கோயில் கருவறை முன் மண்டபத் தெற்குச் சுவர்

காலம் : கோ இராசகேசரிபன்மரின் மூன்றாவது ஆண்டு, கி.பி. 953

செய்தி : சமரகேசரித் தெரிஞ்ச கைக்கோளரில் கூத்தன் நிகளங்கனும் விக்கிரம சிங்கத் தெரிஞ்ச கைக்கோளரில் மல்லதாதனும் திருநெய்த்தானத்து மகாதேவர்க்குக் கொடையளித்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிரா
2. ஜகேசரி பன்மர்க்
3. கு யாண்டு 3 ஆ
4. வது பொய்கை ஞா
5. ட்டுக் கீழ்பிலாற்றுத் தே
6. வதானம் திருநெய்த்தா
7. னத்து மகாதேவர்க்கு
8. சமரகேசரித் தெரிஞ்ச
9. கைக்கோளரில்க் கூ
10. த்தன் நிகளங்கனும்
11. விக்கிரம சிங்க தெரி
12. ஞ்ச கைக்கோளரில்
13. மல்லதாத(ன்)......

## 101

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தில்லைஸ்தானம் கிரித்தானேசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

காலம் : இராசகேசரிவர்மனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 953

செய்தி : திருநெய்த்தானம் சமரகேசரித் தெரிந்த கைக்கோளரில் மல்லன் அரையனைச் சார்த்தி ஒருவர் அளித்த கொடை.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜகே
2. சரி பன்மர்க்கு யாண்டு
3. 3 ஆவது பொய்கை நா
4. ட்டுத் திருநெய்த்தானத்து
5. மகாதேவர்க்குச் சமர
6. கேசரித் தெரிந்த கைக்கோளரி
7. ல் மல்லன் அரையனைச் சார்
8. த்தி ............

(கைக்கோளர் மல்லன் அரையன் வீரமரணம் அடைந்திருக்கலாம்; அல்லது நோயுற்றிருக்கலாம்)

## 102

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், சித்திரக்குடி சிவன் கோயில்

காலம் : கி.பி. 1563 சீமுக தை 3, சதாசிவராயர் ஆட்சிக்காலம்

செய்தி : நயினா முதலியார் தரகு வந்த பொருளைக் கோயிலுக்குக் கொடையாக அளித்துள்ளார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன்
2. மகாமண்ட
3. லேசுவரன்
4. ராசாதிராசன்
5. ராசபரமேசுவ
6. ரன் சதாசிவ
7. தேவ மகாராயர்
8. பிரிதுவிராச்சியம் ப
9. ண்ணிய சகாத்தம்
10. 1485 மேல்
11. செல்லாநிண்ண
12. ஸ்ரீமுக வருசம் தை
13. மாதம் 3 ஸ்ரீமத் அ
14. ச்சுதப்ப நாயக்கரய்யன்
15. காரியத்து
16. க்கு கர்த்தரான நயி
17. னா முதலியார் கண்
18. ணால நமது தரகு
19. ....... அரசு ........

## 103

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், சித்திரக்குடி சிவன் கோயில் விநாயகர் சன்னதி வாயிற்படிக் கல்

காலம் : கி.பி. 17ஆம் நூற்றாண்டு, நள சித்திரை

செய்தி : வல்லைப்பாக்கம் காளத்திநாத முதலியார் மகன் கச்சியப்ப முதலியார் விநாயகர்கோவில் கட்டிய செய்தி கூறப்படுகிறது.

### கல்வெட்டு

1. நள வருசம் சித்திரை மாதம் 5 தேதி வல்லைப்பா
2. க்கம் காளத்திநாத முதலியார் புத்திரன்
3. கச்சியப்ப முதலியார் தன்மம் சுவாமியார் கோயில்.

## 104

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், கோயில் தேவராயன் பேட்டை மத்சயபுரீசுவரர் கோயில் கருவறை வடசுவர்.

காலம் : கோப்பரகேசரியின் 11ஆம் ஆட்சியாண்டு (உததமன்), கி.பி.981

செய்தி : மதுராந்தகக் தெரிஞ்ச கைக்கோளரில் கோயில் நிலாவஞ்சி திருச்சேலூர் மகாதேவர்க்கு நந்தா விளக்கு வைத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ
2. ப்பரகேசரி ப
3. ன்மர்க்கு யாண்டு
4. 11 ஆவது தென்க
5. ரைப் பிரமதேயம்
6. ராஜகேசரி சதுர்வே
7. தி மங்கலத்து தி
8. ருச்சேலூர் மாதேவர்க்கு
9. மதுராந்தக தெரி
10. ஞ்ச கைக்கோளன்
11. கோயில் நிலாவஞ்சி வை
12. த்த திருநொந்தா விளக்கு
13. 1 சந்திராதித்தவல் இரவு
14. ம் பகலும் எரிவதற்கு.

## 105

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், மணக்கால் சிவாலயம் முன் மண்டப மேற்குச்சுவர்

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 12ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1262

செய்தி : திருமடை வளாகத்தில் இருக்கும் கைக்கோளரில் கருணாகரனான சொக்கன் கூத்த மாராயன் இறைவன், இறைவி, முருகப் பெருமான் ஆகியவரை எழுந்தருளச் செய்தார். நடுவிருக்கும் பிள்ளையார் என்று குறிப்பதால் இப்படிமம் சோமாஸ்கந்த மூர்த்தியாக இருக்கக் கூடும்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர
2. பாண்டியதேவர்க்கு யாண்டு 12வது உடையார் திருமணக்கா லுடையார்
3. திருமடைவிளாகத்துக் கைக்கோளரில் கருணாகரனான சொக்கன் கூத்த மாராய
4. னேன் இந்நாயனார் கோயில் நாயகரும் நாச்சியாரும் நடுவிருக்கும் பிள்ளையாரு
5. ம் நான் எழுந்தருளுவித்தேன் கருணாகர தேவனேன் இவர்க்கு அமுதுபடி
6. க்கு அரை (மா) நிலம் கொண்டு கொடுத்தேன்.

## 106

இடம் : தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், மல்லசமுத்திரம் பெருமாள் கோயில் வடபுறம் நிறுத்தப்பட்டுள்ள கல்

காலம் : மூன்றாம் குலோத்துங்க சோழனின் 19ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1197

செய்தி : அறம் செய்த சாலியர், வைசிய வாணிய நகரத்தோர், ஸ்ரீகரண விசைய சேனாபதிகள், அகம்படி தடி விச்சாதிரர், பள்ளிகள் பன்னாட்டார், அக்கசாலையர், அழியா நிலைப் புலிக்குட்டிகள் ஆகியவர்களோடு மூன்று மண்டலம் திகழ்ந்த பொற்கோயில் கைக்கோளரும் இணைந்து கொடையளித்துள்ளனர்.

### கல்வெட்டு

1. ஸ்ரீமந் பூதேவிபுத்ர ........
2. ன்ந குலோத்பவ ஸ்ரீலதா தாத்தாய .........
3. *சித்ரமேளஸ்ய சாசனம்: திரிபுவனச் சக்கரவத்*
4. திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்
5. டு பத்தொன்பதாவதில் நிகரிலிசோழமண்டலத்து
6. க் கங்கனாட்டுத் தகடூர்நாட்டு மருங்கு சூழ்ந்த கொங்கி
7. ரண்டு நாடு இடங்கைத் தொண்ணூற்றொன்பது கா
8. சாயப்பட்டினச் சாலியரோமும் வைய்சிய வாணியந்
9. நகரத்தோமும் மூன்று மண்டலந் திகழ்ந்த பொற்கோவி
10. ற் கைக்கோளரோமும் ஸ்ரீகரண விசைய சேனா
11. பதித் ........... டக்கத்து கூலியகம்படி நேர்தடி விச்சாதிரரோமும் ப
12. ள்ளிகள் பந்நாட்டோமும் அக்கசாலைகளோமும் அழியா நி
13. லைப் புலிக்குட்டிகளும் இத்தன்மம் காக்கக்கடவது
14. மேக்கட்டோமும் எம்மிலிசைந்து பூந்துறைநாட்டு வே
15. ளான்பள்ளியான கூலிச்சேவகனூரில் சாசனகல்லு நா
16. ட்டித் தந்தோம் இது அழிவு செய்தான் பண்ணி நாய் ப
17. றிச்சுத் தின்றான் நூற்றுவர் தர்மம் இவை
18. நாடு பணிக்க நாட்டுத் கணக்கன் எழுத்து.

## 107

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி வட்டம், திருவரங்கம், அரங்கநாதர் கோயில் உடையவர் சன்னதி நான்காம் பிரகாரச் சுவர்

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : வீற்றிருந்தான் சேமனான அகளங்க நாடாழ்வாரின் வீரன் திருவரங்கத்துக் கைக்கோளர் உலகனான அழகானை சோழமாராயன். அவன் தன் தலைவனுடன் இறக்கும் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீற்றிருந்தான் சேமனான அகளங்க நாடாழ்வார்க்கு
2. திருவரங்கத்துக் கைக்கோளரில் உலகனான அழகானை சோழ
3. மாராயனேன் இவற்கு உடன் வேளையாகச் சாவக் கடவேனாகவும்
4. இவற்குப் பின்பு சாவாதே இருந்தேனாகில் என் மிணாட்டியைப்
5. பறையற்குக் குடுத்து எங்களம்மைக்கு நானே மிணாளனாவேன்.

## 108

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் நான்காம் பிரகாரம் உடையார் சன்னதி எதிரில்

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : வீற்றிருந்தான் சேமனான அகளங்க நாடாழ்வாரின் வீரன் திருவரங்கம் கைக்கோள முதலிகளில் நாயனான அழகிய மணவாள மாராயன் தன் தலைவனுடன் இறக்கும் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீற்றிருந்தான் சேமனான அகளங்க நாடாழ்வார்
2. க்கு திருவரங்கத்து கைக்கோள முதலிகளில் நாயனான அழகிய ம
3. ணவாள மாராயனேன் இவற்குப் பின்பு சாவாதே இருந்தேனாகில் என்
4. மிணாட்டியைப் பறையற்குக் குடுத்து எங்களம்மைக்கு நானே மணாளன் ஆவேன்.

## 109

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் நான்காம் பிரகாரம் உடையார் சன்னதி எதிரில்

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : வீற்றிருந்தான் சேமனான அகளங்க நாடாழ்வாரின் வீரன் திருவரங்கத்துக் கைக்கோளரில் அரியானான கிடாரத்தரையன் அவன் தலைவனுடன் இறக்கும் விருப்பத்தைக் தெரிவித்துள்ளான்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீற்றிருந்தான் சேமனான அகளங்க நாடாழ்வாற்கு திருவரங்
2. கத்துக் கைக்கோளரில் அரியானான கிடாரத்தரையனேன் இவற்கு உட
3. ன் வேளையாகச் சாவக்கடவேனாகவும் இவற்குப் பின்பு சாவாதே இருந்
4. தேனாகில் என் மிணாட்டியை பறையற்குக் குடுத்து எங்களம்மைக்கு நா
5. னே மிணாளனாவேன்.

## 110

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் நான்காம் பிரகாரம் வடக்குச்சுவர் சந்திரபுஷ்கரணி எதிரில்

காலம் : மாறவர்மன் குலசேகரதேவன் காலம்; 7.7.1317

செய்தி : திருவரங்கம் ஸ்ரீ வைஷ்ணர் ஸ்ரீ வைகுந்த தாதர் என்பவரால் திருச்சிவிகை, திருவாசிகை ஆகியவற்றிற்கு நிலம் வாங்க 2200 பணம் நிச்சயிக்கப்பட்டது.

திருப்பணிக்குப் பிரித்த பணம் 200; சகதேகவீர சதுர்வேதி மங்கலப் பணம் 829; ஆரியர் அளித்த தெண்டப்பணம் 1130; இவற்றுடன் கைக்கோளர் பேரால் தெண்டம் நிச்சயித்த பணம் 41 ஆக மொத்தம் 2200 பணம் செலுத்தப்பட்டது. (கைக்கோளரிடம் எதற்காகத் தண்டம் வாங்கப்பட்டது என்ற விபரம் கூறப்படவில்லை)

### கல்வெட்டு

1. கோனரயவர்ம்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு 4வது ஆடி மாதம் 10 தியதி நாள் கோயில் அகரம் இரவிவர்மச் சதுர்வேதி மங்கலத்து பட்டர்களுக்கு

2. திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர்களில் ஸ்ரீ வைகுந்த தாதரேன் பற்று முறி குடுத்த பரிசாவது இவ்வகர நத்தத்துக்கும் வாஸ்து சேஷத்துக்கும் தவராசன் படுகைக்கும் விலையாக நிச்சயித்து திருக்கொட்டகாரத்தில்

3. ஒடுக்குவதான பணம் 2200 இப்பணம் இரண்டாயிரத்து இருநூற்றுக்கும் பற்றின திருப்பணிக்கு பிறித்த பணத்தில் பற்றின இரண்டாவது எதிராமாண்டு தைமாதம் 29ம் தியதி திருப்பேரில் பிறி

4. த்துத் தந்து பற்றின பணம் 200ம் திருமுற்றப்பற்று ஜகதேகவீர சதுர்வேதி மங்கலத்து பற்றின பணம் 829ம் ஆகப் பணம் ஆயிரத் திருபத்தொன்பதும் ஆனிமாதம் இரண்டாந் தியதி ஆ

5. ரியரைத் தெண்டம் நிச்சயித்த பணத்தில் பற்றின பணம் 1130 கைக்கோளர் பேரால் தெண்டம் நிச்சயித்த பணத்தில் குலசேகரதாதர் தந்து பற்றின பணம் 41ம் ஆக பணம் 1171 ஆக பணம் 2200

6. இப்பணம் இரண்டாயிரத்து இருநூறும் இப்படிகளால் பற்றிக்கொண்டு இரண்டாவதின் எதிராமாண்டு சித்திரை மாதம் ஏழாந்தியதி நாள் திருச்சிவிகைக்கும் திருவாசிகைக்கும் உள்ளிட்டவையிற்றுக்கு நான்

7. பொற்பண்டாரத்தில் ஒடுக்கின பொன்னிலே இவ்வாட்டை மார்கழி மாதம் 13 தியதி பிறித்துக் குடுத்து

8. பற்றுமுறி குடுத்தேன் பட்டர்களுக்கு ஸ்ரீ வைகுந்த தாதரேன் இப்பணம் பொற்பண்டாரத்திலே முதலிட்டுக் குடுத்தமைக்கு.

(ஆரியர்க்கு 1130 பணம் ஏன் தண்டம் விதிக்கப்பட்டது என்ற விபரமும் கூறப்பட வில்லை)

## 111

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், திருநெடுங்குளம் நெடுங்களநாதர் கோயில் அருகில் தனிக்கல்

காலம் : சொக்கநாத நாயக்கர், கி.பி. 1728 அக்டோபர் 1

செய்தி : வடமலையப்ப முதலியார் மகன் சுப்பிரமணிய முதலியார் திருநெடுங்களநாத சுவாமிக்குப் பூசைக்கட்டளைக்கு நிலம் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன்
2. சாலிவாகன சகாத்தம்
3. 1650 கலியுகம் 4
4. 829 மேல் செல்லா
5. நின்ற கீலக வருஷம் புரட்டாதி மாதம்
6. 31 தேதி செவ்வாய் கிழமையும்
7. ...... தசமியும் அவிட்ட நட்சத்திரமும்
8. ரிஷப லக்கினமுங் கூடின சுப
9. தினத்தில் ஸ்ரீமது விசைய ரெங்
10. க சொக்கநாத நாயக்கரய்ய
11. னவர்கள் சாமி
12. ராயரவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான
13. வடமலையப்ப முதலியாரவர்கள்
14. குமாரர் சுப்பிரமணிய
15. முதலியாரவர்கள் திருநெடுங்
16. களநாத சுவாமியார்
17. பூசைக்கட்டளையிட்ட
18. சர்வமானியம் சுவாமி பூ
19. ...... சய்சு 304 உள்ளூர்ப் புஞ்

20. சையில் மகமைக்கு 151

21. கோவில் ..... நாச்சியார் தென்

(22... 28......)

29. இந்த ச ............மு நிச்ச

30. ய்கு 300ம் உள்ளூர்

31. ஊர்ப் பொதுவிலே

32. முன்னோர் பயிரிட்டுக்

33. கொடுப்போமாகவும் இதற்கு யாதா

34. மொருவர் அகித

35. ம் பண்ணின பேர்

36. கங்கைக் கரையிலே

37. கோகத்தி பிராமண ஹத்தி

38. பண்ணின பாவத்தைப்

39. பெறுவாராகவும்.

## 112

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி வட்டம், திருப்பாலைத்துறை, தாருகாவனேசுவரர் கோயில் தெற்குச்சுவர் அடிப்பகுதி

காலம் : பராக்கிரம பாண்டிய தேவரின் 8 ஆம் ஆட்சியாண்டு

செய்தி : திருவாலந்துறையுடைய நாயனார் கோயில் திருமடை விளாகத்தில் வடக்குத் திருவீதியில் வசிக்கும் கைக்கோள முதலிகள் செய்த கொடையைக் கூறுகிறது. கொடைப் பகுதி அழிந்து விட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ பராக்கிரமபாண்டிய தேவர்க்கு யாண்டு எட்டாவது திருவாலந்துறையுடைய நாயனார் திருமடைவளாகம் வடக்குத்திருவீதி .............
2. இவ்வூர் கைக்கோளமுதலிகளில் .......... ஏகாங்கியின் திருவீதி..........

## 113

இடம் : திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், சேரமாதேவி அம்மநாதசுவாமி கோயில் முன் மண்டப வடக்குச்சுவர்

காலம் : கி.பி. 14 ஆம் நூற்றாண்டு

செய்தி : கைக்கோள சேனாபதிகளின் உதிரப்பட்டி நிலத்தில் ஒரு பகுதி கோயில் ஆண்டார்களால் நந்தவனத்திற்காகக் கொடுக்கப் பட்டது. உதிரப்பட்டி என்பது பொது நலத்தின் பொருட்டு இரத்தம் (உதிரம்) சிந்தி இறந்தவர்களின் வாரிசுகளுக்குக் கொடுக்கும் நிலக்கொடை.

### கல்வெட்டு

ஆற்றின் வடகரை இடைகால் கைக்கோளச் சேனாபதிக்கு உதிரப்பட்டியாக நிலம் அளிக்கப்பட்டிருந்தது. அந்த உதிரப்பட்டி நிலத்தில் ஒரு பகுதியில அவ்வூர் கைலாசமுடைய நாயனாருக்கு நந்தவனம் ஒன்றை கோயில் ஆண்டார்கள் அமைத்தனர்.

## 114

இடம் : திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி, நெல்லையப்பர் கோயில் இரண்டாம் பிரகாரம் தென்சுவர் (வெளியே)

காலம் : சடையவர்மன் வீரபாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டு, கி.பி.1301

செய்தி : கீழ்வேம்ப நாட்டுத் திருநெல்வேலிக் கைக்கோளச் சேனாபதி திருநெல்வேலியுடையாருக்கு அறுகும், சிறுதாளிப்பூவும் சாத்தி வழிபட விரும்பி அப்பணிக்காக திருவிடைக்கட்டு மடத்தில் இருக்கும் நம்பியாரூரரான ராக்கதப் பெருமாளையும், நம்பி ஆரூரையும் நியமித்தார். அப்பணி செய்யும் அவ்விருவர் வாழ்வதற்காக பதியிலாரிடமிருந்து நிலம் விலைக்குப் பெற்று அவர்கட்குச் சீவிதமாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 4 ஆவது சிம்ம நாயற்று அபரபட்சத்து நவமியும் நாயற்றுக்

2. கிழமையும் பெற்ற ரோகணிநாள் உடையார் திருநெல்வேலியுடைய நாயனார் கோயில் ஆதி சண்டேசுவர தேவர்க்கு கீழ்வேம்பநாட்டுத் திருநெல்வேலிக்

3. கைக்கோளச் சேனாபதிகளோம் விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது உடையார் திருநெல்வேலியுடைய நாயனார்க்குத் திருமுடி...... த்து அ

4. றுகும் தாளிப்பூவுஞ் சாத்தி இடைக்கட்டு மடத்தில் இருக்கும் திருத்தொண்டீசுவர தேவர்க்கு இவ்வூர் பதியிலாரில் கூத்தன் நம்பிராட்டியாரான

5. செய்யபெருமாள் தலைக்கோலியேன் திருவிடைக்கட்டில் மடத்தில் திருமேனிகளில் நம்பி ஆரூரனான இராக்கதப் பெருமாளுக்கும் நம்பியா

6. ரூரற்கும் ஜீவனத்துக்கு கூத்தன் நம்பிராட்டியான மணஞ்செய்த பெருமாள் தலைக்கோலி எங்கள் பக்கம் விலைகொண்டு இட்ட நிலமாவது முள்ளிநாட்டு பிரம

7. தேயம் சேரலன்மாதேவிச் சதுர்வேதிமங்கலத்துக் கீழ்ப்பிடாகை பத்தன்மடையிலான் ஜீவிதம் கைக்கொண்டமையில்

செம்மே..... வாய்க்காலுக்கும் கிழக்கும் வீரகே

8. ரளப் பிலாத்துக்கு தெற்கு பத்தொன்பதாங் கண்ணாற்று இரண்டாஞ்செயில் தெற்கடைய நிலம் 1/2ம் இதன் கண்ணாற்று ஆறாஞ்செயில் வடக்கடைய நிலம் 1/2ம் இந்நிலம் ஒரு மாவும்

9. எம்மிலிசைந்த விலைப்பொருள் இவர் பக்கல்கொண்டு சிறுகாலைச் சந்திக்கு அறுகுந் தாளிப்பூவுஞ் சாத்திப் பறிக்கிற திருத்தொண்டர்களில் நம்பியாரூரர் இராக்கதற்கும் நம்பியாரூரற்கும்

10. ஜீவிதத்துக்கு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் ஆதி சண்டேசுவர தேவற்கு கைக்கோளச் சேனாபதிகளோம் விற்றுக் குடுத்த இந்நிலத்துக்குக் கடமை அந்தராயம் பொன்வரி

11. உழுதான்குடி மற்றெப்பேர்ப்பட்ட சில்வரியும் தான் இறுப்பாராகவும் மேற்படி விற்றுக்குடுத்த இந்நிலத்துக்கு இதுவே விலையோலையும் இதுவே பொருட்செலவோலை ஆவதா

12. கவும இதுவல்லது விலையாவணச் சிலாவணம் பொருள் மாவறுதிப் பொருட்சிலவோலை காட்டவும் காணவும் கடவதல்லதாகவும் இப்படி சம்மதித்து காராண்மை உட்பட வி

13. லைக்குறவிற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்தேன் இந்நிலம் சந்திராதித்தவல் இவ்விராக்கதற்கும் நம்பியாரூரற்கும் இவர்கள் வற்கத்தாரும் இவ்வறுகுத் தாளிப்பூ

14. வும் இட்டு அனுபவிப்பாராகவும் கல்லிலே வெட்டிக் கொள்வாராகவும் வயல்தலையிலே திருசூலக்கல்லு நாட்டிக் கொள்வாராகவும் இப்படி சம்மதித்து விலைப்பிரமாணம் பண்ணிக்

15. குடுத்தோம் ஆதிசண்டேசுவர தேவற்கு திருநெல்வேலி கைக்கோள சேனாபதிகளோம் இவை ஸ்ரீ குலசேகரச் சித்தரயன் எழுத்து இவை அதிசெய பாண்டிய வத்தராயன்

16. எழுத்து இவை விக்கிரமபாண்டிய வத்தராயன் எழுத்து இவை கனகராயன் எழுத்து இவை கச்சியராயன் எழுத்து இவை வழுதிபன்மன் எழுத்து இவர்கள் சொல்ல இவ்விலைப் பிரமாணம்

17. எழுதினேன் செந்திறத்துக் கூத்தப்பெருமாள் எழுத்து.

## 115

இடம் : திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் இரண்டாம் பிரகாரத் தெற்குச்சுவர்

காலம் : சடையவர்மன் குலசேகரபாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1240

செய்தி : திருநெல்வேலியில் வாழும் அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் சோறன் பெரியானான ஜயசிம்ம தேவரும், கணபதி அழகனான களப்பாளனும் நெல்லையப்பர் கோயில் அர்த்தமண்டபத்துக்குத் திருவிளக்குகள் வைத்தனர். அதற்கு வேண்டும் எண்ணெய்யைச் சங்கரப்பாடியார் நாள்தோறும் மூன்று நாழி அளக்கத் தங்கள் நிலத்தில் இருவேலி நிலத்தைச் சங்கரப்பாடியாருக்குக் கொடையாக அளித்தனர்.

### கல்வெட்டு

1. கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு மூன்றாவது நாள் இரண்டாயிரத் தொரு
2. நூற்றைம்பத்திரண்டினால் மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரைக் கோயில் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீடம்
3. காலிங்கராயனில் எழுந்தருளியிருந்து கீழ்வேம்பநாட்டுத் திருநெல்வேலி சுத்தவல்லிப் பெருந்தெருவில் சங்க
4. ரன்பாடியார் செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி உடையார் திருநெல்வேலி உடையார் கோயில் திரு அர்த்தமண்டபத்துக்
5. குத் திருநெல்வேலி அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரில் சோறன் பெரியானான ஜயசிம்ம தேவரும் கணவதி அழகனான
6. களப்பாளனும் ஒன்பதாவது முதல் இட்ட திருவிளக்குக்கு நாளொன்றுக்கு எண்ணெய் முன்னாழியாக திருநெல்வேலி சுத்த
7. வல்லிப் பெருந்தெருவில் சங்கரன்பாடியார் எண்ணெய் அளப்பாராக இவர்களுக்கு நிலம் நிவந்தமாக இத்தேவர் தேவ
8. தானத்தில் ஜெயசிம்ம தேவர்க்கும் களப்பாளனுக்கும் காணியாகக் கடமை இறுத்து அனுபவித்து வருகிற மேல்

9. வேம்பநாட்டுத் தேவர் குளத்து நிலத்திலே இரண்டு வேலி நிலம் நில நிவந்தமாக நீக்கிக் குடுக்கப் பெற வேணு

10. மென்று இவர்கள் நமக்குச் சொன்னமையில் இத்தேவர் திரு மண்டபத்துக்கு செயசிங்கதேவனும் களப்பாளனும் இட்ட

11. திருவிளக்குக்கு நாளொன்றுக்கு முன்னாழியாக வந்த எண்ணெய் சுத்தவல்லிப் பெருந்தெருவில் சங்கரன்பாடியார் அளப்பதாக

12. இவர்களுக்கு நிவந்தமாக இத்தேவர் தேவதானம் மேல் வேம்பநாட்டு தேவர் குளத்திலே இரண்டு வேலி நிலம் ஒன்பதாவது முதல்

13. நீக்குவித்துக்கொள்க என்றும் இந்நிலத்தால் வந்த கடமை அந்தராயம் ஆண்டு ஒன்றுக்கு அச்சுப் பதினெட்

14. டாக இக்கோயில் தேவர் செலவு நீக்கி மிகுதியிலே இக்குளத்துக்கு இறுத்துவரும் அச்சிலே ஒன்பதாவது முதல் தவிர்க

15. என்றும் இப்படிச் சந்திராதித்தவல் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்கவென்று திருவாய்மொ

16. ழிந்தருளினார். இவை திருவழுதிநாட்டு இராஜஇராஜநல்லூர் அரையன் தேர் பொலிய நின்றானான வழுதிநாராய

17. ண மூவேந்த வேளான் எழுத்து இவை பல்லவராஜன் எழுத்து.

## 116

இடம் : திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கிரியம்பாபுரம் அரிகேசநாதர்கோயில் பிரகாரக் கிழக்குச்சுவர்

காலம் : சடையவர்மன் குலசேகர பாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1230

செய்தி : செல்வன் ஞானசம்பந்தர், அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளர் மீனவன் மாராயன் ஆகியோர் மாதந்தோறும் உத்திரட்டாதித் திருவிழா அன்று 3 குறுணியாக ஆண்டுக்கு 60 கலம் அரிசி கொடையாகக் கொடுத்து அதன் மூலம் 30 தபசிகளை உண்பிக்க ஏற்பாடு செய்தனர். கலத்துக்கு 3 குறுணி வட்டி.

அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரும், சுந்தரபாண்டிய அணுக்கரும் ஆண்டுதோறும் 100 கலம் நெல் கோயிலுக்குக் கொடை கொடுத்தனர்.

### கல்வெட்டு

திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரபாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டில் செல்வன் ஞானசம்பந்தர் அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளர் மீனவன் மாராயன் ஆகிய மூவரும் 60 கலம் நெல் மூலப்பொருளாக வைத்துக் கலத்துக்கு 3 குறுணி வட்டியாக வந்த நெல்லைக் கொண்டு மாதம்தோறும் உத்திராட்டாதிப் பெருவிழாவை நடத்த ஏற்பாடு செய்தனர். கீழூர்க் காடேற்றி அறம் வளர்த்த ஈசுவரம் உடையார் கோயிலில் விழாக் கொண்டாடப்பட்டது. விழாவை நடத்த சகலசிவன் சங்கரநாராயண பட்டன் ஆன குலசேகரபட்டன் ஒப்புக் கொண்டான்.

சுந்தரபாண்டியனின் 12ஆம் ஆட்சியாண்டில் அபிமான பூஷணத் தெரிந்த கைக்கோளரும், சுந்தரபாண்டிய அணுக்கரும் ஆண்டுதோறும் 100 கலம் நெல் அளிப்பதாக ஒப்புக் கொண்டனர். இந்நெல் கீழூர்க் காடேற்றி அறம் வளர்த்த ஈசுவரம் உடையார் கோயிலுக்காக வாள்வல பாண்டியன் திருமடம் கூத்தன் செல்வனான செல்வ ஞானசம்பந்தர் பெற்றுக் கொண்டார்.

## 117

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் வல்லாளன் கோபுரம்

காலம் : வீரவிசய பூபதிராய உடையார் காலம்; கி.பி. 1418

செய்தி : திருவண்ணாமலையில் வலங்கை, இடங்கைப் பிரிவுகள் இல்லை. அதனால் இவ்வூரில் இரண்டு தெருவில் உள்ள கைக்கோளர்கள் வலங்கையார்க்கு உள்ள வரிசைகளையும் நடத்திக் கொள்ளலாம். அவை முன்பு நடந்த சங்கு, தண்டு, ஆனை, சாமரம் ஆகியவையாகும்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரிராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர்கண்டன் மூவராயர் கண்டன்
2. சதுர் சமுத்திராதிபதி ஸ்ரீ வீரதேவராயர் குமாரர் ஸ்ரீ வீரவிஜய பூபதிராய உடையார் பிருத்விராஜ்யம் பண்ணி அருளாநின்ற
3. சகாப்தம் 1340ன் மேல் செல்லாநின்ற விளம்பி வருஷத்துத் தனுர்நாயற்று பூர்வபட்சத்துத் தசமியும் புதன்கிழமையும் பெற்ற ரேவதிநாள்
4. ஜயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்குன்றக் கோட்டத்து பெண்ணை வடகரை வாணகோப்பாடி அண்ணா நாட்டுத் தனியூர் திருவண்ணாமலைக்கு
5. இடங்கை வலங்கை இல்லை திருவண்ணாமலையில இரண்டு தெருவில் கைக்கோளற்கு முன்பு பூர்வம் நடந்து போந்த சங்கு தண்டு ஆனை சாமரம்
6. மற்றும் வலங்கைக்கு உள்ள வரிசைகள் எல்லாம் சந்திராதித்தர் வரையிலும் நடக்கக் கடவதாகவும் இந்தக் காரியத்துக்கு அழிவு செய்தவன் சிவத்
7. துரோகி ராஜத்துரோகி ஆகக்கடவனாகவும்.

## 118

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை திருவண்ணாமலை உடைய நாயனார் கோயில்

காலம் : இராசராசதேவரின் 20 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1166

செய்தி : திருவெண்ணெய்நல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர் கோயில் கைக்கோளரில் அறமுடையான மகன் திருமலை ஆழகியானான வீரப் பல்லவராயன் உடையார் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு நந்தாவிளக்கு வைத்தார்.

## கல்வெட்டு

ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபதாவது ராஜ ராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி திருவெண்ணெய் நல்லூர் பிரமதேயம் திருவெண்ணெய் நல்லூர் ஆட்கொண்ட தேவர் கோயில் கைக்கோளரில் அறமுடையான் மகன் திருமலை அழகியானான வீரபல்லவராயனேன் உடையார் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு திருநந்தா விளக்கு ஒன்றுக்கு சந்திராதித்தவரை செல்வதாக விட்ட பசு 32 ரிஷபம் 1 இவ்விளக்காய் இட்ட குத்துவிளக்கு 1

## 119

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், சீயமங்கலம், அவனிபாசனப் பல்லவேசுவரம் முன் மண்டபம் மேற்குச்சுவர்

காலம் : கி.பி. 1411

செய்தி : சீயமங்கலத்தில் ஏற்பட்ட கலகத்தாலும், பஞ்சத்தாலும் கைக்கோளர்கள் கொள்ளையிடப்பட்டும், துன்பப்பட்டும் பலரும் பல இடங்களுக்குச் சென்று விட்டனர். இப்போது அவர்கள் ஊரில் குடியேறித் தறியில் நெசவு நெய்து கொள்ளலாம். இனி தறிக்கு ஆண்டுக்கு ஆறு பணமும், எதிர்த்தறிக்கு மூன்று பணமும், காணிக்கை கொள்ளும் முதல் முதலிய பலவற்றிற்குத் தறிக்கு மூன்று பணமும், எதிர்த்தறிக்கு ஒன்றரைப்பணமும், அடைப்பு ஒன்றுக்குத் தறிக்கடமையில் பதினொன்றில் ஒன்று கழித்துக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

### கல்வெட்டு

1. சகாத்தம் 1333ல் மேல் செல்லாநின்ற கர வருஷம் அற்பசி மாதம் முதலுக்கு உடையார் தூணாண்டார் தேவதா
2. னம் சீயமங்கலத்தில் கைக்கோளற்கு அடைஓலை குடுத்தபடி இவ்வருஷம் இந்நாள் வரையும் கலகமும் கரிப்புமாய்க் குடியுள்ளது
3. கொள்ளை கொடுத்து நலங்கி பல இடத்திலும் சிதறி குடிபோன படியாலே இந்நாள் முதலுக்கு ஊரிலே குடியும் புகுந்து தறியும் இட்டு
4. நெய்யக்கடவர்களாகவும் நெய்யுமிடத்து மலையாங்கிட்டு குத்தகையாக விட்ட மரபீடம் உட்பட ஆண்டு ஒன்றுக்கு தறி ஒன்றுக்கு ஆறு
5. பணமும் எதிர்த்தறிக்கு இதிலே ஒன்று பாதியும் கொள்ளக் கடவதாகவும் காணிக்கை கொள்ளும் முதலுக்கு பல உபாதியும் உட்பட தறி ஒன்றுக்கு
6. மூன்று பணம் கொள்ளக்கடவாதாகவும் எதிர்த்தறிக்கு இதில் ஒன்று பாதி கொள்ளக்கடவாதகவும் அடைப்பு ஒன்றுக்கு பதின் ஒன்றிலொ
7. ன்று தறிக்கடமையிலே கழித்துக் குடுக்கக் கடவதாகவும் இம்மரியாதிக்கு சந்திராதித்தவரையும் நடக்கக் கடவதகாவும் இம்மரியாதிக்குத் தூணாண்டார் ஸ்ரீ பாத மேல் தா
8. ழ்வில்லை இவை பாசுகரபண்டிதர் எழுத்து இவை கந்தப்பிரான் பட்டர் எழுத்து இவை பரமேசுவரபட்டர் எழுத்து. இவை விநாயக பட்டஸ்ய
9. இவை காக்கு நாயக பட்டர் எழுத்து.

## 120

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மடம் திருவக்கினீசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடபுறச்சுவர்

காலம் : தேவராய மகாராயர் காலம்; கி.பி. 1433

செய்தி : அண்ணமங்கலப் பற்று மடம் அக்கினீசுவர மகாதேவர் கோயில் கைக்கோளர் அமரகோனார் கொளந்தையாண்டவர் என்பவர். அவர் தமக்கை அறம் வளர்த்த நாச்சியார் கண்ட மாணிக்கம் என்பவர். அவர் விசயநகர அரசர் தேவராய மகாராயரை நேரில் கண்டு இக்கோயிலுக்குச் சர்வமானியம் பெற்று அதைச் செப்பேட்டிலும் எழுதி வாங்கி வந்தார். அவருக்கு நாள் ஒன்றுக்குப் பதக்கு நெல்லும், மாதம் இரண்டு பணமும் அவர் விரும்பியதைச் செய்யவும் உரிய காணியாட்சியைக் கோயில் ஸ்ரீருத்ரமகேசுவரர் அளித்தனர். இதை நாட்டவருக்கும் அறிவித்தனர்.

### கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலீசுவரன் அரிராயவிபாடன் பாசைக்குத் தப்புவராயர்கண்டன் மூவராயகண்டன் ஸ்ரீ வீரப்பிரதாப தேவராயர் மகாராயர் பிருத்விராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1355ன் மேல் செல்லாநின்ற பிரமாதீச சம்வத்சரத்துக் கும்ப நாயிற்று பூர்வபட்சத்து தசமியும் திங்கட்கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் அண்ணமங்கலப் பற்று மடம் உடையார் திருஅக்கினீசுவர மகாதேவர்கோயில் ஸ்ரீருத்ர மகேசுவரரோம் இக்கோயில் கைக்கோளரில் அமரகோனார் கொளந்தையாண்டாருக்கு திருமுகக்காணி குடுத்தபடி யிவன் தமக்கை அறம் வளர்த்த நாச்சியார் கண்ட மாணிக்கம் தேவராய மகாராயரைக் கண்டு இக்கோயிலுக்கு சர்வமானியம் பண்ணி செப்பேடு வாங்கி வருகையில் இதுக்கு ஒரு முதல் கணக்கு எழுதி நாட்டோருமிட்டு நாளொன்றுக்குப் பதக்கு நெல்லும் மாதம் ஒன்றுக்கு இரண்டு பணம் அர்த்தமத்த காரிய இலக்கையும் பெற்று சந்திராதித்தவரையும் செல்லக்கடவதாகவும் இக்காணி விற்றும் ஒற்றிவைத்தும் உண்டான தானத் தர்ம கிரயங்களுக்கு உரித்தாகக் கடவதாகவும் இப்படிக்கு காணியாட்சி குடுத்தோம். இக்கோயில் ருத்ரமகேசுவரரோம் இவை தில்லை நாயகபட்டன் எழுத்து. இவை பரமேசுவரபட்டன் எழுத்து, இவை கூனிக்கு வீரானபட்டன் எழுத்து.

## 121

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் மகாமண்டபம் கிழக்குச்சுவர் வாயில் இடப்புறம்

காலம் : மூன்றாம் இராசநாராயணன் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 1362

செய்தி : கைக்கோளர் நெய்யும் தறிக்குப் பல்வேறு வகையான வரிகள் குறிக்கப்படுகின்றன.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்தி இராச நாராயணன் சம்புவராயற்
2. க்கு யாண்டு 6வது மார்கழி மாதம் இருபதாந்தியதி திருவோத்தூர் கைக்
3. கோளரில் தறி இட்டு நெய்யும் பேர்க்கு தறிக்கடமைக்கு இவ்வாண்
4. டைக் கார்த்திகை மாத வரையும் கடமைகொண்டு போந்த மரியாதி
5. மார்கழி மாத முதலுக்கு தறிக்கடமை மாத இரட்டி சூலவரி வட்டம்
6. சம்படம் உட்படத் தறி ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆறேகால் பணமும்
7. வாசல் ஒன்றுக்கு வாசல் பணம் சூலவரி குழிப்பணம் உட்பட இரண்டு பணமும்
8. ஆக ஆண்டு ஒன்றுக்கு எட்டேகால் பணம் கொள்ளவும் இப்படிக்கு சந்திரா
9. தித்தர் வரையும் கொள்ளவும் இப்படி கொள்ளும் அளவுக்கு மார்கழிமாதம்
10. முதலுக்கு மேல்தறி உட்படக் கட்டிக் கண்டதறிக்கு மடிந்த தறி உட்பட முழுத்தறி
11. அறுபத்தி ஆறுக்கு அடைப்புப் பேறு கழித்து நின்ற தறி அறுபதுக்கும் ஈடும்
12. துகிரும் கண்டு இத்தறியில் ஏறின தறிக்குடி அடைப்பு பேறு கழித்து நின்ற தறிக்குடி இம்மரியாதி
13. கொள்ளவும் நிலையாக தறி அறுபத்தி ஆறில் குறைந்த தறிக்கு இருந்த குடியில் நிலை
14. யான தறியிலே இத்தறி அறுபத்து ஆறுக்கும் இந்த ஏட்டுப்படி கடமை சந்திராதித்த
15. வரையும் கொள்ளவும் சொன்னோம் இப்படிச் செய்வதே.

## 122

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், திருப்பனங்காடு தாளபுரீசுவரர் கோயில் கிருபாநாதர் சன்னதி வடக்குச்சுவர்

காலம் : இரண்டாம் விருபாட்ச உடையார்; கி.பி. 1391 ஆகஸ்டு 13

செய்தி : பிரமோதூத வருடம் மழை இல்லாமல் பணத்துக்குப் பத்துநாழி நெல்லும் கிடைக்காத பஞ்சமாய் ஒரு வருடம் இருந்ததால் திருப்பனங்காடுடையார் கோயிலார் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைக் கொடுக்க முடியவில்லை. ஆனால் அரசு அதிகாரிகள் உள்ளபடி வரி கொடுக்க வேண்டும் என்று கூறினர். எனவே ஸ்ரீமாகேசுரர், தானத்தார், கைக்கோளர், பாக்கம் உடையார், அகம்படிய வேளார் ஆகியோர் கோயில் நிலங்களை விற்றுச் செலுத்திய விபரம் கூறப்படுகிறது.

கைக்கோளர்கள் கோயில் நிருவாகிகளில் ஒருவராகக் கூறப்பட்டுள்ளனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் பூறுவ தட்சிண பச்சிம சமுத்திராதிபதி ஸ்ரீவீர அரியண உடையார் குமாரர் விருப்பண உடையார் பிருத்விராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று ஒருபத்து மூன்றின்மேல் செல்லாநின்ற பிரசோத்பத்தி சம்வத்சரத்து சிம்ம ஞாயிற்றுப் பூர்வ பட்சத்து திரையோதெசியும்

2. ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற திருவோணத்துநாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்து கழுமல நாட்டு பிரமதேசப் பற்று உடையார் ஆளுடையார் திருப்பனங்காடு உடைய நாயனார் கோயிலில் ஸ்ரீமாகேசுவரரும் தானத்தாரும் இம்மண்டலத்து இன்னாட்டு இப்பற்றுக் கைக்கோளரும் பாக்கம் உடையார் அகம்படிய வேளார் திருவண்ணாமலை உடையார் இஷபவாகன தேவர்க்கு அருளிச் செயல்

3. படி ஆதிசண்டேசுவரவிலை கோயில் கணக்கு ஊர்க்கணக்குக் காணிவிலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தபடி முன்னாள் பிரமோதூத வருஷம் மழை இல்லாமல் வெண்தலை ஒடு உறுண்ட கரிப்பாய் பணத்துக்குப் பதினாழி நெல்லு

கொள்ளக்கிடையாமல் ஊரு ஒரு வருஷம் ஆக.... அதிகாரி சொன்னபடி தீர்வைப்பணம் உள்ளது தரவேணுமென்று எங்களைப் பணித்து வைக்கையில் குடுக்க முதல் இல்லாதபடியாலே உடையார்

4. திருப்பனங்காடு உடையார் திருநாமத்துக்காணி ஆன கோயில் கணக்கும் ஊர்க் கணக்குக் காணி ஆன திருப்பனங்காடு சிறுபனங்காடு வெள்ளைக்குளம் அத்திப்பற்று வன்பாக்கம் திறப்பு பாதி உட்பட ஆக இவ்வூர்களில் நாற்பாலெல்லைக்கு உட்பட பல தாங்கலும் பல குப்பமும் ஆக இவ்வூர்களில் ஊர்க்கணக்கு காணிக் ........ ஆதி சண்டேசுவர விலையாக எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு கன்மிக்கும் வாசிபடாத நற்பணம் 350 இப்பணம் முன்னூற்று ஐம்பதுக்கும் இந்நாயனார் கோயில் கணக்குக் காணியும்

5. ஆலாலசுந்தரன் திருவீதிக்கு மேலை ஒருச்சிறகன் திருவீதியில் சைவசேகர காலார் மனைக்கு மேலைமனை இரண்டும் மனைப்படப்பையும் திருப்பனங்காடு சிறுபனங்காடு வெள்ளைக்குளம் வன்பாக்கம் ஆக இவ்வூர்களில் பல குப்பமும் பல தாங்கலும் உட்பட மனைக் கணக்கு காணியும் மனைகளும் மனைப்படப்பையும் கணக்கன்பட்டிகளும் கணக்கன்பேறும் ....... வை முதலும் தேவையும் கணக்கு இலக்கையும் அருளிச்செயல்படி ஆதிசண்டேசுவரவிலை ஆவதாகவும் இதுவே விலைப்பிரமாணம் ஆவதாகவும் இந்தக் கோயில கணக்கு

6. காணியும் ஊர்க்காணியும் மனைகளும் கணக்குப்பட்டிகளும் சந்திராதித்தவரை இவர்க்கு விற்று ஒற்றி பிரதிக்கிரைய தானங்களுக்கும் உரித்தாவதாகவும் இப்பணம் 350 நாங்கள் பற்றினதை பணம் நாள் இவ்வூர்கள் சூலவரிக்கு ஒற்றி வைத்தது பணம் 150 பிரமோதூத வருஷம் சூலவரிக்குப் பணம் 200 ஆகப் பணம் முன்னூற்று ஐம்பதுக்கு காணியும் சண்டேசுவர விலை ஆக விலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் வெண்பாக்கம் உடையார் அகம்படி வேளார் திருவண்ணாமலை உடையார்

7. இஷபவாகன தேவர்க்கு ஆளுடையார் திருப்பனங்காடுடைய நாயனார் கோயில் ஸ்ரீ மாகேசுவரரும் தானத்தாரோம் இந்தக் காணியாட்சிக்கு ஒரு கலனும் இல்லை கலன் உளவாய்த் தோற்றுப்படில் நாங்களே தீர்த்துக் குடுக்கக் கடவோம் இவை உடையானான ஸ்ரீ மாகேசுவர நம்பி எழுத்து இவை ஆடிஅருளுவார் திருவேதம் பட்டன் எழுத்து இவை செந்தாமரைக் கண்ணன் தில்லை நாயகன் எழுத்து.

## 123

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், திருப்பனங்காடு தாளபுரீசுவரர் கோயில் முன்மண்டப மேற்கு, தெற்குச் சுவர்

காலம் : சர்வதாரி, தை 2

செய்தி : கைக்கோளரும், கைக்கோள முதலிகளும் ஒவ்வொருவரும் தறிக்கடமை, வாசல்பணம் மற்றும் பலவற்றிற்காக வருடத்திற்கு தறி ஒன்றுக்கு 4 பணம் செலுத்த வேண்டும். கீழ்த்தறிக்கு இரண்டு பணமும் புதியதாய் வரும் குடிகள் மூன்று பணமும் செலுத்த வேண்டும்.

கோயில் திருமேனிகாவலுக்கு ஒன்பது முதலிகள் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் 150 குழி நிலமாக மொத்தம் 1350 குழிநிலம் மானியமாக அளிக்கப்பட்டது. இதற்கு எந்த வரியும் இல்லை. நாள்தோறும் கோயிலில் இருநாழி அரிசிச் சோறும் பெற்றனர். ஆண்டுக்கு தறிக்கு 3 பணம் முதலிகட்குக் கொடுக்க வேண்டும்.

### கல்வெட்டு

1. சருவதாரி வருஷம் தை மாதம் 2 தேதி உடையார் திருப்பனங்காடு உடைய நாயனார் கோவில் ஸ்ரீ மாகேசுவரரும் தானத்தாரும் திருப்பனங்காட்டில் கைக்கோளர் கைக்கோள முதலிகளுக்கு கல்வெட்டிக்குடுத்தபடி இவர்கள் பேர்க்கு தறிக்கடமை வாசல்பணம் மற்றும் பல உபாதிகளும் உட்பட
2. வருஷத்துக்குத் தறி ஒன்றுக்கு 4 பணமும் கீழ்த்தறிக்கு இரண்டு பணமும் புதுக்குடிக்குப் பணம் மூன்றும் கொள்ளக்கட வதாகவும் திருவேனி காவலுக்கு முதலிகள் பேர் ஒன்பதுக்கு பேர் ஒன்றுக்கு நிலம் சடையேரி கீழ்நிலத்தி
3. லே நூற்றி ஐம்பது குழியாக ஆயிரத்து முன்னூற்று ஐம்பது குழியும் சீவிதமாக சர்வமான்யமாக சந்திராதித்தவரையும் நடத்தக்கடவது ஆகவும் முதலிகளுக்குத் திருமேனி காவலுக்கு அடைச்ச நிலங்களுக்கு கடமை பொன்வரி சோடி சூலவரி மேல் பிறக்கும் பழவரி புதுவரி என்று சொல்லக்கடவது

4. அல்லவாகவும் இந்நிலம் இறையிலி சர்வமான்யமாக சந்திராதித்தவரை நடத்தக்கடவதாகவும் திருமேநி காவலுக்கு இருநாழி அரிசி சோறு நாள்தோறும் இடக்கடவதாகவும் முதலிகளுக்கு வருஷத்துக்கு தறிக்கு 3 பணம் கொள்ளக்கடவோம் அடைப்பு நிலம் தறி பத்துக்கு ஒன்று குழிக்கு சேரக்கடவோமாகவும்

5. இப்படிக்கு சீமாயேசுவர நம்பி எழுத்து இப்படிக்குத் திருச்சிற்றம்பல பட்டன் எழுத்து இப்படிக்குக் கோயில் கணக்கு திருப்பிலீசுரமுடையான் எழுத்து.

## 124

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், திருப்பனங்காடு தாளபுரீசுவரர் கோயில் முன்மண்டப மேற்கு, தெற்குச் சுவர்

காலம் : இரண்டாம் விருபாட்ச உடையார்; கி.பி. 1383 சனவரி 9

செய்தி : திருப்பனங்காடு கைக்கோளர், கைக்கோள முதலிகள், தேவரடியார் ஆகியோர் சூலவரியாக 150 பணம் செலுத்த வேண்டும். திருப்பனங்காடு சடைஏரி மதகு உடைந்ததால் விளைச்சல் இன்றி வரி செலுத்த முடியவில்லை. சூலவரிக்கு அவ்வூரில் உள்ள மூன்று தெருக்களில் உள்ள அவர்கள் தங்கள் மனைகளை விற்றுச் செலுத்தினர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் அரியணஉடையார் குமாரர் விருப்பண உடையார்க்குச் செல்லாநின்ற சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று மூன்றுக்குமேல் செல்லாநின்ற துந்தபி சம்வத்சரத்து மகரநாயற்று பூர்வபட்சத்துப் பஞ்சமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற ரேவதிநாள் செயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துக் கழுமல நாட்டுப் பிரமதேயப் பற்று திருப்பனங்காட்டு ஆளுடையார்

2. திருப்பனங்காடு உடைய நாயனார் திருநாமத்துக்காணி திருப்பனங்காடு கைக்கோளற்கும் கைக்கோள முதலிகளுக்கும் தேவரடியார்க்கும் சண்டேசுவர விலையாக விற்ற திருநாமத்துக்காணி திருமடை விளாகத்தில் தெற்குத் திருவாசலுக்குத் தெற்கு சன்னதித்தெரு தேவரடியார் மனைக் கீழ்சிறகு கல்நாட்டுக்கு வடக்கு மனையும் மனைப்படப்பையும் மேல்சிறகு மேலைத் திருமதில் தெற்குக் கோடிக்கு வசவணன் திருவீதியிலே உளமனையும்

3. மனைப்படப்பையும் தெற்கு வசவணன் திருவீதி தென்சிறகு உவச்சர் மனை இரண்டும் நீங்கலாக இதுக்கு மேற்கு மேலைத் திருவீதியில் கீழ்சிறகில் கோடியில் செவ்வைக்குக் கிழக்கு மனையும் கல்னாட்டு செவ்வை மனைப்படப்பையும் வடசிறகு மேலைத் திருவீதியில் கீழ்சிறகு கிழக்கு சன்னதித் தெருவிலே உளமனையும் கல்வெட்டு செவ்வை மனையும் படப்பையும்

வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கு மகேஸ்வர மடத்துக்குத் தெற்கு திருமதிளிலே உளமனை இரண்டும் மனைப்படப்பையும் இதுக்கு மேற்கு வடக்குத் திருவீதி வடசிறகு மேலைத்திருவீதி

4. வீதிக்கே கிழக்கு மனையும் மனைப்படப்பையும் தென்சிறகு அதிருங்கழல் பெருமாள் தொண்டைமானார் மனையும் மனைப்படப்பையும் உட்பட இதுக்கு மேற்கு மேலைத் திருவீதியிலே உள மனையும் மனைப்படப்பையும் ஆகத் தெரு மூன்றும் சண்டேசுவர விலையாக நிச்சயித்த பணம் 150 இப்பணம் நூற்று ஐம்பதும் இவ்வூரில் சடைஏரி மதகிலே உடைந்து போகையில் சூலவரிக்கு முதல் இல்லாதபடியினாலே இந்தத் தெரு மூன்றும் காணியாட்சியாக கைக்கோளர் கைக்கோள முதலிகளும்

5. தேவர் அடியார்களும், விற்று இப்பணம் நூற்று ஐம்பதும் வாங்கிக் கொடுத்தோம் இத்தெரு மூன்றினால் உள்ள மனையும் மனைப்படப்பையும் இவர்களுக்கு விற்றொற்றி பிரதிக்கிரயதர்ம தானங்களுக்கும் உரித்தாவதாகவும் இப்படிக்கு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம். இக்கோயில் மாகேசுவரரும் தானத்தாரோம் இப்படிக்கு இவை ஆண்டபெருமாள் திருச்சிற்றம்பல பட்டன் எழுத்து இவை சீராழ்வான் தில்லைக் கூத்தபட்டன் எழுத்து

6. இப்படிக்கு இவை கோயில்கணக்கு பிரமாதராயன் எழுத்து இக்கோயில் பொற்கோயில் ஆசாரி எழுத்து.

## 125

இடம் : திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ராமகிரி, வாலீசுவரர் கோயில் பிரகாரச் சுவர்

காலம் : இரண்டாம் புக்கராயர்; கி.பி. 1382

செய்தி : திருக்காரிக் கரையில் திருவாளன் மடத்தில் முதலியார் சத்ய தர்சினிகளுக்கு ஊரவர் ஏரியும் ஏரி நீர் பாயும் நிலமும் கொடையாகக் கொடுத்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் ராய விபாடன் புக்கராய உடையார்க்குச் செல்லாநின்ற துந்து
2. பி சம்வத்சரம் சித்திரை மாதம் 5 தேதி புதன்கிழமையும் பிரதமையும் பெற்ற சித்திரை நாள்
3. ஜயங்கொண்ட சோழமண்டலத்து குன்றவத்தனக் கோட்டத்து நின்றையூர் நாட்டு ஆளுடைய
4. நயினார் திருக்காரிக் கரையில் திருவாளன் மடத்தில் முதலியார் சத்யதர்சினிகளுக்கு இந்நாட்டு
5. வெண்குளத்தூர் (கைக்கோளக்குடி) ஊரவரோம் க்ஷேத்ரதானம் பண்ணிந பரிசாவது எங்கள் காணியாட்சி
6. ஆன காவந்த காவண்ட நல்லூர் நத்தமும் ஏரியும் நன்செய் புன்செய் நிலமும் வெண்குளத்
7. தூர் ஏரி நீரும் வாய்க்காலும் மற்றும் இவ்வூர்க்கு உள்ள சகல பிராப்திகளும்.....

## 126

இடம் : திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருப்பாசூர் வாசீசுவரர் கோயில் கர்ப்பக்கிரக வடபுறச் சுவர்

காலம் : வீரராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டு, கி.பி. 1067

செய்தி : திருப்பாசூர் உடையார் திருக்காமக்கோட்டத்து நாச்சியார்க்கு தோடு அணிவிக்க 9 கழஞ்சு பொன்னும், கழுத்து மாலை சாத்த 10 கழஞ்சு பொன்னும் இவ்வூர் கைக்கோளர் கண்ணன் அரசு என்பவர் வைத்தார்.

## கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு 4வது திருப்பாசூர் உடையார் திருக்காமக் கோட்டத்து நாச்சியார் பணைமுலை நாச்சியார்க்கு தோடு இரண்டுக்கு 9 கழஞ்சு பொன்னும், கழுத்து மாலை சாத்தப் பத்துக் கழஞ்சு பொன்னும் இவ்வூர் கைக்கோளரில் கண்ணன் அரசு தர்மம்.

## 127

இடம் : திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கூவம், திரிபுராந்தக ஈசுவரர் கோயில் முன்மண்டபம் தெற்குச்சுவர்

காலம் : கொப்பூரி ஓபராசயதேவமகாராயர்; 1610 நவம்பர் 30

செய்தி : கூவம் திரிபுராந்தக ஈசுவரர் கோயிலில் மார்கழி மாதம் 30 நாளும் யார் யார் எத்துணை நாள் பூசை செய்வது என்பது பற்றிய ஒப்பந்தம். அவ்வூர் கைக்கோளர் ஒரு நாள் பூசையை ஏற்றுக் கொண்டனர். எல்லா ஆண்டுகளும் இம்முறையிலேயே நடைபெற வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் விசையாத்புதைய சாலிவாகன சகாத்தம் 1532ற் செல்லாநின்ற சாதாரண வருஷம் மார்கழி மாதம் முதல் தேதி சுக்கிரவாரனாள் ஸ்ரீ மன் மகாமண்டலேஸ்வர கொப்பூரி ஓபராசயதேவ மகாராசய்யன் அவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான பாரபத்தியம் காஞ்சி (பச்சை)யப்ப முதலியாரும் முடிப்புர உப்புலப்பாடி குருவப்பரும் கடைக்கூட்டு வேணும்பாக்க வெங்கிட்டப்பரும் திருவொற்றியூர் தியாகப்பிள்ளையும் கூவம் ஊரவரும் உடையார் திருவிற்கோலமுடையார் திருப்

2. பள்ளி எழுச்சி சிறப்புக்கு கட்டளையிட்ட விபரம் நாள் 1க்கு சிறப்பு 1க்கு 14ஆக பண்டார சிறப்பு 1 தேதி தானத்தார் சிறப்பு 1 மதுராந்தக விழுப்பரையர் அரசர் உள்ளிட்டார் 6 உதையாதித்த தேவர் உள்ளிட்டார் 4 வேங்கியார் உள்ளிட்டார் 3 தொண்டைமான்கள் 3 இருங்கனூர் கிழவர் 4 குமாரத் ..... கள் 4 கைக்கோளர் 1 காவல் பெருமாள் நாயக்கர் 1 ஊர்க்கணக்கு 1 ஊர் பொது சிறப்பு 2 ஆக னாள் 30 சிறப்பு 30க்கு மார்கழிமாதம் சா......

3. கணம் புண்ணிய காலத்திலே திருவிற்கோலீசுவரன் சன்னதியிலே இவ்வனைவரும் கட்டளையிட்டோம் இந்த தர்மம் சந்திராதித்தவரை சந்தான பாரம்பர்யமாக நடத்திவரகடவர்களாகவும் இந்த தர்மத்துக்கு ஆர் அகிதம் நினைத்தாலும் அகிதம் நினைத்த பேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போகக் கடவர்களாகவும் இப்படிக்கு எழுதினமைக்கு.........

4. பிரமராயர் திருப்பிச்சர் நயினான் எழுத்து

## 128

இடம் : திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருப்புகலூர் அக்கினீசுவரர் கோயில் மதில் சுவர் கீழ்ப்புறம்

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 10 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1287

செய்தி : திருப்புகலூர்க் கோயிலுக்குச் சேனைக் கைக்கோளர், ஸ்ரீ மகேசுவரர், அகம்படியார், காணியாளர், வெள்ளாளர், கண்ணாளர், களப்பாளர் அனைவரும் சேர்ந்து அளித்த கொடை

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பத்தாவது அற்பசி மாதம் நாலாந் தியதி நாள்
2. குலோத்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டுத் திருப்புகலூர் உடையார் கோயில் பண்டாரத்தாற்கு இவ்வூர் ஸ்ரீ
3. மாஹேஸ்வரரும் திரு அகம்படியாரும் காணியாளரும் வெள்ளாளரும் சேனை கைக்கோளரும் கண்ணாளரும் மற்றும் பல க
4. லணையில் உள்ளாரும் மற்றும் காலோடைக் களப்பாளரும் இவ்வனைவோம் ஒருமையூறிக் கொடுத்த பரிசாவது இவ்வூர் வலங்கை நியாயத்திலும்
5. இடங்கை நியாயத்திலும் ........

## 129

இடம் : திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருச்செங்காட்டங்குடி உத்திராபதீசுவரர் கோயில் படையல் மண்டபக் கீழ்ப்புறச் சுவர்

காலம் : சாலிவாகன சகம் 1538; கி.பி. 1616

செய்தி : திம்மரசநம்பி என்ற திம்மரச மாணிக்கத்தன் என்பவர் முன் கட்டிய மண்டபம் பழுதடைந்ததால் அந்நாட்டுக் கைக்கோள முதலியார்கள் ஒன்று சேர்ந்து திருப்பணி செய்த விபரத்தை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

### கல்வெட்டு

1. சகாத்தம் 1538 இதி
2. ன்மேல் செல்லாநின்ற .....
3. வருஷம் மாசி 16 சோம வாரனா
4. ள் திரயோதிசிச் சிவராத்திரியான அ
5. ன்று முன்னாளில் திம்மரச நம்பி
6. யார் பேர்கொண்ட திம்மரச மாணிக்
7. கத்தன் கட்டுவித்த உத்திராபதி நாய
8. கர்ப் படைப்பு மண்டபம் சீரணிக்
9. கையில் நாட்டுக் கைக்கோள முத
10. லியார் கூடிக் கட்டினமை சே.......

## 130

இடம் : திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், எட அன்னவாசல் பிடாரியார் கோயில்

காலம் : 18ஆம் நூற்றாண்டு

செய்தி : சிதம்பரநாத முதலியார் காவாலிக்குடி அகத்தியப்ப முதலியார் பெயரில் தர்மமாக அன்னவாசல் வரியை கோயில் திருப்பணிக்கு அளித்தார்.

### கல்வெட்டு

1. சுக்கில வருஷம்
2. கார்த்திகை
3. காவாலிக்குடி அ
4. கத்தியப்ப முதலி
5. யார் தன்மம்
6. ஆக சிதம்பரநாத
7. முதலியார் அன்ன
8. வாசல் புறத்து சந்தை
9. ஆயம் திருகி .....
10. ..... தம்பிரானார் கோ
11. யில் திருப்பணிக்குச்
12. செய்தி ..... மரா
13. மத்து நிரந்தரமான
14. ...... அகுதம் பண்ணி
15. னால் கெங்கைக்
16. கரையில் காராம் பசுவை
17. கொன்ற பாவத்தில்
18. போவான்.

## 131

இடம் : தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சோழபுரம் வெங்கடாசலபதி கோயில் கிழக்குச் சுவர்

காலம் : *சடையவர்மன் சீவல்லப தேவரின் ஒன்பதாம் ஆட்சியாண்டு,* கி.பி. 1317

செய்தி : ஆண்மா நாட்டு உத்தமசோழ விண்ணகரம் பெருமானார் கோயில் திருமடை வளாகத்தில் குடியேறியுள்ள கைக்கோளர்கள் தறி ஒன்றுக்கு மாதம் பத்துப் பணம் செலுத்த வேண்டும் என்றும், இன்னும் வேண்டிய தறிகள் ஏற்றிக் கொள்ளலாம் என்றும் ஒலை கொடுக்கப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
2. சீவல தேவர்க்கு யாண்டு 9வது மேஷ நாயற்று முதல் .....
3. பட்சத்து பௌர்ணமியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற அசுவ
4. தி நாள் ஆந்மாநாட்டு உத்தம சோழ விண்ணகரம் பெருமாள்
5. கோயில் ஸ்ரீ பண்டாரிகளோம் இந்நாட்டு உத்தம சோழ
6. விண்ணகரம் பெருமாள் கோயில் ஸ்தானத்துத்
7. திருமடைவிளாகத் திருந்து வாழும் கைக்கோளர்க
8. ளும் காரணமனை 24 இம்மனை இருபத்து
9. நாலுக்கும் மாதமொன்றுக்குத் தறி ஒன்றுக்கு 10 பணமும் இ..... காசு
10. இறுப்பாராகவும் இப்படி வாடாக் கடமையாக இறு
11. த்துத் தங்களுக்கு வேண்டும் தறி ஏற்றிக் கொள்வதர்கவும் இப்படி
12. சம்மதித்து அடைஓலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோ
13. ம் இவ்வனைவர்க்கும் ஸ்ரீ பண்டாரிகளோம் இப்படி சம்மதி
14. ............ வீற்றிருந்தான் பட்டன் எழுத்து.

## 132

இடம் : தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் தெற்குரத வீதியில் பனிரண்டாம் திருநாள் மண்டபம்

காலம் : கி.பி. 1935

செய்தி : திருச்செந்தூர் முருகன் கோயிலில் நடைபெறும் மாசித் திருவிழாவில் பனிரண்டாம் நாள் திருவிழா செங்குந்த முதலியார்களின் மண்டபப்படியாக நடைபெறுகிறது. இதற்குரிய கருங்கல் மண்டபம் கட்டுவதற்கு சவராமங்கலம் வம்சத்தாராகிய பதினான்கு நாட்டுச் செங்குந்த முதலியார் குலத்தவரும், எட்டயாபுரம் நடுவப்பட்டி பெரியம்பலம் தலைமையில் கூடி தறி ஒன்றுக்கு குறிப்பிட்ட தொகை வசூல் செய்து பிரமியம் ஏகானந்த அடிகள் என்பவர் முயற்சியில் மண்டபம் கட்டி முடித்துள்ளனர். (கொல்லம் ஆண்டு வழக்குக் கூறப்பட்டுள்ளது).

### கல்வெட்டு

1. சிவமயம் முருகன் துணை
2. திருக்கயிலாய பரம்பரை தேவ
3. சத்திரிய வருணம் செங்குந்த குல
4. ம் நவவீரர்கள் புத்திரர்களாகிய மஞ்
5. சன் மாறிலான் வெற்றியான் பேறிலா
6. ன் சலிப்பிலான் என்னும் ஐம்பெருங்
7. கிளைஞர்களாகிய வல்லநாடு அம்பலம்
8. சங்கரலிங்க முதலியார் ஏரல் கீழவூர் அம்
9. பலம் அய்யம்பெருமாள் முதலியார் ஏரல்
10. மேலவூர் அம்பலம் வீ. தவசிமுதலியார்
11. பொதியமுத்தூர் அம்பலம் ப. அருணாசல
12. முதலியார் நடுவப்பட்டி பெரியம்பலம்
13. வே. அய்யம்பெருமாள் முதலியார் கடலை
14. யூர் அம்பலம் சிவனணைஞ்ச முதலியார்

15. அயன்பொம்மிபுரம் அம்பலம் ஆ. பெரு
16. மாள் முதலியார் நாகலாதபுரம் அம்பலம்
17. சண்முக முதலியார் விளாத்திகுளம் முத்து
18. முதலியார் அருப்புக்கோட்டை அம்பலம்
19. சூரிய முதலியார் சவராமங்கலம் வம்
20. மிசம் 14 நாட்டுச் செங்குந்த முதலியார்
21. களுக்குப் பாத்தியப்பட்ட திருச்செந்தூர் 12
22. ந் திருநாள் மண்டபத்திற்கு அக்தார் எட்
23. டையாபுரம் நடுவப்பட்டி பெரியம்பலம் மு.
24. அ.வே. அய்யம்பெருமாள் முதலியார் முத
25. ன்மையால் அணியொட்டிக்கால் மண்டபம்
26. செய்வதற்கு மேற்படியூர்களில் தறி 1க்கு ரூபா
27. 28 ஆக வசூலித்து 1097 வருடம் தச்சுக் செய்து
28. 1110 வருடம் ஆவணி மாதம் 24தேதி ஞாயிற்றுக்கிழமை
29. உத்திர நட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் கிரக
30. ப்பிரவேசம் நடைபெற்றது மேற்பார்த்து வந்த
31. வர்கள் பிரமியம் ஏகானந்த அடிகள் தளரா முயற்சியின்
32. தவப்பெருக்கால் நடந்தேறுவதேயாம்.

## 133

இடம் : தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், வீரபாண்டி கண்ணீசுவரர் கோயில் அருகில் உள்ள கல்

காலம் : சுந்தரபாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1228-29

செய்தி : வீரபாண்டி கைக்கோளரில் செல்வன் திருநாவுடையானான திருஞானசம்பந்தன் கோயில் திருப்பணியின்போது அர்த்தமண்டபத் திருவாயிலைக் கொடையாகக் கொடுத்துள்ளார்.

### கல்வெட்டு

1. ஸ்ரீ சோணாடு வழங்கியருளிய சுந்தர
2. பாண்டிய தேவர்க்கு யாண்டு 13 ஆவது
3. பாண்டிமண்டலத்து அழநாட்டு புலிந
4. ல்லூர் கண்ணுடையீச்சுரமுடைய நாயனார்
5. கோயிலுக்கு யிவ்வூர் கைக்கோளரில் செல்வன்
6. திருநாவுடையானான திருஞானசம்பந்தனேன்
7. அர்த்தமண்டபத்தில் திருவாசல் செய்வித்தேன்.

## 134

இடம் : நாகபட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், திருக்கண்ணங்குடி தாமோதர நாராயணப் பெருமாள் கோயில் தாயார் சன்னதி பின்புறச் சுவர்.

காலம் : கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

செய்தி : வரந்தரும் பெருமாள் முதலியார் செய்த தர்மம் ஒன்று குறிக்கப்படுகிறது.

## கல்வெட்டு

1. உ வரந்தரும் பெருமாள்
2. முதலியார் அய்யன்
3. தன்மம் உ

(இவர் பெருமாள் கோயிலில் தாயார் சன்னதி திருப்பணி செய்திருக்கலாம்)

## 135

இடம் : நாகபட்டினம் மாவட்டம், நாகபட்டினம் வட்டம், நாகபட்டினம் சௌந்தரராசப் பெருமாள் கோயில் மடைப்பள்ளி மேற்குச் சுவர்

காலம் : கி.பி. 1872, கலி 4974

செய்தி : நாச்சிமுத்து முதலியார் பேத்திகள் சவுந்தரவல்லியம்மாள், சுவர்னத்தம்மாள் ஆகியோர் கொடிமரம், பலிபீடம் அமைத்த விபரம் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. நாச்சியப்ப முதலியார்
2. பேத்திகள் சவுந்தரவல்லி
3. யம்மாள் சுவர்னத்தம்
4. மாள் இவர்களுடைய
5. தர்மம் ஸ்ரீ சவுந்தரவல்லி
6. த்தாயார் துவஜஸ்த
7. ம்ப பலிபீட கைங்க
8. ரியம் 1872 கலி 4974
9. ஸ்ரீ சவுந்தரிய ராஜரர்ப்பணம்

## 136

இடம் : நாகபட்டினம் மாவட்டம், நாகபட்டினம் வட்டம், நாகபட்டினம் சௌந்தரராசப் பெருமாள் கோயில் சௌந்தரவள்ளித் தாயார் சன்னதி மேற்குச் சுவர்

காலம் : கி.பி. 1853, கலியுகம் 4934, சித்திரை 17

செய்தி : நாராயண முதலியார் மகன் ரெங்கசாமி முதலியார் தாயார் சன்னதி கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவைகளைக் கட்டிய விபரம் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிகவாகன
2. சகாப்த்தம் 1755
3. கலியுகாப்த்தம் 4934 யிதன் மே
4. ல் செல்லாநிண்ட விசய வருசம் சித்திரை மாதம் 17 தேதி
5. ஸ்த்ரவாரம் பூருவ பக்கம் அஷ்ட்டமி பூச நட்சத்திரம்
6. கடக லக்கனத்தில் ஸ்ரீசவுந்தரவல்லி அம்மன்
7. கெர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் கருங்கல்
8. திருப்பணி ஸ்ரீசவுந்தரராச சுவாமி ஸ்ரீசவுந்தர
9. வல்லி நாச்சியார் நடய்பணம் கைங்கர்யம்
10. நாகப்பட்டினம் முதலியார் நாராயணன் குமாரர்
11. ரெங்க சுவாமி முதலியார் சதாசேவை

## 137

இடம் : நாகபட்டினம் மாவட்டம், நாகபட்டினம் வட்டம், நாகபட்டினம் சௌந்தரராசப் பெருமாள் கோயில் மடைப்பள்ளி மேற்குச் சுவர்

காலம் : கி.பி. 1877

செய்தி : கோபால சுவாமி பெயரில் நடந்து வந்த தேசாந்திரிகட்கு உணவளிக்கும் கட்டளைக்காக அவரது சகோதரர்கள் இரத்தின முதலியார், இராசு முதலியார் சின்ன தும்பூரில் 3 வேலி நிலம் அளித்து மடைப்பள்ளியில் கிணறும் மண்டபமும் கட்டிய செய்தி கூறப்படுகிறது.

### கல்வெட்டு

1. நாச்சியப்ப முதலியார் பேரன் கோபாலசாமி முதலியார்
2. பேரால் இக்கோயிலில் நடந்துவரும் தேசாந்
3. திரி கட்டளைக்காக அவர் சகோதரர்கள் இரத்தின
4. முதலியார் இராசு முதலியார் இவர்களால் சின்ன தும்பூரில்
5. 3 வேலி விடப்பட்டிருக்கிறதும் தவிர அந்த
6. தர்மத்துக்கு உபயோகமாக இந்த மடைப்பள்ளி கி
7. ணறும் அதில் சுற்று மண்டபமும் கட்டப்பட்டிருக்கிறது
8. இந்தக் கட்டளையின் விபரம்
9. தேசாந்திரி 1½ தளிகை 2
10. தளிகை 1½ பலம் 22
11. அரிசி படி 4½
12. தயிர் படி 5
13. மிளகாய் பலம் 1
14. உப்பு படி ¼
15. எண்ணெய் பலம் 1
16. கடுகு பலம் 3
17. சுக்கு பலம் 1
18. தேசாந்திரிகளின் தொகை அந்தந்த வருசத்து ஐவேஜியின் மேல் ஏற்படுத்தப்படும்
19. நிவேதனம் உச்சிக் காலம் ஸ்ரீசவுந்தரிய ராஜர்ப்பணம் கலி 4979 ஈஸ்வர வருஷம்
20. 1877

## 138

இடம் : நாகபட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கோடியக்காடு அமிர்தகடேசுவரர் கோயில் வடக்குச்சுவர்.

காலம் : மூன்றாம் இராசேந்திரனின் 32ஆம் ஆட்சியாண்டு: கி.பி. 1268

செய்தி : முதலியார் சந்தானத்து எதிர் ஒப்பிலாதார் ஆன சோமநாததேவ முதலியார் நிலம் வாங்கி திருமேனிகள் திருத்தொண்டு செய்கிற திருவாய்ப்பாடியான் என்ற பெயரில் ஒரு நந்தவனம் அமைத்தார்.

### கல்வெட்டு

1. திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 12ஆவது கும்ப நாயற்று பூர்வபட்சத்து......
2. கடைக்கரப்பி உடையார் திருக்கோடிக்குழகர் கோயில் ஆதிசண்டேசுவர தேவ கன்மிகளோம்.......
3. தில் முற்றத்தில் முதலியார் சந்தானத்து எதிர் ஒப்பிலாதார் ஆன சோமநாத தேவர் முதலியார்க்கு........
4. க்கும் திருமேனிகள் திருத்தொண்டு செய்கிற திருவாய்ப்பாடியான் திருநந்தவனம் செய்ய இற்றை நாளால்.....
5. நாங்கள் விற்றுக் குடுத்த இந்த நத்தத்துக்குக் கீழ்ப்பால் எல்லை குன்றடி வேலிக்கும் குடிதாங்கி பட்டன் கொல் ....
6. ன் சீவித நிலத்துக்.....பூ கோட்டானுக்கும் வடக்கறு வேலிக்கு வடக்கு மேற்பாற்கு எல்லை ஆதித்.....
7. நாட்டுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கங்கை நாட்டுக்கோன் மனை.....க்கு.....

## 139

இடம் : நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வேதாரண்யேசுவரர் கோயில் கிழக்குப்புற கட்டைக்கோபுர வாயில், மேலைக்கோபுர வாயில், அம்மன் சன்னதி

காலம் : 15ஆம் நூற்றாண்டு

செய்தி : கைக்கோளர், ஆண், பெண் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. திருப்பணியில் பங்கு கொண்டவர் பெயராக இருக்கலாம்.

## கல்வெட்டு

1. கைக்குளர் அம்பலவாணர்
2. கைக்குளர் நிலக்குடபூதரும் அவர் மனைவி மயிலாத்தையும்
3. கைக்குளர் சித்திராண்டார் மகன் ஆனந்தன்
4. மயில்வாகன முதலியார் பெண்சாதி பெருமாத்தை
5. சந்திரசேகர முதலியார் பெண்சாதி குளநகையார்.
6. சிதம்பரநாத முதலியார்
7. சேனாதிராய முதலியார்.

## 140

இடம் : நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில் மேற்கு உள் கோபுரம்

காலம் : கோப்பரகேசரியின் நான்காம் ஆட்சியாண்டு (முதலாம் பராந்தகன்), கி.பி. 911

செய்தி : கைக்கோளன் ஆலமத்தானான கலியுக ஈஸ்வரன் திருவெண்காடு ஆடி அருளுகின்ற தேவர் (நடராசர்) அணிகலன் செய்ய ஐந்து பொன் கொடுத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீகோப்பரகேசரி ப
2. ன்மற்கு யாண்டு நாலாவது இத்
3. திருவெண்காட்டு ஆடி அருளுகின்ற
4. தேவாக்கு இரன்னம் கட்டி
5. யும் இரன்னம் கட்டின
6. ஆலையில்......இப்பொன்......
7. ந அலையில் அஞ்சும் குடுத்தான்
8. ஆலமத்தானான கலியுக ஈ
9. ஸ்வரன் இவன் கைக்கோளன்.

## 141

இடம் : நாகபட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், திருவிளக்குடி மணவாளேசுவரர் கோயில் கருவறை தென்சுவர்.

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 909

செய்தி : கரிகாலசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் அரையனிடம் 50 ஈழக்காசு பெற்று விடேல்விடுகுதேவிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் திருவேள்விக்குடியில் கூடி நிலம் வாங்கி இறைவனுக்கு அளித்தனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு இரண்டாவது வட
2. கரைக் குறுக்கைநாட்டு பிரமதேயம் விடேல்விடுகுதேவிச் சதுர்வேதிமங்
3. கலத்து பெருங்குறிப் பெருமக்களோம் இவ்வாட்டை மேஷ நாயற்று நாயற்றுகிழமை
4. பெற்ற திருவோணத்தினான்று திருவேழ்விக்குடி ஸ்ரீ கோயிலிலே பெருங்குறி கூடி பணித்த......
5. ழுத்து திருவேழ்விக்குடி சண்டேசுவரப் பெருமாள் திருநாமத்தால் விலை கொண்ட நிலம்
6. கருமாணிக்க வாய்க்காலின் தென்பக்கத்து கவன்.... கோவிந்த.... நாராண...
7. த்தன் பக்கல் விலைகொண்ட நிலம் ஆறுமாக்காணியும் இதன் மேலைப்பக்கத்து இதனோடும் அடைய....
8. பனூருடையான் கோன் வேம்படிகள் பக்கல் விலைகொண்டுடைய நிலம் அரைக்காலும் சதினந்தன்,....
9. த்து கூவன்னூர் நாராண கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய நிலம் மாகாணியும் சண்டேசுவரப்
10. பெருமான் திருநாமத்தால் விலை கொண்டுடைய பத்துமாச் செய்க்கும் கீழ்பாற்கெல்
11. லை மத்யஸ்தர்கள் குளத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை பெருவழிக்கு வடக்கும் மேல்பாற

12. கெல்லை....காணிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை....

13. கருமாணிக்க வாய்க்காலுக்குத் தெற்கும் ஆக இவ்விசைந்த பெருநான்கெல்லையிலும் அகப்ப.....

14. த்துச் செய்யாலும் தரத்தால் வந்த நிலம் ஆறுமாக்காணி அரைக்காணி நிலமும் பெருவழிக்கு.....

15. இராசூர்த் தாமோதரப் பட்டன் பக்கல் சண்டேசுவரப் பெருமான் விலைகொண்ட நிலத்து.... கீழ்ப்

16. பாற்கெல்லை சபைப் பொதுவுக்கு மேற்கும், தென்பாற்கெல்லை காவிரி மங்கலத்தார்...

17. க்கு வடக்கு மேல்பாற்கெல்லை திருமஞ்சணக் குறையான நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை......பெருவ

18. ழிக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லையிலும் நடுவுட் பட்ட நிலம் தரத்தால் வ.....

19. ம் இச்சுட்டப்பட்ட நிலம் இறையிலியாக்க இதினுக்குக் கரிகால சோழத் தெரிஞ்ச கைக்கோள

20. ன் அரையன்பக்கல் ஈழக்காசு ஐம்பது காசு கொண்டு இன்னிலம் சந்திராதித்தர்

21. இறையிலி செய்து குடுத்தோம் விடேல்விடுகுதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையோம்

22. பெருங்குறி இருந்து பணிக்க எழுதினேன் இவ்வூர்க் கிடக்கை மத்யஸ்தன் இராமன்

23. பிச்சனேன்.

## 142

இடம் : நாகபட்டினம் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவாவடுதுறை கோமுக்தேசுவரர் கோயில் கருவறை தெற்குச்சுவர்

காலம் : கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 909

செய்தி : ஆதித்தபன்மத் தெரிந்த கைக்கோளரில் சங்கயன் ஒற்றிக்கு தெங்கு நந்தவனம் செய்ய மிற்றலங்குடிப் பொது நிலத்தில் சாத்தனூர் சபையார் நான்குமாச்செய் நிலம் விற்றனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 2ஆவது தென்கரைத் திரைமூர்நாட்டு பிரமதேயம் சாத்தனூர் சபையோம் திருவாவடுதுறை மகாதேவர்க்கு ஆயிரவனான தெங்கு நந்தவானஞ்செய்த ஆதித்தபன்மத் தெரிந்த கைக்கோளரில் சங்கயனொற்றிக்கு

2. எங்களூர் மிற்றலங்குடி எங்கள் பொதுநிலமான நால்மாச்செயும் சந்திராதித்யவல் நிற்க இறைஇழிச்சி விற்றுக்குடுத்த நிலத்துக்கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு மேற்கும் காமக்காணி குமரனங்கி நிலத்துக்கு வடக்கும்

3. பாரதாயன் நாரணநங்கி நிலத்துக்குத் தெற்கும் இவ்விசைந்த பெரு நான்கெல்லையிலுமகப்பட்ட நிலம் நந்தவானப்புறமாக விற்றுக் குடுத்தோம் சபையோம் தெங்காயிரமும் காச்சன் நூறு தெங்கின் போகங்கொண்டு ஓ.....

4. பின்பிச்செய் உண்டு பூ நந்தவானம் செய்யவும் வைச்சது பன்மாகேசுவரர் ரட்சை.

## 143

இடம் : நாகபட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருவெண்காடு, சுவேதாரண்யேசுரர் கோயில் கிழக்கு உள்கோபுரம் இடதுபுறம்

காலம் : சோழன் இராசகேசரி இரண்டாமாண்டு, கி.பி. 952

செய்தி : பார்த்திபசேகரத் தெரிஞ்ச கைக்கோளரில் அய்யன் வேம்படிகள் சிறந்த முறையில் இறைவனுக்கு ஒரு கலம் அமுது படைக்க அறுபது கழஞ்சு பொன் வைத்தார். நாங்கூர் சபையார் அப்பொன்னைக் கொண்டு நிலம் வாங்கி அமுதுபடைக்க ஒப்புக் கொண்டனர்.

### கல்வெட்டு

1. ஸ்ரீ கோவிராசகேசரி பன்மர்க்கு
2. யாண்டு 2வது திருவெண்காடு
3. தேவர்க்கு நாங்கூர் சபையோ
4. ம் பார்த்திபசேகரத் தெரிஞ்ச
5. கைக்கோளரில் அய்யன் வேம்
6. படிகள் ஒரு கலம் உத்தமாக்ர
7. ம் ஆழ்வார் அமுது செய்யு
8. ம் வண்ணம் ஊட்டக் கொண்ட செம்
9. பொன் அறுபதின்கழஞ்சு இப்
10. பொன் கொண்டு குடுத்த நிலமாவ
11. து தென்பிடாகை விற்றுக்குடுக்கும்
12. சபையோம் நிலத்துக்குக் கிழக்கும்
13. திருவெண்காடு வாய்க்காலுக்கு தெற்
14. கும் கொத்தப்பிச் சோழன் உத்தமாக்
15. ர நிலத்துக்கு மேற்கும் பட்டணப் பெரு
16. வழிக்கு வடக்கும் நடுவுபட்ட நிலம் வே
17. லி இந்நிலம் எப்பேர்ப்பட்ட இறையு
18. ம் எச்சோறும் காத்துக்குடுப்போமா
19. னோம் நாங்கூர் சபையோம்
20. இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 144

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இராசிபுரம் கைலாசநாதர் கோயில் முன் உள்ள குத்துக்கல்

காலம் : பாண்டியத் தொண்டைமானின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி 14ஆம் நூற்றாண்டு

செய்தி : கோயிலில் திருமடைவளாகத்தில் ஏறின குடிக்குத் தறிக்கு மூன்று பணமும், கீழ்க்குடியாகிய வெள்ளருக்கைக் குடிக்கு இரண்டு பணமும், குற்றத்துக்குப் பத்துப் பணம் தெண்டமும் கோயில் பண்டாரத்தில் செலுத்த வேண்டும், கைக்கோளத் தேவரடியாருக்கு மனை சொந்தமாக வழங்கப்பட்டது. அவர்கள் மனையை விற்கவும், அடைமானம் வைக்கவும் உரிமையுண்டு.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம பாண்டியத் தொண்டைமான் ஓலை
2. இராசிபுரத்து உடையார் ஸ்ரீ கயிலாயமுடைய நாயனார் கோயிலில்
3. தானத்தார்க்கு திருமடை விளாகத்து ஏறின குடிக்கு தறிக்கு
4. மூன்று பணமும் கீழ்க்குடியாய வெள்ளருக்கையிருக்கும் குடிக்கு
5. இரண்டு பணமும் கொள்ளக் கடவதாகவும் குற்றஞ் செய்தார்
6. உண்டாகில் குற்றத்துக்குப் பத்துப்பணம் தெண்டங்கொள்ளவும்
7. இப்பணம் சீபண்டாரமாவதாகவும் திருமடை விளாகத்தில்
8. கைக்கோளர் தேவரடியார்க்கு இட்ட மனை ஒற்றியும் விலையும்
9. செல்வதாகவும் இப்படிக்கு இராசிபுரப் பற்று சபையோமும் நாட்டோமும்
10. நகரத்தோமும் முதலியார் அருளிச் செயல்படியே ஏழாவது
11. தை மாதம் முதல் சந்திராதித்தவரை செல்வதாகவும் இது
12. விலங்குவான் ஏழெச்சம் அறுவான் இவை திருநீலகண்டன்
13. எழுத்து.

## 145

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இராசிபுரம் பேருந்து நிலையம் அருகில் கிடக்கும் கல்

காலம் : 18ஆம் நூற்றாண்டு

செய்தி : பாச்சல், குருசாமிபாளையம், கடந்தப்பட்டி, புத்தூர், அத்தனூர், புதுப்பாளையம், சீராப்பள்ளி ஆகிய ஏழு ஊர்களைச் சேர்ந்த கைக்கோள முதலியார்கட்கு இராசிபுரம் கைலாசநாதர் கோயில் மண்டபக் கட்டளை உரிமை உடையது.

### கல்வெட்டு

1. இராசிபுரம்
2. கைலாச நா
3. த சுவாமிக்கு
4. மண்டபக் கட்டளை
5. உத்சவம் நடத்
6. துவதற்காக
7. இராசிபுரம் நா
8. ட்டைச் சார்ந்
9. த அடியில் கண்
10. ட பாச்சல் 1
11. குருசாமி பாளை
12. யம் 2 கடந்த
13. பட்டி 3 புத்தூர் 4
14. அத்தனூர் 5
15. புதுப்பாளைய
16. ம் 6 சீறாப்
17. பள்ளி 7 இந்த கி
18. ராமங்களில் இருக்கும்
19. கைக்கோள
20. முதலியார்கள்
21. பாத்தியப்பட்டது.

## 146

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், திருச்செங்கோடு கைக்கோளர் தெருவில் உள்ள கல்

காலம் : விய வருடம், வைகாசி 24 தேதி

செய்தி : அருணாசல முதலி மனைவி, பழனியம்மாள் மகள் லெச்சுமி என்பவருக்காகச் சுமைதாங்கிக்கல் அமைக்கப்பட்டது. அமைத்தவர் கவுண்டம்பாளையம் கொழந்தவேல் முதலி என்பவர்.

### கல்வெட்டு

1. விய வருஷம் வைய்யா
2. சி மாதம் 24 தேதி திருச்
3. செங்கோடு கேதார
4. லிங்க முதலி மகன்
5. கவலமுத்து முதலி
6. மகன் அருணாச
7. ல முதலி பெஞ்
8. சாதி லெச்சுமா
9. யிக்கு தாயார்
10. பழனியம்மா
11. குமாரத்தி கவுண்
12. டன்பாளையம்
13. தம்ப கணத்து
14. கொழந்தவேல் முதலி
15. சுமை தாங்கி
16. கல்லுலெச்
17. சுமாயிக்கு
18. உபயம்.

(பெண்களுக்கு சுகப்பிரசவம் நடைபெற வேண்டி இவ்வாறு சுமைதாங்கிக்கல் அமைப்பது பண்டைய வழக்கம்)

## 147

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், திருச்செங்கோடு, பாவடியில் உள்ள கல்

காலம் : கிருஷ்ணதேவ மகாராயர் காலம்: 19.08.1522

செய்தி : கிருஷ்ணதேவராயர் காரியத்துக்குக் கர்த்தர் ஆகிய திரியம்பக உடையார் காலத்தில் சாமநயினார் என்பவர் சாமசமுத்திரம் என்ற ஊரை ஏற்படுத்தி காசாவர்க்கம் செட்டி வியாபாரி, கைக்கோளர் முதலிய குடிகளைக் குடியமர்த்திக் குடியேறுபவர்கட்கு இரண்டு ஆண்டுகள் வரியில்லை என்று அறிவித்தார். சுங்கம் இரண்டு, மனைவரி உழவுகுடிக்குக் கட்டின ஏருக்கு ஐந்து பணம் வரி விதிக்கப்பட்டது. திருச்செங்கோடு மலைக்குமரர்க்கு மூன்று பணம் அளிக்கவும் கட்டளையிடப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் இராசாதிராசன் இராச பரமேசுவரன்
2. பூறுவ தெட்சண பச்சிம உத்தர சமுத்திராதிபதி ஸ்ரீ வீரபிரதாபன்
3. கிட்ணராய மகாராயர் பிருத்வி ராஜ்யம் பண்ணி அருளா நின்ற
4. காலத்தில் திப்பரச உடையார் குமாரன் திரியம்பக உடையா
5. ரய்யன் காரியத்துக்குக் கர்த்தரான தொண்டை மண்டலத்துச்
6. சந்திரகிரிச்சாவடி பாலாற்றுக்கு வடகரை காஞ்சிபுரம் காக்கு
7. நயினார் சீபாதசேகரன் கோனேரி கலிப்பிரியர் மாணிக்க
8. நயினார் சாமநயினார் நம்முடைய அய்யன் திரியம்பக
9. உடையாரய்யன் நாயக்கத்தன சாமசமுத்திரம்.... மகா
10. வருகிற குடிகளுக்கு சித்திரபானு வருஷம் ஆவணி மாதம்
11. இருபதாந்திகதி முதல் வருகிற குடியளுக்கு உழவு குடிக்குக்
12. கட்டின ஏருக்கு அஞ்சு பணமும் காசாவர்க்கம் செட்டி வியாபாரி
13. கைக்கோளர் முதலிய குடிகளுக்கு இந்த வருஷம் முதல்
14. இரண்டு வருஷம் இறை மானியமும் மேலதி ஒன்றுக்கு சுங்கம்

15. இரண்டும் மனைவரி ஒன்று ஆக பணத்துக்குச் செல்லும்
16. முள்வாய் சூழ்ந்த குன்றத்தூர்ச் சீர்மை எழுகரை நாட்டுக்
17. குள்ளான கீழ்க்கரைப் பூந்துறைநாட்டு அர்த்தநாரீசுவரமுடைய
18. தம்பிரானார் குமாரர்தம் திருப்படை வீடான திருச்செங்கோட்
19. டில் நடக்கும் பணம் மூன்றும் தம்மமாக நடத்தக் கடவோம்
20. இந்தக் கட்டளையாக இந்தக் கிராமத்துக்கு வருகிற
21. துரைகளும் ஊர்க்கு வந்த அதிகாரி நாயக்கபாடிகளும்
22. நாட்டாரும் நடத்திக்குடுக்கவேணும் இதுக்கு ஆர் அகுதம்
23. பண்ணினார்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற
24. பாவத்தில் போகக் கடவர்கள் வேலும் கையும்.....

## 148

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், குடுமியாமலை மேலைக்கோயில் என்கிற குடபோகக் கோயிலின் முன்மண்டபத்துக் கீழ்ப்புறச்சுவர்

காலம் : முதலாம் குலோத்துங்க சோழனின் 36ஆம் ஆட்சியாண்டு, மற்றும் 48ஆம் ஆட்சியாண்டு: கி.பி. 1106: 1118

செய்தி : வெற்றிலை வணிகத்தில் வந்த தரகுப் பொருளான வெற்றிலை 750 கட்டும், பாக்கு 30 ஆயிரமும் ஆண்டுதோறும் திருநலக்குன்றமுடைய மகாதேவர்க்கு மலைகினிய நின்றான் சகஸ்ரனும், அருளாள சகஸ்ரனும் கொடுக்க ஒப்புக் கொண்டனர். இக்கொடையைப் பாதுகாத்து நடத்துபவர்கள் நாட்டார், மூன்று படைப் பொற்கோயில் கைக்கோளர், இந்நாட்டுப் படை பழியிலி ஐநூற்றுவரும் ஆவர். இவற்றுடன் 12 ஆண்டுகள் கழித்து இறைவன் திருமெய்ப்பூச்சுக்கு மாதந்தோறும் 5 திரமமாக ஆண்டுக்கு 60 திரமம் கொடுக்க ஒப்புக்கொண்டனர். இதையும் மூன்று படைப் பொற்கோயில் கைக்கோளர் உள்ளிட்ட மூவரும் காத்து நடத்த வேண்டும்.

### கல்வெட்டு

1. கோவிராசகேசரி பன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோ
2. த்துங்கசோழ தேவர்க்கு யாண்டு 36ஆவது இரட்டபாடிகொண்ட சோழ
3. வளநாட்டு நாட்டோம் திருநலக் குன்றமுடைய மகாதேவர்க்கு இந்நாட்டு
4. பிரமதேயங் காப்புக்குடி சிராஞ்சிமலை மலைகினிய நின்றான் சகஸ்ரனும்
5. துவைத கோமாரபுரத்து அருளாள சகஸ்ரனும் இவ்விருவரும் இந்நாட்டில்
6. வந்திறங்கிய வெற்றிலைக்குத் தரகுகொண்டு முப்பத்தாறாவது முதல் இத்
7. தேவர்க்கு அடைக்காயமுதுக்கு ஆட்டு முப்பதினாயிரம் பாக்கும் வெற்றிலைக்
8. கட்டு எழுநூற்றைம்பதும் இவ்விருவரும் இவர்கள் வர்க்கத்தாருமே

சந்திரா

9. தித்தவல் இடக்கடவாராகவும், இதுக்கு அழிவு செய்தான்....
10. னாகவும் இது நாட்டோமும் மூன்றுபடைப் பொற்கோயில் கைக்கோளரும்
11. இந்நாட்டுப்படை பழியிலி ஐநூற்றுவரும் இது நிலைநிறுத்தக் கடவோமாகக்
12. கல்வெட்டுவித்தோம் இதுக்கு அஹிதம் நினைப்பான் வழியறுவான்
13. இது பன்மாகேஸ்வர ரட்சை முன்பு கல்வெட்டின திருமலையும் அருளாளனும்
14. இவ்விருவரும் செம்பாகமும் தாமோதரன் கிருஷ்ணனான சிறுத்தொண்டநம்பி
15. செம்பாகமும் கொண்டு திருநலக் குன்றத்திலேயிருந்து பரிமாறித் திருநலக்
16. குன்றமுடையார்க்கு இப்படியாலுள்ளது செலுத்தக்கடவார்களாகவும்
17. இது அழிவு செய்வார் விரையாக்கலி இது பன்மாகேசுவரர் ரட்சை இக்கல்வெட்டுப்
18. படியுள்ள அடைக்காயமுதும் இலையமுதும் இடக்கடவார் திருமெய்ப்பூச்சுக்கு
19. 48ஆவது முதல் திங்கள் அஞ்சு திரமமாக ஆட்டறுபது திரமமும்
20. இறுக்கக் கடவார்களாகவும் கல் வெட்டுவித்தோம் நாட்டோமும்
21. கைக்கோளரோமும் பழியிலி ஐநூற்றுவரோமும்.

## 149

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், இரும்பாழி வைத்துக்கோயில் வாயிற்படிக்கு மேலாக உள்ள கல்வெட்டு

காலம் : கி.பி. 15ஆம் நூற்றாண்டு

செய்தி : சிவாலயத் திருப்பணியில் முகவணை செய்து தட்டோடும் இட்டவர் இக்கோயிலில் நிலையுடைய கைக்கோளரில் திருநெல்வேலியுடையாரான மறித்துலகங் காத்த பாண்டிய தேவர் என்பவர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இந்த முகவணையும் செய்வித்து தட்டோடும் இடுவித்தான் இரும்பாழி உடையார் ராஜராஜீஸ்வரம்
2. உடையார் கோயிலில் நிலையுடைய பொற்கோயில் கைக்கோளரில் திருநெல்வேலி
3. யுடையாரான மறித்துலகங்காத்த பாண்டிய தேவர் தன்மம் இவற்கி அயிர ரோகம்.

## 150

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், இரும்பாழி சிதைந்த சிவாலயத்தில் கிடக்கும் தனிக்கல்.

காலம் : கி.பி. 15ஆம் நூற்றாண்டு

செய்தி : இச்சிவன் கோயிலில் இரும்பாழி கைக்கோளரில் நம்பி திருநெல்வேலியுடையாரான மறித்துலகங்காத்த பாண்டிய தேவர் என்பவர் எழுந்தருளுவித்த நாயன்மார்க்குத் திருநாளுக்கும் திருப்படிக்கும் இரும்பாழி அரசன் திருவுடையான் ஆபத்துக் காத்தானான கடாரத்தரையன் அளித்த கொடை கூறப்படுகிறது.

### கல்வெட்டு

1. மகேசுவரக் கண்காணி செய்பவர்களுக்கு இவ்வூர் அர
2. சன் திருவுடையான் ஆபத்துக் காத்தானான கடாரத்
3. தரையனேன் இவ்வூர் கைக்கோளரில் நம்பி திருநெல்
4. வேலியுடையான் மறித்துலகங்காத்த பாண்டிய தே
5. வர் இக்கோயிலில் எழுந்தருளுவிக்கிற திருநாளுக்கும்
6. திருநாட்படிக்கும் எழுந்தருகிற நாயன்மார்க்கு அருமந்த
7. க்கட்ட அமுதுபடிக்கும் திருநாமத்துக் காணியாக இற்றை.....

## 151

இடம் : புதுக்கோட்டை மவாட்டம், கீரனூர் வட்டம், கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் கோயில் முன் மண்டபச்சுவர்

காலம் : சடையவர்மன் வீரபாண்டியனின் 16ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1269 ஆகஸ்டு 10

செய்தி : கொடும்பாளூர் திருமுதுகுன்றமுடைய நாயனார் கோயில் கருவூலத்தில் (பண்டாரம்) கொடும்பாளூர் கைக்கோளரில் கைக்கோள முதலிகள் கடன் பெற்றிருந்தனர். பல சமயம் பல்வேறு வகையில் பெற்றிருந்த கடனை அடைக்க முடியாததால் அவர்களுக்குரிய பாண்டியரார் குடிக்காடு, வைய்யகத்தரையன் குடிக்காடு, இரண்டு புலியன் வத்தராயன் குடிக்காடு, கந்தராயர் குடிக்காடு ஆகிய ஐந்து குடிக்காடுகளை விற்றுக் கடனை அடைத்தனர். 110 கழஞ்சும், 12505 காசுகளும் கொண்ட கடன் அடைக்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 16வது சிம்ம நா
2. யற்று பூர்வ பட்சத்து வியாழக்கிழமையும் தசமியும் பெற்ற மூலத்துநாள் கோனாடான கட
3. லடையாதிலங்கை கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துக் கொடும்பாளூரு
4. டையார் திருமுதுகுன்றமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர நாயனார்க்கு இவ்வூர்க்
5. கைக்கோளரில் கைக்கோள முதலிகளோம் சண்டேசுரப் பெருவிலையாகப் பிரமாணம் பண்ணிக்கு
6. டுத்த பரிசாவது முன்னாள் எங்கள் முதுக்கள் வெட்டை காலத்து இன்னாயனார் சீபண்டா
7. ரத்தில் தட்டுப்படியாலும் உள்வரிப்படியாலும் கொண்ட பொன்னாய் இரட்டித்த பொன்
8. னூற்று ஒருபது பழஞ்சோழியக்காசு அறுநூற்று எழுபதினாலும் வீரபாண்டியக் காசு வாசி பெற்ற

9. காசு ஆயிரத்து ஐம்பதும் கொண்ட சேரனால் செவனால் காசு 1000ம் 17 ஆவது ஆவணி மாதம்

10. கொண்ட பணம் நூற்று ஐம்பதினால் காசு 12505ம் பொன் நூற்று ஒருபதின் கழஞ்சுக்கும் காசு பன்னீராயி

11. ரத்து ஐந்நூற்று ஐஞ்சுக்கும் சீபண்டாரத்துக்கு ஒடுக்க எங்களுக்கு ஹத்தி இல்லாதபடியால் எங்கள் காணி

12. யான குடிக்காடுகள் பாண்டியராயர் குடிக்காடும், வைய்யகத்தரையன் குடிக்காடும் புலியன் வத்தராயன்

13. குடிக்காடு இரண்டும் கந்தராயர் குடிக்காடும் ஆக குடிக்காடு ஐஞ்சும் விற்பதிற்கிசைந்து இக்குடிக்காடு.

14. கந்தராயர் குடிக்காடு பெருநான்கெல்லையாவது கீழ்பாற்கெல்லை நொயூர்க்குளத்தில் நீர் கோவைக்கு

15. மேற்கும் தென்பாற்கெல்லை கிழக்கு நோக்கிப் போன ஆற்றுக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை குளத்தில் வட்டக்குழிக்கு

16. கிழக்கும் வடபாற்கெல்லை உம்பலப்பாடி வயலுக்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்குள்பட்ட குளமும் குளப்

17. பரப்பும் நன்செயும் புன்செய்யும் நத்தமும் நத்தப்பாழும் பாண்டியராயன் குடிக்காட்டுக்கும் வைய்யகத்தரையன் குடிக்

18. காட்டுக்கும் புலியன் வத்தராயன் குடிக்காடு இரண்டுக்கும் ஆகக் குடிக்காடு நாலுக்கும் பெருநான்கெல்லையாவது

19. கீழ்பாற்கெல்லை விசையராயர் குளத்தில் மேற்கடையில் பெருவாய்க்கு மேற்கும் தென்பாற்கெல்லை குன்றுக்கு வடக்கும்

20. மேல்பாற்கெல்லை திருப்பூதீசுரம் உடையார் தேவதானம் வடதாழை வயலுக்குக் கிழக்கும் திருவாலங்கோயிலுடை

21. யார் தேவதானக் குளத்துக்குத் தென்கடையில் பாறைக்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்குள்பட்ட

22. குளமும் குளப்பரப்பும் நஞ்செய்யும் புஞ்செயும் நத்தமும் நத்தப் பாழும் கீழ்நோக்கிய கிணறும் மேல்

23. நோக்கிய மரமும்......... ஒருபதின்கழஞ்சுக்கும் இக்காசு பன்னீராயிரத்து........

## 152

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் கோயில் மண்டபத்தூண்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

செய்தி : கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் கோயில் திருப்பணியின்போது கைக்கோளன் செட்டி கம்பனான சனநாத அணுக்கப் பல்லவரையனும், கைக்கோளன் மங்கன் தாமத்தனான குலோத்துங்க சோழன் என்பவரும் ஆளுக்கு ஒரு தூண் கொடையாக அளித்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்ரீ இக்கால்
2. செய்வித்தான்
3. கொடும்பா
4. ளூர் கைக்கோ
5. ளன் செட்டி கம்
6. பனான சனநாத அ
7. ணுக்கப் பல்லவ
8. ரையன்
9. இக்கால் செய்வித்
10. தான் கொடும்பாளூர்
11. கைக்கோளன் மங்கன்
12. தாமத்தனான கொ
13. லோத்துங்க சோழக்
14. .............. உடையான்.

## 153

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், குளத்தூர் சிவன் கோயில் வடபுறச்சுவர்

காலம் : மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 10 ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1226

செய்தி : குளத்தூர் சுந்தரசோழீசுவரமுடையார் கோயில் கைக்கோளர் கண்ணன் ஒளியன், கண்ணன் அரியான், கண்ணன் அரசன் ஆகிய மூவரும் ஏழு தடி நிலம் வாங்கித் தாங்களே உழுது பயிரிட்டுக் குடிநீங்காத் தேவதானமாக எந்தெந்த நிலத்தில் கோயிலுக்கு எவ்வளவு அளந்து கொடுப்போம் என்று எழுதிக்கொடுத்த கல்வெட்டு.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு
2. வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 10வது இ
3. ரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துக்
4. கீழைக்குளத்தூருடையார் சுந்தரசோழீசுரமுடை
5. ய நாயனார்க்கு இக்கோயில் கைக்கோளன் கண்ணன் ஒளியனும்
6. கண்ணன் அரியானும் கண்ணன் அரசனும் இம்மூவோம் நாங்கள்
7. இவ்வூர் வயலில் விலைகொண்ட தாழஞ்செய்யும் இளையர் வயலில் விலை
8. கொண்ட காஞ்சிரஞ்செய்யும் இதன் பறிகாலும் சிலையோடு செய்யும் ஆத்தி
9. யொடு வட்டம் தடி மூன்றும் ஆகத் தடி ஏழும் குடிநீங்காத் தேவதானமாக
10. திரிசூலக்கல்லு நாட்டிக் கல்வெட்டிக் குடுத்து இன்னிலங்கள் நாங்களே குடிநீங்கா
11. தேவதானமாக உழுது ஆட்டைக்கு வாடாக் கடமை சூலக்காலால் பசானத்

12. துக்கு தாழஞ்செய்க்கு அளக்கும் நெல் இருதூணியும் காஞ்சிரஞ்செய்க்கும் பறிகாலுக்கும்.

13. நெல்லுக் கலனே தூணிப் பதக்கும் சிலையோடு செய்க்கு நெல்லுக் கலனே பதக்கும் ஆத்தி

14. யொடு வட்டம் தடி மூன்றுக்கும் நெல்லுக்கலனே பதக்கும் இப்படியளப்போமாகவும் நவிரைக்கு ஒன்று

15. பாதியும் அற்பசிக் குறுவைக்கு அரையேயரைக்காலும் எள்தினை வரகு பயறு விளையில்

16. இவ்விழுக்காட்டிலே அளப்பதாகவும் பெருவெள்ளப் பெருஞ்சாவி போகில் பயிர்பார்த்துக் கொள்வதாகவும்

17. இப்படி சந்திராதித்தவல் செய்வதாகக் கல்வெட்டிக் குடுத்தோம் இக்கோயில் தேவரடியார் உடையான் ஒளியன் உள்ளிட்டோம்

## 154

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், குடுமியாமலை சிகாநாதர் கோயில் இரண்டாம் பிரகாரம் தென் சுவர்

காலம் : குலோத்துங்க சோழனின் 35ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1213

செய்தி : இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு மூன்றுபடைப் பொற்கோயில் கைக்கோளர் சிகாநாதர் கோயிலில் கைக்கோள நாயகர், அவர் தம்பிராட்டியார் ஆகியோரை எழுந்தருளச் செய்து மார்கழி, மாசி, பங்குனித் திருநாட்கள் கொண்டாடச் செய்த விரிவான ஏற்பாடுகளை இக்கல்வெட்டு விளக்குகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு 35ஆவது கோனாடான இரட்டபாடி கொண்ட

2. சோழவளநாட்டு மூன்றுபடை பொற்கோயில் கைக்கோளரோம் இன்னாட்டுக் குன்றுசூழ்நாட்டு திருநலக்குன்றமுடைய நாயனார் கோயிலில் நாங்கள் எழுந்தருளுவித்

3. த கைக்கோள நாயகர்க்கும் தம்பிராட்டியார்க்கும் திருஅமுது செய்தருள இத்தேவர் கோயிலில் சூலக்காலால் நாள் ஒன்றுக்கு சந்தி ஒன்றுக்கு திருஅமுது அரிசி நானாழியா

4. க சந்தி மூன்றுக்கு அரிசி குறுணி நானாழியும் தம்பிராட்டியார்க்கு சந்தி ஒன்று அரிசி இருநாழியாக அரிசி அறுநாழியும் ஆக நாள் ஒன்றுக்கு அரிசி பதக்கு இருநாழியும் ஐஞ்

5. சிரண்டாக நெல்லு ஐங்குறுணி ஐஞ்ஞாழியும் கறியமுதுக்கும் மிளகு அமுதுக்கும் நெய்யமுதுக்கும் அடைக்காயமுதுக்கும் நெல்லு குறுணி ஒரு நாழியும் மத்தியாணச் சந்திக்கு கட்

6. டிச்சோறு இரண்டுக்கு நெல்லு குறுணி முன்னாழியும் கலம் இடுங் குசவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் இரு நாழியும் விறகிடுவானுக்கு நெல்லு இருநாழியும் ஆக நாள் ஒன்றுக்கு

7. நெல்லு 2 தூணி 5 நாழியும் மார்கழியும் மாசியும் பங்குனியும் திருவிழா எழுந்தருளும் நாள் மூன்றுக்கு வேண்டும் பல அழிவுக்கு இத்தேவர் ஊர்களில் திருப்

8. பாவாடைக்கு வைக்குங்காசு 25ம் எங்களில் கணக்கு எழுதுவார் ஆண்டுதோறும் ஏறிட்டுக் கொண்டு சந்திராதித்தவல் செலுத்தக்கடவோமாகவும் இப்படி குடுத்தோம் மூ

9. ன்றுபடைக் கைக்கோளரோம் இத்தன்மம் நிலைநிறுத்துவார் சீபாதம் எங்கள் தலைமேலின இதுக்குத் தீங்கு நினைப்பவர் வழியறுவார் இது நாட்டார் ரட்சை இது பன்மாகேசுவரர் ரட்சை

## 155

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், தென்னங்குடி தர்சனபுரீசுவரர் கோயில்

காலம் : மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஒன்பதாம் ஆட்சியாண்டு, கி.பி. 1225

செய்தி : கோயில் கைக்கோளரில் இம்மளுவாவராண்பிள்ளை உள்ளிட்டார் கொடுத்த கொடை நிலத்தை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

### கல்வெட்டு

1. கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ அழகிய சொக்கனாரான
2. சுந்தரபாண்டிய தேவர்க்கு ஒன்பதாவது குளமங்கலநாட்டுத் தெங்கங்குடி உடையார்
3. நாயகர் கோயில் தானத்தார்க்கு இக்கோயில் கைக்கோளரில் இம்மளுவா
4. வராண்பிள்ளை உள்ளிட்டாரோம் பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது எங்கள்
5. நாட்டுக் காணியாக நாட்டிலே இறை கழித்து இறையிலியாக
6. வேங்கை வயலில் இற்றை நாள் உடையார் தெங்க நாயக.....
7. விட்டு திரிசூலத் தாபணம் பண்ணிக்குடுத்து எங்களுக்கு குடிநீங்காத்
8. தேவதானக் காணியாக வரிசை கட்டிக்கொண்டு இருப்பதாகக்
9. கோயில்.....மாத்தால் நாற்கல நெல் புள்ளி பார்த்து...........
10. முதல் திருவாசல் திறந்தான் காலாலே திருவாசலிலே அளப்போ
11. மாகவும் சந்திராதித்தவல் செல்லக் கடவதாகவும்.

## 156

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் கோயில் வெளிமண்டபம்

காலம் : 13 ஆம் நூற்றாண்டு

செய்தி : கொடும்பாளூர் முசுகுந்ததேசுவரர் கோயில் திருப்பணியின் போது கொடும்பாளூர் கைக்கோளன் முருக்கன் கொண்டானான முடிகொண்டப் பல்லவரையன் தூண் ஒன்று கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இ
2. க்கால் செய்வித்
3. தான் கொடும்பா
4. ளூர் கைக்கோ
5. ளன் முருக்கன்
6. கொண்டானான
7. முடிகொண்ட ப
8. ல்லவரையன்.

## 157

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், திருவேங்கைவாசல் கோயில் உத்தரம்

காலம் : 13ஆம் நூற்றாண்டு

செய்தி : திருவேங்கைவாசல் கைக்கோளர் தில்லை தென்னனான பொன்வேய்ந்த மாராயன் கோயில் திருப்பணியின் போது உத்தரம் ஒன்றை அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இவ்வுத்தரம் செய்வித்தான்
2. இவ்வூர்க் கைக்கோளன் தில்லை தென்னனா
3. ன பொன்வேய்ந்த மாராயன்.

## 158

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பொன்வாசிநாதர் கோயில் கருவறைத் தென்சுவர்

காலம் : குலசேகரதேவரின் 30 ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1298

செய்தி : கோனாடான கடல் அடையாது இலங்கைகொண்ட சோழவளநாட்டு உறத்தூர் கூற்றத்து இலுப்பையூர் உடையார் தேவும் திருவும் உடைய நாயனாரையும் நாச்சியாரையும் இவ்வூர்க் கைக்கோளர் பெரியநாயன் செல்வன் எழுந்தருளச் செய்தார். அவருக்குக் குடிநீங்காத் தேவதானமாக நிலம் அளித்தனர். குளமும் வயலும் அனுபவித்துக் கோயிலுக்கு நெல்லும், காசும் அவர் அளிக்க வேண்டும் என எழுதப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவன
2. சக்கரவர்த்திகள் எம்மண்டலமும் கொ
3. ண்டருளிய குலசேகரதேவர்க்கு யாண்டு 30
4. ஆவது கோனாடான கடலடையாதிலங்கை
5. கொண்ட சோழவள நாட்டு உறத்தூர்க் கூ
6. ற்றத்து இலுப்பையூர் உடையார் தேவும் திருவும் உடைய நாயனார்க்கு நாயகரையும் நாச்சியாரையும் ஏறியருளப் பண்ணி இட்ட உட்க்கொள் பணத்துக்கு உடலாக உடையார் நாயன் கடம்ப அரையன் திருமுகப்படியும் இக்கோயில் ஆதி சண்டேச்வரர் கோயிற் கணக்கு ஊராய் இசைந்த ஊரோமும் இந்நாயனார் திருநாமத்துக் காணி ஆன பாலவயல் இவ்வூர் கைக்கோளரில் பெரியநாயன் செல்வனுக்குக் குடி நீங்காத் தேவதானமாக நாயன் தும்பையராயன்.
7. சண்டேசுவர விலையாக விற்ற.....குடிநீங்காத் தேவதானமாக விற்று பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது

8. நூற்று அம்பத்தாறு குழி கொண்டது ஒரு மாவுக்கு மாத்தால் திரிசூலக்காலால் நெல் நாற்கலம் மூலப்பயிர் பார்த்துக் கொள்ளக்கடவதாகவும் கோடைப் போகம் இதில் அரைக்கால் வரிசையும் கீழ் இறை மாத்தால் நாலு காசு இறுக்கக்கடவனாகவும் குளமும் வயலும் குடிநீங்காத் தேவதானமாக இப்படிக் குடுத்து உட்கொள்

9. உடலாக வாங்கிய பணம் தொண்ணூறு........இடப்.......நன்மைக்கும் சைவாச்சார்யம் சூர்யதேவர் ஆன ஆதிசைவச் சக்கரவர்த்தி எழுத்து, தேவகண்டன் திருத்தொண்டன் எழுத்து ஆச்சிராமப் பள்ளி எழுத்து இக்கோயில் ஊராய் இசைந்த ஊரோம் கோயில் கணக்கு.......

## 159

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், திருவரங்குளம் அரதீர்த்தேசுவரர் கோயில் முன்மண்டப வடபுறச்சுவர்

காலம் : வீரபாண்டிய தேவனின் 4ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1257.

செய்தி : அரதீர்த்தேசுவரர் கோயில் திருமடைவளாகத்தில் இருக்கும் கைக்கோளர் குரங்கன் உடையானான ராசகம்பீரப் பிரம்மராயன் மீது நாயனார் சேமப்பிள்ளையார் முதலிகளில் புவனசிங்கதேவர் சில குற்றம் சுமத்தித் தெண்டம் விதித்தார். அதற்காக மேற்படி கைக்கோளர் தன் நிலங்கள் சிலவற்றை சண்டேசுவர நாயனார் பெயருக்கு 6000 பொன்னுக்கு விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 4வது இராஜராஜவளநாட்டு வல்லைநாட்டு உடையார் திருவரங்குளமுடைய
2. நாயனார் ஆதிசண்டேசுவர தேவர்க்கு இந்நாயனார் திருமடை விளாகத்துக் கைக்கோளரில் குரங்கன் உடையானான ராஜகம்பீரப் பிரமராயனேன் பிரமா
3. ணம் பண்ணிக்குடுத்த பரிசாவது நாயனார் சேமப்பிள்ளையார் முதலிகளில் புவன சிங்கதேவர் என்னைக் குற்றத்தெண்டத்துக்கு நிச்சயித்த காசுக்கு என் காணி நா
4. ன் ஆசாரியன் வயலில் என் கூறு செம்பாதியும் அவ்வூர்க்குளத்து உள்வாயில் நான் விலைகொண்டுடைய நிலமும் இந்த ஆசாரியன் வயலுக்கு மேற்குள்ள புன்செயு
5. ம் மரமும் நாயனார் தேவதானம் தென்கவிநாடான் கீழவாயில் திருவுண்ணாழி கைக்கோளர் பக்கல் நான் விலை கொண்டுடைய நிலமும் இச்செய்யில் கிணறும் இந்
6. த ஓலை மேல்ப்பட்ட நீர் நிலத்துக்கும் கிணறும் புன்செயும் கீணோக்கிய கிணறும் மேனோக்கிய
7. மரமும் விலைக்குற விற்றுக்கொள்வதாக எம்மில் இசைந்த விலைப்பொருள் நல்காசு 6000 இக்காசு ஆறாயிரமும் இந்நாயனார் ஆதிசண்டேசுரதே

8. வர்க்கு குரங்கன் உடையானான ராஜகம்பீர பிரமராயனேன் இந்த ஓலை மேற்பட்ட நீர் நிலங்களுக்கும் புன்செய்க்கும் கீணோக்கிய கிணறும்

9. மேனோக்கிய மரமும் எப்பேர்ப்பட்டதுக்கும் இந்நாயனார் சீபண்டாரத்திலே கொண்டு எம்மில் இசைந்த விலைப்பொருளுக்கு விலைக்குற விற்ற காசு ஆராயிரமும் விலைக்

10. குற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தேன் ஆதிசண்டேசுவர தேவர்க்கு இராஜ

11. கம்பீரனேன்.

## 160

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் வட்டம், மேலப்பனையூர் அகிலாண்டேசுவரி கோயில் சாமான்அறை கிழக்குச்சுவர்

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலம்; 13 ஆம் நூற்றாண்டு

செய்தி : பொன்னமராபதி நாட்டு வடபற்றுப் பனையூர் குளமங்கலத்து நாயனார் அறிவீசுவரமுடைய நாயனார் ஆதிசண்டேசுவர தேவகன்மி கோயில் கணக்கு ஸ்ரீகாரியம் செய்வார்களும் ஊரும், ஊராய் இசைந்த ஊரவரும், பெருவாயில் நாட்டு நாயனார் கோயில் கைக்கோளரில் அடைக்கலங்காத்தான் ஆன மறமாணிக்க மாராயர்க்குக் குடிநீங்காத் தேவதானமாக நிலம் அளித்தனர். விளைச்சலில் நெல்லும், பணமும் கோயிலுக்கு அளிக்க மறமாணிக்க மாராயர் ஒப்புக் கொண்டுள்ளார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு......
2. பொன்னமராபதி நாட்டு வடபற்று பனையூர் குளமங்கலத்து நாயனார் அறிவீசுவரமுடைய நாயனார்.
3. கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மி கோயில் கணக்கு ஸ்ரீ காரியம் செய்வார்களோமும்
4. ஊராய் இசைந்த ஊரவரோமும் பெருவாயில் நாட்டு நாயனார் கோயில் கைக்கோளரில் அடைக்
5. கலங்காத்தான் ஆன மறமாணிக்க மாராயர்க்கு குடிநீங்காத் தேவதானமாகப் பிரமாணம் பண்ணிக்
6. குடுத்த பரிசாவது இவ்வூர் செங்களக்குடி வயலில் நிஷதராஜப் பேரையனும் பிள்ளைகமாணிக்கப்
7. பேரையர் பட்டார் பக்கலிலும் இந்த மறமாணிக்க மாராயர் கொண்டுடைய நிலம் பேய் நெடுங்கன்
8. வயக்கல் பெருநான்கெல்லை கீழ்ப்பாற்கெல்லை அத்தன் பிள்ளான் செய்க்கு மேற்கும்
9. தென்பாற்கெல்லை கிழக்கோடிய வாய்க்காலுக்கு வடக்கும் மேற்பாற்க்கெல்லை சுந்தரபாண்டியப் பேரையன்
10. நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கிழக்கோடிய

வாய்க்காலுக்குத் தெற்கும் இந்தப் பெருநான் கெல்லை

11. மறமாணிக்க மாராயன் வயக்கலும் கிணறும் இந்த இரண்டு ஊரவரும் இந்த மறமாணிக்க மாராயர்க்கு இறை

12. கழித்துக் குடுக்கையில் இவர் நானிந்த நாயனார்க்கு குடி நீங்காத் தேவதானமாகக் குடுத்து வரிசைப்படி.....

13. ....... பனேன் கையில் இந்த இரண்டூரவருமாக இந்த வயக்கலுக்கு திருச்சூலத்தாபனமும் பண்ணி

14. வரிசை அளக்கும்படியாவது வெள்ளைக்குடி அளவின்படி நாட்டு மரக்காலால்

15. எழுகலனே முக்குறுணி அறுநாழியும் குறுவைப் போகங்களுக்கு மாத்தால் முக்

16. குறுணி எழுநாழியுரியும் எள்ளுக்கு பணம் தலை மாத்தால் ஒரு பணமும் பசான போகத்துக்கு

17. பணம் முக்கால் கீழ்வாரப் பச்சைக்கு பணம் ஒன்றே காலும் ஆக இப்படியாக

18. பணமும் இறுப்பாராகவும் இதுக்கு பயிர்பாத்து பயிர் தட்டுக் கழித்து

19. பஞ்சுப் பீலிகை வாசலிலே சீபண்டாரத்துக்கு ஏற அளப்பாராகவும் இப்படியால்

20. தரவு சாதனம் பெறக்கடவாராகவும் திணை வரகு இறுங்கு உள்ள பயிர்க்கு

21. நெல் இந்தக் காணிக்குறுணி எழுநாழி உரியும் அளக்கக் கடவாராகவும் இப்படி

22. இது இந்நிலத்தால் வந்த ......மிதம் பாலகுளத்தால் வந்த நீரும் மற்றும் பெறு

23. வாராகவும் இப்படி சம்மதித்துக் குடிநீங்கா தேவதானமாக பிரமாணம் பண்ணிக் குடுத்தோம்

24. பனையூர் குளமங்கலத்து ஊரவரும் தானத்தாரும் இவ்விரண்டு இவ்வனைவரோம் மறமாணிக்க

25. மாராயன் எழுத்து இப்படிக்கு தேவகன்மி வேடப் பிறப்பழகியான் எழுத்து பட்டாண்டான் எழுத்து

26. இப்படிக்கு அடைப்பிச்சர் எழுத்து கோயில் கணக்கு சந்தன் சூரியதேவன் எழுத்து.

## 161

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் வட்டம், கூடலூர் சிவலோகநாதர் கோயில் கீழ்ப்புறச்சுவர்

காலம் : சடையவர்மன் பராக்கிரமபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி. 1322

செய்தி : கோநாடான கடலடையாது இலங்கை கொண்ட சோழவளநாட்டு ஒல்லையூர்க் கூற்றத்து தென் கோனாட்டு நாடு, நகரம், கிராமங்களுக்கு இல்லனூர்க்கிழவன் இறுக்க வேண்டிய கடமைக்குப் பெரியதேவர் என்பவர் புணைப்பட்டார். இல்லனூர்க் கிழவன் கடமை இறுக்காமல் ஓடிப்போகையில் பெரியதேவர் நிலம் புணைக்காக அளிக்கப்பட்டது. தான் இறுக்க வேண்டிய கடமைக்குத் தன்னையும், தன் நிலங்களையும் விற்றுக் கொள்ளக் கூறினார். ஏலம் விடப்பட்டு அந்நிலத்தை மாடக்குளக்கீழ் மதுரைக் கைக்கோளரில் கண்டன் அழகிய சொக்கனாரான வீரபாண்டிய மாளுவச் சக்கரவர்த்தி 1100 பொன்னுக்கு விலைக்கு வாங்கியதை இந்தக் கல்வெட்டுக் கூறுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மத்கீர்த்திக்குமேல் ஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ பராக்கிரமபாண்டிய
2. தேவர்க்கு யாண்டு 7ஆவது துலாநாயற்று பூர்வபட்சத்து பிரதமையும் புதன்கிழமையும் பெற்ற அஸ்வ
3. தி நாள் மாடக்குளக்கீழ் மதுரையில் கைக்கோளரில் கண்டன் அழகிய சொக்கனாரான வீரபாண்
4. டிய மாளுவச் சக்கரவர்த்திகளுக்கு கோநாடான கடலடையாது இலங்கை கொண்டசோழவளநாட்டு ஒல்
5. லையூர்க் கூற்றத்துத் தென்கோனாட்டு நாடும் நகரமும் கிராமங்களோமும் காணி விலைப் பிரமாணம் பண்ணி
6. குடுத்த பரிசாவது எங்கள் நாட்டு இல்லனூரில் இரு கூற்றுக்குக் கடவ இல்லனூர் கிழவன் கீழ்மணல் நல்லூ
7. ரில் பெரியதேவரைப் புணையிட்டு இவர் கடமையிறாமல் ஓடிப்போகையில் இப்பெரியதேவரை

8. நாங்கள் நாடாக அழைத்து நீர் புணைப்படியே இறுக்கவேணும் என்று புரட்டாதி மாதவரை கடமைக்கு
9. இவரைப் பூட்டுகையில் இப்படி புணைப்பட்ட நான் இருக்கப் பணித்தால் எனக்கு ஆற்றாது நான் என் காணியான
10. கீழ்மணலூர்க் காணியும் போகட்டுப் போமித்தளை என்று சொல்லி எங்கள் முன்பாக இவர் புணைய்
11. கழித்துப் போகையாலும் ஒரு கூற்றுக் கடவ பிள்ளான் சொக்கனாரை நாங்கள் நாடா அழை
12. த்து இல்லனூர் உன்னுடையதாகில் இந்த இல்லனூற்குள்ள புரவுக்கு இறுக்க வேணுமென்று
13. சொல்லுகையில் இல்லனூரில் என் காணி தனக்கும் இறுக்க ஆற்றாதென்றும் சொல்லி என் காணி
14. நானுமுட்பட விற்றுக் கொள்ளுங்கோள் என்று சொன்னபடியாலும் இந்த
15. இல்லனூர் பக்........அளவில் நாடும் அலையுமானபடியாலும் இந்த இல்லனூர்
16. விற்றுக்கொள்வீர் உளரோ என்று ஒரு காலாவதும் இருகாலாவதும் முக்காலாவதும் முற்கூற இம்மொ
17. ழி கேட்டு பிற்கூற அழகிய சொக்கனாரான வீரபாண்டிய மாளுவ சக்கரவத்திகள் கொள்வேனென்று கையி
18. ல் இவற்கு விற்பதற்கிசைந்த இல்லனூற்குப் பெருநான் கெல்லையாவன கீழ்பாற்கெல்லை கூடலூர் எல்லை
19. க்கு மேற்கும் தென்பாற் கெல்லை நெல்வேலி எல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை நல்லூர்
20. எல்லைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கீழ்மணலூர் எல்லைக்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்
21. குள்பட்ட குளமும் காலும் கால்கரையும் வயலும் வயல்பரிக்கம் நத்தமும் நத்தப்பா
22. ழும் புன்செயும் நன்செய்யும் மேனோக்கிய மரங்களும் கீணோக்கிய கிணறுகளும் இந்நான்கெல்லைக்குள்ளு

23. தச்சன் குடிக்காடு மற்றும் எப்பேற்பட்ட சமஸ்தபிராப்திகளில் பள்ளிச்சந்தம்

24. பழந்தேவதானம் திருவிடையாட்டம் மனிச்சர்இறையிலி நீக்கி நின்ற இவற்றுக்கு விலை நிச்சயித்த

25. எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு வழங்கும் பணம் 1100 இப்பணம் ஆயிரத்தொரு நூற்றுக்கும்

26. விலைக்குற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் அழகிய சொக்க

27. னாரான வீரபாண்டிய மாளுவச் சக்கரவர்த்திகளுக்கு தென்கோநாட்டு நாடும் நகரமும் கிராமங்களுமோம்.

## 162

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் வட்டம், கோட்டையூர் அகத்தீசுவரர் கோயில் வடபுறச்சுவர்

காலம் : குலசேகரபாண்டியனின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி 1282

செய்தி : கோட்டையூர் அகத்தீசுவரர் கோயில் திருமடைவளாகத்தில் குடியிருந்து நெசவுத் தொழில் செய்வோர் தறி ஒன்றுக்கு அரைப்பழங்காசு திருப்பரிசட்டத்துக்கு மூலப்பொருளாக அளிக்கும்படி கல்வெட்டிக் கொடுக்கப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு
2. 13வது எதிராமாண்டு அதளையூர் நாடாழ்வானேன் கோட்டையூர்
3. திரு அகத்தீசுவரமுடைய நாயனார் திருமடைவிளாகத்திலிருந்து நெய்கிற
4. கைக்கோளர் பேரில் தறிஇறைக்குத் தறியால் அரைப்பழங்காசு திரிப்பரிசட்டத்துக்கு
5. உடலாக சந்திராதித்தவல் செல்வதாகக் கல்வெட்டிக் குடுத்தோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 163

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் வட்டம், மேலப்பனையூர் அகிலாண்டேசுவரிகோயில் அர்த்தமண்டபத் தூண், பாவுகல் ஆகிய இடங்கள்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

செய்தி : கோயில் கட்டும் போது பாவுகல் கொடுத்தவர்கள் பெயர்கள் குறிக்கப் பெறுகிறது. வெங்கத்தார் பொன்வேய்ந்த மாராயன், செலுந்தாரான கோனாட்டு மாராயன் இருவரும் அரசனால் பட்டப் பெயர் பெற்ற அரசு அலுவலர்களாக இருந்தவர்கள் ஆவர்.

### கல்வெட்டு

(அ) 1) இப் பாக்கல்லு இக்கோயில்

2) கைக்கோளரில் வெங்கத்தார்

3) பொன்வேய்ந்த மாராயன் உள்ளிட்டார்

4) தன்மம்

(ஆ) 1) இப்பாக்கல் இக்கோயில் கைக்

2) கோளரில் செலுந்தாரான கோனாட்டு மா

3) ராயன் உள்ளிட்டார் தன்மம்

## 164

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், திருவரங்குளம் அரதீர்த்தேசுவரர் கோயில் முன்மண்டபத்துக் கீழ்ப்புறச் சுவரில் வாயிற்படிக்குத் தென்புறம்

காலம் : மூன்றாம் குலோத்துங்க சோழனின் 40ஆம் ஆட்சியாண்டு; கி.பி 1218

செய்தி : இவ்வூரில் சிவப்பிராமணர், செட்டிகள், வேளாளர், தேவரடியார், கம்மாளர் இவர்களோடு கைக்கோளரும் பூமி வாங்கி உழவு செய்து குடிநீங்காத் தேவதானமாகக் கோயிலுக்கு நன்செய், புன்செய் நிலங்களுக்கு வரிகொடுத்த விபரம் கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்
2. கொண்டு மதுரையில் வீராபிஷேகமும் விசையாபிஷேகமும் பண்ணியருளிய திரி
3. புவனவீரதேவர்க்கு யாண்டு 40 நாற்பதாவது இராஜராஜ வளநாட்டு வல்லநாட்டு
4. கூரப்பாத்தாழ்வுதேவி மங்கலத்து நாடாயிசைந்த நாட்டோமெங் களிலிசைந்து உடையார் தி
5. ருவரங்குளமுடைய நாயனார் திருப்பதி தேவுந் திருவுமுடையான் திருமண்டபத்து நாடாய்
6. குறைவறக் கூடியிருந்து கற்கடக நாயிற்று மூன்றாந்தியதி.... நாள் இசைவுதீட்டுமிட்டுக் கல்வெட்டிக்
7. குடுத்த பரிசாவது இந்நாயனார் திருப்பதியில் நாலு வரத்துக்குள்ளும் இருந்த குடிமக்களை நோ
8. க்குவோமாகவும் புறத்தேவதானங்களையும் குடிமக்களையும் நோக்குவோமாகவும் நோக்குமிடத்து மறித்து
9. காலிபிடித்தல் மற்றுஞ்சில சிதம்புகள் செய்தாருண்டாகில் நீர் நிலத்திலே இரண்டு மாச்செய்யும் திருச்சூல......
10. ட்டி குடுத்து பறித்தன பிடித்தன விடுவோமாகவும் இத்திருப்பதியில் சிவப்பிராமணர் செட்டிகள் வெள்ளாளர்

11. கைக்கோளர் தேவரடியார் கண்மாளர் இடையர் மற்றும் இத்திருப்பதியில் இருந்த
12. வர் சிலர் எங்கள் பக்கம் விலை கொண்டுடைய நீர் நிலங்களும் புன்சைகளும் குடிநீங்காத் தேவ
13. தானமாவதாக எங்கள் நாயனாற்கு இறை இறுப்பாராகவும் இறுக்குமிடத்து நீர் நிலத்துக்கு மாத்தால்
14. பதின்கலனே தூணிப்பதக்காக வந்த நெல்லும் புன்சைக்கு மாத்தால் பதினைஞ்சொபா
15. தி காசும் கொள்ளக்கடவதாவும் இப்படியாக வந்த நெல்லும் காசும் சந்திராதித்தவல்
16. உடையார் திருவரங்குளமுடைய நாயனாற்கு குடிநீங்காத் தேவதானமாய் இறை இறுப்பதாக
17. கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் வல்லநாட்டு நாடாய் இசைந்த நாட்
18. டோம்.

## 165

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில் தென்புறச்சுவர்

காலம் : கி.பி. 15ஆம் நூற்றாண்டு

செய்தி : கைக்கோளன் முடிகொண்டசோழத் தென்கவிர நாடாழ்வான் என்பவர் திருக்கற்றளி மகாதேவர் கோயிலில் கணபதியாரை எழுந்தருளுவித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ஆறாவது உடையார்.....குறுச்சி நாட்டான் கைக்கோளனான முடிகொண்ட சோழத் தென்கவிர நாடாழ்வான்.
2. கணபதி நம்பி.....திருக்கற்றளி மகாதேவர் கோயிலில் கணவதியாரை எழுந்தருளுவித்தேன்.

## 166

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் வட்டம், பொன் அமராவதி, சோழீசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

காலம் : கி.பி. 27.10.1478

செய்தி : மதுரையில் அழகிய சொக்கனார் கோயில் கைக்கோளரில் முன்னடைவு ஆவுடையார் ஸ்ரீவராக கண்டியதேவன் என்பவர் பொன்னமராவதி இராசேந்திர சோழீசுவரமுடையார் கோயிலுக்கு ஆறுபங்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரைக் கொடையாக அளித்தார். அந்த ஆறுபங்குக்காரர்களாகிய தேவரடியார்க்கு தேவடிமைக் காணியாக நிலமும், வீடும் அளிக்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1400 மேல் செல்லாநின்ற விளம்பி
2. வருஷம் அற்பசி மாதம் 28தேதி புறமலை நாட்டுப் பொன்னமரா வதியில் உடையார்
3. இராசேந்திர சோழீசுவரமுடைய நாயனார்க்கு மதுரையில் அழகிய சொக்கனார் கோயில்.
4. கைக்கோளரில் முன்னடைவு ஆவுடையார் ஸ்ரீவராக கண்டியதேவன் தன்மமாக
5. தேவடிமையாக விட்ட மாணிக்கு இவன் மகன் இலக்கப்பனும் பெரியமுதலியும்
7. நயினானும் இவன் மகன் போத்தரசனும் இவன்தம்பி பிச்சனும் ஆக இவர்
8. களை சன்னதியில் திருசூலத்தாபனமும் பண்ணித்தந்தமைக்கு இவர்களுக்குத் திரு
9. முகக்காணியாக இலக்கைக்கு இந்நயினார் திருநாமத்துக் காணியான விசங்கு
10. ன்ற வயலில் இராசனேரிக் குடிக்காடு விட்ட நிலம் 5¾ விசங்குன்றக் குளத்தில் முறை

11. விழுக்காட்டிலே இரண்டுமா நிலத்துக்குத் தண்ணீரும் விட்டு இக்குடிக்காட்டில் முன்

12. குளப்புன்செயும் இராசனேரியான மழவராயநல்லூர் விட்ட நிலம் ½ ஆக நிலம் 6¼

13. திருமடை விளாகத்தில் விட்ட நாச்சியார் கோயிலுக்கு வடசிறகில் மனை ஆறும் முன்டைவு

14. ஆக இம்மரியாதி சந்திராதித்தவரையும் தேவடிமைக் காணியாக

15. நடந்துபோதக் கடவார்களாகவும் இப்படிக்கு இவை இக்கோயில்

16. கணக்கு தப்பில்லாவேளார் எழுத்து.

## 167

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் வட்டம், சேரனூர் வம்சோத்தாரக நாதர் கோயில் தென்புறச்சுவர்

காலம் : சுந்தரபாண்டிய தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு

செய்தி : சேரனூர் ஊராயிசைந்த ஊரவரும் கோயில் கணக்கரும் திருநலக் குன்றத்துப் பள்ளிகளில் செல்வன் வில்லியான கைக்கோளப் பேரரயனுக்கு நிலம் விற்ற செய்தி கூறப்படுகிறது. நிலத்தை வாங்கிய கைக்கோளப் பேரரயன் கோயிலுக்குக் கொடுத்த கொடை விபரம் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு
2. யாண்டு 3வது கோனாடான கடல் அடையாது இலங்கை கொண்ட சோழ வளநாட்டு குன்றுசூழ்நாட்டு சிகரை நல்லூர் உ
3. டையார் குலோத்துங்க சோழீச்சுரமுடைய நாயனார் கோயில் ஸ்ரீ மகேசுவரக் கண்காணி செய்வார்களும் தேவர்களு
4. ம் இவ்வூர் ஊராயிசைந்த ஊரோமும் கோயில் கணக்கரும் திருநலக்குன்றத்துப் பள்ளிகளில் செல்வன் வில்லியான கைக்கோளப்பே
5. ரரயனுக்கு தண்டேசுவர விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது இவ்வூர் நாயனார் ஊரார் பக்கம் திருநாமத்துக் காணியாக பொ
6. ன்னுக்குக் கொண்ட குலோத்துங்கன் குடிக்காடு குளத்து வயலுக்குப் பெருநான்கெல்லையாவன கீழ்பாற்கெல்லை தெற்கு நோக்கிப்போன
7. பெருவழிக்கு மேற்கு தென்பாற்கெல்லை மேன்மண நல்லூர் எல்லைக்கும் உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் திருதந்தவனத்துத்
8. திரிசூலக்கல்லுக்கும் கொழுந்தன் சுந்தன் தோட்டத்துக்கும் வடக்கு மேல்பாற்கெல்லை தென்னவதரையன்
9. சுந்தன் தோட்டத்துக்கும் பிரான்தகதேவன் உடையானும்

உதயநம்பியுள்ளிட்டார் தோட்டத்துக்கும்

10. கிழக்கு வடபாற்கெல்லை குளத்துநீர் கோவைக்குத் தெற்கு ஆக யிசைந்த பெருநான்கெல்லையுள்ளகப்பட்ட குளத்துக்கும் வயலுக்கும்

11. எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்புதுக்காசு 1200 இக்காசு ஆயிரத்திரனூறு சீபண்டாரத்தே ஒடுக்கிக்

12. கொண்டு தண்டேசுர விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் முன்சொல்லப்பட்ட அனைவோமும் யிக்குடிக்காடு தன்மதா

13. னத்துக்கு உரித்தாவதாகவும் இக்குடிக்காட்டுக்கு வரிசை பசானமும் அற்பசிக் குறுவையும மாத்தால் அறுகல நெல்லளப்பானாகவும்

14. ஆடிக் குறுவை மாத்தால்.....கலநெல்லளப்பானாகவும் கீழிறை மாத்தால் ஏழு காசாகவும் எள் வரகு திணைக்கு மாத்தால் காசு பதின

15. ஞ்சு ஆகவும் இப்படி வெட்டி முட்டாவாள் அந்தராயமிராதாராகவும் கோயில் தேவை.......ணாகவும் யிவ்வறகங்களால்

16. வந்த கடமை சீமாகேசுவரக் கண்காணி செய்பவர்களும் தேவகன்மி கோயில் கணக்கர் பயிர்பார்த்துக் கொள்ளக்கடவோமானமைக்கு

17. தண்டேசுவர விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் ஊராய் இசைந்த ஊரோமும் சீமாகேசுவரக் கண்காணி செய்வார்களும் தேவ

18. கன்மி கோயில் கணக்கரும் கைக்கோளப் பேரரயனுக்கு.

## 168

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், குடுமியாமலை சிகாநாதசுவாமி கோயில் மடப்பள்ளியின் கீழ்ப்புறச்சுவர்

காலம் : மூன்றாம் குலோத்துங்க சோழனின் 30ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1208

செய்தி : கைக்கோளன் பட்டன் திருவுடையானான கண்டமாணிக்கப் பல்லவரையன் ஆன அனந்தராமன் என்பவர் திருநலக் குன்றமுடைய மகாதேவர்க்குப் பங்குனித் திருநாள், மாசித் திருநாள், கோனாடன் திருமடத்தில் மகாதேவர் அமுது செய்யவும் நிலம் வாங்கிக் கொடுத்த கொடையை இக்கல்வெட்டு விவரிக்கிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு 30வது இரட்டபாடிகொண்ட
2. சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்து நேர் இலானான........ கைக்கோளன் பட்டன் திருவுடை
3. யானான கண்டமாணிக்கப் பல்லவரையனான அனந்தராமனேன் இந்நாட்டுத் தென் கோநாட்டு திருநலக்குன்றமுடையார்
4. மாசித் திருநாள் ஒன்றும் செய்விக்க.....பங்குனித் திருநாளாலும் கோநாடன் திருமடத்து மகாதேவர் அமுது செய்கை
5. க்கு தேவதானம் இந்நாட்டு உறத்தூர்க் கிழவன் இலுப்பைக் குடியில் விளையா வெண்களராய்க் காடு போய்க் கிடந்த நிலத்து
6. க்குக் கீழ்பாற்கெல்லை இத்தேவதானம் அதிகமங்கலத்தில் வடகடைகார் நீர்கோவைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை
7. இலுப்பைக்குடி பழைய நிலத்துக்கு வடக்கும் மேற்பாலெல்லை செங்குளம் உட்பட்ட இக்குளத்து நீர் கோவைக்குக் கிழ
8. க்கும் வடபாற்கெல்லை மதக்கிமங்கலத்தில் சூலக்கல்லுக்கும் இவ்வூர்க் குளத்து தென்கடைக்குத் தெற்கும் ஆகப் பெரு
9. நான்கெல்லை உள்ளகப்பட்ட நிலத்துக்கு விலையாக தண்டேசுரப்பிள்ளையார் சீஹஸ்தத்திலே இட்ட காசு 1 இக்காசொன்

10. றுக்கும் இந்நிலம் இறையிலியாக்கி கோனாடன் மடப்புறமாகவும் இம்மடம் மெழுக குடியிருப்பானுக்கு இந்நி

11. லத்திலே அரை மாவும் இம்மடத்துக்குக் கலமிடும் குசவனுக்கு நிலம் காணியும் விறகிடுவானுக்கு நிலம் காணியும்

12. குளப்படி நிலம் அரைமாவும் ஆக நிலம் இரண்டு மாவும் நீக்கி நிலத்தால் சிறிது வெளிகிடந்த மேலே முதலாக

13. வந்த வாசி நெல்லும்கொண்டு இரண்டு திருநாளும் அடியார்களை அமுது செய்விக்கைக்குச் சந்திராதித்தவல்......

## 169

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், குடுமியாமலை அகிலாண்டேசுவரி அம்மன் கோயில் மகாமண்டப மேற்குச்சுவர்

காலம் : முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்: கி.பி. 1233

செய்தி : குடுமியாமலை அகிலாண்டேசுவரி அம்மன் கோயில் திருப்பணியின் போது திருவாசல் முகவணை நிற்கவில்லை. அப்பணி குறையின்றி நடக்க வேண்டிக் கைக்கோளர் உடையநாச்சி மகன் கூத்தன் தன்னைப் பலி கொடுத்துக் கொண்டான். அவன் உறவினர்க்கு உதிரப்பட்டியாக இரண்டுமா வயல் கொடையாகக் கொடுக்கப்பட்டது. குறுமறைநாட்டு சேந்தனேரிக் கைக்கோளர் பொன்னம்பலவன் உய்யவந்தான், பெருமாளான காங்கேயர்க்கு முக்குளம் விற்ற செய்தியும் கூறப்படுகிறது.

### கல்வெட்டு

1. அருளிச்செயல் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயில் தானத்தாற்கு இன்
2. னாயனாற்கு தேவதானமாகக் கலிகடிந்த பாண்டியன் குடுத்த முக்குளத்து வயலின்
3. திருவாசல்முகவணையேற தலையரிந்த கைக்கோளன் உடையநாச்சி மகன் கூத்
4. தன் உறவுமுறையாற்கு உதிரப்பட்டியாக இரண்டு மாச்செய் பதினேழாவது முதல்
5. அனுபவிப்பதாக கல்லுவெட்டிக்குடுக்க இவை குருகுலராயன் எழுத்து இந்த
6. முக்குளம் பெருமாளான காங்கேயற்கு காணியாக விற்றுக்குடுத்த
7. குறுமறை நாட்டு சேந்தனேரிக் கைக்கோளரில் பொன்னம்பலவன் உய்யவந்த......

## 170

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் வட்டம், குடுமியாமலை சிகாநாதசுவாமி கோயில் அகிலாண்டேசுவரி அம்மன் சன்னதி வடபுறச்சுவர்

காலம் : கி.பி. 14 ஆம் நூற்றாண்டு

செய்தி : குடுமியாமலை கைக்கோளரில் திருச்சிராப்பள்ளி உடையானான செயதுங்கராயன் திருநலக்குன்றமுடையார் கோயில் கோபுரத் திருப்பணிக்காகக் கோயில் பண்டாரத்தில் மூன்று அச்சுச் செலுத்தி மருங்கூர் தேவதான வயலில் உழுது விளைவில் ஒரு பகுதியைக் கோயிலுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்த கல்வெட்டு.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி கோனாடான கடல் அடையாதி
2. லங்கைகொண்ட சோழவளநாட்டு நாட்டோமும் உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயில் தா
3. நத்தாரோமும் இவ்வூர் கைக்கோளரில் நாயன் திருச்சிராப்பள்ளி உடையானான ஜெயதுங்கராயனுக்கு
4. இவன் விலைகொண்டுடையானாய் அனுபவித்து வருகிற இந்நாயனார் தேவதானம் மருங்கூர் நான்கெல்லைக்குள்பட்ட
5. நிலத்துக்குப் பதினாறாவது முதல் திருக்கோபுரத்துத் திருப்பணிக்கு உடலாக சண்டேசுரதேவர் அருளால்
6. ஸ்ரீபண்டாரத்துக்கு இவனை மூன்று அச்சும் ஒடுக்குவித்துக் கொண்டு இம்மருங்கூர் வயலில் நிலம் ஒரு மாவுக்
7. கு கடமை ஸ்ரீ பண்டாரத்துக்கு விநியோகம் உட்பட எண்கல நெல்லும் கீழ் இறையும் இறுப்பானாகவும் ஆ
8. டிக் குறுவை ஒன்று பாதி இறுப்பானாகவும் இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் குடுத்தோம் கடலடை
9. யாதிலங்கை கொண்ட சோழவளநாட்டுக் குன்றுசூழ் நாட்டு நாட்டோமும் இக்கோயில் தனாத்தாரோமும்
10. இது பன்மாகேசுவரர் ரட்சை இந்த மருங்கூர் சுந்தரபாண்டிய தேவர்க்கு
11. 13வது ......
12. னால் பொன்னம்பலவன் உய்யவந்த பெருமாளான காங்கேயர்க்குக் காணியாக வி
13. த்துக்குடுத்தது

## 171

இடம் : பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், மருவத்தூர் அழகபுரீசுவரர் கோயில் சோபான மண்டபப் படிக்கட்டு, வாயிற்படி

காலம் : கி.பி. 17ஆம் நூற்றாண்டு

செய்தி : அழகபுரீசுவரர் கோயிலில் சங்கரநாராயண முதலியார், சின்னிய்ய முதலியார் ஆகியோர் செய்த திருப்பணி குறிக்கப்படுகிறது.

### கல்வெட்டு

சங்கர நாராயண முதலியார் சதா சேருவை

சின்னிய்ய முதலியார் சதாசேருவை

இடம் : விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல் ஸ்ரீ நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அரங்கநாதப் பெருமாள் சன்னதிக் கதவு

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

செய்தி : கிருஷ்ண முதலியார், கோயில் கதவு செய்தளித்தமை கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. 1707 மாண்டு பிலவ
2. வருஷம் மார்கழி
3. மாதம் 7 தேதி நல்ல
4. வீரப்ப முதலியார்
5. பேரன் அழகப்ப
6. முதலியார் குமாரர்
7. கிருஷ்ண
8. முதலியார் உபயம்.

## 172

இடம் : பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கீழப்பழுவூர் வடமலேசுவரர் கோயில் இரண்டாம் பிரகார மேற்குச்சுவர்

காலம் : இராசகேசரிபன்மரின் எட்டாவது ஆட்சியாண்டு, கி.பி. 965

செய்தி : அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் படையான இளைய ரணமுகராமனில் ஒரு வீரர் கைக்கோளர் பலதேவன் வயிரி. அவனுக்கும் வெள்ளாளன் கிழவன் நம்பனுக்கும் சண்டை ஏற்பட்டதில் பலதேவன் வயிரி குத்தப்பட்டு இறந்தான். அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் சிறு பழுவூர் திருவாலந்துறை நாயனார்க்கு நந்தா தீபம் வைக்குமாறு கிழவன் நம்பனைக் கேட்டுக் கொள்ள அவன் அதற்காக 90 ஆடுகளைக் கொடையாக அளித்தான்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேரி ப
2. ன்மர்க்கு யாண்டு எட்டாவது அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் படை இளை
3. ய இரணமுகராமனில் கைக்கோளன் பலதேவன் வையிரியை குன்றக் கூற்றத்து மல்லூர்
4. இருக்கும் வெள்ளாளன் கிழவன் நம்பனும் பலதேவன் வயிரியும் தங்களில் உருவிக் குத்தி
5. பலதேவன் வயிரிபட கிழவன் நம்பனை அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார்
6. சிறுபழுவூர் திருவாலந்துறை உடைய மகாதேவர்க்கு இவனைச் சாத்தி ஒரு நொந்தா
7. விளக்கு வையென்ன வைத்த சாவாமூவாப் பேராடு தொண்ணூறு இத்தொண்ணூறு வைச்சேன்
8. பன்மாகேசுவரர் ரட்சை.

## 173

இடம் : பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கீழப்பழுவூர் வடமலேசுவரர் கோயில் வடக்குச்சுவர்

காலம் : முதலாம் இராசராசனின் 12ஆம் ஆட்சியாண்டு: கி.பி. 997

செய்தி : தென்பாளன்பாடி உடையான் ஐயாறன் கானன் பழுவேட்டரையருடைய கைக்கோளன் குஞ்சரமல்லன் முருக்கனைக் குத்தி மரணமடையச் செய்தான். அதன் பொருட்டு சிறுபழுவூர் திருவாலந்துறை மகாதேவர்க்கு இரவும் பகலும் எரிய நந்தாவிளக்கு ஒன்றை ஐயாறன் கானன் வைத்தான்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலை கலமறுத்த கோவிராஜகேசரிபன்மற்கு யாண்
2. டு 12ஆவது குன்றக் கூற்றத்துப் பிரமதேயம் சிறுபழுவூர் திருவாலந்துறை ம
3. காதேவர்கு இன்நாட்டுத் தென்பாளன்பாடி உடையான் ஐயாறன்
4. கானனேன் அடிகள் பழுவேட்டரையர் கைக்கோளன் குஞ்சரமல்
5. லன் முருக்கனைப் படக் குத்த இவனை சாத்தி சந்திராதித்தவல் இரவும் பகலும்
6. எரிய வைத்த திருனந்தா விளக்கு ஒன்றுக்கு நாராயத்தால் நெய் உழக்குக்கு பேரா.......

## 174

இடம் : மதுரை மாவட்டம், மதுரை நகரம் சுந்தரேசுவரர் கோயில் இரண்டாம் பிரகார வடக்குச் சுவர்

காலம் : சடையவர்மன் வீரபாண்டியன் காலம், கி.பி.1324

செய்தி : மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ் பிரமதேசம் கொடிமங்கலமான முடித்தலைகொண்ட பாண்டியச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் அவ்வூரின் கீழ்ப்புறம் இருந்த மாத்தூர் நெடுங்காலமாக காடாகப் பெருமரங்கள் வளர்ந்து எல்லைகள் எல்லாம் அழிந்து கிடந்ததை அவர்களால் திருத்த முடியாமல் விற்க விரும்பினர். அதனை வாது செய்த வாரணீசுரமுடைய நாயனார் கோயில் கைக்கோளரில் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய சோழக்கோனார் என்பவர் விலைக்கு வாங்கினார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமைக்கீத்திக்குமேல் ஸ்ரீ கோச்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 27ஆவது மகரநாயற்று அபரபட்சத்துக் கிருத்திகையும் வெள்ளிக் கிழமையும் பெற்ற உத்திரத்துநாள் மதுரோதயவளநாட்டு மாடக்குளக்கீழ் பிரமதேசம்.

2. கொடிமங்கலமான முடித்தலைகொண்ட பாண்டியச் சதுர்வேத மங்கலத்து மகாசபையோம் உடையார் வாதுசெய்த வாரணீசுரமுடைய நாயனார் கோயில் கைக்கோளரில் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய சோழகோனார்க்கு காணி

3. விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது உடையார் திருவாலவாயுடைய நாயனார் தேவதானமான எங்களூர் கீழ்பிடாகை மாத்தூர் நெடுங்காலம் காடுபற்றி பருமரக்காடாய் வரம்புழிந்து கிடக்கையில் காடுவெட்டி வரம்பிட்டுச் செய்வார்க்கு காணியாக குடுத்த இ

4. ம்மாத்தூர்க்கு எல்லையாவது சூழெல்லைக்குக் கீழெல்லை துவரமான்தூரில் நீர்நக்கலுக்கு மேற்கும் தென்னெல்லை நாகமலைக்கு வடக்கும் மேலெல்லை வல்லபப் பிலாற்றுக்கு கிழக்கும் வடவெல்லை வைகையாற்றுக்கு தெற்கும் இந்நான்லெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செயும் நத்

5. தமும் நத்தப்பாழும் காலும் கண்ணாறும் குளமும் குளப்பரிப்பும் கீழ்நோக்கின கிணறும் மேல்நோக்கின மரமும் மற்றும் எப்பேர்ப்பட்ட சமஸ்தபிராப்திகளில் உடையார் திருவாலவாயுடைய நாயனார் திருநாமத்துக் காணியான ஒன்று பாதி இவர் சண்டேசுவர விலையாகக் கொள்ளுகையில்

6. எங்களொபாதி......செய்ய வேணுமென்று தானத்தார் சொல்லுகையில் இது நெடுங்காலம் காடு பற்றி வரம்பழிந்து பெருமரக்காடாய் கிடக்கையில் இது காடு வெட்டிப் பயிர் செய்ய எங்களால் செயல்படாமல் எங்களொபாதியும் இவர்க்கு விற்று விலைப்பிர

7. மானம் பண்ணிக்குடுத்தோம் இவ்வனைவோமும் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய சோழ கோனார்க்கு இப்படி விற்றுக்குடுத்த இப்பற்றுக்கு இதுவே விலையாவண ஓலையாவதாகவும் இதுவல்லது வேறு விலையாவணச் சிலாவணப் பொருள்மாவறுதிப் பொருள்செல

8. வோலை காட்டவுங் கடவதன்றி விலைக்குற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் மகாசபையோம் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரப்பாண்டிய சோழகோனார்க்கு இப்படிக்கு திருவம்பல நம்பி எழுத்து பிரகஸ்பதி சபையாஜிந:

9. இப்படிக்கு சர்வகிருதுயாஜிந் இப்படிக்கு பெருக்கார நம்பியார் எழுத்து இப்படிக்கு இருங்கண்டி விஷ்ணு பட்டன் எழுத்து இப்படிக்கு நாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு சோலைமலைப் பெருமாள் சம்ஜைக்கு சம்ஜை மாட்டெறிந்தேன் தேவச்சிலைப் பெரு

10. மாள் எழுத்து இவர்கள் சொல்ல இவ்விலைப்பிரமாணம் எழுதினேன் உலகுணிமங்கலத்து இராசகெம்பீர வளநாட்டு இராசகெம்பீரச் சதுர்வேதி மங்கலத்து அழகப்பிரான் சீராமபட்டன் எழுத்து உ.

## 175

இடம் : மதுரை மாவட்டம், மதுரை நகரம் சுந்தரேசுவரர் கோயில் இரண்டாம் பிரகார வடக்குச் சுவர்

காலம் : சடையவர்மன் வீரபாண்டியன் காலம் கி.பி.1324

செய்தி : மேலே கண்ட கல்வெட்டின் தொடர்ச்சியாகவே இக்கல்வெட்டு உள்ளது. மாத்தூரை கைக்கோளர் மாதேவர்அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய சோழ கோனார் வாங்கும்போது அவ்வூரின் பாதி பிராமணக் காணி நீக்கப்பட்டது. மீதிப்பாதியில் கால்பங்கு இறைவன் பெயரிலும் கால்பங்கு வாங்குபவருக்கு உரிய பங்கு என்றும் எழுதப்பட்டது. ஊரில் இவர் பெற்ற பங்கின் விலை 250 புதுக்குளிகைப் பணம். 18 அடிக்கோலால் அளக்கப்பட்ட ஒரு மாநிலத்திற்கு காடுவெட்டிப் பயிர் செய்த நிலத்துக்கு 4 கலம் அடுத்த ஆண்டு 6 கலம், அடுத்தடுத்த ஆண்டுகள் 8,10,12,14 கலம் நிரந்தரமாகப் பின் 15கலம் எனக் கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மற்கீர்த்திக்கு மேல் ஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 27வது கார்த்திகை மாதம் உடையார் திருவாலவாயுடையநாயனார் கோயில் பங்காளர் தேவகன்மி ஸ்ரீமகேசுவரக் கண்காணி

2. செய்வார்களோமும் உடையார் வாதுசெய்த வாரணமுடைய நாயனார் கோயில் கைக்கோளரில் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய சோழ கோனார்க்கு காணி விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது

3. தேவதான திருநாமத்துக்காணி மாடக்குளக்கீழ் முடித்தலைக்கொண்ட பாண்டிய சதுர்வேதிமங்கலத்தில் கீழ்பிடாகை மாத்தூர் நெடுங்காலம் வரம்பழிந்து பருமரக்காடாய் கிடக்கையில் இவற்கு காராண்மைக்காணியாக கற்பூரவிலை கொ

4. ண்டு காணியாக விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்த மாத்தூர்க்கு எல்லையாவது கூழெல்லைக்கு கீழெல்லை துவரைமான் குளத்தில் நீர் நக்கலுக்கு மேற்கும் தென்னெல்லை நாகமலைக்கு வடக்கும் மெலெல்லை முடித்தலைக் கொண்ட பாண்டியசதுர்

5. வேதிமங்கலத்து தென்வடலான கீழைக்கண்ணாறு சீவல்லபப்பிலாற்றுக்கு கிழக்கும் வடவெல்லை வைகையாற்றுக்குத் தெற்கும் ஆக இப்பெரு நான்கெல்லைக்குட்பட்ட நன்செயும் புன்செயும் நத்தமும் நத்தப்பாழும் நாலாங்கண்ணாறும் குளமும் குளப்பரிப்

6. பும்.... கீழ் நோக்கின கிணறும் மேல்நோக்கின மரமும் மற்றும் எப்பேர்ப்பட்ட சமஸ்தபிராப்திகளில் பிராமணர் காணியான ஒன்று பாதி நீக்கி திருநாமத்துக்காணியான பாதியும் காராண்மைக் காணியாக அனுபவிப்பதாக

7. கற்பூரவில்லை நிச்சயித்த புதுக்குளிகை பணம் இப்படி கற்பூர விலையொடுக்கிக் காணியாக குடுத்த இப்பற்றுக்கு வருங்கடமை அந்தராயம் பொன்வரி வினியோகம் வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி சந்திவிக்கிரகப்பேறு ஓலையெழுத்து வினியோகம் த

8. றியிறை தட்டார்ப்பாட்டம் செக்கிறை தட்டொலி இடைவரி இனவரி ஏரிமீன்பாட்டம் இலாஞ்சிணைப்பேறு காணிக்கை கார்த்திகைப் பச்சை ஆனைச்சாலை குதிரைப்பந்தி உட்பட்ட எப்பேர்ப்பட்ட இறைகளுக்கும் கடமை இறுக்கும்படியாவது காடுவெட்டின

9. ஆண்டுக்கு இவ்வூர்ப் பதினெட்டடிக் கோல்படி மாத்தால் நெல்லு நாற்கலமும் இதன் எதிராமாண்டு மாத்தால் அறுகலமும் இதன் எதிராமாண்டு மாத்தால் நெல் எண்கலமும் இதன் எதிராமாண்டு மாத்தால் நெல் பதின்கலமும் இதன் எதிராமாண்டு

10. மாத்தால் நெல் பன்னிரு கலமும் இதன் எதிராமாண்டு முதல் நிலைவரிசை மாத்தால் நெல் பதினைங்கலமும் ஆக ஆண்டுதோறும் பயிர்பார்த்து பயிர்நின்ற நிலத்துக்கு இவ்வரிசைப்படி இறுப்பாராகவும் குறுவைப்பயிர் செய்ய நிலத்துக்கு நடைநீர் பா.........

## 176

இடம் : மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அருவிமலை சிவன்கோயில் வடபுற அதிட்டானம்

காலம் : பிற்காலப்பாண்டியர் காலம்

செய்தி : அழகிய பாண்டியபுரத்துப் பிள்ளான் தெய்வச் சிலையான் ஆன வீரப்ராக்கிரம சிங்கதேவனும், தென்பறப்பு நாட்டுத் திருமோகூர் கோயில் கைக்கோளரும் பிள்ளையார்க்குத் தேவதானமாக நிலக்கொடையைக் கோயில் தானத்தாரிடம் அளித்தனர்.

### கல்வெட்டு

1. திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் துவராபதி நாட்டுப் பாக்குடி மேலாழியாண்ட நாயனார் கோயில் தேவகன்மிகள் உள்ளிட்ட தானத்தார்க்கு அழகியபாண்டிய புரத்து பிள்ளான் தெய்வச்சிலையானான வீரபராக்கிரம சிங்கதேவனும் தென்பறப்பு நாட்டுத் திருமோகூர் கோயில் கைக்கோளனும்
2. நான்கெல்லைக்குள்பட்ட நன்செய் புன்செயும் நீர்நிலமும் நத்தமும் நத்தப்பாழும் குளமும் குளப்பரப்பும் மற்றும் எப்பேர்ப்பட்ட சமஸ்தப் பிராப்திகளும் அஞ்சாவது முதல் இவர்களுக்கு காராண்மையும் தங்கள் பிள்ளையார்க்குத் தேவதானமாக இந்நிலத்துக்குப் பிள்ளையார்க்குக் கடமை மரியாதியாக அளந்து கண்ட நிலத்துக்கு மகேக நாட்டுக் காலா
3. ளாயும் சொல் இப்படி வரியிலார் கணக்கிலும் கழிக்கச் சொன்னோம் இப்படிச் சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டி திரிசூலத் தாபனம் பண்ணிக் கொள்க இவை கப்பலூருடையான் எழுத்து இவை வீரபாண்டியர் காலிங்கராயன் எழுத்து யாண்டு 23 துல்யம் அருளிச் செயல் பாக்குடி மேலாழியாண்ட நாயகர் கோயில் தேவகன்மி உள்ளிட்ட தானத்தார்......
4. சேகர பிள்ளையார்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட பூசைக்கு யாண்டு அனுபவித்து வருகிற அமணன் நான்கெல்லைக் குள்பட்ட நன்செய் நத்தம் நத்தப்பாழும் குளமும் குளப்பரிப்பும் எப்பேர்ப்பட்ட சமஸ்தபிராப்திகள் உள்ளிட்டவைகளுக்கு காராண்மையும் நாயானார்க்குக் கடமை......

## 177

இடம் : மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், திருவாதவூர் திருமறைநாதசுவாமி கோயில் திருச்சுற்றுமாளிகை கிழக்குச்சுவர் வெளிப்புறம்

காலம் : சுந்தரபாண்டியனின் 15ஆம் ஆட்சியாண்டு

செய்தி : கீழவேம்பநாட்டுத் தச்சனூர் அபிமான பூஷணத் தெரிஞ்ச கைக்கோளர் கேசவன் ஆதித்தனான விசயராயன் என்பார் குறிக்கப் பெறுகிறார்.

## கல்வெட்டு

1. க்கு............
2. கற்குடி (சாட்சியு)மாகவும்....... நாற்பதின்.....பதின்ஒன்று நிலம் ஒரு மாவுக்கு பழங்காசு ஐந்து ஐஞ்சுமேனி ஒரு திர(ம)மும்..... கடமை......லமும் வெ........
3. இவ்வரிசைப்படி ஒன்று பாதிக்கு இறு....... ஆக இவ்வரிசைப்படி ஒன்று கா..... இறுப்பதாகவும் வினியோகங்களும் இவர் பொருட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட வினியோகங்களுக்கு நீர்.....போக....புள்ளிபுக்க நிலம்
4. ........நிலத்துக்கு....ஒரு மாவுக்கு இம்மேனிப்படி அரைதிரமம் இறுப்பதாக உடையார் திருமறைநாயனார் காரியவாராய்ச்சியும் இவர்களுக்குக் காராண்மையுமாக ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு பதினைஞ்சாவது முதல்
5. கு.....குடுத்தோம்.......நாடா..........கணக்கப் பண்டாரிகளோம் தேவர்........ வீரபாஞ்சாளர் சோள......சோளதிவாகர பூபாலராஜன் எழுத்து கீழ்வேம்பை நாட்டு தச்சனூர் அபிமான பூஷனத்தெரிஞ்ச கைக்கோளரில் கேசவன் ஆதித்தனான விசையராயனேன் சோழ மண்டலத்து சந்திரலேகையில் உடையாற
6. .......செம்பியன்.....குடுத்து கல்லிலும் செம்பிலும்.........

## 178

இடம் : மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், கருங்காலக்குடி முத்தாலம்மன் கோயில் கருவறை அதிட்டானம் தென்புறம்

காலம் : முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 12ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1263

செய்தி : சுரபிநாட்டு சூழும் அரசர்கண்டன் ஊரவையினர் அவர்கள் ஊரின் தென்பகுதியில் உள்ள பகையனேரியான அழகப் பெருமாள் நல்லூரை மதுரைக் கைக்கோளர் மாணிக்கச் சொக்கர்க்கு விற்றனர். அவர் அந்நிலத்தை அழகப் பெருமாள் விண்ணகர் எம்பெருமானுக்குக் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மற்கீர்த்திக்கு மேல் ஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 12 மீனநாயற்று.......

2. ம் பெற்ற மகத்து நாள் மாடக்குளக்கீழ் மதுரையிலிருக்கும் கைக்கோளரில் இராசாண்டான் மாணிக்க சொக்கனார்க்கு சுரபிநாட்டுச் சூழும் அரசர் கண்டனில் ஊராய் அமைந்த ஊரோம்

3. நாங்கள் எங்களூர் தென்பால் குடிக்காடுப் பகையனேரியான அழகப் பெருமாநல்லூர் விற்றுக்குடுத்த சாதனப்படி.....நான்கெல்லைக் குட்பட்ட.........

4. அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமானுக்கு திருநாமத்துக்காணி இறையிலியாக இந்த மாணிக்கச் சொக்கனார் வடகரைக்குக்கீழ் அருளாளன் வயக்கல் விளையில் இரண்டு உள்ள நிலம்.........

5. க்கு கடமை அந்தராயமும் இந்த மாணிக்கச் சொக்கனார்க்கு காராண்மையும் ஆக இந்த குளத்துக்கு நாம்.....கழித்து இந்நாயனார்க்கு கடமை அந்தராயம் இறுக்க......

6. நிலம் ஒரு மாவுக்கு கரும்பு பெரும்பூ பயிர்பார்த்து பயிர்நின்ற நிலத்துக்கு கடமை அந்தராயம் பொன்வரி வினியோகம் சில்பெருவரி தறிஇறை.....

## 179

இடம் : மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், திருக்காக்குடி திருக்கோடீசுவரமுடையார் கோயில் கருவறை மேற்குப்புறச்சுவர்

காலம் : சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் காலம்: கி.பி. 1320

செய்தி : முத்தூற்றுக் கூற்றத்து கூற்றத்தூர் திருப்புனவாசல் கைக்கோளர் மறக்க ஒண்ணாதான் என்பவர் நிலத்தை விலைக்கு வாங்கித் திருக்கோடீசுவரமுடையார்க்குத் கொடையாக அளித்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ பராக்கிரம பாண்டியதேவற்கு 5வது மகரநாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் சுரபி

2. னாட்டுத் திருக்காய்குடியில் உடையார் திருக்கோடீசுவரமுடைய நாயனார் ஆதிசண்டேசுவரதேவர் அருளால் திருதாச மயேசுர கண்காணி செய்வார்களும் தேவகன்மிகள் கோயிற்கணக்கு இவ்வனைவோரும் முத்தூற்று

3. க்கூற்றத்து திருப்புனவாசல் கைக்கோளரில் மறக்க ஒண்ணாதான் திருப்புனவாசலுடையாற்கு ஆதிசண்டேசுவரர் அருளால் குளவிலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது முன்னா

4. ள் சுரபினாட்டு நாட்டவர் பக்கல் நாட்டா.....பாதியாக விலை கொண்டு இன்னாயனாற்கு திருநாமத்துக்காணியான கன்.......விற்பதாக இசைந்து விற்றுக் குடுத்ததுக்கு பெருநான்கெல்லை ஆவது கீழ்பாற்கெல்லை நெடும

5. டைக்குளத்து நீர்கோவையில் மேற்குன்றத்து திருச்சூலத் தாபனத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை நாட்டார் மங்கலத்து வடபாற்கெல்லை......சூலத்தாபனத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை.....மாக குளத்துக்கு.......

6. லையில் னிற்கிற திருச்சூலத்தாபனத்துக்கு கிழக்கும் கோடனேரி எல்லைக்கு தெற்கும் வடபாற்கெல்லை...... தக்காய்க்குடி.......ாறைக்கும்......சூலதாபனத்துக்குத் தெற்கு ஆக......

7. இசைந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட நத்தமும் நத்தப்பாழும் குளப்பரப்பும் காலுங் காலணையுங் கீணோக்கிய கிணறும் மேனாக்கிய மரமும்....... தேன்படு பொதும்பும் உடும்போடியும் ஆமை தவழியும் ஸ..............

8. மற்றுயெப்பேற்பட்ட சமத்தப்பிராப்திகளும் விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் இப்படிக்கு சண்டேசுரதேவர் அருளால் விற்றுக்குடுத்த குளத்துக்கு எம்மிலிசைந்த விலை நிச்செயித்த அன்றாடு நற்காசு வராகன் பண...........

9. ம் 205 இப்பணம்..........த்தவர்களும் தேவகன்மி கோயிற்கணக்கரோம் இப்படி நாங்கள் ஆதிசண்டேசுரதேவர் அருளால் விற்றுக்குடுத்த பெருநான்கெல்லைக்குள்பட்ட இக்........க்கு கடமை விநியோகம் அந்தராயம் பொ

10. ன்வரி பஞ்சுபீலி சந்துவிக்கிரகப்பேறும் மற்று எப்பேர்ப்பட்ட கடமை வினியோகங்களும் ஆண்டொன்றுக்கு வாடாக்கடமையாக இறுப்பதான இராசி 5 முனைப்பணம் 160 இப்பணநூற்றருபதும்

11. தேவதானம் கோயிற்கணக்கர் கையால் தரவு கொள்ளக்கடவராகவும் இப்படி சம்மதித்து ஆதிசண்டே........ற்றுக்குடுத்த பெருநான்கெல்லைக்கு உள்ளகப்பட்ட இந்தான..........

## 180

இடம் : மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், திருவாதவூர் ஏரிமலையில் உள்ள கல்வெட்டு

காலம் : சுந்தரபாண்டிய தேவன் ஆட்சியாண்டு 9; கி.பி. 1225

செய்தி : மாடக்குளக்கீழ் மதுரையில் திரு அந்திக்காப்பு வேளாளர் கைக்கோளரில் செயமுடையான் விரதமுடித்தானான விக்கிரம சிங்கதேவன் திருவாதவூர் ஏரியில் மடை (மதகு) அமைத்தார். அந்த மடை இவர் பெயரில் விக்கிரம சிங்கன் மடை என்று அழைக்கப்பட்டது. வேளாண்மைக்குரிய மடை அமைத்த காரணத்தால் கைக்கோளருக்கு வேளாளர் அடைமொழி கொடுக்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. மாறபன்மரா
3. ன திரிபுவனச் ச
4. க்கரவத்திகள் சிரி
5. சோணாடு வழங்
6. கியருளிய சிரி
7. சுந்தரபாண்
8. டிய தேவர்க்கு யாண்
9. டு ஒன்பதாவது
10. மாடக்குளக்கீழ் ம
11. துரையில் திருவ
12. ந்திக்காப்பு வேளா
13. ளர் கைக்கோளரில்
14. செயமுடையான் வி
15. ரதமுடித்தானான வி
16. க்கிரம சிங்க தேவ
17. ன் எடுத்த மடை
18. இம்மடையின் பே
19. ர் விக்கிரம சிங்க
20. தேவன்.

## 181

இடம் : விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், அருப்புக்கோட்டை சொக்கநாதர் கோயில் அர்த்தமண்டபத் தென்சுவர்

காலம் : குலசேகரதேவர் 18ஆம் ஆட்சியாண்டு: கி.பி 1207

செய்தி : வெண்பில் நாட்டு செங்காட்டிருக்கை இடத்துவளி நாயனார் குறள்மாணி ஈசுவரமுடையார் கோயிலில் திருமடை விளாகத்தில் இருக்கும் கைக்கோளரில் குழைஞாரன் சங்கனான புரவரி மாராயன் இக்கோயில் அர்த்தமண்டபத்தில் திருவாயில் திருநிலைகாலைக் கொடையாக அளித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
2. ஸ்ரீ குலசேகரதேவர்க்கு யாண்டு 13வதின் எதிர் 5வது வெண்பில் நா
3. ட்டுச் செங்காட்டிருக்கை இடத்துவளி நாயனார் குறள்மாணி
4. ஈசுவரமுடைய நாயனார் திருமடைவிளாகத்தில் கைக்கோளரில்
5. குழைஞாரன் சங்கனான புரவரி மாராயன் இன்னாயனார் கோயிலில் அர்த்த
6. மண்டபத்தில் திருவாயில் திருநிலைகால் வெட்டுவித்தான் இது இவன் தன்மம் ஸ்வஸ்திஸ்ரீ

## 182

இடம் : விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், திருவக்கரை சந்திர மௌலீசுவரர் கோயில் முதல் பிரகாரக் கோபுரத்தின் மேற்குப்புறம்

காலம் : சுபகிறிது, ஆவணி 28

செய்தி : திருவக்கரையில் ஏற்பட்ட கலகத்தில் அவ்வூர்க் கைக்கோளர்கள் வேற்றூர் சென்றுவிட்டனர். திருமடை வளாகம் குடிகள் இல்லாமல் இருந்தது. நரசாபண்டிதர், லிங்கா ரெட்டியார், நாட்டார் ஆகியோர் கூடி கைக்கோளர்களைத் திருமடை விளாகத்தில் குடியேற்றி மாதம் தறி ஒன்றுக்குக் கால்பணம் மட்டும் வரி நிர்ணயம் செய்து இனிமேல் வரும் ஆட்சியாளர்கள் எல்லோரும் அவ்வாறே வரிவாங்க வேண்டும் என்று எழுதிக் கல்வெட்டுப் பொறித்தனர்.

### கல்வெட்டு

1. சுவகிறிதி வருஷம் ஆவணிமாதம் 28தேதி ஸ்ரீமது ராசநரச ஸ்ரீ நரசா பண்டிதர் நாட்டு லிங்காரெட்டியார் நாகரெட்டியார் மத்துமுண்டான நாட்டாரும் கைக்கோளர்ச் சிகலத்தில்
2. பெறப்பட்டுப் போயி ஊர் குடி ஏறாமல் யிருக்கையில் நிண்ணயம் பண்ணினது மாதம் தறி 1க்குக் கால் பணமாகக் கட்டளையிட்டோம் இந்தப்படிக்கு பூமியும் ஆகாசமும் உள்ள மட்டுக்கெல்லாம் வருகிற
3. துரைகள் எல்லாரும் இந்தப்படி நடப்பிக்கக் கடவராகவும் யிதுக்கு யாதாமொருவர் தப்பிதம் பண்ணினால் அவர்கள் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலே போவாராகவும்
4. யிந்த எழுத்து ஊர்க்கணக்கு நல்லாபிள்ளை மச்சினன் அழகப்பிள்ளை எழுத்து.

## 183

இடம் : விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் அகஸ்தீசுவரர் கோயில் மேற்குச் சுவர்

காலம் : அரியண உடையார் (இரண்டாம் அரிகரர்); கி.பி. 1389

செய்தி : அகத்தீசுவரம் உடைய நாயனார் திருமடை விளாகத்தில் இருந்த கைக்கோளக் குடிகள் வரி செலுத்த முடியாமல் வேற்றூர்க்கு ஓடிப்போய் விட்டனர். கோயிலில் பூசை நடைபெறவில்லை. கோயிலும் அடைபட்டது. ஊரவரும் தானத்தாரும் மீண்டும் திருமடை விளாகத்தில் கைக்கோளர்களைக் குடியமர்த்தி தறிக்கடமை. வாசல்பணம், சோடி, சூலவரி, வால்வரி, தலையாரிக்கம், நத்தவரி, பழவரி, புதுவரி, பல காணிக்கைக்கு 4 பணமும், நூல் ஆயத்திற்கு ஒரு பணமும் கொடுக்க வேண்டும் என்ற நிர்ணயம் செய்தனர்.

### கல்வெட்டு

1. ஸ்ரீமன் அரியண உடையார்க்குச் செல்லாநின்ற விப வருஷம் பங்குனி மாதம் பத்தாந்தியதி உலக்கையூரான இராசமகேந்திர நல்லூர் ஊரவரும் தானத்தாரும் இவ்வூர் நாயனார் திரு அகத்தீசுவர
2. முடைய நாயனார் திருமடை விளாகத்தில் கைக்கோளற்கு கல்லு வெட்டிக்குடுத்தபடி இவர்கள் இறை ஆற்றாமல் ஓடிப்போய் திருமடவிளாகமும் பாழாய் நயினாரும் பூசை கொள்
3. ளாமல் கோயிலுமடைத்துக் கிடக்கையில் இந்நாள் முதல் திருமடை விளாகத்திலே குடியும் புகுந்து தறியும் இட்டு நெய்யக் கடவார்களாகவும் கடமை கொள்ளு
4. மிடத்து சுக்கில வருஷம் முதல் சந்திராதித்தர் வரைக்கும் செல்ல ஆண்டு ஒன்றுக்கு தறி ஒன்றுக்குக் கொள்ளும் தறிக்கடமை வாசல்பணம் சோடிசூலவரி
5. வால்வரி தலைஆரிக்கம் நத்தவரி பழவரி புதுவரி பல காணிக்கையும் உட்பட சகலாயங்களுக்கும் குத்தகை ஆக கொள்ளும் பணம் 4ம் நூல் ஆயத்துக்குக் கொள்ளும்
6. பணம் 1ம் ஆக பணம் 5இப்பணம் அஞ்சும் ஒழிய ஏறக் கொண்டாருண்டாகில் பிரமகத்தியார் தோஷம் ஹத்தியார்.

## 184

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சம்பை சம்புநாதர் கோயில் மேற்குச்சுவர்

காலம் : அச்சுததேவ மகாராயர் காலம்: கி.பி. 1532

செய்தி : சண்பை திருத்தோன்றி ஆளுடையார் தேவதான ஊரான சண்பையில் உள்ள கைக்கோளச் செட்டிகள் கோயில் வளாகத்தில் உள்ள பெருங்கற்சூல பர்வதம்மாள் சீடரான காளத்தி ஆண்டார் மடத்தின் நிர்வாகத்திற்காக குடிக்கு ஒரு பணமும், சிறுகுடிக்கு அரைப்பணமும், திருமணத்திற்கு ஒரு பணமும் கொடுக்க வேண்டும் என நிர்ணயம் செய்தனர்.

### கல்வெட்டு

1. சுபமஸ்து சுவத்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் கெசவேட்டை கண்டருளிய வீரப்பிரதாபன் நரசிங்க
2. தெய்வகுமார அச்சுதையதெய்வ மகாஇராயர் பிருத்வி ராச்சியம் பண்ணி அருளாநின்ற சபாப்தம் 1554 இதன்மேல் செல்லாநின்ற நந்தன சம்வத்சரத்து மிதுன ஞாயிற்று பூர்வபட்சத்துத் தெசமியும் அத்தமும்
3. பெற்ற சோமவாரத்துநாள் பெண்ணை வடகரை வாணகோப்பாடி நாட்டில் சண்பை உடையார் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் தேவதானம் ஆன சண்பை ஆன வீரராசேந்திர சோழபுரத்து தானத்தார் கைக்கோள
4. செட்டியள் கோயில் சீர்மையில் உள்ள பெரும்கற்சூல பர்வதம்மாள் காத்தயர் சிஷ்யன் காளத்தி ஆண்டார் மகதமண்டலம் சிவனுக்கு நம்முடைய கோயில் சீமையான சண்பையும் மற்றும் உண்டான கிராமம் பலபட்டடையும் இடங்கை வலங்
5. கை தொண்ணூற்றுஎட்டு சாதியும் ஆகவும் காளத்தி ஆண்டார் மடத்தில் நடக்கும் நிருவாகத்துக்கு கட்டளை இட்டபடிக்குக் குடிக்கு ஒரு பணமும் சிறுகுடிக்கு அரைப்பணமும் கல்யாணத்திற்கு ஒரு பணமும் இது சந்திராதித்தவரையும் நடத்தக்
6. கடவோமாகவும் இதுக்கு அகுதம் பண்ணினவன் கங்கைக்கரையில் காராம்பசுவையும் தன்னுட தாயி தகப்பனையும் குருவையும் கொன்றவன் பாவத்திலே போகக்கடவானாகவும்,

## 185

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருவெண்ணை நல்லூர் வைகுந்தப் பெருமாள் கோயில் கருவறை முன்மண்டபக் கிழக்குச் சுவர்

காலம் : கோப்பெருஞ்சிங்கனின் எட்டவாது ஆட்சியாண்டு, கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : திருவெண்ணைநல்லூர் வைகுந்தப் பெருமாள் கோயில் கைக்கோள முதலிகளில் திருமலை அழகியானான வீரகள வீரப்பல்லவரையன் இக்கோயில் சுரபி மன்றாடி மணவாளக்கோன் வசம் சாவா மூவாப் பசுவாக ஐந்து பசுக்கள் கொடையளித்தார். அவை மூலம் நாள்தோறும் 2¾ நாழி பால் கொடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச் சக்கரவத்திகள் அழகியசீயன் கோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு 8வது திருவெண்ணை நல்லூர் ஸ்ரீ வைகுந்தப் பெருமாள் கோயில்.......
2. கைக்கோள முதலிகளில் திருமலை அழகியானான வீரகள வீரப்பல்லவரையன் இக்கோயில் சுரபி மன்றாடிகளில் மணவாளக்கோன் பக்கல் வைத்த சாவா மூவாப்பசு
3. 5இப்பசு அஞ்சுக்கும் நாளொன்றுக்கும் அருமொழி தேவன் நாழியால் 2¾ பால் சந்திராதித்தவரை செல்லக்கடவதாகக் கல்வெட்டிக் குடுத்தோம்.

## 186

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சித்தலிங்கமடம் வியாக்கிரபாதேசுவரர் கோயில் மேற்குச்சுவர்

காலம் : இராசநாராயண சம்புவராயர் ஆட்சியாண்டு 20; கி.பி. 1358 சனவரி 10

செய்தி : திருப்புன்கூர் மகேசுவரரில் புங்கூர் கிழான் தவப்பெருமாளான விசுவநாத தேவர் திருப்புலிப்பகவர்க்கு தேவதானம் நிலம் அளித்திருந்தார். அந்நிலம் தேவதானத்திலிருந்து நீக்கப்பட்டதால் 17 ஆண்டுகள் அரசுவரி செலுத்தப்பட்டது. 18ஆம் ஆண்டில் மீண்டும் தேவதானமாக ஓலை அளிக்கப்பட்டது. இதை அக்கோயில் பொன்வாசி கொண்டான் திருக்காவணத்தில் மகேசுவரர், தானிகர், கைக்கோளர் ஆகியோர் கூடி செயல்படுத்தியமை கூறப்படுகிறது. கைக்கோளர் கோயில் நிருவாகியாக இருந்துள்ளனர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் சம்புவராயர்க்கு யாண்டு 20
2. மகர நாயற்று பூர்வபட்சத்து திதிகையும் புதனும் பெற்ற திருவோணத்து நாள் இராசாதிராச
3. வளநாட்டு குறுக்கைக் கூற்றத்து பிரமதேசத்து சிற்றிங்கூர் உடையார் திருப்புலிப்பகவ நாயனார்
4. கோயிலில் பொன்வாசி கொண்டான் திருக்காவணத்து ஆதிசண்டேசுவர தேவர் அருளிச்செயல்படிக்கு
5. ஸ்ரீமகேவரரும் ஸ்தானிகரும் கைக்கோளரும் நிறைவற நிறைந்து குறைவறக்கூடி திருப்புன்கூரில்
6. மகேசுவரரில் புங்கூர் கிழான் தவப்பெருமாளான விசுவநாத தேவர் இந்நாயனார்க்கு பழந்தேவதானமாய்
7. கல் நாட்டான் பழங்காலுக்கு மேற்கு உட்பட்ட நிலம் திறப்பில் கூடி பதினேழாவது வரை இராசகரம் இறுத்துப்
8. போதுகையில் பதினெட்டாவது முதலுக்கு முதல் துடங்கி இறையிலிக்குத் திருமுகம் வாங்கித் தருகையில் ஆதிசண்டேசுவர தேவர்

9. அருளிச்செயல்படிக்கு அனைவரும் பிரிப்பட்டு பல திருக்கையொட்டியும் இதுக்கு அடைத்த
10. நாச்சியார் திருக்கையொட்டிய தென்னருகு தெருவில் நாயனார் கோயிலுக்குத் தென்மேற்கு
11. ...க்கோலும் இவர்க்குக் காணியாவதாகவும் யித்திருக்கையொட்டிக்கு படி தரப்படி நெல் 30க்கு திருமுன் ஒரு பதக்கு
12. நெல் 5 கலம் நீக்கி உள்ளூர் திருநாமத்துக்காணி முதல் யிந்த இறையிலியில் காணிச்சவிதம் அடைத்த வதிக்கு
13. ....ரையில் சூலக்காலுக்கு வடக்கு வடக்கில் மண்ணுடையான் தடி ஒன்று குழி 150ம் புறத்த கால்தடி 3னால் குழி 480ம் பாயன்
14. தடி ஒன்று ஆகத்தடி 5 தடிகள் கார் பிசானம் நிலம் இருமாவரையாக இத்திருக்கையொ
15. ட்டியும் இம்மனையடி இவர்க்குக் காணியாவதாகவும் இவ்வகைப்படி காணியாட்சி உள்ளவை தானாதி தன்ம
16. க் கிறையங்களுக்கு விற்றொற்றிபடிக்கு கிறையங்களுக்கு உகந்ததாவதாகவும் இத்திருக்கை யொட்டிய மனை சீவித நிலம்
17. இவ்விலைப்படி காணியாட்சி கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளும்படிக்கு சந்திராதித்தவரை செல்ல தந்தோம்.
18. பெருமாள் விசுவநாத தேவர்க்கு அருளிச்செயல்படிக்கு ஸ்ரீ மாகேசுவரரும் தானத்தாரும் கைக்கோளரும் அனைவரோம்
19. இது பன்மாகேவரர் ரட்சை.

## 187

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சித்தலிங்க மடம், வியாக்கிரபாதேசுவரர் கோயில் கிழக்குச் சுவர்

காலம் : முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், கி.பி.1263 மார்ச்17

செய்தி : மலாட்டுக் குறுக்கைக் கூற்றத்து பிரமதேயம் சிற்றிங்கூர் ஆளுடையார் திருப்புலிப்பகவர் சன்னதியில் சிற்றிங்கூர் கைக்கோளர் ஒருவர் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரைப் பிரதிட்டை செய்தார். அதற்கு கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அரிந்தவன் பல்லவரையர் அளித்த 2000 காசிலிருந்து வழிபாடு நடத்தப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ
2. சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 13வது மீன நாயற்று பூர்வ பட்ச
3. த்து சனிக்கிழமையும் அட்டமியும் பெற்ற ரோகிணிநாள் ராசராச வளநாட்டு
4. மலாட்டுக் குறுக்கை கூற்றில் பிரமதேசம் சிற்றிங்கூர் ஆளுடையார் திருப்புலிப்பகவ
5. நாயனார் சன்னதியில் இவ்வூர் கைக்கோளரில்......
6. யன் ஏறியருளப் பண்ணின ஆளுடைய பிள்ளையார்க்கு அமுது செய்தருள
7. முன்னாள் கோப்பெருஞ்சிங்க தேவர் நாளில் அரிந்தவன் பல்லவரையர்
8. பக்கல் உபையமாகக் கைக்கொண்ட காசு 2000 இக்காசு இரண்டாயிரத்துக்கும்
9. பொலிசைக்கு உடலாக நாங்கள் அமுது செய்விக்கும் நாள் ஒன்றுக்கு
10. இருநாழி அரிசியும் வேண்டும் கறியமுது வெஞ்சனமும் படைத்து
11. சந்தியிலே திருமந்திர போனகமாக அமுது செய்தருளப் பண்ணிக்கொ
12. ண்டு திருமஞ்சனமும் பண்ணி திருச்சுற்றாலை புல்லும் தெத்தி
13. சந்திராதித்தவரை செய்வதாக இந்தக் காசு கைக்கொண்டோம் இக்கோயில் நாற்பது
14. வட்டத்துச் சிவபிராமணரோம் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 188

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், அரகண்டநல்லூர் ஒப்பிலாமணீசுவரர் கோயில் கருவறை முன்மண்டப மேற்குச்சுவர்

காலம் : கோப்பெருஞ்சிங்கனின் 4ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : திருக்கோயிலூர்க் கைக்கோளர் நல்லார்க்குநல்லான் கூத்தன் அரகண்டநல்லூர் ஒப்பிலாமணீசுவரர் கோயிலுக்கு 42 (பலம்) எடையுள்ள கலசப்பானை ஒன்று அளித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க
2. தேவர்க்கு யாண்டு நாலாவது திருக்கோவலூர்க் கைக்கோ
3. ளன் நல்லார்க்குநல்லான் கூத்தனேன் இட்ட அபிஷேக கல
4. சப்பாநை இடை 42 இது மக்கமக்கள் அழிவு சோர்ந்து
5. குடுக்கக்கடவோமாக கல்வெட்டிக்குடுத்தேன் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 189

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருப்பாலைப்பந்தல் மத்தீசுவரநாதர் கோயில் திருச்சுற்றுத் தளம்

காலம் : கி.பி. 14ஆம் நூற்றாண்டு

செய்தி : திருப்பாலைப்பந்தல் மத்தீசுவரநாதர் கோயில் திருவாசலை பாண்டிமண்டலத்து வேம்புநாட்டுத் திருநெல்வேலி திருமேற்றளித் தெருவிலிருக்கும் கைக்கோளசெட்டி குலசேகரப் பல்லவரையன் மகனும், மருமகனும் அமைத்தனர்.

### கல்வெட்டு

1. திருவால் திருப்
2. பணி செய்தார் பா
3. ண்டி நாட்டில்
4. வேம்பு நாட்டில் திரு
5. நெல்வேலியில் திரு
6. மேற்றளித் தெருவி
7. ல் கைக்கோள செட்
8. டி குலசேகரப்ப
9. ல்லவரையர் மகனா
10. ர் மருமகனா
11. ர்.

## 190

இடம் : விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், எயில்மலைக்குப் போகும் வழியின் இடப்புறம் நடப்பட்டுள்ள கல்

காலம் : பிலவங்க, தை 15

செய்தி : திருமடை வளாகத்தில் சன்னதியில் கிழக்குத் தெருவும், தெற்குத் தெருவும் இணைக்கப்பட்டு ஸ்ரீபண்டாரிநாயகப் பெருந்தெரு என்று அமைக்கப்பட்டது. அப்பெருந்தெருவில் குடியேறும் கைக்கோளக் குடிகள் முதல் வருடம் தறி ஒன்றுக்கு ஒரு பணமும், இரண்டாவது வருடம் இரண்டு பணமும், மூன்றாவது வருடம் மூன்று பணமும் செலுத்தினால் போதும். மற்ற வரிகளில் பாதி செலுத்த வேண்டும்.

### கல்வெட்டு

1. பிலவங்க வருஷம் தை மாதம்
2. 12தியதி எயில் திருமடைவளாக
3. த்தில் சன்னதியில் தேர்முட்டிக்குக் கிழ
4. க்குத் தெருவும் தெற்குத் தெருவும் ஆன
5. தெரு தேவதானம் உள்ளமட்டும் ஸ்ரீ
6. பண்டாரி நாயகப் பெருந்தெரு ஆக
7. கட்டுவிக்கையில் இந்த தெருவில் ஏ
8. றும் கைக்கோளக் குடிக்கு சகல ஓ
9. பாதியும் உள்படக் குடி ஏறி வருஷத்துக்கு
10. தறி ஒன்றுக்கு பணம் 1 இதுக்கு எதிராம் ஆண்
11. டைக்கு பணம் 2 இதன் எதிராமாண்டைக்குப் பணம் 3
12. என்றென்றைக்கும் இம்மதிகாரி கொ
13. ள்ளக்கடவதாகவும் உள்ளுபாதிக்கும் இன
14. வரிக்கும் ஆயத்துக்கும் ஊரற்ற மதிகாரி
15. யில் ஒன்று பாதி கொள்ளக்கடவதாகவும்
16. சந்திராதித்தவரையும் இம்மதிகாரி கொள்ளக்
17. கடவதாகவும் இதுக்கு அகுதம் பண்ணி
18. னவர்கள் கெங்கைக்கரையில் காராம்
19. பசுவைக் கொன்றவன் பாவத்திலே போக
20. க்கடவானாகவும்.

## 191

இடம் : விழுப்புரம் மாவட்டம், கோலியனூர், வாலீசுவரர் கோயில் கிழக்குச்சுவர்

காலம் : இராநாராயண சம்புவராயனின் பத்தாம் ஆட்சியாண்டு

செய்தி : கோலியனூர் திருவாலீசுவரமுடையார் கோயில் திருமடை விளாகத்தில் இருக்கும் கைக்கோளரில் அகிலாத்திரைதேவர் மகன் திருமேனி அழகியாரான நாற்பத்தெண்ணாயிர மாராயர் ரிசபதேவர் கோயில் பலிபீடம், திருவாசல் இவைகளை அமைத்தார்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இராசநாராயண சம்புவராயர்க்கு யா
2. ண்டு 10வது கோலியபுரநல்லூர் நாயணார் திருவாலீ
3. சுரமுடைய நாயனார் திருமடைவளாகத்தில் இருக்கும் கைக்கோ
4. ளரில் அகிலாத்திரைதேவர் மகன் திருமேனி அழகியாரான நாற்
5. பத்தெண்ணாயிர மாராயர் செய்த திருப்பணி இஷபதேவர் கோயி
6. ல் பெலிபீடமும் திருவாசலும் நாற்பத்தெண்ணாயிர மாராயன் தன்மம்.

## 192

இடம் : விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், சேந்தமங்கலம் ஆபத்சகாயேசுவரர் கோயில், மகாமண்டபத் தென்புறச்சுவர்

காலம் : கோப்பெருஞ்சிங்கதேவனின் ஒன்பதாவது ஆட்சியாண்டு, கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : திருவெண்ணைநல்லூர் கைக்கோளர் திருமலை அழகியான் வீரவீரப்பல்லவரையன் மாசிமாதம் சேந்தமங்கலம் வாணிலைகண்ட வீரீச்சுரமுடையார் கோயிலுக்கு 32 பசுக்களையும், ஒரு ரிசபத்தையும் கொடையாக அளித்தார். அமாச்சி பொன்னன், படியன், ஆட்கொண்டான், கங்கைக்கோன் ஆகியோர் அவைகளைப் பாதுகாத்துக் கோயிலுக்கு நாள்தோறும் உழக்கு நெல் அளிக்க வேண்டும்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச் சக்கரவத்திகள் சீ கோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு ஒன்பதாவது
2. சேந்தமங்கலத்து உடையார் வாணிலைகண்ட வீரீசுரமுடைய நாயனார்க்குத் திருவெண்ணைநல்லூர்க்
3. கைக்கோளரில் திருமலை அழகியான் வீரவீரப் பல்லவரையனேன் இன்னாயனார்க்கு மாசிமா
4. தம்முதல் திருநொந்தாவிளக்குக்கு விட்ட பசு முப்பத்திரண்டும் இஷபம் 1 அதிகை நாயகன் நாழி
5. யாலே நாளொன்றுக்கு உழக்கு நெய் சிவப்பிராமணர் வசமே திருமடைப் பள்ளியிலே சந்
6. திராதித்தர்வரை அளக்க கடவதாக அமாச்சி பொன்னனும் படியனும் ஆட்கொண்டானும் கங்கைக்
7. கோன் உள்ளிட்டார் வசமே காட்டிக் குடுத்தேன் இது பன்மாகேசுவரர் ரட்சை.

## 193

இடம் : விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், திண்டிவனம் பக்தபாராதீசுவரர் கோயில் கருவறை முன் மண்டபத் தெற்குச்சுவர்

காலம் : முதலாம் இராசநாராயணனின் 18ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1355

செய்தி : அரசர் ஆணைப்படி திருக்கவுரீசுவரமுடைய நாயனார் திருக்கோயில் திருப்பணிக்கு கைக்கோளர் நூலாயம் கொடுக்க வேண்டியதில்லை என்று கல்வெட்டு வெட்டப்பட்டது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் சம்புவராயர்க்கு யாண்டு பதினெட்டாவது
2. பங்குனிமாதம் பன்னிரண்டாந்தியதி கிடங்கிலான இராசேந்திரசோழ நல்லூர் திருக்கவுரீசுவரமுடைய நாய
3. னார்க்குத் திருப்பணிக்குத் தம்பிரானார் குடுத்தருளின திருமுகப்படிக்கு இவ்வூர் கைக்கோளர் பேரால் நூலாய
4. ம் செட்டிகள் வணிகர் சேனையங்காடிகள் இவர்கள் பேரால் ஆயமும் சந்திராதித்தவரையும்
5. சர்வமானியம் ஆன அளவுக்கு இப்படிக்குச் சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் இப்பற்று ஆயத்துக்குக் கட
6. வ அரசூருடையான் தெண்ணாயக்கனேன் இப்படிக்கு தெண்ணாயக்கனேன் எழுத்து.

## 194

இடம் : வேலூர் மாவட்டம், வாலாசாபேட்டை வட்டம், திருப்பாற்கடல் கரபுரீசுவரர் கோயில் முதல் பிரகாரச் சுவர்

காலம் : வீரகம்பண்ண உடையார்: கி.பி. 1369

செய்தி : திருக்கரபுரமுடைய மகாதேவர் கோயிலில் மூலவரை எழுந்தருளச் செய்து திருமடைவளாகத்து வருவாயை இறைவனுக்கு அளிக்க ஸ்ரீமாருத்திரர், ஸ்ரீமகேசுவரர், கைக்கோளர் ஆகியோர் கூடிச் செய்த முடிவு கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் பாஷைக்கு தப்புவராயர் கண்டன் வீர பொக்கண உடையார் குமாரர் வீரகம்பண்ண உடையார்க்குச் செல்லாநின்ற சகா
2. ப்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்றின்மேல் மேஷ நாயிற்றுப் பூர்வபட்சத்து நவமியும் சனிக்கிழமையும் பெற்ற அத்தத்து நாள்ஜ
3. யங்கொண்டசோழ மண்டலத்து படுவூர்க் கோட்டத்துக் கரைவழி திருப்பாற்கடல் உடையார் திருக்கரபுரமுடைய நாயனார் கோ
4. யில் முதலியாரை எழுந்தருளப் பண்ணுகைக்கு இந்நாயனார் திருமடைவிளாகம் திருநாமக்காணிக்கு பூறுவத்தில் காணியாக கால்வழி
5. இக்கோயிலில் ஸ்ரீமாருத்திரர் ஸ்ரீமகேசுவரர் கைக்கோள முதலிகளும்.....மண்ட
6. பத்து நிறைவற நிறைந்து குறைவறக் கூடி சண்டேசுவரப் பெருவிலையாகக் குடுத்த பரிசாவது.....

## 195

இடம் : வேலூர் மாவட்டம், வாலாசாபேட்டை வட்டம், திருப்பாற்கடல் கரபுரீசுவரர் கோயில் முதல் பிரகாரச் சுவர்

காலம் : வீரகம்பண்ண உடையார் கி.பி.1372

செய்தி : சயங்கொண்ட சோழமண்டலத்து படுவூர்க் கோட்டத்துத் தனியூர் காவிரிப் பாக்கமான விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலத்தார் உள்ளிட்ட மகாசபையார் கூடித் திருப்பாற்கடல் கைக்கோள முதலிகட்கு அளித்த உரிமை பற்றிய கல்வெட்டு.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் ஸ்ரீவீர பொக்கண
2. உடையார் குமாரர் ஸ்ரீ வீரகம்பண உடையார்க்குத் செல்லாநின்ற சகாப்தம் 1294க்கு மேல் பரிதாபி
3. வருஷம் கன்னி நாயற்று பூர்வபட்சத்துச் சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற மூலத்து நாள் ஜயங்
4. கொண்ட சோழமண்டலத்து படுவூர்க் கோட்டத்துத் தனியூர் காவிரிப்பாகக்கமான விக்கிரமசோழச் சதுர்வேதிமங்
5. கலத்து பட்டர்களும் விசிட்டர்களும் உள்ளிட்ட மகாசபையோம் எம்மூர்த் தென்பிடாகை எதிரிலி சோழவிளாகம்
6. எம்மூருடையார் திருக்கரபுரமுடைய நாயனார் கோயிலில் ஸ்தானிகரில் பரமேஸ்வரபட்டர் தேவர்கண்டர்க்கும் மேற்படி நல்லூராண்டான் விநாயகப்பட்ட
7. ருக்கும் பொன்னூர் பொன்னுழான் மல்லிநாதர் தந்த காசு வகை ஒன்றும் இவ்வூரில் கைக்கோள முதலிக்கு எனக்கு நல்லபெருமாள்
8. சக்கரவத்திகள்......திருவேகம்பமுடையான் வீரகங்க.......நாயனார் தொண்டைமானார் ............

## 196

இடம் : வேலூர் மாவட்டம், ஆர்க்காடு வட்டம், ஆர்க்காடு அருகில் உள்ள பஞ்சபாண்டவ மலைப்பாறை

காலம் : நள ஆண்டு, பங்குனி 1

செய்தி : அனேபதங்கா உடையார் கோயில் தானத்தார் ஐவர் சேர்ந்து கோயில் கைக்கோளர் வேணாவுடையார்க்கும், ஆனைஉரித்த மாராயர்க்கும், நாற்பத்தெண்ணாயிரப் பல்லவரையர்க்கும் காணிநிலம் ஆயிரத்து நானூறு குழி காணியாக விட்டனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ நள சம்வத்சரத்துப் பங்குனி மாதத்து ஒருநாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயில்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து ஆளுடையார் திரு அனேபதங்கா உடைய நாயனார் கோயில் தானத்தாரோம் காக்குநாயகன் ஆன கம்பத்தரசு பட்டனும் திருமஞ்சனமழகியான் செங்கதிர்ச் செல்வனும் வல்லநா

2. யகன் ஆன கல்லகம்பட்டனும் இவ்வனைவரோம் இநாயனார் தேவதானம் எங்கள் காணியான சிவச்சாலாபோகத்து இக்கோயில் கைக்கோளரில் வேணாவுடையார்க்கும் ஆனைஉரித்த மாராயர்க்கும் நாற்பத்தெண்ணாயிரப் பல்லவரையர்க்கும் விட்ட குழி 1200ம் இக்கோயில் தேவரடியார்க்குக் காணியாக அடைத்துக் கொள்ளவும் இந்த நாற்பத்

3. தெண்ணாயிரப் பல்லவரையர்க்கு விட்ட குழி 200ம் ஆக குழி ஆயிரத்து நானூறும் காணியாக விட்டோம் இவ்வனைவோம் இவை கம்பத்தரசுபட்டன் எழுத்து இவை செங்கதிர்ச் செல்வன் எழுத்து இவை நல்லகம்பட்டன் எழுத்து.

## 197

இடம் : தேவனூர் திருநாகீசுவரமுடையார் கோயில்

காலம் : இராசநாராயண சம்புவராயரின் 16ஆம் ஆட்சியாண்டு

செய்தி : மன்னரை முடிசூட்டும் பெருமாள் என்பவர்கள் கைக்கோள முதலியார்களில் ஒரு பிரிவினர். அப்பிரிவைச் சேர்ந்த ஆசிரியங்காத்தார் என்பவர் திருவோலக்க மண்டபம், திருமதில், திருமடைப்பள்ளி, திருக்கோபுரம் இவைகளை அமைத்தார்.

### கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராச நாராயணச் சம்புவராயர்க்கு யாண்டு 16வது ஆளுடையார் திருநாகீசுவரமுடையார் கோயில் தேவரடியார் ஆசிரியங் காத்தார் மன்னரை முடிசூட்டும் பெருமாள் இந்நாயனார்க்குத் திருவோலக்க மண்டபம், திருமதில், திருமடைப்பள்ளி, திருக்கோபுரம் இவருடைய தர்மம்.

(ஆசிரியம்: அடைக்கலம்) (செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, ப.48)

## 198

இடம் : தேவனூர் திருநாகீசுவரர் கோயில் கருவறைச் சுவர்

காலம் : குலோத்துங்க சோழன் காலம்

செய்தி : செங்கேணி நாலாயிரவன் அம்மைஅப்பனான இராசேந்திர சோழச் சம்புவராயன் இக்கோயிலுக்கு கைக்கோளர் தறிக்கடமை உள்ளிட்ட வரிகளைக் கொடையாகக் கொடுத்தார்.

### கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு.....வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து உத்தமசோழ வளநாடான சிங்கபுர நாட்டு ஆளுடையார் திருநாகீசுவரம் உடைய நாயனார்க்கும் செங்கேணி நாலாயிரவன் இராசேந்திரசோழச் சம்புவராயனேன் இத்தேவர் தேவதானம் தேவனூர் மகாதேவர்க்கு..... சிறுபாடிக்காவல், கைக்கோளர் தறிக்கடமை சில வரிகளாலும்.......

இடம் : தேவனூர் திருநாகீசுவரமுடையார் கோயில் கருவறைச் சுவர்

காலம் : இராசநாராயணச் சம்புவராயர் 16ஆம் ஆட்சியாண்டு

செய்தி : தேவனூரில் கைக்கோளர் கொடுக்கும் எல்லாவரிகளும் திருநாகீசுவரமுடையார் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்டன.

### கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்திகள் இராசநாராயணச் சம்புவராயர்க்கு யாண்டு 16வது உடையார் திருநாகேசுவரம் உடைய நாயனார்க்கு இவ்வூரில் கைக்கோளர் பேரால் நூலாயம் ஆட்டைச்சம்மாதம் செக்குக்கடமை ஆயம் ஆட்டைச் சம்மாதம் உட்பட இந்நாயனார்க்குச் சர்வ மானிய இறையிலியாக சந்திராதித்தவரையும் நடக்கக் கடவதாக கல்வெட்டிக் கொள்ள சொல்லிக் குடுத்தோம்.

## 199

இடம் : தேவனூர் திருநாகீசுவரம் உடையார் கோயில் கருவறைச் சுவர்

காலம் : விருப்பண உடையார் காலம்: தாது வருடம்

செய்தி : கோயில் தேவதான பூமி நெடுநாள் பாழாய்க் கிடந்தது, ஸ்ரீமகேசுவரர், தானத்தார், கைக்கோளர், கைக்கோள முதலிகள் ஆகியோர் கூடி அப்பநாயன் தென்னவதரையர் என்பவருக்குக் கொடுத்து சிங்காசன ஏந்தல் என்று ஏரி வெட்டிக் கொள்ளவும், நிலம் திருத்திக் கொள்ளவும், கிணறு வெட்டிக் கொள்ளவும் கூறிக் கோயிலுக்கு உரிய வரி கொடுக்கவும் முடிவு செய்தனர்.

### கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் பாஷைக்கு தப்புவராயர் கண்டன் அரியண உடையார் குமாரர் ஸ்ரீ விருப்பண உடையார்க்குச் செல்லாநின்ற .... தாது சம்வத்சரத்து ஆனிமாதம் 10ஆம் தியதி தேவனூருடையார் ஸ்ரீ நாகீசுவரமுடையார் கோயில் ஸ்ரீ மகேசுவரரும், தானத்தாரும், கைக்கோளரும், கைக்கோள முதலிகளும் மன்னரை முடிசூட்டும் பெருமாள் திருவோலக்க மண்டபத்தே நிறைவற நிறைந்து குறைவறக்கூடி இருந்து தானடைக்குக் குடுத்தபடி தேவர் நாச்சியார் தேவதானம் அனாதி புலைத்தலையாய்க் கிடக்கையில் அப்பநாயன் தென்னவ தரையர் சிங்காசன ஏந்தல் என்று ஏரியும் வெட்டி நிலமுந் திருத்திக் கிணறும் வெட்டி கடமையும் இறுத்துக் கொள்ள நஞ்சை புஞ்சை நாற்பாற்கெல்லையும் தென்னவதரையார்க்குக் குடிநீங்காத் தேவதானமாகக் குடுத்தோம் சந்திராதித்தவரையும்.

(செங்குந்தர் பிரபந்தத் திரட்டு பக் 47,48)

## 200

இடம் : புதுக்சேரி மாநிலம், திருவாண்டார் கோயில் பஞ்சநதீசுவரர் கோயில் கருவறைத் தென்சுவர்

காலம் : விசயநகர சாளுவ நரசிம்மன் காலம்: 15.10.1503

செய்தி : பெண்ணைக்கரை ராச்சியத்துக் கைக்கோளர்கட்கு நன்மை தீமை காரியங்களுக்கு தண்டு ஏறுதலும், சங்கு ஊதுவதும் ஆகிய உரிமை இருந்தது. அந்த இரண்டு உரிமைகளும் திரிபுவனைமாதேவிப்பற்று, நடுவுகரைப்பற்று, நென்மலிப் பற்றுக், கைக்கோளர்க்கும் உண்டு என்று நரசாநாயக்கர் காரியத்துக்குக் கர்த்தரான அறம்வளர்த்த நயினார் அளித்தார். இவைகளை சபையாரும், மழவராயர் நிலயங்கரும் உறுதி செய்தி கொடுத்தனர். இதனை மறுப்பவர்கள் செழியங்க நல்லூர்க் கல்வெட்டைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் என்றும் கூறினர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் மேதினி மீசுரகண்டன் கட்டாரிச் சாளுவ நரசிங்கதேவ மகாராயர் பிருத்வி ராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1425மேல் செல்லாநின்ற ருத்ரோத்காரி வருஷம் அற்பசி மாதம் 15தேதி நரசா நாயக்கர் காரியத்துக்குக் கடவ அம்பிகாமக் கிழவர்

2. அறம்வளர்த்த நயினார் திருபுவனைமாதேவிப்பற்று நடுவுகரைப் பற்று நென்மலிப்பற்று கைக்கோளர்க்கு பெண்ணைக்கரை இராச்சியத்தில் உண்டான கைக்கோளர்க்கு நன்மை தின்மைக்குத் தண்டு சங்கு நடந்தபடிஆலே தங்களுக்கும் தண்டும் சங்கும் தந்தோம் தங்களுக்கு நன்மை தின்மைக்கு சந்திராதித்

3. தியவரையும் தண்டும் சங்கும் நடத்தக் கடவதாகவும் இதுக்குச் சபையாரும் மழவராயர் நிலயங்கரும் இருந்து பண்ணித்தந்த நின்றையத்துக்கு யாதொருவர் அகிதஞ் சொன்னால் செழியங்க நல்லூரில் கல்வெட்டுப்படி ஆகக் கடவதாகவும் இவை அறம் வளர்த்த நயினார் எழுத்து இவை திருபுவனை மாதேவி சபையார் சொற்படி

4. க்கு மேற்படி சோமாண்டார் எழுத்து மழவராயர் எழுத்து நிலயங்கர் எழுத்து.

## 201

இடம் : புதுச்சேரி மாநிலம், திருவாண்டார் கோயில் பஞ்சநதீசுவர் கோயில் வெளியே தனிக்கல்

காலம் : கி.பி. 17ஆம் நூற்றாண்டு

செய்தி : திருவாண்டார் கோயில் யாரும் குடியில்லாமல் பாழாகக் கிடந்தது. நயினார் வசவப்ப மழவராயர் திருவையாறுடையார் கோயிலில் வந்தேறு குடிகள் குடியிருக்க ஆணையிட்டார். அண்ணமாரய்யன் ஊரைக் குத்தகை எடுத்து கைக்கோளர், வியாபாரிகள், பல பட்டடை காசாவர்கத்துக் குடிகள் குடியேற்றப்பட்டனர். கைக்கோளர் உட்படக் குடியேறியவர்கட்கு முதலாண்டு எவ்வித வரியும் இல்லை. அடுத்துவரும் ஆண்டுகளில் மாதம் அரைக்கட்டணமும், ஆயத்துக்கு மாதம் மூன்று காசும் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

### கல்வெட்டு

1. விளம்பி வருஷம் .......
2. மாதம் 10தேதி நாயினார்
3. வசவப்ப மழவராயர்
4. திருவையாறுடைய
5. நயினார் கோயில்
6. வந்தேறு குடியளு
7. க்கு கட்டளையிட்டபடி
8. திருவாண்டார் கோயி
9. லில் குடியிலி பாழா
10. க இருக்கயில்
11. அண்ணமாரை
12. யன் குடியேற்
13. றிக் கொள்ளச் சொ
14. லி குத்தகை இறு
15. க்கையில் நம்
16. குடியளுக்கு கட்டளை
17. இட்டபடி கைக்கோளர்
18. வியாபாரியள் உண்
19. டான பலபட்டடை
20. காசாவர்க்கத்துக்கும்
21. குடியளுக்கும் இவ்வரு
22. ஷம் ஒன்றுக்கு
23. மானியம் அதுக்கு
24. மேல் மாதம் ஒன்றுக்
25. கு அரைக்கட்டணமு
26. ம் ஆயத்துக்கு மா
27. தம்....மூன்று காசு

## 202

இடம் : புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் திருக்காமீசுவரம் உடையார் கோயில் தெற்குச் சுவர்

காலம் : பராக்கிரம பாண்டியன், கி.பி. 14ஆம் நூற்றாண்டு

செய்தி : வில்லியனூர் திருக்காமீசுவரர் திருக்கோயிலில் வைகாசித் திருநாள் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு திருநாளை உள்ளூர் மக்களில் யார் யார் என்று கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது. அதுபோல் அவ்வைகாசித் திருவிழாவில் யார் யாருக்கு என்ன பங்கு என்பதும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி வில்லியனூர் கைக்கோள் முதலியார்கட்கு நாயனார்க்குத் திருச்சாந்து அளிக்கும் உரிமைப்பணி அளிக்கப்பட்டது.

### கல்வெட்டு

1. ....சக்கரவத்திகள் ஸ்ரீபராக்கிரமபாண்டிய தேவர்க்கு யாண்டு
2. ....... திருக்காமீசுவரமுடைய நாயனார் திருவைகாசித் திருநாள் அன்
3. ....ரும் இடத்து திருக்கொடித் திருநாள் பிரம்பை ஊரவரும் திருக்
4. ......ரும் இரண்டாந் திருநாள் ஒழுகறைப் பனைப்பாங்கிழார்களும் முன்
5. .....ரிக்கரும் நாலாந்திருநாள் பாக்கமுடையான்பட்டு ஊரவரும் ஐஞ்சாந்
6. ....ஊரவர் நாயனார்க்கு திருச்சாந்தும் சாத்தி ஊரில் எழுந்தருளு விக்கவும் ஆ
7. .....ஏழாந் திருநாள் பள்ளத்து ஊரவரும் எட்டாந் திருநாள் வில்லிய நல்லூர்
8. ....ளும் பாகூர் உள்ள ஊரவரும் திருவெழுச்சி பூங்குன்றமுடையார்களும்
9. ....லும் சமுதாயம் செய்வார்களும் முதலியார் தலைவரும் ஆடி அருளவும் திருவ
10. ....த்து ஊரவரும் தீத்த திருநாளும் மோநமும் மருதமங்கல முடையான்
11. .....கைக்கோளரும் முதலியார்க்கும் நாயகர்க்கும் திருச்சாந்து செட்டிகளும்
12. .....எழுந்தருளும் இடத்து நாட்டில் அவனிசுந்தரர் திருக்காவணமும் இட்டு ஆன தாடவு
13. .....இப்படி சந்திராதித்தவரையும் செல்லவும் பணிப்பது.

## 203

இடம் : புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் திருக்காமீசுவரம் உடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்று கிழக்குச் சுவர்

காலம் : விசயநகர அரசர் தேவராயர் காலம்: 25.4.1542

செய்தி : வில்லியனூரில் நெசவாளர்களான கைக்கோளருக்கென்று சில விருதுகள் இருந்தன. தொழில் ஒற்றுமை காரணமாக தேவாங்கர்கட்கும் கைக்கோளர் தம் விருதுகளை அளித்தனர். ஆனால் இலை வணிகர்கள் அரசு அதிகாரிகட்கு லஞ்சம் கொடுத்து திருக்காமீசுவரர் கோயில் குமுதப்படையில் உள்ள கல்வெட்டை அழித்து மாற்றி அவை தங்களுக்குரியதென்று எழுதிவிட்டனர். விருதுகள் இழந்த கைக்கோளரும், தேவாங்கரும் வில்லியனூரை விட்டுப் புறப்பட்டனர். இதை அறிந்த அதிகாரி குரு விஜயராயரும், தலையாரி நீலனும் விசாரித்துக் காஞ்சிபுரம் செப்பேட்டின்படி கைக்கோளருக்கு கண்டியதேவன், காலிங்கராயன், பட்டமானங்காத்தான், உலகெலாம் வென்றான் என்ற பட்டங்கள் உரியது என்று மீண்டும் குமுதப்படையில் வெட்டினர்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் அரியராய விபாடன் கெஜ
2. வேட்டை கண்டருளிய ஸ்ரீவீரப்பிராதப அச்சுததேவ மகாராயர்....
3. பண்ணியருளாநின்ற சகாத்தம் 1460
4. சோபகிருது சித்திரை மாதம் இருபத்தி ஒ.....
5. கைக்கோளர் விருது இலை வாணிகர்
6. தங்கள் விருது என்று இராசகரத்து
7. கைக்கூலி குடுத்து குமுதப்படையில்
8. கல்வெட்டு அழித்து போனமையில் கைக்
9. கோளரும் தேவாங்கரும் ஊர்விட்டு பிறப்
10. பட்டுப் போகையில் ராசாதிராச திரு
11. மலைதேவ மகாராசர் சீர் காரியத்துக்குக் கர்த்தரான

12. குரு விஜயராயரும் நாட்டுத் தலையாரி நீலன் திம்மு.....
13. விசாரித்துக் காஞ்சிபுரத்து செப்பேட்டுப்படி கைக்
14. கோளர் விருது கண்டியதேவன் காலிங்க
15. ராயன் பட்டமானங்காத்தான் உலகெலாம்
16. வென்றான் என்பதாக ஆமென்று இருந்.....
17. திருக்காமியப்பர் குமுதப்படையில் கல்....

## 204

இடம் : ஆந்திர மாநிலம், திருப்பதி, திருச்சானூர் வாகன மண்டபம் மேற்குச் சுவர்

காலம் : மூன்றாம் இராசராசனின் 5ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1221

செய்தி : திருச்சுகனூர் கைக்கோளர் ஆண்டார் மகன் பொக்காரன் பாண்டியதரையன் அழகிய பெருமாள் செலவு செய்து ஏரி ஒன்று தோண்டி அதன் கீழ் ஆறுபட்டி நிலம் கொடையாக அளித்தார்.

## கல்வெட்டு

1. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு அஞ்
2. சாவது வைகாசி மாசத்து திருச்சொகினூர் கைக்கோள
3. ன் ஆண்டார் மகன் பொக்காரன் பாண்டியதரையன்
4. அழகிய பெருமாள் பழந்திருவிடையாட்டமான வள....
5. ல் காசு இட்டு கல்லுவித்த இவ்வேரிக்கீழ் திருத்தி விட்ட நிலம்....
6. திக்க நிலம் அறுபட்டியும் கைக்கொண்டு பங்குனி......

## 205

இடம் : ஆந்திர மாநிலம், திருப்பதி, திருச்சானூர் வாகன மண்டபம் மேற்குச் சுவர்

காலம் : கி.பி. 15ஆம் நூற்றாண்டு

செய்தி : இறைவனை எழுந்தருளுவிக்க பல்லவரையன், யாதவராயன் விழுப்பரையன், சோழ விழுப்பரையன், திரிகர்த்தராயன், கைக்கோளர், எம்பெருமாளடியார் ஆகியோர் கோயில் பண்டாரத்தில் மூலப்பொருள் வைத்தனர்.

## கல்வெட்டு

1. ஸ்ரீ பண்டாரத்துக்குக் குடுத்து.....
2. எழுந்தருளுவிக்கக் கடவோமாகச் சம்மதித்து உபயம் கைக்கொண்டோம்
3. பல்லவரையனும் யாதவரையனும் யாதவராய விழுப்பரையனும் திரிகர்த்தராயனும் முன்னாள்......
4. த்துள்ள கைக்கோளரும் எம்பெருமாள் அடியாரும் இவ்வனைவோம் இது வைஷ்ணவர் ரட்சை.

## 206

இடம் : ஆந்திர மாநிலம், திருப்பதி, கோவிந்தராசப் பெருமாள் கோயில் முதல் பிரகார வடக்குச்சுவர்

காலம் : திருவேங்கடநாத யாதவராயர் ஆட்சியாண்டு 12

செய்தி : கைக்கோளர் முதலியார் கொடுக்கும் வரிகள் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன

## கல்வெட்டு

1. திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ திருவேங்கடநாத யாதவராயர்க்கு யாண்டு 12ஆவது பங்குனிமாதத் தொருநாள் திருநாமத்துக்காணி திருப்பதி சர்வமானியமாக குடுத்தருளி
2. ன திருமுகத்துப்படிக்கு திருமலையில் தானத்தார்க்கு நினைப்பு திருவேங்கடமுடையான் திருவிளையாட்டம் திருநாமத்துக் காணி திருப்பதி பன்னிரண்டாவது
3. சித்திரை மாதம் முதல் நாம்கொள்ளும்.........குடிமக்கள் பேர்க்குச் கொள்ளும் புறக்கலனை வகை கைக்கோளப்பே
4. ரில் சுங்கம் கொள்ளும் வகை சுங்க எண்ணெ பிள்ளைகள் கா.......
5. யாதவநாராயணன் சந்திக்கு அமுதுபடி சாத்துப்படிக்கு அடங்கலும் சந்திராதித்தவரை சர்வமான்யமாகக் குடுத்தோம் இந்நாள் முதல் இந்தத் திருவாராதனம் தாழ்வர நடக்கவும்
6. ...... இது கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளும்.....

## 207

இடம் : ஆந்திர மாநிலம், திருப்பதி, கோவிந்தராசப் பெருமாள் கோயில் துவார பாலகர் பின்புறம் கிழக்குச்சுவர்

காலம் : விசயகண்ட கோபாலதேவரின் நான்காம் ஆட்சியாண்டு.

செய்தி : திருவகம்படிக் கைக்கோளர் திருப்பதி கோவிந்தராசப் பெருமாள் கோயிலில் வைகாசித் திருவிழா இரண்டாம் திருநாளில் திருமொழி வாசிக்கவும், பூசைக்கும், மலைமேல் சித்திரைத் திருநாளுக்கும் கொடுத்த கொடையை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

### கல்வெட்டு

1. விஜயகண்ட கோபால தேவர்க்கு யாண்டு
2. நாலாவது ஸ்ரீ கோவிந்தப் பெருமாள் வைகாசித்
3. திருநாள் இரண்டாந் திருநாள் முதல் திர்......
4. திருமொழிப்படி செல்கைக்கு நாள் ஒன்றுக்கு
5. சளுக்கியாலே பதினொரு தூம்பு அரிசியும் நெய் சந்த
6. னக்காப்பு உள்ளிட்டனவும் செல்கைக்கு திருமலை
7. கைக்கோளர் திருவடிவாரமோகன் பொன்மகதை
8. செய்விக்கைக்கு எங்களுக்குத் திருமலை நிமந்த
9. வடக்கிட செலகம் கீழ்ப்பற்றுக்கும் மேல் பற்றுக்கும்
10. நிமந்தத்திலே போற தும்பிலே பத்து வட்டி நெல்லும் சளுக்கியா
11. லே நாலு வட்டி நெல்லும் திருமலைமேல் சித்திரைத் திருநாளில் செய்வி
12. க்கை நிமந்தத்திலே முக்காற்புங் காசும் இட்டபடியால் இந்த.....
13. லே விட்டு ஆண்டுதோறும் தரவெழுதி ஸ்ரீ பண்டாரத்திலே கைக்கொண்டு
14. சந்திராதித்தவரை ஸ்ரீ பண்டாரத்திலே விட்டுச் செல்லக் கடவதாகக்
15. குடுத்தோம் திருவகம்படிக் கைக்கோளரோம் இது ஸ்ரீ வைஷ்ணவர்
16. ரட்சை.

# செப்பேடு பட்டயங்கள்

# செப்பேடு பட்டயங்கள்

பொன், வெள்ளி, வெங்கலம், இரும்பு, ஈயம், செம்பு முதலிய பல உலோகங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டாலும் செம்பின் பயன்பாடே மிகவும் அதிகமாகும். செம்பில் எழுதப்பட்டவைகளைச் செப்பேடு, செப்புப்பட்டயம், தாமிரப்பட்டயம், தாமிர சாசனம், பட்டயம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். இதுவரை தமிழ்நாட்டில் சுமார் 600க்கு மேற்பட்ட செப்பேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

எழுதப்படும் செய்திகட்கு ஏற்ப செம்புத் தகடுகளைச் சமம் ஆக்கி வெட்டிச் சதுரம் அல்லது நீள்சதுர வடிவில் அமைப்பர். முதலில் "பளிச்" என்று தெரியும் ஒரு பொருளில் அவற்றின்மேல் எழுதுவர். பின்னர் அதன்மீது கூர்மையான இரும்பு உளிகொண்டு செதுக்கி எழுத்துக்களைப் பொறிப்பர். எழுத்துக்கள் பொறிப்பது "கொத்துதல்", "வெட்டுதல்", "அடித்தல்" என்றும் கூறப்படும். செப்பேடுகளில் "இந்தச் செப்பேட்டு அட்சரத்தை எழுதியவன் கணக்கு இராமலிங்கம்", "இந்த செப்பேட்டைக் கொத்தியவன் அருணாசலம் ஆசாரி" என்ற தொடர் காணப்படுகிறது. ஒருவரே எழுதி அதன்மீது அவரே பொறிப்பதும் உண்டு, "இந்தச் செப்பேடு ஈரோடு நாக ஆசாரி மகன் அளகாத்திரி ஆசாரி கய்யி எழுதி அடிச்சது" என்று ஒரு செப்பேட்டில் காணப்படுகிறது.

"இந்தப் பட்டயம் செப்பேடு எழுதிக் கொத்திப் பேருவெட்டி எழுதியவன் பெருந்துறைக் காணியாட்சிச் சித்த கொல்லன்" என்பது ஒரு செப்பேட்டில் காணப்படும் தொடர். செப்பேட்டு வாசகம் முதலில் ஓலையில்தான் எழுதப்பெறும், கல்வெட்டுகளும் முதலில் ஓலையில்தான் எழுதப்படுகின்றன. பின் அவை அதன் செய்திக்கு ஏற்ப கல்வெட்டாகவோ, செப்பேடாகவோ பொறிக்கப்படும். "இவ் வோலையைப் பிடிபாடாகக் கொண்டு சிலையிலும் செம்பிலும் செய்து கொள்ளுக" என்பது ஒரு கல்வெட்டுத்தொடர்.

செப்பேடுகள் வைத்திருப்போருக்கு அவை கூறும் தகவல் என்ன என்று தெரிவதில்லை. சிலர் அவற்றில் ஏதோ புதையல் இரகசியம் உள்ளதெனக் கருதுகின்றனர். வேறு சிலர் தம் செப்பேட்டைப் பிறரிடம் காட்டினால் கோயில், நிலம், சொத்து ஆகியவற்றின் தங்கள் உரிமை பறிபோய்விடுமோ என்று எண்ணுகிறார்கள். அதனால் பிறரிடம் காட்ட முன்வருவதில்லை. சிலர் செப்பேடுகளின் வரலாற்று முக்கியத்துவம் அறியாமல் உலோக எடைக்குப் பழைய பாத்திர வியாபாரிகளிடம் விற்றுவிடுகின்றனர். அவை பாத்திரங்களாக மாறி விடுகின்றன. எனவே

கண்டறியப்பட்ட செப்பேடுகளை விட இன்னும் பல செப்பேடுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. செப்பேட்டில் எழுதுவோருக்கும், வெட்டுவோருக்கும் படிப்பறிவு குறைவாக இருப்பதால் அவற்றில் பல பிழைகள் ஏற்பட்டு விடுகின்றன.

கிராமப்புறங்களில் செம்போ அல்லது வேறு உலோகங்களோ கிடைக்காத காரணத்தால் இலக்கணம், இலக்கியம், கணக்குகள் எழுதப் பயன்படுத்தும் ஓலைகளைப் பயன்படுத்தி ஆவணங்கள் பல எழுதியுள்ளனர். முதுகு நரம்பு கிழிக்கப்படாமல் இரட்டை ஓலைகளில் இவ்வரலாற்று நிகழ்வுகளைப் பொறித்துள்ளனர். செப்பேடு, கல்வெட்டுகள் போலவே அவையும் நம்பகமானவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றை ஆய்வாளர்கள் "ஓலைப்பட்டயம்" என்று பெயரிட்டுச் சிறந்த ஆவணமாகவே கருதுகின்றனர். கொங்கு நாட்டில் ஓலைப்பட்டயங்கள் மிகுதி.

இத்தொகுப்பில் செங்குந்தர் சமூகத்திற்குரிய ஐந்து செப்பேடுகளும், ஆறு ஓலைப்பட்டயங்களும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சோழன்பூர்வபட்டயத்தில் உள்ள செங்குந்தர் பற்றிய குறிப்புக்களும், பிற கொங்கு ஆவணங்களில் காணப்படும் சில குறிப்புக்களும், வரலாற்று நிகழ்வுகளைக் குறிக்கும் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலைச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

"வண்ணக்களஞ்சியம்" காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் செங்குந்தர் சமூகம் பற்றிய அனைத்து இலக்கியங்களையும் ஒன்றாகத் திரட்டி 1926 ஆம் வருடம் "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு" என்ற அரிய நூல் தொகுப்பை வெளியிட்டார். அம்முயற்சியை உ.வே.சாமிநாதய்யர் முதலிய பல பெருமக்கள் பாராட்டியுள்ளனர்.

அந்நூலுக்கு மதிப்புரை எழுதிய திருச்சேய்ஞலூர் நாவினால் மழு எடுத்த ஞானப்பிரகாசதேசிகர் பரம்பரையைச் சேர்ந்த நெ. முத்துக்குமார தேசிகர் தங்கள் வீட்டில் ஒரு செப்பேடு இருப்பதாக எழுதியிருந்தார். இப்பொழுது அச்செப்பேடு தருமையாதீனத் தமிழ்க்கல்லூரி முன்னாள் முதல்வர் வி.சா.குருசாமி தேசிகர் அவர்கள் வீட்டில் பூசையில் உள்ளது. முத்துக்குமார தேசிகர் 1926ல் தெரியப்படுத்திய அச்செப்பேடு இத்தொகுதியில் முதல் செப்பேடாக வெளியிடப்படுகிறது. இது அரியதோர் நிகழ்ச்சியாகும்.

ஞானப்பிரகாச தேசிகர் செங்குந்தர் சமூகத்தின் வீரம், பெருமை, சிறப்பு ஆகியவற்றை விளக்கிக் 'கந்தபுராணம்' என்ற நூலை எழுதினார். இந்நூல் கச்சியப்ப முனிவர் இயற்றிய கந்தபுராணத்தின் வேறானது. கச்சியப்பர் கந்தபுராணத்திற்கு முற்பட்டது. அந்த நூலைப் பாடியதற்காக

கொங்கு 72 நாட்டுச் செங்குந்தர்கள் அவருக்குச் செய்த சிறப்புக்களை இச்செப்பேடு கூறுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் சில சமூகப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதற்கு இரு குழுவாகப் பிரிந்திருந்தனர். இடங்கை, வலங்கை என்று அப்பிரிவுகளுக்குப் பெயர் வழங்கப்பட்டது. செங்குந்தர்கள் இடங்கைப் பிரிவில் சேர்ந்திருந்தது மட்டுமல்ல. இடங்கைப் பிரிவின் தலைவராகவும் விளங்கினர். அதனால் 1797ல் விசயமங்கலத்து இடங்கைப் பிரிவினர் பெற்ற வெற்றிச் செப்பேட்டிற்கு "செங்குந்தர் வெற்றிப் பட்டயம்" என்றே பெயரிடப்பட்டது. காஞ்சிபுரம் இடங்கை வெற்றிச் செப்பேட்டிற்கு "இடங்கைச் செங்குந்தர் செப்பேடு" என்றே பெயர் வைக்கப்பட்டுள்ளது.

செங்குந்தர் புகழ்மொழிகள் என்ற மெய்க்கீர்த்தித் தொடர்களில் "இடங்கைக்குத் தலையானோர்" என்ற தொடர் காணப்படுகிறது. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் விசயமங்கலத்தில் இடங்கைப்பிரிவினர் கையாண்ட சில சமூகப் பழக்கவழக்கங்களை வலங்கைப் பிரிவினர் மேற்கொண்டபோது இரு பிரிவினர்க்கும் வழக்கு ஏற்பட்டது. பல ஆண்டுகள் வழக்கு நீடித்தது.

திப்பு சுல்தான் ஆட்சிக்காலத்தில் அவருடைய அந்தியூர்க் கச்சேரி திவான் கிரிமிரே சாயபு விசயமங்கலம் வரும்போது தங்கள் வழக்குப் பற்றி இரு பிரிவினரும் கூறினர். அவர் "பூர்வம் தீர்ந்த பட்டயம்" எடுத்துக்கொண்டு திருப்பூருக்கு வருமாறு கூறினார். திருப்பூருக்கு தாங்கள் முன்பு வெற்றிபெற்ற பட்டயத்தை எடுத்துக் கொண்டு சென்று 5.2.1797ல் நடைபெற்ற விசாரணையில் செங்குந்தர்கள் வெற்றி பெற்றனர்.

செங்குந்தர்கள் விசயமங்கலத்தில் வெற்றி பெற்ற "பூர்வம் தீர்ந்த பட்டயம்" எது எனத் தெரியாதிருந்தது. சில ஆண்டுகட்கு முன்பு கூனம்பட்டியில் உள்ள மாணிக்கவாசகர் திருமடத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை ஆய்வு செய்தபோது அந்த "பூர்வம் தீர்ந்த" விசயநகர அரசர் காலப் பட்டயம் கிடைத்தது ஒரு அரிய வரலாற்று நிகழ்வு. அப்பட்டயம் "செங்குந்தர் வடமலாயிபட்டயம்" என்ற தலைப்பில் இத்தொகுப்பில் அச்சாகியுள்ளது.

இராசிபுரம் வட்டம் பழந்தின்னிப்பட்டியில் அமைந்துள்ள அலைவாய்கிரிமலை அடிவாரத்தில் செங்குந்தர்கட்குரிய குகையீசர் மடம் உள்ளது. காஞ்சிபுரத்திற்குக் கம்பளி நியாயம் பேசச் சென்ற செங்குந்தர்கள் குகையீசரை வணங்கிச் சென்ற காரணத்தால் வெற்றி பெற்றனர். அதனால் செங்குந்தர்கள் மடத்திற்குச் செய்த சிறப்புக்களை ஒரு செப்பேடு

கூறுகிறது. அச்செப்பேடு பல ஆண்டுகட்கு முன்னரே படி எடுக்கப்பட்டு இந்நூல் தொகுப்பாசிரியரால் 1976ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற செங்குந்தர் மாநில மாநாட்டு மலரில் வெளியிடப்பட்டது. அச்செப்பேடும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

1723 ஆம் ஆண்டு கொங்கு நாட்டுச் செங்குந்தர்கள் தாராபுரம் அகத்தீசுவரர் கோயிலில் ஒன்று கூடி பூந்துறை நாட்டுச் சங்கோதி சித்தநாதன் தெவியானை ஆகியோர் மகள் முருகநாயகத்தைத் தங்கள் குலத்திற்கு மாணிக்கியாக நியமனம் செய்த பட்டயம் அனுமன்பள்ளி அய்யாவுமுதலியார் சருவலிங்க முதலியார் சகோதரர்களிடமிருந்து பெற்று இத்தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் வலங்கையாரால் நிறுத்தப்பட்ட தங்கள் தேரை ஓட்டி வெற்றி பெற்ற "இடங்கைச் செங்குந்தர் செப்பேடு" இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

கி.பி.1741 ஆம் ஆண்டு அவிநாசி வட்டம் சேவூரில் கச்சி அண்ணாமலை முதலியார் மகன் முத்துக்குமார நயினார் கழுத்தலகு பாய்ச்சி வீரமரணம் அடைந்த நிகழ்ச்சியைக் கூறும் செப்பேடு ஒன்று சேவூர் முத்துக்குமாரசாமி கோயில் காணியாளர் கொளப்பலூர் அருணாசல முதலியாரிடம் இருந்தது. பல ஆண்டுகட்கு முன்னர் படி எடுக்கப்பட்ட அச்செப்பேடு இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

செங்குந்தர்கள் வேண்டுகோள்படி பல சமூகத்தார் வீரபாகு தேவர் வழிபாட்டுக்குக் கொடுத்த கொடைகளை வீரபாகு தேவர் சமயச் செப்பேடு கூறுகிறது. புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர் கோவிந்தராஜ் அவர்கள் மூலம் பெறப்பட்டு இங்கு அளிக்கப்படுகிறது. இச்செப்பேட்டில் வீரபாகு முதலிய நவவீரர் உருவங்கள் புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

குருசாமிகள் பட்டியலில் இடம் பெறவேண்டும் என்று பெரு முயற்சி செய்து வெற்றி பெற்ற லிங்கனூர் கருப்ப முதலியார் பற்றிய நாட்டு நியாய ஓலை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மூலம் கிடைக்கப்பெற்றது.

பசுவின் கன்றைத் தேரோட்டும் போது கொன்ற தன் மகனைக் கரிகாலன் தேரூர்ந்து கொன்று தண்டனை கொடுத்த காரணத்தால் கரிகாலனுக்கு "பித்தவெறி" பிடித்து விட்டது. குறத்தியாக வந்து காஞ்சி காமாட்சி கொங்கு நாட்டில் ஆலயத்திருப்பணி செய்தால் பித்தவெறி நீங்கும் என்று கூறுகிறாள். கரிகாலன் காஞ்சிபுரம் சமயமுதலி, சடையப்பவள்ளல், கஸ்தூரிரங்கப்ப செட்டி ஆகியோரை அழைத்துக் கொண்டுவந்து கோயில் கட்டி மக்களைக் குடியேற்றுகின்றான். செங்குந்தர்கள் எல்லா ஊர்கட்கும் கோயில் பணிகட்கும், சில ஊர்களில்

கணக்கராகவும் நியமிக்கப்படுகின்றனர். எந்தெந்த ஊர்கட்குச் செங்குந்தர் யார் யார் நியமிக்கப்பட்டனர் என்பது ஊர் வாரியாக அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் முக்கியமான கோயில்களில் எல்லாம் செங்குந்தர் பெற்றிருந்த சிறப்பு இவற்றால் அறியப்படுகிறது.

தெய்வ விருப்பத்தை நிறைவேற்றப் பல ஊர்களில் செங்குந்தர்கள் தங்கள் மக்களைப் பலிகொடுத்த விபரம் இப்பட்டயத்தில் கூறப்பட்டுள்ளது. அன்னூர் செங்குந்தர்கட்குத் தலைமை இடமாக இருந்துள்ளது. தமிழ்நாடு அரசு பழஞ்சுவடி நூலக வாயிலாக கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் "சோழன் பூர்வ பட்டயம்" என்ற பெயரில் இதைப் பதிப்பித்துள்ளார். அதில் தேவையான பகுதிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

கொங்கு நாட்டில் பிற சமுதாய ஆவணங்கள் பல கிடைத்துள்ளன. அவை பலவற்றில் செங்குந்தர்குலப் பெருமக்கள் முன்னிலை வகித்தும், சாட்சிக் கையொப்பமிட்டும் சிறப்புற்று இருந்துள்ளனர். நாடு, ஊர் இவற்றில் தலைவர்காகவும், வரி-சுங்கம் பெறும் நிர்வாகிகளாகவும் செங்குந்தர்கள் இருந்துள்ளனர். கணக்கு அலுவலர் நிலையில் பலர் இருந்துள்ளனர். அவற்றை விளக்கிக் கூறுவது "கொங்கு வரலாற்று ஆவணங்களில் செங்குந்தர்கள்" என்னும் தொகுப்புப் பகுதியாகும்.

திருச்செங்கோடு கொங்கு ஏழு தலங்களில் ஒன்று. அங்கு எந்த எந்தக் காலத்தில் யார் யார் திருப்பணி செய்தார்கள் என்பதைக் கூறும் நூல் "திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை" என்பதாகும். செங்குந்தர்குலப் பெரியாள் உட்பட அங்கு திருப்பணி செய்த செங்குந்தர்கள் பற்றி இத்தொகுப்பில் இறுதிப் பகுதி விளக்குகிறது. இங்கு தொகுக்கப்பட்டுள்ள 14 ஆவணங்களில் 9 ஆவணங்கள் இந்நூல் தொகுப்பாசிரியரால் படி எடுக்கப்பட்டவை. மற்றவை பிற இடங்களிலிருந்தும் பிறர், மூலமும் பெறப்பட்டவை.

இச்செப்பேடு பட்டயங்களைச் செங்குந்தர் பிரபந்தத் திரட்டோடு ஒப்பிட்டு விரிவாக ஆய்வு செய்தல் அவசியம். இங்கு தரப்பட்டுள்ள 211 செங்குந்தர் சமூகக் கல்வெட்டுகளும், 14 ஆவணங்களும் செங்குந்தர் சிறப்பைப் பலபடப் பேசுகின்றன. செங்குந்தர்களின் சமூக, அரசியல், பொருளாதார, சமய, கலை வரலாற்றை இவை பெரிதும் படம் பிடித்துக் காட்டுகின்றன எனலாம்.

# பொருளடக்கம்


1. நாவினால் மழு எடுத்த ஞானப்பிரகாசர் செப்பேடு
2. அலைவாய்மலைச் செப்பேடு
3. அனுமன்பள்ளி செங்குந்தர் பட்டயம்
4. செங்குந்தர் வெற்றிப் பட்டயம்
5. இடங்கைச் செங்குந்தர் செப்பேடு
6. சேவூர் தலைப்பலிச் செப்பேடு
7. செங்குந்தர் வடமலாயி பட்டயம்
8. வீரபாகுதேவர் சமயச் செப்பேடு
9. மோரூர்க் காங்கேயர் ஏடு
10. நாட்டு நியாய ஓலை
11. சோழன் பூர்வ பட்டயத்தில் செங்குந்தர்
12. கொங்கு வரலாற்று ஆவணங்களில் செங்குந்தர்
13. திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையில் செங்குந்தர்
14. அவிநாசித் திருப்பணிப் பட்டயம்

# நாவினால் மழுஎடுத்த ஞானப்பிரகாசர் செப்பேடு

மயிலாடுதுறையில் தருமபுரம் பல்கலைக்கல்லூரி முன்னாள் முதல்வர் திரு. வி.சா.குருசாமி தேசிகர் அவர்கள் வீட்டில் பூசையில் உள்ள செப்பேடு. கந்தபுராணம் என்னும் இலக்கியம் பாடி அதில் கைக்கோளர் சமூகத்தின் சிறப்புக்களையும், பெருமைகளையும், வீர வரலாற்றையும் பலபடப் பாராட்டி எழுதியமைக்காக திருப்பனந்தாள் அருகில் இன்று "சேங்கனூர்" என்று வழங்கும் "திருச்சேய்ஞலூர் ஞானப்பிரகாச சுவாமியார்" அவர்கட்கு செங்குந்த சமூகத்தார் அளித்த கொடை விபரம் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. இது "சமயச் செப்பேடு" என்று அழைக்கப்படுகிறது. திருச்சேய்ஞலூர் சண்டிகேசுவர நாயனார் திரு அவதாரம் செய்த திருத்தலமுமாகும்.

இக்கந்தபுராணம் காஞ்சிபுரம் கச்சியப்பசுவாமிகள் இயற்றிய கந்தபுராணத்தின் வேறானதாகும். கச்சியப்பர் பாடிய கந்தபுராணத்தைக் காட்டிலும் ஞானப்பிரகாசர் பாடிய கந்தபுராணம் முற்பட்டது என்பர். இது மூன்று காண்டமாகப் பாடப்பட்டுள்ளது.

கொங்கு 72 நாட்டில் உள்ள கைக்கோளர்கள் அனைவரும் இரட்டை விளக்கும், இடங்கைப் பாவாடையும் இட்டு எண்கால் பீடத்தில் ஞானப்பிரகாசரை அமரச் செய்து பாதார்ச்சனை செய்யவேண்டும் என்றும், அவருக்கு தறிக்கு ஒருபணம், தலைக்கட்டுக்கு ஒருபணம், நன்மைக்கு ஒருபணம், தீமைக்கு ஒருபணம், மூக்குத்திக்கு ஒருபணம் ஆக ஐந்து பணம் அளிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் திருச்சேய்ஞலூர் நாவினால் மழுஎடுத்த ஞானப்பிரகாச தேசிகர் பரம்பரையைச் சேர்ந்த நெ. முத்துக்குமார தேசிகர் அவர்கள் தம் வீட்டில் ஒரு செப்பேடு இருப்பதாக எழுதியுள்ளார் (1926). அச்செப்பேடு இதுவேயாகும்.

## மூலம்

உ கணபதி துணை, சிவகிறுபை சண்முகன்துணை. சொஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுவர மூவராய கண்ட நரைசிங்கராயர் பிரிதிவிராஜிய பரிபாலநம் பண்ணி யருளாநின்ற சாலியவாகன சாகப்த்தம் 1107 கலியுகாப்த்தம் 4286 யிதில் மேல் செல்லாநின்ற விஜய வருஷம் பங்குனி மாதம் 2 தேதி குருவாரம் அசுவதி நக்ஷத்திரமும் சித்தயோகமும் சுபகரணமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ காஞ்சிபுரம் யேகாம்பரனாத சுவாமி சன்னிதியில் முகவாயிலெழுந்தான் மண்டபத்தில் செங்குந்தர் மற்றுள்ளாரும் கொறைவறக்கூடியிருந்து

திருச்சேஞ்ஞலூர் சுத்த சைவாசாரியராகிய னாவினால் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமியாரவர்களுக்கு பௌத்திர புத்திரர் ஆணுக்கேறாய்ப் பிறந்தோர், மெயிமீசையிருந்தோர், வீரர் பாணனென்றும், பொற்கோவில் கைக்கோளரென்றும், கொங்கெழுபத்து ரெண்டு நாட்டிலுள்ள செங்குந்தரனைவரும் பண்ணிக் கொடுத்த சமையச் செப்பேடு.

கந்தபுரானத்தில் கைக்கோளர் வரலாற்றின் பெருமையை மிகுதியாயிப்பாடிப் பிரசங்கித்து னாவினால் வழுவெடுத்து அரங்கேற்றி நவவீரர் வம்சம் னிச்சயித்த சுவாமிகளுக்கு பரிசு கொடுத்துத் தீராதென்று யிரட்டை விளக்கு மிடக்கைப் பாவாடையிட்டு யெண்கால் பீடத்தெழுந்தருளச் செயிது பரிமள புட்பங்களால் பாதார்ச்சனை பண்ணி சாயிபோகமாயி தறிக் கொரு பணம், தலைக்கட்டுக் கொருபணம், நன்மைக் கொருபணம், தீம்மைக் கொருபணம், மூக்குத்திக் கொருபணம் யிந்த அஞ்சு பணமும் வருத்தனையாக யெந்த மண்டலத்திலுள்ள யெந்த கைக்கோள துரைகளும் பாவாடை வரிசை உபசாறஞ் செய்யவும்.

யிந்த செப்பேடு தள்ளி உதாசீனமும் ஆஷேபமுஞ் செய்யக்கூடாது. யிந்த கட்டளை சந்திராதித்தியருள்ள வரைக்குந் தப்பாது யிந்தக் கட்டளை தள்ளியுதாசீன யாக்ஷேபம் பண்ணின பேர்களுக்கு சிவசக்தி சண்முகன் பாதத்தாணை, சிவசமயஞ் செங்குந்த நாட்டாராணைப்படி மகா பாதகனாய் ரவராதி னரகங்களை யடைவார்களென்றுஞ் சத்தியமாய் யெழுபத்து ரெண்டுனாட்டிலுள்ள செங்குந்தரனவரு மேகாம்பரநாத சுவாமி சன்னிதானத்தில் நரைசிங்க ராயர் முன்பாக ஞானப்பிரகாச சுவாமியார் அவர்களுக்கு தாம்பூர சாசனம் பண்ணிக்கொடுத்தோம்.

இதர்க்கரியுஞ் சாதியார் சோழமண்டலத்திலுள்ள பூமி பாலகரும் வாதாவியைத் திறைகொண்ட வன்னியரு மிவர்களறிய பொது கையொப்பம். செங்குந்தம் உ கந்தவேள் துணை உ.

## 2. அலைவாய்மலைச் செப்பேடு

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம் பழந்தின்னிப்பட்டிக் கிராமத்தில் அலைவாய்கிரி மலை என்ற பெயரில் சிறு குன்று ஒன்று உள்ளது. இம்மலைச்சாரலில் குகையீசுவரர் மடம் என்ற செங்குந்த முதலியார்களுக்குரிய ஒரு தொன்மையான மடம் உள்ளது. அந்த மடத்தில் இந்தப் பட்டயம் உள்ளது. ஏற்கனவே பதிப்பிக்கப்பெற்ற பட்டயம். மைய அரசு தொல்பொருள் அளவீட்டுத் துறைக் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

இப்பட்டயத்தில் செங்குந்த குலத்தாருக்குரிய பெருமைகள் புராணத்துடன் ஒட்டிக் கூறப்படுகின்றன. அவர்கள் வீரம், ஈகை, பக்தி, நேர்மை, தியாகம், சோழமன்னர் போன்றோருக்கு உதவிய தன்மைகள், வல்லானை வென்றது போன்ற விவரங்கள் சுவையுடன் கவிதை நடையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

கொங்கு 24 நாட்டுச் செங்குந்த முதலியார்களும், மதுரைச் சமய முதலியார்களும் கம்பளிச் சண்டையாகக் காஞ்சிபுரம் போனபோது குகையீசுவர சுவாமியை வணங்கிச் சென்றதால் வெற்றி பெற்றனர் என்ற விபரம் கூறப்படுகிறது.

இதனால் செங்குந்தர்கள் பல வரிகளைக் குகையீசருக்குத் தருவதாகவும், தொழில், திருமண காலத்தில் கொடை கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டு செப்பேடு எழுதிக்கொடுத்தனர்.

மணவாளப் பிள்ளையாருக்கும், கைக்கோளத் தாசிக்கும் பணம் அளிப்போம் என்றும் கூறியுள்ளனர். பலர் சாட்சிக் கையொப்பமிட்-டுள்ளனர்.

### மூலம்

உ ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை. அலகாமலை குகையீஸ்வர சுவாமியார் கீழ்கரை எழுநாட்டுப் பட்டயம். மேல்கரை 24 நாட்டுப் பட்டயம்.

உ ஸ்ரீமன் மகாமண்டலேசுபரர் அரியதள விபாடன் செங்குந்த பூவராய கண்டன் மூவறாய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பூர்வ தட்சின பச்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி பாண்டிய மண்டலத் தாபனாசாரியன் எம்மண்டலமும் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராஜபரமேசுபரன் ராஜமார்த்தாண்டன் ராஜகெம்பீரன் ராஜப்பிரதாபன் ராஜாக்கள்தம்பிரான் ரணமுகவீரபத்திரன் அதரசூர வீரவிக்கிரமாதித்தியன் கட்டாரிச்சாளுவன் நவகண்ட சக்ரவர்த்தி

மலைகலங்கிலும் மனங்கலங்காதவன் ஒரு குடைக்கீழ் உலகமுழு-தாண்டவன்,

ராஜகோலாகலன் ராஜகோளரி ராஜசங்காரன் ராஜபுங்கவன் திருநய்பிறதிஷ்டாசாரியன் துட்டநிக்கிரக சிஷ்டபரிபாலன் அசுவபதி கெஜபதி நரபதி நவகோடி நாராயணன் கண்டர்கண்டன் மிண்டரில்மிண்டன் மிண்டர் கொருகண்டன் வண்டராவுத்தன் உத்தண்ட கோதண்டராமன் உத்தண்ட மண்டலீகர்கண்டன் உபயகுல சுத்தாங்கதீரன் மன்னிய மார்த்தாண்டன் மதியாத மன்னியபெருமாள் மதியாத மன்னிய மணிமகுட மாலையிட்ட வீரவல்லயப் பிரதாபன் வீரகண்டப்பிறதாபன் தொண்டமண்டலத்து சண்டபிறதாபன் சோழ மண்டலந் திறைகொண்ட திண்புயாசலன் துலுக்கர்தள விபாடன் துலுக்கர்மோகந் தவிழ்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர்மோகந் தவிழ்த்தான் அண்டினவர் தஞ்சம் மிண்டினவர் கோளரி கலியுகராமன் வரதுங்கபிரதாபன் தங்கப்பொன்மார்பன் மணிமகுட முடிசூடும் மனோபயங்கரன் ஈழமும் இலங்கையும் திறைகொண்டருளிய ராஜாதிராஜன் யாழ்ப்பானப்பட்டணமும் வங்காளதேசமும் கொண்டருளிய தொண்டமண்டலம் சோழமண்டலம் பாண்டியமண்டலம் கொங்குமண்டலப் பிறதிட்டாச்சாரியன் அஷ்டலட்சுமி பொருந்திய மார்பன் மன்னியர் கண்டன் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபால அஸ்டபோக புரந்தரன் துஷ்டர் கோஷ்டந் தவிழ்த்தான் பதினெட்டுக் கோட்டத்து மன்னியர் கண்டன் நவரத்தின மாலிகாபரத்தான் சங்கீத சாயூச்சிய வித்யா விநோதன் கெடிமன்னிய பூவராயகண்டன் புண்டரீக புருஸோத்தம சகல சாம்பிராஜ்ய லட்சுமி வாசன் பூலோகநாயகன் பூமண்டலாதி சூர சண்டப்பிரசண்டன் சத்துருக்கள் மணவாளன் சமயகெம்பீரன் சமய நாராயணண் சமயரோக கண்டன் அஷ்டைஸ்வரிய சம்பன்னன் சத்த சாகரமும் ஒரு குடைக்கீழ் ஆண்டு கொண்டருளிய,

ஸ்ரீகட்டாரிச் சாளுவன் ஸ்ரீவிருப்பாட்சிதேவ மகாராயர் வீரவசந்தராயர் போஜறாயர் வீரநரசிங்க மகாராயர் தன்மராயர் பூபதிராயர் கம்பராயர் அகளங்கதேவ மகாராயர் தெய்வராயர் கெசபதிராயர் கேசரிராயர் சதபராயர் பிறவுடதேவ மகாராயர் சம்மட்டிராயர் சூடும்புலித்தேவராயர் ஈசுரப்பராயர் கம்பராயர் உச்சமல்லிதேவ மகாராயர் விசயராயர் தேவராயர் பவளேந்திர தேவராயர் ஈசுவரப்பனாயக்கம்பராயர் கிருஷ்ணதேவ மகாராயர் சதாசிவராயர் புஜபலதேவ மகாராயர் ஸ்ரீரங்கராயன் மல்லிகார்ச்சுனராயர் ஸ்ரீவீரஹரிநாராயணன் மல்லிகார்ச்சுனராயர் கிருஷ்ணராயர் ராமராயர் வெங்கடபதிராயர்,

அறிவுக்கு அகத்தீசன்போலவும் அழகுக்கு அனங்கனைப் போலவும் வில்லுக்கு விசயனைப் போலவும் மல்லுக்குப் பீமனைப் போலவும்

வாளுக்கு அபிமனைப் போலவும் பொறைக்குத் தருமனைப் போலவும் கொடைக்குக் கர்ணனைப் போலவும் நீதிக்குச் சோழனைப் போலவும் புலியும் புல்வாயும் ஒரு துறையிலே நீர்குடித்து வாழவும் எலியும் பூனையும் கூடி வாழவும் கருடனும் பாம்பும் கூடி வாழவும் இந்தப்படி நீதிநெறியாக ஒரு குடைக்கீழ் ராஜ்ய பரிபாலனம் செய்து அருளா நின்ற கலியுகசகாப்தம் 4624 மேல் செல்லாநின்ற ஆனந்த வருஷம் வைய்யாசி மாதம் 5ந் தேதி பூமடந்தை பணி கேட்ப ஒருமகுடந் தனிக்குடைக் கீழ் உலகனைத்தும் காத்து கற்பகத்தையும் சுரபியையும் கார்முகிலையும் காத்தளித்து நீதியின்கண் நிலைநிறுத்தி நியாயத் தன்மம் நெறிப்படுத்தி செங்கோலால் வருகலியை மெலிவித்து செழுமணி முடிசூடி செங்கோல் வேந்தன் செய்வகையறிந்து சிம்புள்தேவனே தெய்வமாகவும் அறம்வளரப் பிணிதணியத் திசாதிசையனைத்தும் செவிடுபடாமல் மேகத்தைத் திறைக் கொண்டு பூதத்தைப் பணிபுரந்த ராஜன் வீற்றிருப்ப கொம்பும் சங்கும் காளமும் குலதனமாகவும் மாற்றலரை அறநழித்து வந்தடைந்தார்க்கும் இனிதளித்து ஏற்றவர்க்கு மிருநிதியும் எண்டிசையும் எழில்பரப்பி வையத்துப் புகழ் நடத்தி மனம் பெரிதாய் அறம் வளர்ப்போர் ஆண்மையுந் சிலைவீரமும் சொல்வன்மையும் நல்லொழுக்கமும் தாண்டாண்மையும் மிகப் பெருகிச் சர்வ சம்பத்து முடையவர்களாய்,

நாலு வர்ணாசிரமங்களும் வழுவாமல் நடத்தப்பட்ட சோழசக்ரவர்த்திப் பெருமான் வல்லானைக் கொன்று படை வீடு கொண்டு தருபவருண்டோ வென்று கேட்டளவில் வல்லான் மாளிகையிலே சென்று புகுந்து வகைதோறும் பத்துப் பேரைப் பலியிட்டுப் பிறஷ்தாபத்தொடுந் தூங்கும் வல்லானைக் கொல்லாது விட்ட சிவன்மைந்தர். திருமேனி காவலர். காமாட்சி வரபுத்திரர். கந்தன் சகோதரர். வீரநாராயணர். வீரவல்லானை வென்ற பஞ்சவர்ண தீட்சிதராகிய அபிமான பூஷணர்கள். சாகச் சோம்பாதார். தன்பல மீட்டவர். நின்றவற்கு வாணாழ் கொடுத்தார். மோவாய் எழுந்தார். ஆணாய்ப் பிறந்தார். கேளாய்ப் பிறந்தார். சோழன் அங்கம் காக்க நில்லாஉயிர் கொடுத்து நிற்கும் புகழ் கொண்டோர். சென்னி மனமொத்த கைக்கோளர். நம்பெருமாள் திருமக்கள். சோழனுக்கு வச்சிரம் அளித்தோர். சொன்னநாயம் தப்பாதோர். துஷ்டகண்டர், துஷ்டராதித்த துஷ்டபயங்கரர், துஷ்ட நிட்டூரர், கொடுமையிலங்கேசர், மீசை பரித்து விடுமயிர் கட்டினோர், அம்மயிர் செங்குந்தர்க் கடையாளம் புனைந்தோர்கள், கொளைச்சதையில்லாதோர், தண்டுவார்மிண்டர், அகளங்க வல்லோன், சாகச்சறுக்காதார், சாகச்சோம்பாதார், சாகைக்காய் மதன் தம்பலந்தின்னத் தலையரிந்தோர்.

அறநடந்தோர். தாய்ப் பசுவை வாலுருவி விட்டோர். பலவாயுதத்தில் வல்லோர். போரில்வீரர். போர்கொண்டோர். போர்க்களத்தானைகள்.

பொன்னாபரணம் பூணாமல் புகழாபரணம் பூண்டோர்கள். பூதலங்கள் ஏழும் புகழ் படைத்து வாழ்வோர்கள். மனமொத்த கைக்கோளர். மலைகலங்கிலும் மனங்கலங்காதோர். மணவாள மானதீர வீரர். அனகன் அங்காரக போர்வல்லான். அபயகரத்தோர். வாசியும் மானமும் வண்மையும் வழுவாதோர். வீரவேளைக்காரர். வாடாத மாலையுடையோர். வாழ்வு கண்டு தாழ்வு செய்யாதார். வல்லான் தேவிக்கு மாங்கலியம் கொடுத்தோர். முனையில் சறுக்காதார். முன்னே செங்குந்தம் உடையோர். வல்லாரில் வல்லோர். மதியாதார் மணவாளன். யிரட்டைச் சங்கும் நாதமுடையோர். பூதலம் புகழும் கொம்பும் காளமும் கொடிமுரசுடையோர். கண்படையும் தலைப்பிறையுமுடையோர். பூதலம் புகழும் புலிக்கொடியுமுடையோர். காளியைக் கைப்பிடித்துக் காலனுக்கு ஓலைவிட்டோர்.

கொடுக்க முசியாதோர். கொடுத்து வழிகாட்டினோர். கொல்லுங்கையும் வெல்லுந்தோளும் உடையவர். கங்கைமண்டலம் குறும்புஅறுத்து கலிங்க மண்டலம் கட்டு அறுத்தோர். கடகமும் கலியாணமும் கொண்டோர். விருதுவிளக்காவோர். வென்றன்றி மீளாதோர். சென்றதிசை வென்றோர். சிவனடியை மறவாதோர். ஸ்ரீ பாதசேகரர் செந்தமிழோர்க் குயிரளித்தோர். சோழரை வென்றவர். சிலம்புடைய திறல்வீரர். திக்கெட்டும் புகழுடைய கைக்கோள்காரர், ஞானமுகமுடையோர், கற்பகத்தின் அருளாழும் கண்மூன்றுடைய கைலாசர் அருளாலும் ஓரடியால் மண்ணளந்த உலகர் அருளாலும் இருநாளி நெற்கொண்டு ஏழுலகும் இனிதளிக்கும் பரமேஸ்வரி தன்னுடைய பாத பங்கய அருளாலும் எத்திசையும் வெல்ல வல்லோர். இடங்கைக்குத் தலையானோர். அமணகந் தெரிந்தோர். அறிவுடைய கைக்கோளரும் அமரசேனாபதிகளும்.

தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு உள்பட்ட செங்குந்த முதலிகளும் அருளால் ஆதி நந்தீஸ்வரன் அனுகிரகித்து திருவாய் மலர்ந்து அருளினபடி கிரேதா திரேதா துவாபர கலியுகம் கிரேதாயுகத்துக்கு பிரம்மா அர்ச்சிக்கையில் பிரம்மகிரியும் பிரம்மேசுரருமானதும், துவாபர யுகத்துக்கு துர்க்கையரிச்சிக்கையில் துர்க்கைகிரியும், துர்க்கீஸ்வரருமானதும், கலியுகத்துக்கு நாகம் அர்ச்சிக்கையில் நாககிரியும் நாகேஸ்வரருமானதும், இப்படி யநேகங்கோடி சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவதேவன் தெய்வமானதும்,

தெய்வசிகாமணி, முத்திக்கு வித்து முக்கண்ணீசுவரன் பத்திப்பிரியன் பார்வதிவல்லவன் பத்தவச்சலன் நின்றகோல மழகிய நிமிலன் நேரம் ஒரு பஞ்சவர்ன பிரகாசன் திருமுகவோவன் தெண்டாயுத அஸ்தன் செம்புத்தீவில் தொண்டை மண்டலத்தில் காஞ்சி மாநகரில் திருக்கம்பையாற்றில் ஒற்றை மாவடியில் பார்வதிதேவி அர்த்தபாகம்

பெறவேண்டி அரிய தவசு பண்ணுகையில் அப்போது காட்சி கொடுத்து ஐந்து தலமுள்ள பொருள்தனையும் கொண்டுவரும் பொன்னிப்புனலாறு புடைசூழ்ந்த கொங்குதன்னில் தெட்சிண கைலாசமென்கின்ற ஸ்ரீ நாககிரி பர்வதத்தில் அர்த்தபாகம் கொடுத்தருளிய அர்த்தநாரீஸ்வரருடைய தம்பிரான் அவருடைய ஸ்ரீமத் குமாரராகிய,

லிப்பிரப்பிரியன் விசுவமூர்த்தீசுவரபாலன் சரவணபாலன் சண்முகப்பிரதாபன் கெவுரிதிருமகன் கெணபதிசகோதரன் பக்கரைப் பகட்டாகப் பட்டிபடைக்குள் நீடு கொக்கரித்து தார்பரித்த குக்குடக்கொடிக் குகன் சக்கிரவட்ட மெட்டிடாபிதா விசிரகாலடிக்கும் துரகப்பிரதாப துரங்கன் சிஷ்டிக்கும் பிரமன் சிரசு திண்டாட குட்டிக் குடுமியை நெட்டவாங்கும் குமார கெம்பீரன் துட்ட சமணரை வெட்டிக் கழுமிசை வைத்த சுப்பிரமண்ணியப் பிள்ளையார் பழனி வேலாயுத சுவாமியார் சொல்படிக்கு கந்தன் சகோதரர் ஆகிய வீரபாகுதேவர் மரபுடைய செங்குந்த முதலியார்கள்,

கீழ்கரை எழுகரை நாட்டில் பூந்துரைநாடு, பூவாணிநாடு, வனவாசிநாடு, சேலநாடு, ராசீபுரநாடு, பருத்திப்பள்ளிநாடு, ஏழூருநாடு, வாழவந்திநாடு, அரையநாடு, ஆக கீழ்கரைநாடு ஏழுநாடும், மேல்கரை நாட்டில் கொங்குதாராபுரம், தென்கரைநாடு, காங்கயநாடு, தட்டயநாடு, வெங்கலநாடு, கிழங்குநாடு, மழவநாடு, தலையநாடு, இடப்பூச்சநாடு, பூந்துறைநாடு, வடகரைநாடு, காஞ்சிக்கோயில்நாடு, ஒடுவங்கநாடு, வண்டிசூழ்நாடு , வடபாரிசநாடு, பேரூர்நாடு, செம்பியநல்லூர்நாடு, சோழபுரிநாடு, குருப்புநாடு, பொன்குழுக்கிநாடு, வாரக்கநாடு, ஆணைமலைநாடு, வைய்யாவூர்நாடு, அண்டநாடு கொங்கு இருபத்துநாலு நாட்டுச் சமையமுதலியாரும் எழுகரைநாட்டு சமயமுதலியாரும் மதுரைச் சமையமுதலியாரும்.

ஆனந்த வருஷம் வைய்யாசி மாதம் 5 ந் தேதி கம்பிளிச் சண்டையாய்க் காஞ்சிபுரத்துக்குப் போகையில் சேலநாட்டுத் தெட்சிண மேருவென்னும் அலையாகிரி பருவதத்தில் கபாட நிஷ்டை சிவயோகமாகிய குகையீஸ்வர சுவாமியாரவர்களிடத்தில் அனுக்கிறகம் பெற்றுப் போனபடியால் வியாச்சியம் செயிச்சு வந்ததின் பேரில் அர்த்தநாரீசுர சுவாமியார் சொற்படிக்கு எழுகரைநாட்டுப் பட்டக்கார நல்லியண்ணமுதலியாரும், இருபத்துநாலு நாட்டு பட்டக்காரணாகிய கொங்கில் அன்னியூர்க்குள்ள பட்டக்காரனும், எழுகரைநாட்டுச் சமயமுதலியார்களும், இருபத்துநாலு நாட்டுச் சமயமுதலியார்களும், மதுரை அண்ணாமலைமுதலியாரும், கூத்தாடி ஆணாய்ப்பிறந்தானும் இவர்கள் எல்லோரும் கூடி அலையாகிரி குகையீஸ்வர சுவாமியார் அவர்களுக்கு மக்கத்துக்குக் கால்பணமும், மணவாளப்பிள்ளையார்க்குக் கால் ரூபாயும், கைக்குள தாசிக்கு

அரைக்காலும், வன்னியகுல கோத்திரத்தாருக்குத் தலைக்கட்டுக்கு ரூ. 1¼ யிந்தபடிக்கு கெந்தகசாத்தி வனபோஜனம் மயேசுர பூஜை தூபதீப நைவேத்தியம் நடந்துவரத் தக்கதாக குகையீசுவரசுவாமியார் மடத்தில் இந்தத் தன்மம்வழுவாமல் நடக்கவேண்டிக் குடுத்ததற்குக் கை எழுத்துக் கொடுத்து எழுகரை நாட்டுப் பட்டக்கார நல்லியணமுதலியாரும், எழுகரைநாட்டு சமயமுதலியாரும், இருபத்துநாலு நாட்டுச் சமயமுதலியார்களும், தட்டையநாட்டு அய்யம்பெருமாள் முதலியார், வெங்கலநாட்டுப் பஞ்சமாதேவி பசுபதி முதலியார், வடகரைநாட்டு வேலப்பமுதலியார், காஞ்சிக்கோயில் கந்தமுதலியார், ஒடுவங்கநாட்டுக் குமாரசாமி முதலியார், அருணாநாட்டு பட்டக்காரமுதலியார், அவினாசிலிங்க முதலியாரும், தென்கரைப் பட்டியப்ப முதலியாரும், குருப்புநாட்டு குமாரசுவாமிமுதலியாரும், மற்று முண்டான நாட்டு முதலியாரும்,

மக்கத்துக்குக் கால்பணமும், மணவாழப் பிள்ளையார்க்குக் கால்ரூபாயும், கைக்குள தாசிக்கு ரூபாய் அரைக்காலும், வன்னிய குலத்தாருக்கு ஒண்ணே காலும் இந்தப்படிக்கு மேல்கரை இருபத்துநாலுநாடும் கீழ்கரை எழுகரைநாடும் இந்த வர்த்தனை நடக்கத்தக்கதாக அலையாகிரி குகையீஸ்வர தவசிப் பிள்ளைகளுக்கு சோடச உபசாரமாய் அமுதுங் கொடுத்து தாமசமில்லாமல் இந்த வர்த்தனை குடுத்த பேர்கள் காசியிலேயிருந்து கெங்கா பவானி தீர்த்தம் கொண்டு போய் ராமேஸ்வரத்து ராமலிங்கத்துப் பூசை பண்ணுகிற பலன்பெறுவார்கள். பொன்னம்பலத்துக் கனகசபையை சேவித்த பலன் பெறுவார்கள். திருவாரூர் தியாகருக்கு பங்குனி உத்திரத்தில் காசி தீர்த்த அபிஷேகம் செய்த பலன் பெறுவார்கள். பொன்னரங்கத்தில் மார்கழி மாதம் சொர்க்கவாசல் யேகாதசி அனுஷ்டித்த பலன் பெறுவார்கள். கொங்கேழு திருப்படை வாசல் சேவித்த பலன் பெறுவார்கள். இந்தத் தர்மம் நடத்திவரக் கடவோமாகவும்.

இந்தத் தர்மத்துக்கு யாதாமொருவர் இடையூறு பண்ணின பேர்கள் காசி கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்றதோஷத்திலே போகக்கடவது. ராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் போகிற பூரண கெர்ப்ப ஸ்திரியைக் கொன்ற தோஷத்திலே போகக்கடவது. மாதா பிதா குரு தெய்வம் மனையாள் இவர்களுக்கு வஞ்சனை பண்ணின தோஷத்திலே போகக்கடவது. யிந்த தர்மம் வழுவாமல் நடத்தினபேர்கள் சகல தர்மதராய் இகத்திலே அஷ்டைசுவரிய சம்பன்னராய் சிவாயுச்சியமடைவார்கள். இந்த வரிசை காவேரி சந்திராதித்தர் உள்ளளவும் நடத்திவரக் கடவோமாகவும் தங்களை அத்தநாரீசுர தம்பிரானாரும் பழனி வேலாயுதசுவாமியாரும் லட்சிக்கவும். குகையீஸ்வர சுவாமியார் லட்சிக்கவும். திருச்சிற்றம்பலம். வேலுமயிலு முன்டைக்க. குமாரசுவாமியார் ரட்சிக்கவும்.

# 3. அனுமன்பள்ளி செங்குந்தர் பட்டயம்

ஈரோடு மாவட்டம் ஈரோடு வட்டம் முகாசி அனுமன்பள்ளியில் உள்ள அய்யாவு முதலியார், சருவலிங்க முதலியார் சகோதரர்களிடமிருந்து பெற்ற ஓலைப்பட்டயம்.

கி.பி.1723 ஆம் ஆண்டு மைசூர் கிருஷ்ணராச உடையார் ஆட்சியில் தாராபுரம் 24 நாட்டுக் கவுண்டர்களுக்கும் அறிவித்துவிட்டுக் கொங்கு 24 நாட்டுச் செங்குந்த முதலியார்களும், அவர்கள் பட்டக்காரர்களும், நாட்டாண்மைக்காரர்களும் தாராபுரத்தில் அகத்தீசுவரர் சன்னதியில் கூடினர்.

தாராபுரம் ராசசேகரராசாவய்யன், வேணாவுடையாக் கவுண்டர், மணியம்பாளையம் நல்லதம்பிக் கவுண்டர், பல்லடம் முத்துவீரப்ப கவுண்டர் ஆகியோர் முன்னிலை வசித்தனர்.

பூந்துறை நாட்டுச் சங்கோதி சித்தநாதன் - தெவியானை ஆகியோர் மகள் முருகநாயகத்தைத் தாராபுரம் அகத்தீசர் சன்னதியில் "செங்குந்த மாணிக்கி" என்று பெயரிட்டுக் கோயிலுக்குத் தேவரடியார் ஆக்கினர்.

செங்குந்தர்கள் தறிக்குக் கால்பணமும், திருமணத்திற்கு மாப்பிள்ளை வீடும், பெண் வீடும் தலா ஒவ்வொரு பணமும் செங்குந்த மாணிக்கிக்குக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

முருகநாயகத்தின் சகோதரர் வீரப்பனுக்கும் தறிக்குக் கால்பணமும் திருமணத்திற்கு ஆலாத்திக்கு ஒருபணம் அளிக்கவும் ஒப்புக்கொண்டனர்.

பூந்துறை, வெள்ளோடு உட்படப் பல ஊர்க் கவுண்டர்கள் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். காளியப்ப கவுண்டர் என்பவர் ஓலையை எழுதியுள்ளார்.

### மூலம்

உ ஹரி ஓம். நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.

வைய்யம் நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய யன்பர் விழங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

கோல நீடிய நிருவரை வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திரன் அரசையுங் கனவிலும் வேண்டேன்
மாலை யர்பெறும் பதத்தையும் பொருளென மதியேன்
சால வேண்டுவன் தண்மையை வேண்டுவன் தமியேன். உ

திருச்சிற்றம்பலம். மீனாட்சி சொக்கலிங்கம் துணை.

சென்னிமலையாண்டவன் துணை.

ஹரி ஓம். நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.

ஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரியதழ விபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலத்து தாபனாசாரியன் ஈழமண்டலமுந் திறை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசபரமேசுரன் ராசப்பிறதாபன் ராசாக்கள்தம்பிரான் ரணமுக வீரபத்திரன் அதரசூர வீர விக்கிறமாதித்தன் கட்டாரிச் சாமுவன் நவகண்ட சக்கிறவர்த்தி மலைகலங்கிலும் மனங்கலங்காதவன் ஒரு குடைக்கீ ழுலகமுழுதாண்ட ராசகோலாகலன் ராசகோழரி ராசசங்காரன் ராசபுசங்கவன் திருநயப் பிறதிஷ்டாகரன் துஷ்ட்ட நிக்கிரக சிஷ்ட்ட பரிபாலன் உத்திர தெஷ்ண பூறுவ பஷ்ம சத்த சமுத்திர அசுபதி கெசபதி நரபதி நவகோடி நாராயணன் கண்டரில் கண்டன் மிண்டரில் மிண்டன் வண்டற்கொரு கண்டன் வண்டறாவுத்தன் உத்தண்ட மண்டலீகர் கண்டன் உபையகுல சுத்தாங்கசூரன், மன்னிய மாற்த்தாண்டன் மதியாத மன்னியர் உயிர் மதியாத மன்னியர் மனிமகுட மாலையிட்ட வீரவல்லையப் பிறதாபன் வீரகண்டையப் பிறதாபன் தொண்டைமண்டலத்துச் சண்டப் பிறதாபன் சோழமண்டலந் திரை கொண்ட திண்புயாசலன் துலுக்கர்தழ வியபாடன் துலுக்கர் மொகரந் தவிழ்த்தான் அண்டினவர் தஞ்சம் மிண்டினவர் கோளரி கலியுகராமன் வரதுங்கப் பிறதாபன் தங்கப் பொன்மாற்பன் மணிமகுட முடிசூடு மனோபயங்கரன் யீழம் யிலங்கையும் திறைகொண்டருளிய தொண்டமண்டலம் சோழமண்டலமும் கொங்குமண்டலமும் பிரதிஷ்டாசாரியன் அஷ்ட்டலட்சுமி பொருந்திய மாற்பன் கோட்டத்து மன்னியர் கண்டன் துஷ்ட்ட நிற்க்கிறக சிஷ்ட்ட பரிபாலன் அஷ்ட்டபோக துரந்தரன் துஷ்ட்டர் கோஷ்டந் தவிழ்த்தான் பதினெட்டுக் கோட்டத்து மன்னியர் கண்டன் நவரற்றின மாலையாபரணன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன் கெடி மன்னர் ................ தானன் பூலோக தேவேந்திரன் ரணமுக சுத்தவீரன்,

சொல்லித் தப்புவார் கண்டன் புண்டரீக புருஷோத்தமன் சகல சாம்பிறாச்ய லட்சுமி வாசன் பூலோக நாயகன் பூமண்டலாதீஸ்வரன் சண்டப் பிறசண்டன் சத்துருக்கள் மணவாழன் சமையகெம்பீரன் சமைய நாராயணன் சமையத்துரோகர் கண்டன் அஷ்ட்ட ஆசுபரிய சம்பன்னன் சத்த சாகரமும் ஒருகுடைக்கீ ளாண்டு கொண்டருளிய ஸ்ரீறிகட்டாரிச் சாமுவன் ஸ்ரீறி விருப்பாஷிதேவ மகராயர் வீரவசந்தராயர் போசராயர் வீரநரசிங்கதேவ மகாராயர் தேவராயர் கெசபதிராயர் கஷ்த்தூரிராயர்

கதம்பராயர் பிறவுடதேவ மகாராயர் வல்லாளராயர் சம்மட்டிராயர் சூடும்புலித்தேவ மகராயர் உச்சிமல்லிதேவ மகராயர் விசையராயர் வில்லவராயர் பவளேந்திறதேவ ராயர் யீசுரப்ப நாயக்க மகாராயர் கிஷ்டணதேவ மகாராயர் அச்சுததேவ மகராயர் சதாசிவராயர் புசபெலதேவ மகாராயர் சீரங்கறாயர் மல்லிகாற்சுனராயர் ஸ்ரீறி வீர அறிநாராயணன் மல்லிகாற்சுனராயர் கிஷ்ட்டணறாயர் றாமறாயர் வேங்கிடபதிராயர்,

அறிவுக்கு அகஸ்த்தியனைப் போலவும் அழகுக்கு அனங்கனைப் போலவும் சொல்லுக்கு அர்ச்சந்திரனைப் போலவும் வில்லுக்கு விசையனைப் போலவும் மல்லுக்கு வீமனைப் போலவும் வாழுக்கு அபிமன்னனைப் போலவும் பொறுமைக்குத் தன்மரைப் போலவும் குடைக்குக் கன்னனைப் போலவும் நீதிக்குச் சோளனைப் போலவும் புலியும் புல்வாயும் ஒருதுரையில் நீர்குடித்து வாழவும் எலியும் பூனையும் கூடி வாழவும் கெருடனும் பாம்பும் கூடி வாழவும் யிந்தப்படி நீதி நெறியாக ஒரு குடைக்கீழ்ப் பிறிதிவிராச்சியஞ் செய்து அருளாநின்ற கலியுக சகாற்தம் 4824க்கு மேல்ச் செல்லாநின்ற சோபகிறிது வருஷம் சித்திரை மாசம் 14ந் தேதி,

மகாசுவாமி கிஷ்டணராசஉடையார் பிறிதிவி ராச்சியஞ் செய் தருளாநின்ற காரியத்துக்குக் கற்தறான கொங்கு தாறாபுரம் யிருபத்து னாலு நாட்டுக் கவுண்டரவர்கள் அறிக்கையாக சமையமுதலியார் அவர்கள் பூமடந்தை பணிகேட்ப ஒருமகுடந் தனிக்குடைக்கீள் உலகனைத்தும் வந்தொதுங்க கற்பகத்தையுஞ் சுரபியையும் கார்முகிலையும் காத்தளித்து நீதியின்கண் நிலைநிறுத்தி நியாயதன்மம் நெறிப்படுத்தி செங்கோல் வருங்கலியை மெலிவித்துச் செழுமணிமுடிச் செங்கோல் வேந்தன் செய்வதையறிந்து சிம்புள் தேவனே தெய்வமாகவும் அறம் வளரப் பகைதணிய திசையணைத்துஞ் செவிடுபடாமல் மேகத்தைத் திறை கொண்டும் புரந்தரராசன் வீற்றிருப்பக் கொம்புஞ் சங்குங் காழமும் குலதன்மமாகவும் மாற்றலரை அரணழித்து வந்தடைந்தோற் கினிதளித்து ஏற்றவற்கு மிறுநெதியம் மெண்டிசையும் மெழில் பரப்பி வைய்யகத்துப் புகழ் நடத்தி மனம் பெரிதாய் அறம்வளரப் போர் ஆண்மையுஞ் சிலை வீரமும் சொல்வண்மையும் நல்லொழுக்கமுந் தாளாண்மையும் மிகப் பெருகிச் சறுவ சம்பத்து முடையவர்களாய் நாலு வன்னாச்சிரமங்களும் வழுவாமல் நடக்கப்பட்ட,

சோழசக்கிறவற்திப் பெருமாள் வல்லானைக் கொன்று படைவீடு கொண்டு தருவாருண்டோ வென்று கேட்டழவில் வல்லான்தன் மாளிகையிலே சென்று புகுந்து வகைவகைதோறும் பத்துப்பேரைப் பலியிட்டுப் பிறதாபத்தோடு தூங்கும் வல்லானைக் கொல்லச் சுரிகை வாங்குமழவில் வல்லான் தேவிக்காக வல்லானைக் கொல்லாத

வியசிவன்மை................. தீர திருமேனி காவலர் காமாட்ஷி வரபுத்திரர் கந்தன் சகோதரர் வீரநாராயணன் வீரவல்லானை வென்ற பஞ்சவன்ன தநிஷ்தராகிய அபிமான பூஷணர்கள் சாகச் சோம்பாதார் தன தாம்பூல மிட்டவர் நின்றவற்கு வாணாழ் கொடுத்தார் மேவாய் யெழுந்தார் ஆணாய்ப் பிறந்தாற் கேளாய் பிறந்தார் சோழன் அங்கங் காற்க நில்லாவுயிர் கொடுத்து நிற்கும் புகழ் கொண்டோர்.

சொன்ன மனமொத்த கைக்கோழர் நம்பெருமாள் திருமக்கள் நானென்று மீண்ட பெருமாள் சோழனுக்கு வச்சிரமழித்தோர் சொன்னநாயந் தப்பாதோர் துட்டர்கண்டர் துட்டராதித்தன் துஷ்ட்டபயங்கரர் துஷ்ட்ட நெட்டூரர் கொடுமையிலங்கேசந் மேன்மீசையுடையோர் வல்லான் தேவிக்கு மங்கிலியங்கொடுத்தோர் வீர வேளைக்காரர் வாடாமாலையுடையோர் முனையில் சறுக்காதார் முன்னே செங்குந்த முடையோர் வல்லாரில் வல்லோர் மதியாதார் மணவாழன் யிரட்டைச் சங்கு மடைக்கமுமுடையோர் கொம்பு காளமும் கொடிமுரசு முடையோர் கண்படையுந் தலைப்பிறையுமுடையோர் பூதலம்புகழும் புலிக்கொடியுடையோர் காளியைக் கைப்பிடித்துக் காலனுக்கு ஓலை விட்டோர் கொடுக்க முசியாதோர் கங்கை மண்டலம் குறும்பறுத்து கலிங்க மண்டலங் கட்டறுத்தோர் கடகமும் கலியாணமுங் கொண்டோர்,

விருந்துக் காதரர் வென்றன்றி மீளாதார் சென்றதிசை வென்றோர் சிவனடியை மறவாதோர் சீற்பாதசேகரர் செந்தமிளோற் குயிரளித்தோர் சேரலரை வென்றவர்கள் சிலம்புடைய திரல்வீரர் திக்கெட்டும் புகளுடைய திறலுடைய கைக்கோளர் காரானை முகமுடைய கற்பகத்தி னருளாலுங் கண்மூன்று முகமுடைய கயிலாய ரருளாலும் யீராரு தோளுடைய யிளையவன்ற னருளாலும் யோரடியால் மண்ணழந்த உலகராய ரருளாலும் யிருநாளி நெற்கொண்டு ஏழுலக மினிதளிக்கும் பரமேசுபரி தன்னுடைய பாதபங்கய வருளாலும் எத்திசையும வெல்லவல்லோர் இடங்கைக்குத் தலையானோர் அமனகண்டந் தெரிந்த கைக்கோளருள்,

............. அமர சேனாபதிகளும் வீரர் செந்திக்கைக்கோளருந் தெற்கு வடக்கு கிழக்கு மேற்குக்குட்பட்ட செங்குந்த முதலிகழும அருளாலாதினந்தீசுரன் அனுக்கிறகித்துத் திருவாய் மலர்ந்தருளியபடி கிறேதா துவாபர கலியுக சகார்த்தம் 4824க்கு மேல் செல்லாநின்ற சோபகிறிது வருஷம் சித்திரை மாசம் 14ந் தேதி அனுச நற்செத்திரமும் பஞ்சமியும் சுக்கிரவாரமும் பெற்ற னாளில் கொங்கு தாராபுரம் பாலைக்காட்டுக்குங் கிளக்கு, கோட்டைக்கரைக்கு மேற்கு, பன்றிமலைக்கு வடக்கு, பாலைமலைக்குத் தெற்கு, தென்கரைனாடு, காங்கயநாடு, தட்டையநாடு, வெங்கலனாடு, கிளங்குனாடு, மனனாடு, தலயனாடு, யிடப்பூச்சனாடு, பூந்துறைனாடு, வடகரைனாடு,

காஞ்சிக்கோவில்னாடு, ஒடுவங்கனாடு, வண்டிசூள்நாடு, வடவரிசைனாடு, பொன்குலுக்கினாடு, வாரக்கனாடு, ஆனைமலைநாடு, வைய்யாவூர்னாடு, அண்டனாடு இது முதலான யிருபத்து னாலுனாடு வஞ்சிபுரம் தாறாபுரத்தில் யிருபத்துனால் னாடும் செங்குந்த முதலிமாரும் பட்டக்காரரும் நாட்டாண்மைக்காரரும் குறைவறக் கூடி நிறவற நிறைந்து.

பஞ்சவன்னச் சடையில் தாறாபுரம் ராசசேகர ராசாவய்யனவர்கள் சுப்பய்ய னவர்களிப்படி வேணாவுடையாக் கவுண்டரவர்கள் மணியம் பாளையம் நல்லதம்பிக் கவுண்டரவர்கள் பல்லட முத்துவீரப்ப கவுண்டரவர்கள் இவர்கள் முன்பாக பஞ்சவண்ணமும் வெற்றிகொண்டு செங்குந்த முதலியார் பேருங் கீர்த்தியும் வேணுமென்று,

சந்திராதித்தவரைக்கும் பூந்துறைனாடு சங்கோதி சித்தனாதன்மகள் தாறாபுரம் அகத்தீசுபரசுவாமி சன்னதியிலும், உத்தரறாயப் பெருமாள் சன்னதியிலும், தில்லாபுரியம்மன் சன்னதியிலும், பொன்கபால கயிலாசத்துக்குப் பொன்கபாலத்தை கையொத்த அங்காளம்மன் சன்னதியிலும் திரிசந்தி காலம் பணிவிடை பண்ணப்பட்ட தெவியானை மகள் முருகனாயகத்துக்கு கொங்கு தாறாபுரம் யிருபத்துனாலு நாட்டு சமைய முதலிமாரும் பட்டக்காரரும் நாட்டாண்மைக்காரரும் அகத்தீசுபரசுவாமி சன்னிதானத்தில் செங்குந்த மாணிக்கியென்று பரிவட்டமுங் கட்டி தறிக்குக் கால்ப்பணம் திருவையாற்று னாகரம் வர்த்தனையும் கட்டளையிட்டு கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீட்டுக்கு ஒரு பணமும் பெண் வீட்டுக்கு ஒரு பணமும் இந்தப்படிக்கு வர்த்தனை கடட்டளையிட்டோம். இந்தவரி சந்திராதித்தவரைக்கும் குடுத்துவரக் கடவோமாகவும். யாதாமொருவர் யிந்த வற்த்தனைக்கு யிடறுசெய்தவன் வழவில் மண்ங்கலந் தவிர்த்து வெண்கலம் மெடுத்து யிந்த வர்த்தனை வாங்கிகொள்ளக் கடவோமாகவும். யிப்படி சம்மதித்து யிருபத்துனாலு னாட்டு சமைய முதலிமாரும் பட்டக்காரரும் நாட்டாமைக்காரரும் யிப்படிச் சம்மதித்து பட்டயங்குடுத்து சங்கோதி சித்தனாதன் மகன் வீரப்பனுக்கு தாறாபுரத்தில் யிருபத்துனாலு னாட்டுக்கு திரிவையாற்று னாகரம் தறிக்குக் கால்ப்பணம் வர்த்தனையும் கலியாணத்தில் நமக்கு ஆலாத்திக்கு ஒரு பணமும் சந்திராதித்த வரைக்கும் கட்டளையிட்டோம்.

யிந்த தன்மம் கொடுத்து நடத்தி வந்த பேர்களுக்கு காசியிலேயிருந்து கெங்கா பவானி தீர்த்தங் கொண்டுபோய் ராமீசுரத்துக்கு றாமலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணின பலன் பெறுவார்கள். பொன்னம்பலத்தில் கனகசபை சேவித்த பலன் பெறுவார்கள். திருவாலூர் தியாகராசருக்கு பங்கினி உத்திரத்தில் காசித் தீர்த்தம் அபிஷேகம் செய்த பலன் பெறுவார்கள். பொன்னரங்கத்தில் மார்கழி மாசத்தில் சொக்கவாசல் ஏகாதெசி அனுட்டித்த பலன் பெறுவார்கள். கொங்கு ஏழு சிவாலையமும்

சேவித்த பலன் பெறுவார்கள். கொங்கு தாராபுரம் யிருபத்து னாலு நாடு கூடிக் குடுத்த பட்டையம். யாதாமொருவர் யிந்தத் தர்மத்துக்கு விகாதம் பண்ணினவனுக்கு அசுபத்தி விறுமத்தி கெங்கை கரையிலே காறாம்பசுவைக் கொண்ண தோசத்திலே போவார்கள். அப்படி வாராதபடிக்கி பூரண கிறுபை அணுப்பவும்.

யிதுக்குச் சாச்சி வேணுடையாக் கவுண்டா் பா ..................... சுப்பய்யனவர்கள், பூந்துறைநாடு வாரணவாசிக் கவுண்டர், வெள்ளோட்டுப் பெரியண கவுண்டர், காஞ்சிக்கோவில்னாடு கரிச்சி கவுண்டர், பல்லட முத்துக்கவுண்டர், நிளலிச் சின்னய கவுண்டர், சேவூர் சோளியாண்டாக் கவுண்டர், விசையமங்கலம் வடமலைக் கவுண்டர், யிந்தப் பட்டையம் எழுதின நன்மைக்குச் சின்னக் காளியப்ப கவுண்டன் கையெழுத்து உ. தங்களைப் பளணியாண்டவர் லட்சிப்பார். குருவே துணை உ.

## 4. செங்குந்தர் வெற்றிப் பட்டயம

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் இந்த ஓலைப்பட்டயம் உள்ளது.

கொங்கு நாட்டு விசயமங்கலப் பகுதியில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள் இடங்கை வலங்கைப் பிரிவுகளாக இயங்கி வந்துள்ளனர். செங்குந்த முதலியார், படையாட்சிக் கவுண்டர், ஆசாரிகள் ஆகிய பஞ்சகம்மாளர், நகரத்தார், பள்ளர், மாதாரிகள் ஆகியோர் இடங்கைச் சாதியாகவும், கவரைச் செட்டிகள், தேவாங்கர், சாணார் ஆகியோர் வலங்கைச் சாதியாகவும் தம்மை அழைத்துக் கொண்டனர்.

விசயமங்கலம் மாரியம்மன் திருவிழாவில் இடங்கைக்குரிய சில சிறப்புக்களை வலங்கையார் அணிந்து கொண்டனர். இடங்கையார் ஆட்சேபம் தெரிவிக்க ஒரு வருடம் இந்தத் தகராறு நீடித்தது. அங்கு வந்த அசரத் திப்பு சுல்தானின் அந்தியூர் திவான் கிரிமிரே சாயபு பாட்சாவிடம் முறையிட அவர் 'பூர்வம் தீர்ந்த பட்டயங்கள்' வாங்கிக் கொண்டு ஆதாரங்களுடன் அவர்களைத் திருப்பூருக்கு வரச்சொன்னார்.

திருப்பூரில் விசாரித்த பின் தவறாக வழக்குத் தொடுத்த வலங்கையார்க்கு 2400 பொன் அபராதம் விதித்து வலங்கை, இடங்கையார்க்குப் பூர்வீகம் முதல் என்னென்ன உரிமைகள் உண்டு என்று நிர்ணயம் செய்தார். வெற்றி பெற்ற இடங்கையார் வெற்றிக் காணிக்கையாக 1500 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். இந்த விசாரணை 5.2.1797 இல் நடைபெற்றுள்ளது.

திப்புவின் ஆட்சிக்காலத்தில் கொங்கு நாட்டுக் கிராமங்களில் அமுலுதார், சேனபாகம், சிரஸ்தார் ஆகிய மூன்று அதிகாரிகள் இருந்தனர். அமுலுதார் பெரும்பாலும் இசுலாமியராகவே இருந்தனர். மற்றவர் பெரும்பாலும் அந்தணராக இருந்தனர். விசயமங்கலம், அறச்சலூர், துடுப்பதி, ஊத்துக்குளி அதிகாரிகள் பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. திப்புவின் நிருவாகம் பற்றி அறிய இப்பட்டயம் மிகவும் உதவுகிறது.

இடங்கையர்க்குச் செங்குந்தர் தலைமை தாங்கியதால் இந்த ஓலைப்பட்டயம் செங்குந்தர் வெற்றிப் பட்டயம் என அழைக்கப்படுகிறது. பல ஊர்க் கவுண்டர்கள் முன்னிலையில் இவ்வழக்கு தீர்க்கப்பட்டுள்ளது.

### மூலம்

ஸ்ரீ சாலியவாகன சகார்த்தம் 1718 க்கு மேல் கலியுக சகார்த்தம் 4897க்கு மேல் செல்லாநின்ற நழ வருஷம் தை மாதம் 27ஆம் தேதி

ஞாயிற்றுகிழமை அவிட்ட நட்சத்திரம் பரிநாம யோகமும் வாலவாகரணமும் யிப்படியாகக் கொற்ற சுபதினத்தில்,

ஸ்ரீமது றாசாதிராசன் றாசமாத்தாண்டன் றாசகெம்பீரன் பிரவுடறாயர் பிரதாபறாயர் நறபதிறாயர் நரசிங்கறாயர் தேவப்பறாயர்வுடையார் வீரசம்மந்தறாயர் சிக்கிந்ததேவருடையர் கிஷ்ட்டினறாயர்வுடையார் இவர்கள் முதலான அநேக றாயர் பட்டங் காணங்கர் மயிசூர்ச்சமஷ்த்தானம் சாமறாயர்வுடையார் உபைய காவேரி மத்திஷ்ஷமான சீரங்கப்பட்டணத்தில் ரற்றின சிம்மாசனரூடராய் பிருதுவிராச்சியம் பண்ணிக் கொண்டிருக்கும்போது

யிவர்கள் காரியத்திற்குக் கருத்தராயிய அசுரது நவாப்பு அயிதரலிக்கான் சாயிவு அவர்கள் குமாரர் நவாப் அசறது டீப்புச் சுலுத்தான் பாச்சா சாயபு அவர்கட்கு றாச்சியம் பரிபாலினம் பண்ணுகிறபோதுயிவர்கள் காரியத்திற்கு முக்கிஷ்த்தராயிய அசூர் கச்சேரி மகாறாயர் றாயேஷ்த்திரி மீரு சாயவு பாட்சா அவர்கள் விசாரணை பண்ணும்போது,

கொங்குமண்டலத்துக்குச் சேர்ந்த அந்தியூர்க்கச்சேரி ஸ்ரீ திவான் கிரிமிரே சாயிவு பாட்சா அவர்கள், சிரஷ்த்தார் றாமறாயர் அவர்கள், அமுதலிச்சாயிவு பாட்சா அவர்கள், கொங்கு மண்டலம் குறிப்பு நாட்டில் விசையாபுரத்துக்கு அமுலுதாரர் மம்முதல்லி சாயிவு அவர்கள், சேனபாகன் அன்னயன் அவர்கள் சிரசதார் வெங்கிட்டயன் அவர்கள், அரச்சலூர் அமுலுதாரர் சுபானுக்கான் சாயிபு அவர்கள், சேனபாக கோபால கிஷ்ட்டினய்யனவர்கள், சிரஷ்த்தார் கல்லய்யன் அவர்கள், துடுப்பதி அமுலுதார் மீராண்சாயிபு அவர்கள், சேனபாகச் சின்னப்பன் அவர்கள், சிரஷ்த்தார் வீரறாகுவய்யன் அவர்கள், ஊத்துக்குளி அமுலுதார் சாலீ சாயிபு அவர்கள், சிரஷ்த்தார் சேசகிரி அய்யர் அவர்கள், சேனபாக சுப்பய்யன் அவர்கள்,

குறிப்பு நாட்டுக் கவுண்டர்களில் அந்தியூர் காழியண கவுண்டன், அனுமந்த கவுண்டன், பொன்னைய கவுண்டன், நெட்டரங்க கவுண்டன், துடுப்பதி வாரணவாசிக் கவுண்டன், அரசப்ப கவுண்டன், நாகய்ய கவுண்டன், பொன்னய கவுண்டன், ராமய கவுண்டன், சின்னத்தம்பிக் கவுண்டன், ராமய கவுண்டன், ஊத்துக்குளி சறபண கவுண்டன், பெரியதம்பிக் கவுண்டன், முத்துக் கவுண்டன், செல்லப்ப கவுண்டன், திருப்பூரு பொன்னய கவுண்டன், முதலிபாளையம் முத்துக் கவுண்டன், குன்னத்தூரு சீரங்க கவுண்டன், அறியூரு முத்துவேலப்ப கவுண்டன், ஆவுடையாக் கவுண்டன், கருப்ப கவுண்டன், திங்களூரு குள்ள கவுண்டன், முட்டத்து ராமகவுண்டன், செவியூறு ஈஸ்வரமூர்த்திக் கவுண்டன் மேற்படியார்கள் முதல் இருபத்துநாலு நாட்டுக் கவுண்டர்கள்

நாங்களெல்லோருங் கூடி யிடங்கயிலாகிய இருபத்திநாலு நாட்டு யிடங்கய்யாருக்கு நாங்களெல்லாருங்கூடி எழுதிக்கொடுத்த வெற்றிப்பட்டையம்.

பூந்துறைநாடு சபையில் பட்டக்காரர் தேவண கவுண்டர், வய்யாபுரிநாடு முத்துக்காளியப்ப கவுண்டர், காஞ்சி ஒடுபங்கநாடு முதலிபட்டக்கார கவுண்டர் அவர்கள், ஆருநாட்டு முதலி பட்டக்காரக் கவுண்டர் அவர்கள், பொன்குலுக்கி நாடு முதலி பட்டக்காரர் அவர்கள், வாரக்கநாடு சமையப்பட்டக்காரக் கவுண்டரவர்கள், குரிப்பு நாடு சமையப்பட்டக்காரக் கவுண்டரவர்கள், காங்கயநாடு சமையப்பட்டக்காரக் கவுண்டரவர்கள், தேன்கரைநாடு சமையப்பட்டக்காரக் கவுண்டரவர்கள், வேங்கலநாடு சமையம்பட்டக்காரக் கவுண்டரவர்கள், ஒடுவங்கம் சமையப்பட்டக்காரக் கவுண்டரவர்கள், அரையநாடு சமையம்பட்டக்காரக் கவுண்டரவர்கள்,

எழுகரைநாடு சமயம்பட்டக்காரக் கவுண்டர், படையாச்சிக் கவுண்டன், சின்னாயிக் கவுண்டன் ................ நாடு படையாச்சிக் கவுண்டன், கருப்ப கவுண்டன், காஞ்சி ஒடுவங்கம் சமையம்பட்டக்காரர், பச்சைமுத்தாக் கவுண்டன், பூந்துறை நாடு பச்சா கவுண்டன், வடகரைநாடு படையாச்சிக் கவுண்டன், திருமலை மணியகாரன், சத்திமங்கலம் ஒடுபங்கம் முத்துக் கவுண்டன், ஆசாரிகள் சின்னத்தட்டான், திருவேங்கிடக்கொல்லன், கதித்தமலை ரங்கத்தச்சன், ஆனிமுத்துஆசாரி, பொம்மத்தச்சன், முத்துக்கொல்லன், நகரத்தான் தொப்பைசெட்டி, முத்தஞ்செட்டி, குள்ள சேர்வைக்காரன் முத்துரங்கம், வெங்கிட்டநாயக்கன், பழ்ழர் வகையில் வீரபத்திரப்பண்ணாடி, குட்டிப்பண்ணாடி, யிருளப்பப்பண்ணாடி, சோணப்பண்ணாடி, மாதாரி வகைகள் குப்பமாதாரி, ரங்கமாதாரி, சின்னமாதாரி, .................. மாதாரி ................... யிவர்கள் முதலாகிய இருபத்து நாலு நாட்டிலுள்ள யிடங்கையாருக்கு செங்குந்தமுதலிமார் படையாச்சிக்கவுண்டர் அவர்கள் பஞ்சாளத்தார் பழ்ழர் மாதாரிகள் யிடங்கையோருகளும் வெற்றிப்பட்டையம் கொடுத்த விவரம்.

விசயமாநகரத்தில் மாரியம்மன் திருநாளிலே யிடங்கையாருக்கும் வலங்கையாருக்கும் யித்தண்டத்தாருக்கும் தண்டம் வந்து வலங்கைக் கவரைச் செட்டியாகிறவன் இடங்கையாருக்குள்ள சிகப்புக் கத்தியும் விருதும் நமக்குச் செல்லுமென்று சொல்லிக்கெண்டு யித்தண்டத்தாரும் வழக்காடி ஆறு மாதம் ஒருவருசக் காலமாய் யித்தண்டத்தாரும் சாதியும் கட்டிக்கொண்டு வழக்காயிருந்த யிடத்தில் மகாறாயர் றாயஸ்த்திரி திவான் கிரி மீரே சாயபு அவர்கள் சீமை விசாரணைக்கு விசயமங்கலத்திற்கு வந்திருந்தயிடத்தில் வலங்கை கவரை தேசம் பெத்திசெட்டி, சேடச்செட்டி, தேவாங்கச்செட்டி, சாணார் முதலான வலங்கைச்சனமும்,

யிடங்கைக்குச் சேர்ந்த முதலிமார், படையாச்சிக் கவுண்டரவர்கள், ஆசாரியள் யித்தண்டத்தாரும் வந்து வழக்குச் சொன்னபடியினாலே யித்தண்டத்தாரை பூருவந் தீர்ந்த பட்டையங்கள் வாங்கிக்கொண்டு திருப்பூருக்கு வரச்சொல்லிப்போட்டுப் போனபடியினாலே அதே மேரைக்கு யித்தண்டத்தாரும் திருப்பூருக்கு வந்து பட்டையங்கள் வாசித்துப் பார்த்தயிடத்தில் யிடங்கையார் பட்டையத்தில் பூருவம் காஞ்சிபுரத்தில் தீர்ந்த பிரகாரத்துக்கு கத்தியும் பஞ்சவர்ண விருதும் அத்தநாரிக் குஞ்சமும் பகல்த் தீவட்டியும் பஞ்சவர்ண பாவாடையும் தெருமேல் மிரவணையும் அன்னமேல் மிரவணையும் குதிரைமேல் மிரவணையும் பல்லக்கின்மேல் மிரவணையும் செல்லுமென்று யிருந்தது.

வலங்கை கவரைச்செட்டியள் கொண்டுவந்த பட்டையத்தில் வலங்கை சனத்துக்கு வெள்ளைக்குடை வெள்ளை வெண்சாமரம் வெள்ளைவெட்டுப் பாவாடையும் வலங்கைச் சனத்துக்குச் செல்லுமென்று யிருந்தது. வலங்கைய்யார் கொண்டுவந்த பட்டையத்தில் யிடங்கையார்க்குச் செல்லும் விருது பஞ்சவர்ண விருதும் பஞ்சவர்ணக் குடையும் பகல்த்தீவட்டியும் கவரைச்செட்டி கொண்டுவந்த பட்டையத்தில் யிருந்தபடியாகவே பஞ்சாயத்தாரு .................. செட்டி வாலிசெட்டி வீரிசெட்டி முதலான பலபட்டறையார் முன்பாகத் தீர்ந்து வலங்கையான் ..................... கொண்டுவந்த பட்டையத்திலே யிடங்கையாருக்குச் சகல விருதும் செல்லுமென்று யிருக்கிறபோது நீ யில்லாது குமார்க்கம் சண்டை பண்ணிக்கொண்டு யிருக்கக் காரணமென்னவென்று வலங்கைக் கவரைத் தேசம் பெத்திசெட்டியைப் பிடித்து அங்கை செய்து விலங்குபோட்டு அரமணைக்கு ரண்டாயிரத்து நானூறு பொன்னு அவுதாரம் வாங்கி வச்சார்கள். யிடங்கையார் கிட்ட வெற்றிக்காணிக்கி ஆயிரத்தி அயினாறு ரூபா வாங்கி வச்சார்கள். வெற்றிப் பட்டையமுங் குடுத்தார்கள். மிரவணையும் பண்ணி வச்சார்கள். இதெ வெற்றிப்பட்டையமாக அனைவரும் கூடி எழுதிக் கொடுத்த வெற்றிப்பட்டையம். இதெ வெற்றிப்பட்டையமாக கட்டிக் கொள்ளவும்.

எழுதினவர் விசயாபுரிக்கெடியில சிரஷ்த்தார் வெங்கிட்டயன் அவர்கள் எழுதினது. காமாச்சியமமன் துணை. அந்தியூர்க்கச்சேரி ராஜஸ்ரீ திவான் கிரிமீரே சாயிபு அவர்கள், கச்சேரி சிரஷ்த்தார் இராமறாயர் அவர்கள், அமுதல்லிக்கான் சாயிபு அவர்கள், விசயாபுரித் துக்கிடியில் அமலுதாரர் மம்முதல்லி சாயபு அவர்கள், சேனபாக அன்னய்யன் அவர்கள், சிரஷ்த்தார் வெங்கிட்டயன் அவர்கள், அரச்சலூரு அமுலுதார் ராயசம் சுபானுகான் சாயபு அவர்கள், சிரஷ்த்தார் கல்லய்யன் அவர்கள், சேனபாகக் கோபாலகிஷ்ட்டப்பயன் அவர்கள், துடுப்பூதி அமுலுதாரர் மீரான் சாயிபு அவர்கள், சிரஷ்த்தார் வீரராகவய்யன் அவர்கள், சேனபாகச் சின்னப்பன்

அவர்கள், ஊத்துக்குளி அமுலுதார் சாலீ சாயேபு அவர்கள், குரிப்பு நாட்டுக் கவுண்டர்கள் அனுமந்த கவுண்டன், பொன்னைய கவுண்டன், அரசப்பக் கவுண்டன், குப்பண கவுண்டன், பட்டக்காரக் கவுண்டன், நாகப்பக் கவுண்டன், பொன்னைய கவுண்டன், றாமைய கவுண்டன், துடுப்பூதி, வாரணவாசிக் கவுண்டன், சின்னத்தம்பிக் கவுண்டன், ராமைய கவுண்டன், ஊத்துக்குளி சரபண கவுண்டன், பெரியதம்பிக் கவுண்டன், முத்துக் கவுண்டன், செல்லைய கவுண்டன், திருப்பூரு பொன்னைய கவுண்டன், முதலிபாளையம் முத்துக் கவுண்டன், அந்தியூர் காளியண கவுண்டன், குன்னத்தூரு சீரங்கக் கவுண்டன், ................ கவுண்டன், ஆதியூரு முத்துவேலப்பக் கவுண்டன், ஆவுடையாக்கவுண்டன், கருப்ப கவுண்டன், திங்களூரு குள்ள கவுண்டன், செவியூரு ஈஸ்வரமூர்த்திக் கவுண்டன்....

# 5. இடங்கைச் செங்குந்தர் செப்பேடு

செங்குந்த முதலியார், ஆசாரிகள் ஆன அஞ்சுசாதி பஞ்சகம்மாளத்தார், ஆயிரவைசியர், வன்னியர், தேவேந்திரப் பள்ளர் ஆகியவர்கள் இடங்கைப் பாணத்தார் என்று இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சேர்ந்து காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மனுக்குத் தேரோட்டம் நடத்த ஏற்பாடு செய்தனர். வலங்கையைச் சேர்ந்த சேனியன் சிம்மப்புலி என்பான் இடங்கையார் தேரைத் தன் மந்திர வலிமையால் நிறுத்திவிட்டான்.

கொச்சி, மலையாளம் பகுதியில் உள்ள இடங்கைப் பிரிவினர் சிம்ம ஒண்டிப்புலி அனுமந்தன் என்பானைத் தேர்ந்து அனுப்பினர். அவன் தன் மகனைத் தலைவெட்டித் தேரில் கட்டிப் பன்னீராயிரம்பேர் இழுக்கும் தேரைத் தான் ஒருவனாக இரும்புச் சங்கிலியை மூக்கில் கட்டி இழுத்துவந்து நிலை நிறுத்தினான். செங்குந்த முதலியார் உட்பட்ட இடங்கையார் அவனுக்கு கொடுத்த காணிக்கை விபரம் இச்செப்பேட்டில் கூறப்படுகிறது.

செங்குந்த முதலியார்கள், பலவாறு புகழப்படுகின்றனர். அவை செங்குந்தர்களின் மெய்க்கீர்த்திப் பகுதி ஆகும்.

அருணாசலமுதலியார், சின்னப்பமுதலியார், மல்லப்பமுதலியார், கிருஷ்ணப்பமுதலியார், மழவராய முதலியார் ஆகியோர் இச்செப்பேட்டில் குறிப்பிடப் பெறுகின்றனர்.

### மூலம்

1) ஸ்வஸ்திஸ்ரீ விசைய சாலிவாகன சகாப்தம் 1243 கலியப்தம் 4422

2) யிதன்மேல்ச் செல்லாநின்ற சருவதாரி சம்வச்சரம் வைய்யாசி மாதம் 11 தேதி யிந்த சுக்குரவாரம்

3) அஸ்த்த நஷ்ஷெத்திரம் சுபனாமயோகம் யிந்த சுபதினத்தில் சாதனம் பத்திரம்

4) எழிதிக் குடுத்த விபரம். கயிலாய பிரதினாமமான காஞ்சி ஸ்தளம் 72 நாடு 63

5) கோஷ்ட்டம் மாதஷ்சி படவேடு தேசத்தில் யிடங்கை பாணத்தார் எழிதிக்குடுத்த சாதனம்

6) பராபரவஸ்துவான ஸ்ரீமது சகலகுண சம்பன்னரான பதவாக்கிய பிறமானிக்கரான

7) சத்தியாபாஷை அரிச்சந்திரரான அன்னதான சொற்ன்னதான வஸ்த்திரதான
8) அரிபூசை சிவபூசை குருபூசை யார்வலரான அனேக சாம்பிறாஷ்சிய
9) லஷ்சுமிகரான அக்கினியில் செம்மாவுதாரரான ஆன்புலிக்கொடிக் குடையவரான
10) சம்புமாரிஷ்சி வேழ்வியி லுதித்தவரான பஞ்சவர்ண்ணம் விருது படைத்தவரான
11) காங்கு கச்சை உடையவரான வேதமுப்பிரினூல் தரித்தவரான வாதாவியை வெண்ணவரான
12) யிடங்கை சிம்மாசனத்துக்குக் கற்த்தவியரான ரிணவேர பாலிகரான ரணகளத்தில்
13) பிறமுதுவு காட்டாதவரான வன்னிய புசங்கரான வாடாமாலை செங்க
14) முநீர்மாலை வெத்திமாலை தரித்தவரான வீரமுரசு வெத்திமுரசு கலியாண முரசு
15) படைத்தவரான வீரவெண்டயம் வீரகண்டாமனி தரித்தவரான சிலையெழுபது
16) படைத்தவரான சிம்மக்கொடி யுடையவரான திடதிடயெனவே பேரிகை டமாரம்
17) சத்தம் செய்யாத தேசத்தில் வனசபங்கம் பண்ணினவரான கும்கும் எனவே
18) வெடிபடை கொக்கரிக்க சம்மாத்தியமுடையு மத்திவரான கூட்டமுரும் வீரபந்தன பால்
19) அளித்தவரான வீரசூர விக்கிரமார்க்கம் பெருமைபேர் பெத்தவரான ஆடாத
20) புரவியை தட்டி வையாளி விட்டவரான அஞ்சாதே சிங்க மதவானைக் குட்டியைப்போல்
21) பிறாக்கிறமம் முடைத்தவரான வந்தவரை ஆதரிக்கவல்லவரான பாலோடு பழம் உண்ட
22) பன்னாடுமுடையவரான கரிமுரசும் கெங்கா நதியும் மகமேரு முடையவரான
23) பந்துசென போஷகரான காளிகாதேவி அம்மனிடம் அருளும்

பிரசாதமும்

24) பெத்தவரான அஞ்சுசாதி பஞ்சாளத்தார் அனுமக்கொடி விருது படைத்தவரான அனந்த

25) வேத சிப்பிய சாஸ்த்திர வேதபாராயண அகிலாண்டகோடி பிரம்மாண்டவரான

26) சிவபூசை துரந்திரிகரான ருத்திராஷ்ச மாலிகபரணரான மகாமேரு சமான

27) தீரரான அஞ்சுசாதி பஞ்சாளத்தார் சாஸ்திரிசி கோத்திர புத்திரரான

28) விசயநகரத்தார் ஆயிரம் கோத்திரத்தாரும் உபநகர பிரம்மநகர காஞ்சிநகர காசிநகர

29) அயோத்திநகர பிறவென்றான் மாணிக்க சிம்மாசனம் படைத்தவரான ஆயிரங்

30) கோத்திரத்தாருகளும் தர்ம்மசிவாச்சாரியார் முன்பாக குடுத்த கெருடக்கொடி

31) விருது சூடுமிவர்கள் ஸ்ரீமது சகலகுணசம்பன்னரான சகலதர்மம் பரிபாலகரான

32) அகண்டித லஷ்மி பிரசன்னரான அன்னதான விநோதகரான அவியாச

33) பரோபகாரரான சங்கீத கோலாகலரான பிரியரான கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதாரான

34) யிருதலை பச்சிக்கொடி கோழிக்கொடி பெத்தவரான வல்லானுட தேவிக்கி

35) பொயித்தலைக்கு மெய்த்தலை குடுத்தவரான காளியைக் கய்யால் பிடித்தவரான

36) காமாஷ்சியம்மன் துணையுண்டானவரான பச்சைடால் வெள்ளைடால் பகல்தீவுட்டி

37) மகரதோரணம் படைத்தவரான குதிரை குஞ்சரம் காளாஞ்சி கனகதப்பட்டை

38) புல்லாங்குழல் அலகுமாலை மஞ்சபாவாடை படைத்தவரான அருணாசல முதலியாரும்

39) சின்னப்பமுதலியாரும் மல்லப்பமுதலியாரும் கிருஷ்ணப்ப முதலியாரும் வன்னியர் பஞ்சா

40) ளத்தாரும் ஆயிரங்கோத்திரம் வசியகுல நகரத்தார் செட்டியள் எழுதிக் குடுத்த சாசனபத்திரம்

41) யிந்த காஞ்சி நகரத்திலே யிடங்கையார் காமாஷ்சிதேவிக்கு ரதம் நடப்பிச்சார்கள்

42) பன்னீராயிரம்பேர் யிழுக்குர ரதம் பண்ணி ஓட்டிவைக்கிற வேளையிலே

43) வலங்கைக்குள்ளே யிருக்குற சேனியன் சிம்மப்புலி அவனுடைய வித்தையாகிய

44) கிருபத்தினாலே தடைக்கட்டி ரதம் ஓடாமல்படி நிரித்திப்போட்டான். அப்போ தம்முட

45) யிடங்கைப் பாணத்தாருக்கு மனஸ்த்தாபம் பட்டு யிதுக்கு யிந்த ரதம் நடப்பிக்கப்பட்டவன்

46) நம்முட பாணத்திலே எங்கேயிருக்கிறதோ என்று தேசா தேசங்களுக்கு பத்திரம்

47) எழுதி அனுப்பிச்சார்கள். அப்போ கொச்சி மலையாளம் யிடங்கையார் பாத்து அப்பால்

48) கொச்சி மலையாளத்திலே யிருக்குற சிம்ம ஒண்டிப்பிலி அனுமந்தனை அழச்சு

49) அப்போ வந்து யிடங்கையாருக்கு சருணாறத்திரை பண்ணிக்கொண்டான். தேர் நிண்ணு

50) போயிருக்குது அத்தைப் போயி அந்த தேரை ஓட்டிவிக்க வேணுமெண்ணு

51) சொன்னார்கள். அப்படியே நாம் ஓட்டிவிக்கிறோம்மென்னு அவற்களுக்குச்

52) சொல்லிக்கொண்டு அவர்கள் குடுத்த வெகுமானங்களும் வாங்கிக்கொண்டு காஞ்சி நகர்ப்

53) பட்டணம் வந்துசேந்து தேரைப் பாத்தான். அப்போ யிந்த தேரை நானே ஓட்டிவிக்கிறேநென்று யிடங்கையாருக்கு

54) அவர்களுக்குச் சொல்லிகொண்டு அவர்கள் கொடுத்த வெகுமானங்களை

55) வாங்கிக் கட்டிக் கொண்டு காஞ்சிநகர்ப்பட்டணம் வந்துசேர்ந்து

56) தேரைப்பார்த்தான். அப்பே யிந்த தேரை நானே

ஓட்டிவிக்கிறேநென்று யிடங்கையாருக்கு

57) சருணாரத்திரை பண்ணிக்கொண்டு அப்போ தேவிக்கு ப்ராத்தினை பண்ணிக்கொண்டு தன்

58) மகனை அழப்பிச்சி அவன் தலையை வெட்டி தேரிலே கட்டி மந்திரப் பெலமெல்லாம்

59) விடுவிச்சு பன்னீராயிரம்பேர் யிழுக்குற தேரை ஒண்டிப்பிலி ஒருவனும் யிருப்புச்

60) சங்கிலி போட்டு மூக்கில் மாட்டிக்கொண்டு தேரை நாலு தெருவும் ஓட்டிவிச்சு நிலையில்

61) கொண்டுவந்து தேரை நிறுத்தினான். யிடங்கைப் பாணத்தாருக்குஞ் சருணாரத்திரை பண்ணிக்கொண்டான்.

62) (ஸ்வஸ்திஶ்ரீ ராய ராயஶ்ரீ மகாமண்டலேசுரன் மேதிநி மகராய கண்டன்)

63) பிரம்ம கற்பினையா யிருக்கவேணுமென்று வெகுமானங்களையும் குமித்து தேசம் அன்பத்தாறு

64) தேசத்திலுண்டான யிடங்கைப் பாணத்தார்கள் பேரிலே சாதனபத்திரம் எழுதிக்குடுத்தார்கள்.

65) அதுக்கு வயனம். வன்னியருக்குத் தலைக்கட்டுக்கு விராகன் 3. ஆட்டுக்கிடாய் 1. பஞ்சாளத்தாருக்கு

66) தலைக்கட்டுக்கு விராகன் 3. வசியன் ஆயிரங் கோத்திர நகரத்தாருக்கும் தலைக்கு விராகன் 3. யிந்த பிரகாரம்

67) சாதனபத்திரம் எழுதிக்குடுத்து மழவராயமுதலியாருக்கு தலைக்கட்டுக்கு விராகன் 3 பண்டாரத்தார்

68) உடையார் பண்டாரத்தார் எழுதிகுடுத்த சாதனபட்டையம் வீரப்ப ஆசாரி வீர பத்திர

69) ஆசாரி மாணிக்கஆசாரி ராமலிங்கபத்தர் குமரசாமிபத்தர் மாந்தாளி செட்டியார்

70) ஏகாம்பரசெட்டியார் புத்ரமல்லாசெட்டியார் யிவர்கள் சாதனமெழுதிக் குடுத்தது

71) விருது விபரம். அன்னக்கொடி கெருடக்கொடி பஞ்சவர்ண்ண விருது அனுமகொடி

72) ஆன்பிலிக்கொடி அக்கினிக்கொடி சிங்கக்கொடி யிந்த விருதுகளும் டால் டமாயி

73) எட்டுப்பாவாடை வெண்ஷ்சாமரம் பகல் தீவட்டி சிம்மதலாடம் பூச்சக்கிரக்குடை

74) மகறதோறணம் அஞ்சுவற்னை விருது யிப்படிக்கொத்த விருதுகள் குடுத்து அன்பத்தாறு

75) தேசத்திலிருக்குற யிடங்கைபாணத்தார் யிது பாத்துக்கொண்டு நம்முடபிள்ளை

76) விருதாவெளிக்கிச் சாமார்த்தியம் பண்ணிவந்த பிள்ளையென்று பாத்து யிந்த சாதன கற்ப்

77) பிதமாயி குடுத்து நடப்பிக்கொண்டுவரவும். சந்திரசூரியர்ருள்ள-மட்டுக்கும் காப்பாய்

78) சாதனம் எழிதிக்குடுத்து நம்முடபிள்ளை விருதாவெளிக்குப் பிறப்பட்டு ரதமும் ஓட்டிவிச்சு

79) நம்முடபேர் வெளியிலே கொண்டுவந்த பிள்ளைக்கி யிந்தக் கட்டளைக்கிக் குடுத்து

80) நடப்பிச்சுக்கொண்டுவரவும். யிது குடாமல் யாதாமொருத்தன் விகாதம் பண்ணினவனுக்கும்

81) ஓடி ஒளிச்சுப் போனவனுக்கும் ஆயிரம் கோவதையும் கொண்ண

82) தோஷம்வரும். ஆயிர சிவஸ்தலத்துக்குப் பூசை நடப்பியாமலப் பண்ணினவன் ஆயிரம்

83) பிராமணரை அடித்தவன் குருதேவியைச் சேர்ந்தவன். யிதுக்கு சாஷ்சி ஆகாசவாணி

84) பூமிதேவி காளிகாதேவி காமாஷ்சிஅம்மன் சரசுவதி அருணாத்திரி யீசுபரன் யிவர்கள்

85) யிதுக்கு சாஷ்சி. யிது பாத்து குடுக்கவும். காமாஷ்சிஅம்மன் லெஷ்சிக்கவும். சரசுபதி அம்மன்

86) துணை உண்டாகவும். மாதேசர்லிங்கம் துணை உண்டாகவும் உ

87) தேவேந்திரப்பள்ளர் வெள்ளை பூச்சக்கிரக்குடை வெள்ளையானை படைத்தவரான

88) தலைக்கட்டுக்கு விராகன் 3. கோசங்கிக்கு குடுத்த ரூபாயிக்கு காமாஷ்சிஅம்மன் சாஷ்சி.

89) களமரவர் துளுக்கர் தெலுங்கர் சாஷ்சிக்கு பரதேவர்கள் சாஷ்சி. ஒண்டிபுலி சிக்கண்ணா.

## 6. சேவூர்த் தலைப்பலிச் செப்பேடு

திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டம் சேவூரில் முத்துக்குமாரசுவாமி கோயில் காணியாளரான கொளப்பலூர் அருணாசல முதலியாரிடம் இச் செப்பேடு உள்ளது.

1741 ஆம் ஆண்டு கச்சி அண்ணாமலை முதலியார் மகன் முத்துக் குமாரநயினார் திருப்பரண் ஏறிக் கழுத்தலகு பாச்சிச் சிவலோகம் ஏகிய செய்தியைக் கூறுகிறது. இதனை நவகண்டம் என்று பண்டைய கல்வெட்டுகள் கூறும்.

முதற்கண் செங்குந்த முதலியார்களின் பெருமைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. கொங்கு 24 நாட்டுச் சமயமுதலிப் பட்டக்காரர்கள் உள்ளிட்ட சமூகப் பெரியவர்கள் கூடிய கூட்டத்தில் தலைப்பலி செய்து கொண்ட முத்துக்குமாரநயினார் தன் மகன் குப்பமுத்துவுக்கு ராஜாதிபதி மண்டலாதிபதி மடாதிபதி என்று பட்டம் சூட்டினார்.

செங்குந்தர்கள் மடாதிபதிக்குக் கொடுக்கவேண்டிய வரிகள் பல கூறப்படுகின்றன. செங்குந்தர் இடங்கைப் பிரிவினர் என்று கூறப்பட்டுள்ளது. முத்துக்குமாரநயினார் மீது பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடப்பட்டுள்ளது.

### மூலம்

பூவுலகத்திலே கலியுக சகாப்தம் 4842ல் துந்துபி வருஷம் மார்கழி மாசம் 3 தேதி சுக்கிரவாரமும் திரிதிகை புணர்பூச நட்சத்திரத்தில் கச்சி அண்ணாமலை முதலி மகன் முத்துக்குமாரநயினார் திருப்பரணேறிக் கழுத்தலகு பாச்சிச் சிவலோக மேகினார்.

சொற்ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரன் அரிகர விபாடன் பாசைக்குத் தப்புவராத கண்டன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் துலுக்கர்தள விபாடன் துலுக்கர்மோகந் தவிர்த்தோன் ஒட்டியர் துலுக்கரை ஒட்டி வென்றவன் அஷ்டகிரி மட்டும் அரசாளுமன்னன் கோஷ்டம் பதினெட்டும் கொண்ட கிருபாகரன் துஷ்டானுக்கிரகன் சிஷ்டபரிபாலன் தன்னுயிர் போல மன்னுயிர்க்கிரங்கும் மகாராஜன் அறிவுக்கு அகத்தியன் பொறுமைக்குப் பூமாதேவி குளிர்ச்சிக்குச் சந்திரன் நிதிக்குக் குபேரன் வில்லுக்கு விசையன் சொல்லுக்குத் தருமன் மல்லுக்கு பீமன் கொடைக்கு கர்ணன் ராஜாதிராஜன் ராஜபரமேஸ்வரன், ராஜமார்த்தாண்டன், ராஜகெம்பீரன், ராஜரணசூரன், தேசமைம்பத்தாறிலும் ஜெயங்கொண்டவராகிய விசையமாநகரில் ரத்தினச் சிங்காசனத்திற்குக் காரணகர்த்தராகிய நரசிங்கராயர், வீரவசந்திரராயர்,

விருப்பாச்சிராயர், பிரபுடதேவராயர், மகாதேவராயர், மல்லிகார்ச்சுனராயர், கிருஷ்ணராயர், அச்சுதராயர், சதாசிவராயர், வெங்கிடபதிராயர், சீரங்கராயர், ஆனை குந்திராயர்,

மனுநீதி விபரமும் ஆறிலொரு கடமை கொண்டு ஒரு குடைக்குகீழ் ராச்சிய பரிபாலனம் பண்ணியருளிய மகாராஜனவர்களின் காரியப் பிரதானராகிய மைசூரில் சாமராசு உடையார், கொண்டி வீரராச உடையார், நரசராசுடையார், தேவராசுடையார், சிக்கு தேவராசுடையார் மகாராஜனவர்கள் கொங்கு தாராபுரம் சீமையைச் செங்கோல் செலுத்துகின்ற சாலிவாகனன் கலியுகம் 4842 ல் துந்துபி வருடம் கணுவாயிக்கிங்கீழ் வசிக்காநின்ற சீமை முகாசி ஆறுநாடு சேவூரில் ஸ்ரீ வெங்கராயனார் அரசில் குமார சோழியாண்டாக் கவுண்டர் நீதி செலுத்துகிற நாளில்,

சுப்பிரமணிய மூர்த்திக்குத் துணைவராகிய வீரவாகு, வீரகேசரி, வீரமயேந்திரன், வீரமயேஸ்வரர், வீரபுரந்தரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர், வீரராந்தகர், வீரதீரர் நவவீரராகிய சிவன்மைந்தர், திருமேனி காவலர் என்ன விலங்கிலும் நா விலங்காதவர், பட்டமானம் பழுதறக் காத்தவர், இட்ட பரணேரி யிறங்காதவர், வல்லானை வென்ற வாசி வேளைக்காரர், பொய்த்தலைக்கு மெய்த்தலை கொடுத்தவர், கந்தனனுசரர், காமாட்சி வரபுத்திரர், பஞ்சாட்சரம் பஞ்சவர்ன விருது மஞ்சள் பாவாடையுடையவர், ருத்திராட்ச மாலிகாபரணர், அரிபூசை குருபூசை மயேஷ்வர பூசையுள்ளவர், லவண்டை மல்லாரி முதல் 32 வாத்தியம் பெற்றவர், இரத்தப் பாவாடை சந்திராகாந்திப் பாவாடையும் பஞ்சவர்ணக்குடை பகல்வத்தியுடையவர், அர்த்தனாரிக் குஞ்சமும் ஆயுதம் பெற்றவர், ஆவடி சேவடி திருவடிபெற்றவர், காஞ்சிபுரத்தில் கருமாரி நிலை கொண்டவர், சற்சன சுத்த சிவாச்சாரியார் அசுரர்குல காலர், செருமுனை கண்டு பின்னடையாதவர், சென்றதிசை முழுதும் வென்ற தீரர், செங்கை வடிவேலினர், சீர்பாதசேகரர், என்றும் மனுநீதி கெடாதவர், செம்பியன் மனமெச்சும் செங்குந்த வீரர், தம்பியை மனமொத்த சாதியையொழிப்பர், ஈரேழுலகத்திலும் வீராதிவீரர், துஷ்ட நிக்கிரகர் சிஷ்ட பரிபாலனர்,

பல்லோர் புகழ்ந்திடப் பட்டணங் காத்தவர், சோணாடு கார்த்த சுகுண தீரர், வீணாள் கெடாத மேன்மீசை யுள்ளவர், சேவல்கொடியுஞ் சிகண்டியுடையவர், வரம்பிலாவமரர் சிறைமீட்டவர், கடம்பமாலை கமழுமார்பினர், மந்தாரமாலை வாகுடன் பூண்டவர், நமச்சிவாயன் தேவியராகிய நவமாதர் ஈன்ற 100009 பதின்மரின்றுணைவர், கைலை காவலர், கைலாயத்தில் பார்வதி பரமேஸ்வரர் ஆடையா பரணமும் கைலாயங்கிரி மகமேரு மலையையும் பார்வதி தேவியார் தனது மகனாகிய

வீரவாகு முதல் 100009 வீரரிடத்தில் ஒப்புவித்து இதுகளையெல்லாம் கைக்கொள்ளுங்களென்று திருவாக்கருளித் தமது திருக்கரத்தால் திருநீறிடப்பெற்றது முதல் கைக்கோள முதலிமாரென்று திருநாமம் பெற்றவர், இரவி பரவிட இல்லசையாதவர், புரவலர் புகழும் போர்முகவீரர், பஞ்சாட்சரப் பரிபூரணர், வீரசிங்காசன மேவி வீற்றிருப்பவர்,

ஒட்டக்கூத்தரின் ஒப்பிலாத் தமிழுக்குச் சிரசிங்காசன மீந்தவர், வணங்கா முடியினர், சித்திரப் புலிக்கொடி சீராய்ப் பெற்றவர், வாசியும் விருதும் வன்மையுமுடியத் தேச மதிக்கச் செத்துப் பிறந்தவர், வாஞ்சையுடனே மகாதேவரைக் கண்டு காஞ்சிபுரத்திற் கருமாரி பாய்ந்தவர், சென்ற நான்முகனைச் சிகையைப் பிடித்தவர், கண்டுவருங்காளிதன் கைத்தாளம் பிடுங்கினோர், இறப்பதற்கென்றும் ஏங்காத தீரர், நாரணன்றனது நம்மருகர் என சீரணி தாரணி செப்பிடப் பெற்றவர், மன்மதனிருந்த மந்திரபுரியை வினயமுடன் புகுந்து வெட்டியழித்தவர், வானி குருமொழியை மறவாத செங்குந்தர் கோத்திரம் நீடூழி காலம் வாழி, கருமாரி கண்ட கைக்கோள முதலிமாராகிய கந்தனருள் பெற்றவர், கொங்கு 24 நாட்டுச் சமயமுதலி பட்டக்காரர், நாட்டாண்மைக்காரர், உறவின்முறையார், எழுகரை நாட்டுச் சமயமுதலி பட்டக்காரர், நாட்டாண்மைக்காரர், நம்ம இடங்கையர், மேற்படி கம்பளத்தார் எல்லோருங் கூடி கலியுக சகாப்தம் 4842 ல் துந்துபி வருடம் மார்கழி மாசம் 3ந் தேதி குருவாரமும் புனர்பூச நச்செத்திரமும் சுபநாம யோகமுங் கூடிய சுபதினத்தில் செம்பியன் கிழாநாட்டுச் சேர்ந்த சேவூர் ஆறு நாட்டில் கூடி முத்துக்குமாரசாமியாரவர்கள் மஞ்சள் நீர் குடித்து வளர்த்தின மகன் குப்பமுத்துமுதலிக்கு முத்துக்குமாரநயினாரவர்கள் தமது சிவபூசை முஸ்தேதி யெல்லாம் ஒப்புவித்துக்கொடுத்து தமது மகனாக நாட்டிலே சுத்தி வருகிறபடிக்கு நாடு கூட்டி குப்பமுத்துமுதலிக்கு ராஜாதிபதி மண்டலாதிபதி மடாதிபதியென்று விளங்கிய வைராபதிப் பட்டமும் கொடுத்து நாட்டிலே வரி நடந்து வருகிறபடிக்கு எழுதிக்கொடுத்த சாசனம்.

தேவபூசை நடக்கும்படிக்கு பேரூருக்கும் சித்தூருக்கும் உள்ளபடி வைராபதிவரி மக்கத்துக்கு 1¼ பணம் ஒரு பூட்டு நூலும் வந்த ஆள்களுக்குப் பரிசாரகமும் இந்தப்படி சம்மதித்து கொங்கு 24 நாட்டார்களும் எழுகரை நாட்டார்களும நம்ம இடங்கை வகைராக்களும் கூடி முத்துக்குமார நயினார் முன்பாகத் தீர்த்து சந்திரசூரியருள்ளவரைக்கும் நடந்துவரும்படியாக சேவூர் திருக்கபாலீசுவரர் சன்னதியில் எழுதியது. ஏறுக்கு ¼, தூக்குக்கு ¼, பட்டரைக்கு ¼. இந்த தர்மத்தை சந்திரசூரியருள்ளவரைக்கும் மேலே கண்ட சகலரும் நடத்தி வருவோமாகவும்.

இந்த தர்மத்திற்கு யாதாமொருத்தர் விகாதம் பண்ணின பேர்கள் காசிக்கெங்கையிலே கோதாவரியிலே கன்னியாகுமரியிலே பாவநாசத்திலும் திருக்குற்றாலத்திலும் பிராமணரையும் யோகீசுபரரையும் குருக்களையும் தாய் தந்தையரையும் காராம்பசுவையும் கொன்ற தோஷத்துலே போகக்கடவார்கள். இந்தத் தர்மத்தைப் பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு அஷ்ட ஐஸ்வரியமும் ஆயுராரோக்கியமும் சந்தான சமுரத்தையும் தெய்வப் பிரசாதமும் குரு பிரசாதமும் ராஜப் பிரதாபமும் மென்மேலுண்டாகத் தக்கதாக காமாட்சிதேவியும் சுப்பிரமண்ணியசாமியும் முத்துக்குமாரசுவாமியும் கிருபைசெய்து ரட்சிப்பார். சுபம்.

# 7. செங்குந்தர் குல வடமலாயி பட்டயம்

கூனம்பட்டி மாணிக்கவாசகர் திருமடத்தில் இந்த ஓலைப்பட்டயம் கிடைத்தது.

20.5.1654 இல் எழுதப்பட்ட ஓலைப்பட்டயம். கிருஷ்ணராஜ உடையார் ஆட்சியில் கோயமுத்தூர் தலைவர் தொட்டராச அய்யன் அதிகாரம் செய்யும்போது காஞ்சிபுரத்தைச் சேர்ந்த செங்குந்தர் நட்டுக்கட்டின நயினார் என்பவர் சத்தியமங்கலத்திற்கு வந்து கம்பம் நாட்டினார். அவர் இடங்கையார் ஆனதால் வலங்கையார் பலவந்தமாக அதனைப் பிடுங்கிப் போட்டார்கள்.

சத்தியமங்கலம் அதிகாரி நஞ்சராசையன் அவர்கள் கம்பத்துடன் நட்டுக் கட்டியை விசயமங்கலத்திற்கு அனுப்பினார். விசயமங்கலத்திலும் கம்பம் நாட்டியபோது வலங்கையார் கம்பத்தை வெட்டினார்கள். அப்போது சமயமுதலி, பட்டக்காரர், நாட்டாண்மைக்காரர் மற்றுமுள்ள செங்குந்த முதலிமார்களும் பின்னடைந்தார்கள். நட்டுக்கட்டி ஒருவனாகவே எதிர்த்து நின்றான்.

"சமூக வித்துவான் நட்டுக் கட்டியைத் தனியாக விட்டு எல்லோரும் ஏன் போகிறீர்கள்" என்று கேட்க. செலவுக்குப் பணம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள்.

கலியாண முதலி என்பவர் செலவுக்குத் தானே பணம் அளிப்பதாகக் கூறி எல்லோரையும் விசயமங்கலத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். உறவின்முறையாருக்கு (சமயமுதலி, பட்டக்காரர், நாட்டாண்மைக்காரர், பிற செங்குந்த முதலிமார்) 25 பொன்னும், நட்டுக்கட்டிக்கு நாள் ஒன்றுக்கு 5 பொன்னும் ஆக நாளைக்கு 30 பொன் வீதம் 48 நாளைக்குச் செலவு செய்தார்.

விசயமங்கலத்தில் வலங்கையாரால் வெட்டின கம்பத்தை ஈரோடு கொங்கலம்மன் கோயிலுக்கு கொண்டுவந்து அங்குள்ள புளியமரத்தில் கம்பத்தைக் கட்டி நட்டுக்கட்டி, கலியாண முதலி உள்ளிட்ட அனைவரும் கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு படுத்திருந்தார்கள். கலியாண முதலி படுகாயம் அடைந்தார். பின் மரணமடைந்தார்.

இதைக்கண்ட அதிகாரி நஞ்சராசையனவர்கள் ஆதரவளித்து தைரியம் சொல்லி கம்பத்தை நாட்டி கூத்துப் பார்த்து, வேண்டிய மரியாதைகள் செய்து பட்டணப் பிரவேசம் செய்து வைத்தார்.

கலியாண முதலி சாதியின் பொருட்டுப் பெரும் செலவு செய்து சரீரம் குத்தி இறந்தான் என்று அவர் மகள் வடமலாயிக்கு செங்குந்தர்கள் எல்லோரும் சமூக மரியாதை செய்தனர்.

ஆண்டுதோறும் ஒரு சேலை, மக்கத்திற்குக் கால் பணம், இரண்டு பூட்டு நூல், திருமணத்திற்கு பெண், மாப்பிள்ளை வீட்டார் ஒவ்வொருவரும் ஒரு பணம், ஐந்து பரிசாரகம், ஊரழைப்பு, ஊர் அனுப்பு, விடுதி முஸ்தேதி இந்தப்படி கொங்கு செங்குந்தர் 24 நாடும் நடக்கும்படி ஆணை பிறப்பித்தார்கள்.

வடமலாயிக்குச் 'செங்குந்த மாணிக்கி' என்று பெயர் அளித்துப் பட்டயமும் கொடுத்தார்கள்.

விசயமங்கலத்தில் திப்பு சுல்தான் அலுவலர் அந்தியூர்க் கச்சேரி திவான் கிரிமிரே சாயபு வலங்கை - இடங்கைத் தகராறைத் தீர்க்கும் பொருட்டுப் 'பூர்வம் தீர்ந்த பட்டயம்' பெற்றுக்கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. அது இந்தப் பட்டயமாகவே இருக்கலாம்.

### மூலம்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

வய்ய னீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைய்வ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே உ

சிவமயம் உ

சொத்திஸ்ரீ மகாமண்டலிஈசுவரன் அரியதழ விபாடன், ஆரியமோகந் தவிள்த்தான், ஒட்டியதழ விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான், ஆறிலொன்று கடமை கொண்டு அருள் பெருகி அன்பு கூர்ந்து ஆதுர சாலையும், அந்தணர் வேள்வியும் வேதவொலியும், விழாவறா வீதியும் தபோதனர் மடங்களும், தர்ம சாலையும் மிப்படி முப்பத்திரண்டறம் விழங்கிய மண்டலந் திரைகொண்டருழிய றாசாதிறாசன், றாசர் பரமேசுவரன், றாசமாற்தாண்டன், றாசகுலதீரன், றாசகெம்பீரன், றாசமனோபயங்கரன், கடல்கலங்கிலுங் காவேரி வற்றிலும் மலை அலுங்கிலும் மனங்கலங்காத கண்டன், கன்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான்.

சொல்லுக்கு அரிச்சந்திரன், அழகுக்கு அனங்கன், அறிவுக்கு அகத்தியன், அசுவபதி கெசபதி நரபதி தநபதி ஆகிய அரிக மல்லிகாற்சுனறாயர் பிறபுடதேவறாயர் மையிசூர் ரத்தின சிங்காசனத்துக்கு உடயவறாகிய மகாறாச ஸ்ரீ கிற்ஷ்ணறாச உடையாற் அய்யநவர்கள் காரியத்துக்கு கற்தாவாகிய தழவாய் வீரநஞ்சராச உடையாற் பிற்திவி றாச்சியபாரஞ் செயிகின்ற ணாழையில்

கோயமுத்தூற் குறித்தனம் பாருபத்தியம் சகலாதிகாரமுஞ் செயிகின்ற தொட்டறாசஅய்யநவர்கள் றாச்சியபாரஞ் செயிகின்ற னாளையில் சாலிவாகன கலியுக சகாப்தம் 4655-க்கு மேல் செல்லாநின்ற ஆனந்த வருஷம் வைய்யாசி மாதம் 23ந் தேதி பஞ்சமியும் ஸ்திரவாரமும் பூச நட்செத்திரமும் சுபனாம யோகமும் பெற்ற யிந்த சுப தினத்தில் காஞ்சிபுரம் னட்டுக்கட்டியான நயினார் சத்தியமங்கலத்துக்கு வந்து கம்பனாட்டினான். வலங்கையார் பிலவந்தமாய்ப் பிடிங்கிப் போட்டார்கள். சத்தியமங்கலம் குறித்தனம் பாரபத்தியம் நஞ்சராசய்யனவர்கள்

இவர்கள் னாளையில் சத்தியமங்கலத்துக்குக் கட்டிய சனமும் நட்டுக்கட்டு னயினாரைக் கம்பம் சயிதமாய் விசயமங்கலத்துக்கு அனுப்பிவித்தார்கள். விசையமங்கலத்துக் கம்பம் னாட்டினயிடத்தில் வலங்கையார் கம்பத்தை வெட்டினார்கள். அதின் பிறகு சமய முதலிப் பட்டக்காறர், நாட்டாண்மைக்காறர் மற்றுமுள்ள செங்குந்த முதலிமார் பின்னிட்டு போனார்கள். நட்டுக்கட்டி ஒருத்தனாக நின்றான். சாதி வித்துவானை தனியே விட்டுப் போட்டு கூடிய நாடெல்லாம் போகக் காரியமென்னவென்று குறுக்காட்டிக் கேட்டவிடத்தில் சிலவு சித்தாயத்துக்கு யில்லாமல்ப் போறோமென்று சொன்னார்கள். கலியாண முதலி ஆகிறவன் சிலவு சித்தாயத்துக்கு நானே தருகிறேனென்று எல்லோரையும் விசையமங்கலத்துக்களைச்சுக் கொண்டு வந்தான். வந்ததின் பிறகு கூடிய உறமுறைக்கு நாளொண்ணுக்கு இருபத்திஅஞ்சு பொன் திருவேற்றினாகரம், நட்டுகட்டிக்கு நாளொண்ணு அஞ்சு பொன் ஆக முப்பது பொன்னும் நாப்பத்தி எட்டு நாளைக்கும் சிலவு செய்தான்.

விசைமங்கலத்திலே வெட்டின கம்பத்தை ஈரோட்டுக்குக் கொண்டு போய் கொங்கிலாண்டம்மன் கோவில் புளிய மரத்திலே கம்பத்தைக் கட்டி நட்டுக்கட்டியும் கலியாண முதலியும் இத்தண்டத்தாரும் கம்பத் தடியிலே மூணுனாள் ஆறுபொழுது பிராணத்தை விட்டுவிடுகிறோமென்று படுத்திருந்தார்கள். இந்தச் சேதி குறித்தனம் பாரபத்திய நஞ்சராசய்யனவர்கள் கேட்டு இவர்களை அளைக்கவிட்டு இவுகள் முன்னடந்த சேதி பாதிப்பெல்லாம் கேட்டு அப்படியே ஆகட்டும் ஒண்ணுக்கும் யோசினை பண்ணாதேயளென்று தயிரியம் சொல்லி மற்றாநாள் கம்பத்தையும் நாட்டிவிச்சு கூத்துப்பாத்து வேண்டியதக்க உடுகிறையும் செய்து பட்டணப் பிறவேசம் பண்ணிவித்தார்கள். அப்போது இருபத்துனாலு னாட்டுக்கும் சமைய முதலிமார் பட்டக்காரர் நாட்டாண்மைக்காரர் மற்றுமுள்ள செங்குந்த முதலிமார்கள் எல்லோரும் கூடி கலியாண முதலிக்கு சாதிக்குச் சிலவளிவுஞ் செய்து சரீரங் குத்திப்பட்டானென்று நாடு இருபத்தினாளுங்கூடி கலியாண முதலி மகள் வடமலாயிக்கு பட்டைய மெளுதிக் குடுத்த விபரம்.

வருஷம் பிறிதியில் நாடு ஒருவரிசை உடமையும் ஒரு சேலையும் மக்கவரி வீட்டுக்கு கால்பணமும் ரண்டு பூட்டு நூலும் கலியாண வரித்தினை பெண்ணு வீடு ஒரு பணம் மாப்பிள்ளை வீடு ஒரு பணம் அஞ்சு பரிசாரகம் ஊரளைப்பு ஊர்அனுப்பு விடுதி முஸ்த்தேதி இந்தப்படிக்கு நடந்து வாறபடிக்கு நாடு இருபத்தினாலும் கூடி கலியாண முதலி மகள் வடமலாயிக்கு செங்குந்த மாணிக்கியென்று பேரும் குடுத்து பட்டயமுங் குடுத்தோம். இந்தத் தர்மத்தை யாதாமொருத்தன் விகாதம் பண்ணினான் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலே போவான். இந்தத் தர்மத்தை யாதாமொருத்தன் பரிபாலனம் பண்ணி வந்தவர்கள் கறக்கும் பாலுக்கும் பிறக்கும் பிள்ளைக்கு புத்திர பவுத்திரர் உள்ளவரைக்கும் காசி ராமேசுரத்தில் விஷ்ட்ணு பிறதிட்டை சிவ பிறதிட்டை பண்ணின பலனை அனுபவிப்பார்கள்.

## 8. வீரபாகுதேவர் சமயச் செப்பேடு

முருகப் பெருமானின் படைவீரர்களான நவ வீரர்களில் முதல்வரான வீரபாகு தேவருக்குப் பூசைத் திருப்பணி நடைபெற பல்வேறு தொழில்புரிவோர் அளித்த தர்மத்தை இச்செப்பேடு விளக்கமாகக் கூறுகிறது. இச்செப்பேடு புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. அன்புடன் உதவியவர் காப்பாட்சியர் திரு. கோவிந்தராஜ் ஆவார்.

இரண்டாவது பக்கம் மட்டும் 30 வரிகளில் செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. செப்பேட்டின் முன்புறம் ஒன்றன்கீழ் ஒன்றாக ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேல் பகுதியின் மையத்தில் வீரபாகு தேவர் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் உள்ளார். கைகளில் கத்தி, கேடயம், வில், அம்பு உள்ளன. அவருக்கு இருபுறங்களிலும் மயிலும், ஆடும் பொறிக்கப்பட்டுள்ளன. கீழே காவடியும் காட்டப்பட்டுள்ளது.

அதற்குக் கீழே இரண்டு வரிசைகளில் நான்கு நான்கு பேர்களாக 8 பேர்கள் கத்தி, கேடயத்துடன் காணப்படுகிறார்கள். நான்கு, ஐந்தாவது வரிசையில் இசைக் கருவிகளும், ஆறாவது வரிசையில் மனிதத்தலை, கலப்பையும், ஏழாவது வரிசையில் கொடி, கட்டுமரம், பணப்பை, செக்கு ஆகியவை காட்டப்பட்டுள்ளன. இவை பல்வேறு தொழில்புரிவோரின் கருவிகளாக இருக்கலாம்.

வீரபாகு தேவர்க்குக் கொடுத்த கொடையாக இருப்பதால் கைக்கோளர் வேண்டுகோள்படி அனைவரும் மகமைவரி செலுத்த ஒப்புக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

### மூலம்

உஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1504 இதன்மேல் செல்லாநின்ற சித்திரபானு வருஷம் பங்குனி மாதம் 15 தேதி திருவிடைக்கழி பழனி குமாரசுவாமியார் உடைய வீரவாகு தேவர்க்கு படைப்பத்து கச்சிராயரும், மழவராயர் சோழகனார் காலாக்கள் தோழனும், பலநாட்டுக் கைக்கோள முதலியாரும், நகரத்தார் படையுள்ளார் சிப்பியர் மயில்கொடி மரக்காயர் இடங்கை உள்ளுபட்டாரும, சமையம் குடுத்தோம்.

தறிக்கு பணம் அரை, தான நிருபாகமாயி இருக்குற பேர்களுக்கு பணம ½ பல தொழிலாய் இருக்குற கைக்கோளர்க்கு தலைக்கட்டுக்கு பணம் தலைக்கட்டுக்கு ப¾ மண்டபக் கொத்து நட்டுவனுக்கு பணம் ½ ணாகபாச கொத்துக்கு ப½, தேவரடியார் சேவுகத்துக்கு பணம் ¾ வில்லுக்கு ப¾ செக்குக்கு ப½ காவேரி நகரத்தார் தலைக்கட்டுக்கு ப¾ சிப்பியர்

படையுள்ளார் மரக்காயர் தலைக்கட்டுக்கு ப¾ கண்ணப்ப கோத்திரம் பேரூர்க்கு ப2 சித்தூற்கு ப1

வீரவாகு தேவரை திருமேநி கொள்ளவும், பூசை திருப்பணி திருநாள் நடக்கவும் கட்டளையிட்டோம். இத் தர்மத்துக்கு வருஷ வர்த்தினையாக குடுத்துவரக் கடவாராகவும், இத்தன்மத்துக்கு யாரொருவர் அகிதம் பண்ணினால் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொண்ண பாவத்திலே போக கடவாராகவும் பிராமணரை கொண்ண தோஷத்திலே போககடவது. இவர்கள் சொல்படிக்கு கந்தபுராண ஞானப்பிரகாசர் எழுத்து உ.

# 9. மோரூர்க் காங்கேயர் ஏடு

இராசிபுரம் ஊமையாம்பட்டிக் கவிஞர் ந. கந்தசாமி அவர்கள் வழங்கிய காகிதப்படியைக் கொண்டு இப்பட்டயம் பதிப்பிக்கப்படுகிறது.

மோரூரில் கொங்கு வேளாளரில் கண்ண குலத்தைச் சேர்ந்த காங்கேயர் என்பவர் வாழ்ந்து வந்தார். எழுகரை நாட்டுக்கு அவர் தலைவர். அவருக்குக் கன்னிவாடிக் காங்கேயர் என்றும் பெயர் உண்டு. அவருடன் வாழ்ந்து வருபவர் 60 கரண காங்கேயன் என்னும் இடங்கை செங்குந்தர் குலத்தைச் சேர்ந்த நல்லய்யன் மகன் நல்லய்யன் என்பவர்.

தம்முடைய தலைவராகிய காங்கேயருக்குப் பிள்ளையில்லை என்று அந்தணரைக் கொண்டு நடைபெறும் வேள்வியில் செங்குந்த குல நல்லய்யன் மோரூர் நல்லபுள்ளியம்மன் கோயிலில் அம்மன் முன்னிலையில் தன் தலையை இருதுண்டாக வெட்டிக் கொண்டான். அவன் வீரத்தைப் பாராட்டி அவன் வழியினர்க்குக் கன்னிவாடியில் இருக்கும் இடங்கை உரிமைகள் யாவும் மோரூரிலும் வழங்கப்பட்டன.

செங்குந்தர்கட்கு அர்த்தநாரீசுவரன் முன்னிலையில் நியாயம் பேசும்உரிமை வழங்கப்படுகிறது. அவர்கட்குக் கொடுக்கும் கொடைகள் பற்றியும் இறுதியில விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

எழுகரை நாடுபற்றிய செய்திகட்கு நல்ல குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எடப்பாடி இராமசாமிப்பத்தர் என்பவர் செப்பேட்டை வெட்டியுள்ளார்.

செங்குந்த நல்லய்யன் தன் தலையை வெட்டிக்கொள்ளும் நிலையில் ஒரு சன்னதி மோரூர் கொங்கு வேளாளரில் கண்ணகுலக் காணிக்கோயில் நல்லபுள்ளியம்மன் கோயிலில் உள்ளது. செங்குந்த முதலியார்கள் மட்டுமே அத்தெய்வத்தை வணங்குகின்றனர். முத்துக்குமாரசுவாமி கோயில் என்று அழைக்கப்பெறுகிறது. அக்கோயிலே தன் தலையை வெட்டிக்கொண்ட நல்லய்யனின் பள்ளிப்படைக் கோயிலாகும். செங்குந்தர்கள் திருச்செங்கோட்டில் நல்லபுள்ளியம்மன் கோயில் ஒன்று கட்டியுள்ளனர்.

தமிழ் ஆண்டு துந்துபி ஆவணி 25ஆம் தேதி திங்கட்கிழமை எழுதப்பட்டது என்று குறிப்பு உள்ளது.

## மூலம்

ஸ்ரீமத் நந்திகேசுபரசுவாமியார் அனுக்கிரகத்தாலே திருவாய் மொழிந்த படிக்கு அநேகம் சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவாதிதேவன் தேவுத்தமன் பக்திப்பிரியன் பத்தவத்சலன் பார்வதிமணாளன் திருபொஷ்கரணி முக்கணீசுவரன் நின்றகோல மழகிய நிமலன் நேரமொரு பஞ்சவர்ணப் பிரகாசன் தெண்டாயுத அஸ்தன் செம்புத்தீவில் திராவிடதேசத்தில் தொண்டைமண்டலத்தில் காஞ்சி மாநகரில் திருக்கம்பையாற்றில் பார்வதி தேவியம்மன் அர்த்தபாகம் பெறவேண்டி அரியதபசு பண்ணுகையில் வாமபாகம் பெத்தருளிய அம்மன் வீரபாகுவைப் பார்த்து நீங்கள் ஆறுபேரும் தேவர் சேனையை மீட்டபடியினாலே உங்களுக்கு அரவகிரியைச் சூழ்ந்த எழுகரை நாட்டுக்கும் கொங்கனென்றும் பேருமிட்டு பட்டாபிஷேகம் சூட்டுகிறேனென்று அம்மன் கட்டளையிட்டபடிக்கு கொங்குமண்டலத்திலே தெட்சின கைலாசமாகிய அரவகிரியைச் சூழ்ந்த எழுகரை நாடெனும் காவேரி பவானி திருமனிமுத்தாநதி அழகுமுரிச்சான் தொப்பை ஆம்பிராநதி நொய்யல் ஆக சத்த நதியாகிய எழுகரை நாட்டிலுள்ள சிவசந்நதிகளும்,

பூந்துறைநாடு, பூவானிநாடு, வஞ்சிநாடு, சேலநாடு, இராசிபுரநாடு, பருத்திப்பள்ளிநாடு, ஏழூர்நாடு வாழவந்திநாடு, அரையநாடு மற்றுமுண்டான சிவசந்நிதிநாடு உறவின் முறையாரும் குடிபிரிதி சிட்ட பரிபாலனம் பன்னி அருளாநின்ற திருவுளம் வீரலட்சுமி விசயலட்சுமி வாசராகிய களம் வம்முசபரிபாலராகிய ஆதி கன்னிவாடி அறுபது காங்கேயரோட அறுபது கரணகாங்கேயன் என்னும் இடங்கை பட்டமுத்து நல்லய்யன் குமாரந் நல்லய்யன் மோரூருக்கானி துந்துபி வருஷம் ஆவணி மாதம் இருபத்தைந்தாந்தியதி திங்கட்கிழமை சப்தமி திருவோண நட்சத்திரத்தில் அறுபது காங்கேயனுக்கு பெகுநாளாய் பிள்ளையில்லாமல் அறுபது கருண காங்கையனென்று வந்த நல்லய்யன் குமாரன் நல்லையன் அறுபது காங்கையனுக்குப் பிள்ளை வரம் வேண்டி நல்ல புள்ளியம்மன் சந்நதி முன்பாக பச்சைப் பார்ப்பான் னெரிவி செய்து வைராக்கியம் செய்து தன் செரசினை இருதுண்டாக வெட்ட செயங்கொண்ட குமாரன் நல்லய்யன் பேரிலே சந்தோசமாகி பின்பு அறுபது காங்கேயனுக்கு என்ன வேண்டுமென்று கேட்க "தேவரீர் நமக்குக் கன்னிவாடியில் இடங்கைக்குட்பட்டது நடந்த மேரைக்கு வடக்கிலேயும் நடப்பிக்க வேணும் தேவரீர்" என்று கேட்க,

அப்படியே தருகிறோமென்கையில் கீழ்கரைப் பூந்துறை நாட்டில் அரவகிரியில் அறுபது கரண காங்கயரும் செங்குந்த கோத்திர உறவின் முறையாரும் இடங்கை முதலான உறவின் முறையாரும் ருத்ரோத்காரி வருஷம் புரட்டாசி மாதம் சனிக்கிழமை பதினைந்தாந் தியதி சனிக்கிழமை

மாளிகைபிச்சம் உத்தரநட்சத்திரம் இந்தச் சுபதினத்தில் கூடி முருகாவுடையார் சந்நிதி இந்திர விமானத்தேர் முன்பாக இருப்புமுக்காலி வைத்து ஆசாரஞ் செய்து பன்னிரண்டு சுமைபோட்டு அக்கினி எரியவிட்டு அறுபது கரண காங்கயனை அதின்மேலே இருத்தி ஆண்டவர் சிட்டந்தரித்து பட்டம் வைத்தும் குருக்கள்மார் ஆறுபேரும் கும்பாபிஷேகம் பண்ணி அட்சதை தாம்பூலம் குடுத்து,

இனிமேல் செங்குந்த கோத்திரத்திற்கு நடக்க வேண்டிய சாதி ஞாயம் அர்த்தபாகம் முன்பாக கட்டளை இட்டோம். சொன்ன விபரமாவது விசாரிக்கும் போது அடிக்கரை பணம் ஆறு வைத்து மேல் ஞாயம் பேசவும். செங்குந்தர் குத்தத்துக்கு அவுதாரம் பணம் பண்ணிரண்டு வாங்கக் கட்டளையிட்டார். காராளர் கானிக்கை ஏருக்கு கால் பொன்னும், செங்குந்த சாதிகள் மக்கத்துக்கு வராகன் கால், தேவடியாளுக்கு மூக்குத்திக்குப் பணம் மூன்று, கண்ணாளர் அரசுக்குச் சாதிக்கு தலைக்கட்டுக்குப் பணம் ஒன்று, வன்னியகுலத்தார் மேழிக்குப் பணம் ஒன்று, சிவப் பிராமணர் அரிசிப் படிச்செலவு விசாரிக்கும் விபரம். நகரத்துச் செட்டிக்குக் குடிப்பணம் ஒன்று, பகடை பட்டரைக்குப் பணம் இரண்டு, இந்தப் பிரகாரம் கட்டளையிட்டு எழுகரை நாடும் கூடி செப்பேடு சாசனப் பட்டயம் எழுதிக் கொடுத்த பிரகாரம் சகலமான பேரும் தெரியப் பல்லக்கு மேலே வைத்து குதிரை தீவட்டி சூரியப்பாணு பதினெட்டு விருது கொடுத்து வீதி மெரவனை பண்ணிவைத்து மேள வாத்தியத்துடனே மண்டபத்திலே வச்சு இந்த அர்த்தபாகம் அறிய ஆறும் பன்னிரண்டும் உன்னுதென்று அனைவரும் திருவாக்குக் கொடுத்து அடிபணிந்தார்கள்.

அர்த்தபாகம் சந்திர சூரியர் நல்லபுள்ளியம்மன் பாதம் அறிய இதுக்கு ஆரொருவன் அனாத்தியம் பண்ணினவர்கள் வம்சமும் அழிஞ்சி போகும் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ன தோஷத்தில் போவானாக. மாதா பிதாவைக் கொன்ன தோஷத்தில் போகக் கடவாராக. அரிபூசை சிவபூசை குருபூசை மகேசுவரபூசை தடுத்தவர்கள் போற நரகத்தில் போகக்கடவாராக. ஸ்ரீவதை சிசுவதை பண்ணின தோஷத்தில் போகக்கடவாராக. இனிமேல் வரப்பட்ட காலா காலங்களுக்கும் யுகங்களுக்கும் இந்த பட்டயத்துக்கு இரண்டகம் பண்ணப் பட்டவர்கள் வம்சமும் போகக் கடவது.

சிவமயம். அர்த்தபாகம் துணை. நல்லபுள்ளியம்மன் துணை. சுப்ரமணியர் துணை. காமாட்சியம்மன் துணை. காரி விநாயகர் துணையிருந்து ரட்சிப்பார். அனைவர் சொல்படிக்கு எழுதிய எடப்பாடி ராமசாமிப் பத்தன் செய்தது.

# 10. நாட்டு நியாய ஓலை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் சென்னை அலுவலகத்தில் இந்த ஓலைப்பட்டயம் உள்ளது.

இந்த ஓலைப்பட்டயம் லிங்கனூர் கருப்பமுதலி என்பவரைப் பற்றிய சாதி வழக்கினை விரிவாக விளக்கிக் கூறுகிறது.

24 நாட்டுச் சமயமுதலிப் பட்டக்காரர், வையாபுரி நாட்டுப் பட்டக்காரர், பொன்குலுக்கிநாட்டுப் பட்டக்காரர், வாரக்கநாட்டுப் பட்டக்காரர், ஆறைநாட்டுப் பட்டக்காரர் போன்ற செங்குந்தர் குலத்தினரும், பழனிக் கவுண்டர், கருப்பண கவுண்டர், செல்லப்ப கவுண்டர், முத்துக் கவுண்டர் போன்றவர்களும் சேர்ந்து சுமார் 75 ஊர்களைச் சேர்ந்த நாட்டார்க்கும், ஊராருக்கும், சமூகத்தாருக்கும், கவுண்டர்களுக்கும், நாட்டாண்மைக் காரர்கட்கும், பெரியதனக்காரர்கட்கும், புள்ளிக்காரர்கட்கும், காரியக் காரர்கட்கும், உறவின்முறையாருக்கும் எழுதிக்கொடுத்த ஓலை. துன்முகி மாசி 14 என்று மட்டும் காலம் குறிக்கப்பட்டுள்ளது.

லிங்கனூர் கருப்பமுதலி என்பவர் செங்குந்தர் சமூகத்தைச் சேர்ந்தவரா அல்லவா என்று வடமுகம மணியகாரம்பாளையத்தில் வழக்கு நடைபெறுகிறது. கவுண்டர்களும, சமூகத்தார்களும், பட்டக்காரர்களும் ஆலோசனை செய்கின்றனர்.

ராக்கபாளையம் பெரியதனக்காரர் சின்னப்பமுதலி, நாட்டாண்மைக் காரர் மாரப்பமுதலி போன்றவர்கள் அக் கருப்பமுதலி தங்கள் உறவுக்காரர் என்றதால் அவர் செங்குந்தர் சமூகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்.

செங்குந்தர்களின் குல குருவாகிய சுவாமியார் அங்கு வந்தபோது அவரும் அதனை விசாரித்து அவரை செங்குந்தர் சமூகத்தவராகவே ஏற்றுக்கொண்டு காணிக்கை பெற்றுத் தீர்த்தமும் பெற்றுச் சிட்டாவிலும் பெயரைப் பதிவு செய்துகொண்டார்.

பின்னர் 4 கிராமத்து செங்குந்தர்கள் சேர்ந்து இதற்கு எதிராகச் சுவாமியாரிடம் புகார் கூறியதால் மேற்படி லிங்கனூர் கருப்பமுதலியை சாதியைவிட்டு நீக்குவதாகச் சுவாமியார் இரண்டாவதாக ஓலை மூலம் அறிவிக்கிறார்.

சுவாமியாரின் இரண்டாவது திருமுகம் செல்லாது என்று லிங்கனூர் கருப்பமுதலிக்கு ஆதரவாகக் கவுண்டர்களும், செங்குந்தர்குலப் பட்டக்காரர்களும் சேர்ந்து பல ஊர்க்காரர்கட்கும் எழுதிக்கொடுத்த ஓலையே இதுவாகும். தாம் செங்குந்தர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதை நிலைநாட்ட லிங்கனூர் கருப்பமுதலி எடுத்துக்கொண்ட முயற்சி இதில்

விளக்கப்படுகிறது.

ஒரு சமூகத்தார் கூடி ஒருவரைச் சாதிக்குள் சேர்க்கலாம்; அல்லது நீக்கலாம் என்ற வழக்கம் இருந்ததை இச்செப்பேடு தெரிவிக்கிறது. செங்குந்தர் சமூகத்தைச் சேர்ந்த இப் பட்டயத்தில் கவுண்டர்கட்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்களே முதலில் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

## மூலம்

ஸ்ரீமத் சகலகுண சம்பந்நரான சகல ப்ரீதிபாலகரான பந்துசன சிந்தாமணிகரான பவுசுபாக்கியப் பிரமாணிக்கரான அன்னதான விநோதரான அஷ்டலட்சுமி ஐஸ்வர்ய சம்பந்நரான மித்துருசன மனோரஞ்சிதரான வெகுசன போஷகரான அரிபூசை குருபூசை மயேசுவரபூசை மறவாத பக்திப் பிரியரான வித்தைக்கு விநாயகரான புத்திக்கு விபீஷணரான பொறுமைக்குத் தருமரான போருக்கு வீமரான வில்லுக்கு விசயரான பரிக்கு நகுலரான சாஸ்திரத்திற்குச் சகாதேவரான சொல்லுக்கு அரிச்சந்திரரான கொடைக்குக் கர்ணரான அழகுக்கு மன்மதரான போகத்திற்குத் தேவேந்திரரான தனத்திற்குக் குபேரரான வடமுகம் ஆண்டிபாளையம், சீரயகவுண்டம்பாளையம், செட்டிபாளையம் இடும்பபாளையம், முருகம்பாளையம், கருப்பையகவுண்டம்பாளையம் இதுகளிலுள்ள மகாமேருவாகிய கவுண்டர்களுக்கும், நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர் மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார்கள் அனைவோர்களுக்கும்

தொங்கிட்டிப்பாளையம், குமாரபாளையம், அலகுமலை, வேலாயுதம்பாளையம், இராமணம்பாளையம், கட்டூர்வலசு, உகாயனூர், பெத்தாம்பாளையம், மலையப்பாளையம், நல்லூர், சிங்கலூர், புதூர் இதுகளிலுள்ள மகாமேருவாகிய கவுண்டரவர்களுக்கும், நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர் மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார் அனைவோர்களுக்கும்,

கரிசமடை, இலவந்தி, கோட்டாம்பாளையம், மந்திரிபாளையம் சித்தநாயக்கன்பாளையம், வடுகபாளையம், சின்னியகவுண்டம் பாளையம், கள்ளிப்பாளையம், அப்பியாபாளையம், வேலம்பாளையம், சித்தம்பலம், செம்மிபாளையம், அக்கம்பாளையம், கரடிவாவி, போகம்பட்டி, பனம்பட்டி, தொட்டம்பட்டி, சித்தூர், கோதவாடி, பொரயபாளையம் இதுகளிலுள்ள மகாமேருவாகிய கவுண்டர் அவர்களுக்கும், நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர் மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார் அனைவோர்களுக்கும்,

கோவிந்தனூர், நடுப்புலி, ஒடுகம்பள்ளம், நல்லியப்பள்ளி, சித்தூர், வேங்கோடு, ராமச்சேரி, கொழமணம், மேலார்க்கோடு, குனிச்சேரி, எருமையூர், பழம்பாலக்கோடு, காரியோடு, கூட்டாலை, நடக்காவு, ஏகாசி இதுகளிலுள்ள மகாமேருவாகிய கவுண்டரவர்களுக்கும், நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர், மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார் அனைவோர்களுக்கும்,

கம்மாளபட்டி, நாகம், கோழிக்குட்டை, சனப்பம்பட்டி இதுகளிலுள்ள மகாமேருவாகிய கவுண்டரவர்களுக்கும், நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர் மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார் அனைவோர்களுக்கும்,

இராயர்பாளையம், மாணிக்கபுரம், வேலம்பாளையம், மூனுமடை, சின்னகாளிபாளையம், இடுவாய், வஞ்சிபாளையம் இதுகளிலுள்ள மகாமேருவாகிய கவுண்டரவர்களுக்கும், நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர் மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார் அனைவோர்களுக்கும்,

தாங்கள் இத்யாதி ஊர் நாட்டுக்கும் மகாமேருவாகிய கவுண்டரவர்களுக்கும், நாடு சமூகத்தார் அனைவோர்களுக்கும்,

கரப்பத்தூரிலே இருக்கும் மகாமேருவாகிய கவுண்டர்களுக்கும், பழனிக்கவுண்டர், கருப்பய்ய கவுண்டர், முத்துக் கவுண்டர், செல்லப்ப கவுண்டர், மற்றுமுண்டாகிய கவுண்டர்கள் அனைவோருக்கும்,

இருபத்துநாலு நாட்டுச் சமயமுதலிப் பட்டக்காரர் குழந்தைவேலு முதலியாரும், கருமாண்ட வாண்ட வாத்தியாரும், இடும்பபாளையம் வையாபுரி நாட்டுப் பட்டக்காரரும், கரப்பத்தூர் வாரக்கநாட்டுப் பட்டக்காரரும், ஆறைநாட்டுப் பட்டக்காரரும், இடும்பபாளையம் பொன்குலுக்கிநாட்டுப் பட்டக்காரரும், கெணாசாரிநாட்டுப் பட்டக்காரரும், கரப்பத்தூர் நாட்டாமைக்காரர், பெரியதனக்காரர், புள்ளிக்காரர், காரியக்காரர் மற்றுமுண்டாகிய நம் உறவின்முறையார் அனைவர்களும் கூடி நாட்டுக்கு எழுதிய பராபாத்தியம் நாட்டோலை என்னவென்றால்

துன்முகி வருஷம் மாசி மாதம் 13ஆம் தேதி லிங்கனூர் கருப்பமுதலி என்பவன் இதற்கு முன்னதாக வடமுகம் மணியகாரம்பாளையத்தில் இடும்பன்பாளையத்தானிடத்திலும் தன்பேரில் சில நாயமுண்டு என்கிறதாகச் சொன்னார்கள். சொன்னதைப்பற்றி நாடு சமூகம் கூடி விசாரணை செய்தோம். செய்ததில் ராக்காபாளையம் பெரியதனக்காரன் வகையறா, நாட்டாமைக்காரர் வகையறா இந்த இரண்டு தெருவிலும் லிங்கனூர் கருப்பமுதலியை பெரியதனக்காரன் சின்னியமுதலி என்பவன் என்னுடைய சொந்தப் பெரியப்பன் மகன்தான் என்கிறதாகச் சொல்லி

ஒப்புக்கொண்டான்.

மேற்படியூர் நாட்டாமைக்காரர் வகையறாவில் குமாரமுதலி மகன் மாரப்பமுதலியும், வேப்பமரத்தான் மகன் மாரப்பமுதலியும் இவர்கள் இரண்டு பேரும் லிங்கனூர் கருப்பமுதலி மகன் மூத்த பிள்ளையை என்னுடைய பங்காளி மகனுக்குக் கலியாணம் செய்திருக்கிறோம் என்கிறதாகச் சொன்னார்கள் கருப்பமுதலி பெண்சாதி ரங்காயி என்பவள் மேற்படி மாரப்பமுதலி இவர்கள் இரண்டுபேரும் மேற்படி காரியோட்டிலே இருக்கும் கருப்பமுதலி என்னுடைய பங்காளி அவனுடைய மகள்தான் ரங்காயி என்கிறதாகச் சொன்னார்கள்.

இது காரியங்கள் எல்லாம் மகாமேருவாகிய கவுண்டர்களும், நாடு சமூகத்தார்களும், பட்டக்காரர்களும் ஆலோசனை செய்து பார்த்து லிங்கனூர் கருப்பமுதலி பேரில் யாதொரு சந்தேகமும் இல்லை என்கிறதாக ஒப்புக்கொண்டோம். ஒப்புக்கொண்டு உண்பது தின்பது ஓட்டம் தோச்சல் கொள்ளக் கொடுக்கப் பந்திபோசனம் யாதொன்றும் தடையில்லாமல் புழங்கிக் கொள்ளும்படியாகத் தஸ்தாவேஜியும் கொடுத்தோம். அதன்பேரில் நாட்டில் கொள்ளக் கொடுக்கவும் ரொம்பவும் சிறந்து இருக்கிறது.

அப்படி இருக்கச் சாமியார் அவர்களும் இடும்பபாளையம் சவாரி வந்தபோது லிங்கனூர் நாயத்தைப்பற்றி மணியகாரம்பாளையம் அய்யம்பாளையம் காவிலிபாளையம் கொண்டபாளையம் இன்னம் சில ஊர்க்காரர்களும் நம்மிடத்தில் பிராது சொல்லிக் கொள்கிறதாகச் சுவாமியார் அவர்களும் சொன்னார்கள். அதன்பேரில் லிங்கனூர் நாயத்தை அடிதலை பூர்வமாய் நாங்களும் சாமியாரிடத்தில் சொன்னோம். சாமியார் அவர்களும் கேட்டு அந்த நாயத்தைப்பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை என்கிறதாக லிங்கனூர் குப்பமுதலி கருப்பமுதலியிடத்தில் காணிக்கையும் வாங்கித் தீர்த்தப் பிரசாதமும் கொடுத்து சிட்டாவில் பேரையும் எழுதிப் பதித்துக் கொண்டார்கள்.

இப்படியிருக்கச் சிலநாள் கழித்து நாலூர்க்காரர் போய்ச் சாமியாரிடத்தில் லிங்கனூர் குப்பமுதலி கருப்பமுதலி பேரில் நாயம் உண்டு என்கிறதாகச் சொல்லிச் சாமியார் அவர்களும் நீக்குதலையாகத் திருமுகம் எழுதித் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் எனக்குச் சேரன் சோழன் தெய்வபாண்டியன் மூன்று ராசாக்களும் நவவீரர்வம்சம் என்பதற்கு சாதி நாயத்திற்கும் அதிகாரத்துவம் கொடுத்து நாலாயிரச் சில்வானம் வருஷம் ஆகிறது. அப்படி நானும் நாட்டி நடத்தி வந்திருக்க இந்தத் தீர்மானத்தை அல்லவென்று திருமுகம் எழுதியிருக்கிறபடியால் இந்தத் திருமுகத்தைத் தொட்டு யாதொரு பாத்தியமும் இல்லை என்கிறதாக எழுதி நாட்டுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம். நாட்டுக்கும்

கவுண்டர்களுக்கும் நாடு சமூகத்தார்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

பழனிக் கவுண்டர் ருசு. கருப்பண கவுண்டர் ருசு.
செல்லப்பக் கவுண்டர் ருசு. முத்துக் கவுண்டர் ருசு.

கரப்பனூர் இருபத்துநாலு நாட்டுச் சமயமுதலிப் பட்டக்காரர் குழந்தைவேலுமுதலி ருசு. கருமாண்டவாத்தியார் ராமமுதலி ருசு. இடும்பபாளையம் வையாபுரி நாட்டுப் பட்டக்காரர் முத்தமுதலி ருசு. மேற்படி பொன் குலிக்கி நாட்டுப் பட்டக்காரர் லிங்கமுதலி ருசு. கரப்பனூர் வாரக்கநாட்டுப் பட்டக்காரர் நஞ்சையமுதலி ருசு. ஆறைநாட்டுப் பட்டக்காரர் ருசு. பெரியதனக்காரர் சின்னைய முதலி ருசு.

நாட்டாமைக்காரர் முத்தாமுதலி தற்குறி குழந்தைமுதலி ருசு. காமாட்சியம்மன் துணை.

இந்த நம்ம நாட்டு நாயத்து ஓலை ரொம்பக்காலம் பழகிப் போனபடியால் கொஞ்சம் எழுத்து போயிருந்தபடியால் நாங்கள் அந்த ஓலைக்குப்பதில் புது ஓலை போட்டு யுவ வருஷம் ஐப்பசி மாதம் 15ஆம் தேதி எழுதியிருக்கிறோம். ஏட்டுக்குற்றம் எழுத்துக்குற்றம் வாசகத்தப்பு வரிமாறாட்டம் இருந்தபோதிலும் நீங்கள் அனைவோரும் பொறுத்துக்க வேண்டியது. கடவுள் துணை.

# 11. சோழன் பூர்வ பட்டயத்தில் செங்குந்தர்

சோழநாட்டில் கரிகால்சோழன் நீதியுடன் ஆட்சிபுரியும்போது ஒரு நாள் அவன் மகன் தெருவில் தேர் உருட்டிச் சென்றான். ஒரு பசுவின் கன்றின்மேல் தேர்ச்சக்கரம் ஏறக் கன்று அங்கேயே இறந்தது. கரிகாலன் அதற்குத் தண்டனையாகத் தன் மகன் மீது தேர்க்காலைச் செலுத்திக் கொன்றான். இக்கொலையால் கரிகாலனுக்குப் 'பித்தவெறி' பிடித்தது.

அதைப்போக்கத் குறத்தியைக் குறி கேட்கின்றனர். காஞ்சி காமாட்சி குறத்தியாக வந்து குறி சொல்லுகிறாள். கொங்கு நாட்டில் மக்களைக் குடியேற்றி ஊர் உண்டாக்கி, ஆலயங்களைக் கட்டித் திருப்பணி செய்து கொடை அளித்தால் பித்தவெறி நீங்கும் என்று குறத்தி குறி கூறுகிறாள்.

அதன்படி சமயமுதலி, கஸ்தூரி ரங்கப்ப செட்டி, வேளாளரில் சடையப்பன் ஆகியோர் அடங்கிய பரிவாரத்துடன் கரிகால் சோழன் கொங்கு நாட்டில் 36 பெரிய ஆலயங்களையும், 360 சிறிய ஆலயங்களையும், 32 அணைகளையும், கட்டித் திருப்பணி செய்தவுடன் பித்தவெறி நீங்கி அரசன் செங்கோல் ஆட்சி புரிந்தான் என்ற வரலாற்றைக் கூறுவதே "சோழன் பூர்வ பட்டயம்" என்னும் நூல்.

சென்னையில் உள்ள தமிழக அரசின் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தின் வெளியீடாக 1950 ஆம் ஆண்டு கோவைகிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் அந்நூலை வெளியிட்டார்கள்.

அந்நூலில் உள்ள செங்குந்தர்களின் மிகப் பெரிய சிறப்புப் பங்கு இங்கு தொகுத்தளிக்கப்படுகிறது. காஞ்சிபுரம் சமய முதலியே கொங்குக் குடியேற்றத்தில் மிகவும் முக்கியம் பெறுகிறார்.

**கைக்கோளரின் முன்னோர் கச்சிவீரன்**

காஞ்சிபுரத்தின் பழம்பெருமையைக் கல்வெட்டு மூலம் மூவேந்தருக்கு அறிவித்தவன் கைக்கோளர் குலக் கச்சிவீரன். இதனைச் சோழன் பூர்வபட்டயம் பின்வருமாறு கூறுகிறது.

> "காஞ்சித் தலம் முத்தலத்துக்கும் சமத்துவம். காஞ்சித்தலம் பூருவீகமும் இதில் உட்பட்ட அன்பத்தாறு தேச புவனத்தில் கரை பூருவீகமும் யாதொரு பூருவீகமும் சுப்பிரமணிய தேவர் அருள்படியால் நந்தி கோத்திரம் வீரவாகு தேவ வங்கிசம் கைக்கோளரில் லட்சம்வலி வீரரில் முன்னோனாகிய கச்சிவீரன் என்றும், அந்தக் கச்சிவீர வங்கிசத்தாராகிய கைக்கோளரில் கச்சிவீர காமாட்சிராயன் தன்னால் தெரியவரும். இந்தத் தலம் பூருவீகம். இதில் உட்பட்ட அன்பத்தாறு புவனத்தின் பூருவீகமும் மற்றும்

எந்தப் பூருவீகமும் அவரால் தெரிய அறியலாம் என்று கச்சி ஏகாம்பரர் மூணு ஆவுடையில் கல்ச் சாசனம் போட்டுப் பின்னும் இந்தக் காஞ்சித் தலத்தைக் கண்ணில் கண்டால் வினை தீருமென்றும், கம்பா நதியில் தீர்த்தமாடி கச்சி ஏகாம்பரரையும், காமாட்சியம்மனையும் தரிசித்தால் பஞ்சமாபாதகமும், தீராத வல்வினையும், நவதோஷமும் தீரும் என்றும் கல்ச் சாசனம் போட்டு இருந்தது.

கச்சிவீரன் மனையாள் பழமுதிர் சோலையங்கிரியம்மாள்
மகன் கச்சிமுத்து வீரப்பன்
கச்சிமுத்து வீரப்பன் மனையாள் வையாபுரியம்மாள்
கச்சிவீரன் மகன் இளையவன் கச்சிக் கச்சாலையப்பன்
கச்சிக் கச்சாலையப்பன் மனையாள் பழனாபுரியம்மாள்"

மேற்கண்டவர்கள் மூவேந்தருக்கும் பல வழிகளில் துணைபுரி கின்றனர். பல தலைமுறை சென்றபின் கரிகால் சோழன் நாளில் சமயமுதலி, கஸ்தூரிரங்கப்ப செட்டி, வேளாளரில் வெண்ணை நல்லூர்ச் சடையன் மூவரும் சோழ அரசனுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். சமயமுதலி மேற்கண்ட கச்சி வீரன் வழியில் வந்தவர். அப்போது கொங்கு தாராபுர நகரில் சங்கரநாத சேரன் மகன் சேரமான் பெருமாள் ஆட்சி செய்கிறார். அவர் தோற்றத்தைச் சோழன் பூர்வ பட்டயம் பின்வருமாறு கூறுகிறது.

"காஞ்சிபுர நகரில் கச்சி வீரமுத்து காமாக்ஷிராய சிரச்சிங்காதன கருத்தராகிய சமைய முதலிப் பட்டம் முடிவில் நாள் செனனம். அவன் மகன் கச்சிவீர வெங்கடாசல முதலிக்குப் பட்டமான நாள் கலியுக சகாத்தம் மூவாயிரத் தைந்நூற்று முப்பத்தொன்பதுக்குமேல் செல்லாநின்ற உதிரோத்காரி வருசம் வைகாசி மாதம் 5 தேதி சுக்கிரவாரமும் பஞ்சமியும் பெற்ற நாளில் காஞ்சிபுர நகரில் கச்சிவீர வெங்கடாசல முதலிக்குப் பட்டமாகியபின் அவர்க்குட்பட்ட பேர் கச்சிவீரகாமாக்ஷிராய சிரச்சிங்காதன கருத்தராகிய சமைய முதலியென்று பேராகியவரும் முன்னடந்தபடியாய் ஐம்பத்தாறு தேச புவனங்களில் உட்பட்ட அறு சமயமும் விசாரித்து நடந்து வரும்போது அந்நாளில் அவர்க்குட்பட்ட காரியப்பேர் நடந்து வருவதற்கு விபரங் காண்க.

சாதி சமையப் பட்டம் முதல் நாட்டாண்மைக்குக் கச்சிமுத்து வீர காமாக்ஷிராயச் சிரச்சிங்காதன கர்த்தராகிய சமைய முதலிக்குச் சகோதரமாகிய கச்சி கச்சாலையப்பமுதலி என்றும் சாதி சமய தல விசாரணைக்குக் கச்சிமுத்துவீர காமாக்ஷிராய சிரச்சிங்காதன

கர்த்தராகிய சமையமுதலிக்கும் கச்சிக் கச்சாலையப்ப முதலிக்கும் மைத்துனராகிய சுந்தரமூர்த்தி முதலி மகன் சூரியமூர்த்தி முதலி என்றும் சாதி சமையப் பட்டத்துத் தல விசாரணை நாட்டுக் கர்ணிகத்துக்குக் கச்சிமுத்து வீரக் காமாக்ஷிராயச் சிரச்சிங்காதனக் கர்த்தராகிய சமைய முதலிக்கும் இவர்கள் சகோதரமாகிய கச்சிக் கச்சாலையப்ப முதலிக்கும் இவர்களுக்கு மைத்துனராகிய சூரியமூர்த்தி முதலிக்கும் இவர்கள் மூவருக்கும் மைத்துனன் அமராபதி பட்டத்துக்கு அதிபனென்றும் கர்ணிகத்துக்குத் திருவேங்கட முதலி மகன் வடமலையப்ப முதலி இவன் மகன் அமராபதி முதலி என்றும் சமய சங்கதி விசாரணைக்குக் கச்சிமுத்து வீர காமாக்ஷிராயச் சிரச்சிங்காதனக் கர்த்தராகிய சமய முதலிக்கும் இவர்களுக்குச் சகோதரமாகிய கச்சிக் கச்சாலையப்ப முதலிக்கும் இவர்களிருவருக்கும் மைத்துனராகிய சூரியமூர்த்தி முதலிக்கும் இவர்கள் மூவருக்கும் மைத்துனராகிய அமராபதி முதலிக்கும் இவர்கள் நால்வருக்கும் மைத்துனன் சோலையங்கிரி முதலி மகன் வாரணவாசி முதலியென்றும் சமைய இழந்தாரி திருத்தணி முதலி மகன் தனுக்கோடி முதலியென்றும் சாதி சமைய நாட்டு விசாரணை இழந்தாரி னாகபாச சொக்கலிங்கனென்றும் இப்படி நடந்துவரும் காரியப் பேருடனே கச்சிவீர காமாக்ஷிராய சிரச்சிங்காதனக் கருத்தராகிய சமைய முதலியும் காஞ்சிபுர நகரிலிருந்துகொண்டு முன்னடக்கும்படியாய்க் கச்சி ஏகாம்பர காமாட்சியம்மன் திருக்கோயில் ஊழியமும் தாட்சி வறாதபடி விசாரித்துக்கொண்டு ஆதி காஞ்சிபுரம் மதுரையாதீனம் சமஸ்தானத்துக்குட்பட்ட ஐம்பத்தாறு தேச புவனங்களில் கோவிலூழியமும் சமையமும் விசாரித்து நடந்துவரும்போது"

**கரிகால சோழன் தேர்வில் கைக்கோளர்**

(கச்சிவீர காமாட்சிராய முதலி, கஸ்தூரி ரங்கப்ப செட்டி, வேளாளர் சடையப்பன் மூவரும் கரிகாலனைத் தேர்வு செய்து சோழநாடு, தொண்டை மண்டலத்துக்கு அரசன் ஆக்குதல்)

"அந்நாளில் அந்தச் சோழ மண்டலம் தொண்டை மண்டலமாகிய ராச்சியத்துக்கு அதிகாரக் கருத்தர் இல்லாமல் ராச்சியம் திக்கற்று மெத்த அவதிப்பட்டிருக்கும்போது அவ்விடத்திலுள்ள காரியத்தார் திருவாரூரில் கூட்டம் கூடியிருந்துகொண்டு வெண்ணை நல்லூர் சடையப்பனுக்கு வர ஓலை விட்டார்கள். சடையப்பனும் காரியத்தார் விட்ட ஓலைப்படி திருவாரூருக்கு வந்து காரியத்தாரைக் கண்டு கூடி ஆலோசித்துக் கொண்டு சடையப்பனாகிரவன் காரியத்தாருமாக

காஞ்சிபுரத்துக் கச்சிவீர காமாட்சிராய முதலிக்கும் கவரை வழிக்கியான கஸ்தூரிரங்கப்ப செட்டிக்கும் வரவோலை விட்டார்கள். விட்ட வோலைப்படி கச்சிவீரராய முதலியும் கஸ்தூரிரங்கப்ப செட்டியும் அவர்களுக்குட்பட்ட காரியத்தாரும் தானுமாகத் திருவாரூருக்கு வந்து சடையப்பனையும் காரியத்தாரையும் கண்டு கூடி ஆலோசித்துக் கொண்டு கச்சிவீர காமாட்சிராய முதலியும் சடையப்பனும் கஸ்தூரி ரங்கப்ப செட்டியும் அவர்களுக்குட்பட்ட காரியத்தாருமாகத் திருவாரூர் நகர் கடந்து காசிக்குப் போனார்கள்.

காசி விசாலாட்சிக்கு ஆராதனை முடித்து ஆராதனை பூசை முகத்தில் நின்றவள் கச்சிவீர வெங்கடாசல முதலி மனையாள் அருணகிரியம்மாள் என்று அறியவும், அந்த ஆராதனைப் பூசை முகாந்திரத்தினாலே விசாலாட்சி பாதாள தளவிசை இருக்கின்ற வெள்ளை யானையைச் சமையமுதலி யிப்பால் தருவித்துக் கொண்டு பாதாள தளவிசை மூடி முத்தரித்துப் போட்டு விசாலாக்ஷி தேவிக்கு ஆராதனை முடித்துத் தரிசித்துக் கொண்டு கச்சிவீர காமாக்ஷிராய முதலியும் சடையப்பனும் கஸ்தூரிரங்கப்ப செட்டியும் அவர்களுக்குட்பட்ட காரியத்தாருமாகக் காசிநகர் கடந்து திருவாரூருக்கு வந்தார்கள்.

தியாகராயருக்கு அபிஷேகம் தூப தீபாராதனை முடிப்பித்துவித்து எல்லோரும் தியாகராசரைத் தரிசித்து அர்ச்சித்துக் கொண்ட பின்பு சமய முதலியும் தியாகராயர் கழுத்தில் ஐந்தருவின் திருமாலையும் வாங்கித் தியாகராசர் பாத திருமஞ்சனம் பொன்செம்பில் நிரப்பி ஆதிமுன் காசித் தலத்திலிருந்து வந்த பட்டத்து வெள்ளை யானையை வரவழைத்து வெள்ளை யானையின் துதிக்கையில் திருமஞ்சனமும் திருமாலையும் கொடுத்து அந்த யானையைப் பார்த்து "நீ யாரை வைத்தாலும் அவனே எங்களுக்குத் துரை" என்று சமைய முதலியும் சடையப்பனும் கஸ்தூரி ரங்கப்ப செட்டியும் அவர்களுக்குட்பட்ட காரியத்தாரும் மற்றும் அரமனை வாசற்காரியத்தாரும் தொண்டை மண்டலம் சோழமண்டலம் குடிவரிசையும் மற்றுமுள்ள சனங்களும் சகல சருவ சனங்களும் அந்த யானைக்கு அறிக்கை செய்து நமஸ்காரம் பண்ணித் துரையை அழைத்துவர அனுப்பினார்கள்."

யானை கரிகாலனைத் தேர்ந்தெடுத்துத் திருவாரூக்கு அழைத்து வந்தது. சேரர் கொங்குப்பாடியில் சிங்கம்மாள் என்ற சோழ அரசிக்குப் பிறந்த பிள்ளையை யானை தேர்ந்தெடுத்து மாலையிட்டு அழைத்து வந்தது.

**பாண்டியர், சேரரை அழைத்தல்**

"கச்சிவீர காமாட்சிராய முதலியும், சடையப்பனும் கஸ்தூரிரங்கப்ப செட்டியும் மற்றுமுள்ளபேருங் கூடி ஆலோசித்துக் கொண்டு யானை கொண்டுவந்த பிள்ளைக்கு அதிகாரம் முடி சூட்டும்போது முடிமன்னரில்லாமல் நாம் சூட்டுவது நமக்கு யோக்கியமல்ல வென்று எல்லோரும் கூடி ஆலோசித்துக் கொண்டு மீனாட்சி சௌந்தர பாண்டியற்கும், சேரமான் பெருமாள் என்னும் சேரனுக்கும் வரவோலை யெழுதி அனுப்பினார்கள்."

**கச்சிவீர காமாக்ஷிராய முதலியாகிய சமையமுதலி கரிகாலனுக்கு முடிசூட்டல்**

"மீனாக்ஷி சௌந்திர பாண்டியனும் சேரமான் பெருமாளென்றும் சேரனும் சமையமுதலியை யழைத்துத் தங்கள் பக்கத்தில் இருத்திக் கொண்டு நீ தென் மதுரை மீனாக்ஷிக் கனக சபையில் வீரசோழனுக்கு முடிசூட்டி மனுநீதிச் சோழனென்று பேருங் கொடுத்து இந்த இராச்சியத்தை நீதி சோழனைக் கொண்டு நீதிநிலைமையாய் நடத்தி வைத்து இரக்ஷித்தாய். இந்நாளில் இந்த ராச்சியத்திலதிகாரம் திக்கெட்டும் முன் துவாபரயுகத்தில் தன்மர் வனவாசம் போக, துரியோதனனுக்குள்ளாகி 13 வருஷம் ராச்சியம் மெத்த அவதிப்பட்டு மெலிந்து முன்னிருந்தாற் போல இந்நாளில் உரையூர்ச் சோழன் மண்மாரியிலிறந்துபோக, அவர் பெண்சாதி கர்ப்பிணியாகி வனவாசம் போக 13 வருஷமிந்த ராச்சியமும் அவதிப்பட்டிருக்க இருந்தபடி சர்வத்திர பேரும் கூடி உம்மையழைத்துவிட, அவர்கள் அழைத்தபடி நீர்வந்து அவர்களைக்கண்டு எல்லோரும் கூடியாலோசித்துக் கொண்டு திருவாலூருக்கு வந்து திருவாலூரில் தியாகராயர் கழுத்தில் திருமாலையும் திருமஞ்சனமும் வாங்கி அந்த வெள்ளை யானையின் கையிற் கொடுத்து அந்த வெள்ளை யானையின் முகாந்திரத்தினாலே அந்த ராசாவின் குமாரனையும் தருவித்து வைத்துக்கொண்டு எங்களுக்கு எழுதியனுப்பித்து எங்களையும் வரவழைத்தியிருத்திக்கொண்டு நடந்த பூருவீக வரலாறெல்லாம் சொன்னது சரியே, அன்றைக்குத் தென்மதுரை மீனாக்ஷி கனக சபையில் வீர சோழனுக்கு முடி சூட்டி நீதி சோழனென்று பேரும் கொடுத்து எங்கள் வமிசத்தவரை யாவர்க்கும் தெரிய மும்முடியாய்த் தலை சேர்த்து நீதிச் சோழனைக் கொண்டும், நீதி பாண்டியனைக் கொண்டும், நீதி சேரனைக் கொண்டும் இப்படி மும்முடி மன்னரைக் கொண்டு இப்புவனத்தை நீதி நிலைமையாய் நடத்தி வைத்து

இரட்சித்தாய்.

இந்நாளிலிந்தத் தொண்டை மண்டலம் சோழ மண்டலமாகிய இராச்சியம் 13 வருஷம் திக்கற்று மெத்தவதிப் பட்டு மெலிந்திருக்கிறது. இதற்கு நீராமத்தலம் காசிதளவாசலிருந்து வந்த வெள்ளை யானை முகாந்தரத்தில் தருவித்தீரல்லவா, அவனுக்கே நீர் அதிகாரம் முடிசூட்ட வேணும்.

சூட்டிவிட்டாலவனை நாம் முன்னிருந்த மனுநீதிச்சோழனாகவும் எங்கள் வம்சத்தில் நீதிபாண்டியனாகவும் நீதிசேரனாகவும் கண்டுகொள்ளுகிறோமென்று சொல்லி மீனாக்ஷி சௌந்திர பாண்டியனும், சேரமாம் பெருமாளென்னும் சேரனும் சமைய முதலிக்குப் பாக்கு வெற்றிலை கொடுத்துக் கரிகாலச் சோழனுக்கு அதிகாரம் முடிசூட்டக் கட்டுச்செய்தார்கள். செய்தபடி சமைய முதலியும் முடி மன்னரிடத்தில் உடுகறை பாக்கு வெற்றிலையும் கரிகாலச் சோழனுக்கு அதிகார முடி சூட்டுவதற்கு அப்பனையும் வாங்கிக்கொண்டு சடையப்பனிடத்திற்கு வந்து கத்தூரிரங்கப்பச் செட்டியார் அழைக்கவிட்டு இம்மூவருங்கூடி யாலோசித்துக் கொண்டு மூவரும் மற்றுமுள்ள பேருமாகக் கூடி முடிமன்னரிடத்திற்குப் போய் முடிமன்னரிடத்தில் கரிகால சோழனுக்கு வேளாளர்பாடியில் விவாகத்திற்கு அப்பனை வாங்கிக்கொண்டு சடையப்பனும் சமைய முதலியும் கத்தூரி ரங்கப்பச் செட்டியும் மற்றுமுள்ள பேருமாகத் தொண்டைமண்டலம் சோழ மண்டலத்திலுட்பட்ட வேளாளர்பாடியில் கலியானமாகாத பெண்களெல்லாம் தருவித்து நல்லாமையாய் சற்குணமுள்ளதாய் ராசயோக்யதைக்கும் தாயாய் இலட்சுமியைப்போல் இருக்கப்பட்ட ஒரு பெண் தெரிந்து பார்த்து நிறுத்திக் கொண்டு மற்ற பெண்களெல்லாம் அவரவர் தாவுதலங்களுக்கு அனுப்பிவித்துப் போட்டு அந்தப் பெண்ணைப் பெற்ற தாயார் தகப்பனை சம்மதம் பண்ணி பரியம் நிகுதி செய்து அளவற்ற பவுசுகள் கொடுத்து, அவர்கள் மனது சந்தோஷப்பட்டுக்கொண்டு அந்தப் பெண்ணையும் பெண்ணைப் பெற்ற தாய் தகப்பனையும் வரவழைத்துக்கொண்டு சடையப்பனும் சமைய முதலியும் கத்தூரி ரங்கப்பச் செட்டியும் மூவருமாக முடி மன்னரிடத்தில் விட்டார்கள்.

முடி மன்னர் பார்த்து அந்தப் பெண்ணைக் கண்டு நம்முடைய மனுநீதிச் சோழன்அரமணைக்கு ஏற்ற பெண்ணே சரியென்று அவர்கள் ஒத்துக்கொண்டு கரிகாலச்சோழனுக்குப் பாரியையும் எங்களுக்குச் சகோதரரும் சடையப்பனுக்குப் பிள்ளையும் மற்றுமுள்ள பேர்க்கெல்லாம் தாயுமே சரியென்று மீனாக்ஷி சௌந்திர

பாண்டியரும் சேரமான்பெருமாளென்னும் சேரனும் சந்தோஷப் பட்டுக்கொண்டு அந்தப் பெண்ணைப் பெற்ற தாய் தகப்பனுக்கும் சடையப்பனுக்கும் உடுகறை பாக்கு வெற்றிலை கொடுத்து அவர்கள் மனதைச் சந்தோஷப்படுத்தி சடையப்பனுக்கும் சமைய முதலிக்கும் கத்தூரிரங்கப்பச் செட்டிக்கும் அந்தப் பெண்ணைக் கரிகாலச் சோழனுக்கு விவாஹம் முடிப்பிவிக்க கட்டுசெய்தார்கள். செய்தபடி அவர்கள் அதே முறைக்குச் சம்மதித்துக்கொண்டு அந்தப் பெண்ணைப் பெற்ற தாய் தகப்பனையும் பெண்ணையும் கலியாணவிடுதியிலிருத்திக் கலியாண நாள் நேரம் முஹூர்த்தம் இட்டுக் கரிகாலச் சோழனை மாப்பிள்ளைச் சோடனை முஸ்தீப்புச் செய்வித்துத் திருவாலூர் வீதி மெறவனை வந்து கலியான விடுதியில் புகுந்து அந்தப் பெண்ணைக் கரிகாலச் சோழனுக்கு விவாஹம் நிறைவேற்றுவித்து சமைய முதலியும் சடைப்பனும் கத்தூரிரங்கப்பச் செட்டியும் சேரன் பாண்டியனுமாக கரிகாலச் சோழனையும் அவர் மனையாளையும் அழைத்துவந்து திருவாலூர் தியாகராயர் கோவில் கனகசபை வாசலில் இருந்த வெள்ளையானைமேல் திருமஞ்சனம் ஆட்டிவைத்து ஆடையுடுத்தி ஆபரணாதி பூட்டி அலங்கரித்து சமைய முதலியும் தியாகராயர் கழுத்தில் ஐந்தருவின் மாலை வாங்கி கரிகாலச் சோழனுக்கு மோதிரமுங் கையில் கொடுத்துக் கட்டானைப் பரிவந்து எதிர் நிற்க கனகமனி முடிசூட்டி அவனுக்குப் பட்டாபிஷேகம் முடித்து ராச்சியபாரஞ் செய்ய அதிகாரங்கள் செய்தார். கரிகாலச் சோழனுக்குத் திருவாலூர் நகரில் பட்டமான நாள் கலியுக சகாத்தம் மூவாயிரத்தைந்நூற்றிருபத்தேழுக்கு மேல் செல்லாநின்ற கர வருசம் வைகாசி மாதம் இருபத்தியேழாந் தேதியும் சோம வாரமும் பஞ்சமியும் பெற்ற நாளில் கரிகால சோழனும் காஞ்சிபுரத்துக் கச்சி வீர காமாட்சிராயர் சிரசிங்காதனக் கருத்தனாகிய சமைய முதலி கையில் அதிகார முத்திரையும் மந்திரவாளும் வாங்கிக் கொண்டு தியாகராயர் பாதத்தில் வைத்து தெரிசித்துக் கொண்டு கரிகாலச் சோழனாகிறவன், சமைய முதலிக்கும் சடையப்பனுக்கும் கத்தூரி ரங்கப்பசெட்டிக்கும் சேரன் பாண்டியனுக்கும் விருந்து விசாரித்து உடுகறை பாக்கு வெற்றிலையும் கொடுத்து சோழமண்டலம் தொண்டைமண்டலத்திற்குட்பட்ட குடி வரிசை சனங்களுக்கும் விருந்து விசாரித்துச் சர்க்கரை வழங்குவித்துப் பச்சைவடம் பாக்கு வெற்றிலை கொடுத்து நிகுதி பண்ணி அவரவர் ஊருக்குப் போகச் சொல்லிக் கட்டுச் செய்வித்து அனுப்புவித்தார்கள்."

### பசுவின் கன்றைக் கொன்ற தன் மகனைக் கரிகாலன் கொல்லல்

"ஊர்ந்து வந்த தேர்வண்டிக் காலில் கன்றானது சிக்கிச் செத்தபடியினாலே அந்தக் கன்றை உன் மகன் கொன்றானென்று அந்தப் பசுவானது உன்னிடத்தில் முறை செய்து தன் கன்றின் பழி தன் கண்காண உன் கையில் வாங்க வேணுமென்று உன்னரமனை வாசலில் அந்தப் பசுவானது பாடு கிடப்பதென்று திருவாரூர் வீதியில் கரிகாலச் சோழன் மகன் சிறு தேர் உருட்டி வரும்போது கண்டிருந்த காரியக்காரர் சாக்கியாக நின்று நடுச் சொன்னார். கண்டிருந்த காரியக்காரர் சாக்கி சொல்ல கரிகாலச் சோழனாகிறவன் கேட்டுத் தன் மகன் பேரில் குற்றமென்று கச்சி வீர காமாக்ஷிராய சமைய முதலிக்கும் சடையப்பனுக்கும் கத்தூரி ரங்கப்பச் செட்டிக்கும் தன்னரமனை வாசல் காரியத்தாருக்கும் மற்றுமுள்ள பேருக்கும் தன் மகன் பேரில் குற்றமென்று ஒப்புக்கொடுத்துத் தன் மகனையழைத்து வரச்சொல்லி அவனுக்குத் திருமஞ்சனமாட்டிவைத்து திருவெண்ணீற்றுக் காப்புமிட்டு அழகிய நெற்றிக்குச் செந்தூரத் திலகமிட்டு ஆடையுடுத்தி ஆபரணாதிகள் பூட்டி யலங்கரித்துப் பரிமள களப கஸ்தூரி பூசி பாலசன மிடுவித்து அந்தச் சிறு தேரையும் அலங்கார முஸ்தீதியாய்ச் சோடிப்பித்து அந்தத் தேரின் பேரில் கரிகாலச் சோழனாகிறவன் இருந்துகொண்டு அந்தப் பசுவையும் தேருக்கு ஓட்டிவரச் சொல்லி வீதியில் நிறுத்திக் கொண்டு திருவாரூர் வீதியில் பலபேரும் பார்த்து நின்று ஆச்சரியப்பட கச்சிவீர காமாக்ஷிராய முதலிக்கும் கத்தூரி ரங்கப்பச்செட்டிக்கும் சடையப்பனுக்கும் மற்றுமுள்ள காரியத்தாருக்கும் கரிகாலச் சோழன் மகனைப் பார்த்து கண்ணீர் ததும்ப கரிகாலச் சோழனாகிறவன் அந்தப் பசுவை வடக்குமுகமாய் நிறுத்தி தன் மகனைப் பசுவெதிரே தெற்கே தலையாகப் போட்டுத் தேரை விட்டுத் தன் மகனை ஊர்ந்துகொடுத்து அந்தப் பசுவைக் கையெடுத்துக் கும்பிட்டு உன் பழி வந்தது காராவே என் தாயே என்று சொல்லி கரிகாலச் சோழன் அந்தப் பசுவை அனுப்பிவித்தார்"

### கரிகாலச் சோழன் பிரமகத்தி நீங்கல்

"தன் மகனைக் கொன்ற குலை பாதகமும் புத்திரபாவமும் புத்திர சோகமும் பிருமகத்தியாதி தோஷமும் கரிகாலச் சோழனைச் சூழ்ந்தது. சூழ்ந்து விகாரவிருமத்தி மூடி பயித்திய விகாரங்கொண்டு கண்ட பேர்களைக் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறவும் அடிக்கவும் வெட்டவும் குத்தவும் அரமனையை விட்டு அர்த்தராத்திரியில் காடு செடியில் ஓடிப்போகவுமாச்சுது. அப்படி பயித்திய விகாரங் கொண்டாடினபடி கச்சிவீர காமாக்ஷிராய சமைய முதலியும் கத்தூரி

ரங்கப்பச் செட்டியும் சடையப்பனும் மற்றுமுள்ள அரமனைவாசல் காரியத்தாரும் கரிகாலச் சோழனுக்கு இது என்ன மாயமகிமையென்று எல்லோருமா ஆலோசித்து இருக்கும்போது கச்சி ஏகாம்பரருக்கு அறிக்கையாய் கச்சி ஏகாம்பரர் சித்தமிரங்கித் திருமுகம் பார்த்து காமாக்ஷியையழைத்து கரிகாலச் சோழன் மெத்த அவதிப் படுகிறான். இன்னும் சேரகொங்கு நாட்டில் முன்னூற்றுபது சிவாலயம் பிரதிஷ்டையாகவேணும். அவனுக்கு இடையில் இந்த அவதி வரலாகாது.

அவனுக்கு வந்த வினையை நாமே பரிகரித்து அவனைத் தடுத்தடிமை கொள்ளவேணும். அது பிறகு தெரியவருமே. இனி நீ குறத்தி என்னும் சொரூபங் கொண்டுபோய்க் கரிகாலச் சோழனுக்கும் கைபார்த்துக் கண்ட குறி சொல்லி கரிகாலச் சோழன் விருமத்தியைப் பரிகரித்து வரவேணுமென்று காமாக்ஷியை யனுப்ப கச்சி ஏகாம்பரர் அனுப்பியபடி காமாக்ஷியும் ஏகாம்பரரிடத்தில் அனுப்புவித்துக்-கொண்டு தெய்வக் குறத்தியென்னும் சொரூபங்கொண்டு குறக்கூடை தலையில் வைத்துப் பொற்பிரப்பன்கோல் கையிற்பிடித்துத் திருவாரூருக்கு வந்து ‘கண்ட குறிசொல்வேன் சொல்வேன்’ என்று வீதிதோறும் குறிகூறி கரிகாலச் சோழனிடத்திற்கு வந்தாள். வந்தவளைச் சடையப்பனும் சமைய முதலியும் கத்தூரி ரங்கப்ப செட்டியும் அரண்மனை வாசல் காரியக்காரரும் குறத்தியம்மையை யழைத்துவந்து ஆசாரவிரதமாயிருத்திக் கொண்டு குறத்திஅம்மே நீ எங்கள் கரிகாலச் சோழனுக்குக் கை பார்த்துக் கண்ட குறி சொல்லவேண்டுமென்று காரிய வைபோகமாகக் கேட்டார்கள். அவர்கள் கேட்கக் குறத்தியும் அப்படியே குறி சொல்வேனென்று கரிகாலச் சோழனைத் தன் பக்கத்திலழைத்து இருத்திக் கொண்டு விநாயகரை நமஸ்காரம் பண்ணிக்கொண்டு கரிகாலச் சோழனை கைநீட்டச் சொல்லி காமாக்ஷி கைக்குறி பார்த்து இது கரிகாலச் சோழனுக்கு மற்றொரு வியாதியல்ல. மருந்தீடு சத்துரு மாய்கையல்ல. ஒருவர் முறைப்பாடு கிறகப் பகையல்ல. வயப்புக்கடப்பு வனதேவதையள் குறையல்ல. இது புத்திர சோபபாவ விருமத்தியாய் தோஷங் கரிகாலச் சோழனை சூழ்ந்திருக்கிறது. இதற்கு ஒரு மருந்துண்டு. அதனால் தீர்ந்தால் தீர்ந்தது. அது அல்லவென்றால் மற்றொரு மருந்தாலும் தீராது. அது எப்படியென்றால் கரிகாலச் சோழனாகிறவன் சேர கொங்குநாட்டில் கருவூர் முதல்கொண்டு வெள்ளிமலை முட்டங்கடையாக முன்னூற்றறுபது சிவாலயமும் முப்பத்திரண்டனையும் கட்டி வைத்து முன்னூற்றறுபது சிவாலயத்திற்கு வரிசை மானியங்கள்

குறைவற விடுத்து விளக்கஞ் செய்து கட்டிய கோவிலும் மங்காமல் விட்ட மாணியமும் நழுவாமல் என்னாளும் ஒருநாள் போலவே தானுள்ளவரைக்கும் நடத்தி வாரேனென்று சிவசுப்பிரமணிய தேவருளப் படியாய் நந்தி கோத்திரம் வீரபாகு தேவர் வம்சம் கைக்கோளரில் லட்சம் தளவீரர்க்கு முன்னோனாகிய கச்சிவீரகாமாட்சிராய சிரச்சிங்காசன கர்த்தராகிய சமைய முதலி வம்சத்தில் கச்சி வீரவெங்கடாசல முதலி அபயஹஸ்தம் வாங்கிக் கொண்டு கச்சி ஏகாம்பரர் காமாக்ஷியைக் கூறி பூமி தொட்டுரைத்துக் கரிகாலச் சோழனுக்கு நெற்றியிலிட்டால் இந்த விருமத்தி தீரும். தீர்ந்தால் கரிகாலச் சோழனும் முன் நாம் சொன்ன குறி நழுவாமல் நடத்தி வரவும் என்று காமாக்ஷி சொல்லவே கரிகாலச் சோழன் சோழனுக்கு விருமத்தியா தோஷம் அரைவாசி தணிந்தது. தணிந்தபடிக்கு கச்சிவீர காமாட்சிராயன் வம்சத்தில் வீர செங்கடாசல முதலியும் காமாக்ஷி குறி சொன்னபடியாய்க் கச்சி ஏகாம்பரர் காமாக்ஷியை யர்ச்சித்துப் பகவானைக் கைதொழுது பூமி தொட்டுரைத்து கரிகாலச் சோழனுக்கு நெற்றியிலிட அவனுக்கு அந்த விறுமத்தி தெளிந்து அமிருத குணமாகி காமாக்ஷியென்னும் குறத்தியைச் சந்தோஷப்பட்டுக்கொண்டு ஆடையாபரணாதிகள் கொடுத்து அனுப்பிவைத்தார்."

கரிகால் சோழன் கொங்குநாடு வந்து, சேரமான் பெருமாள் துணையுடன் 36 ஊர்களில் காடழித்து நாடாக்கி ஊர் உண்டாக்கிக் கோட்டையும் பேட்டையும் அமைத்தபோது சமய முதலியாரும் உடன் வந்து 36 ஊர்களிலும் செங்குந்தர்களைக் குடியேற்றினார். அவர்கள் ஊர் நிர்வாகத்திலும், கோயில் வழிபாட்டிலும் பெரும்பங்கு பெற்றனர். கீழ்க்கண்டவாறு அவர்கள் நியமனம் பெற்றதாகச் சோழன் பூர்வபட்டயம் கூறுகிறது. எல்லா ஊர்த் திருப்பணிகளும் சமய முதலியின் பட்டோலை ஒழுகின்படியே நடைபெறுகிறது.

36 ஊர்களிலும் கோயிலுக்கு விட்ட மானியத்தில் பத்தில் ஒரு பங்கு சமய முதலிக்கு அளிக்கப்பட்டது. விட்ட மானியங்கள் பற்றிச் சமய முதலியே கல்வெட்டு வெட்டுவித்தார்.

1) கரூர்

திருவாடுதண்டிகை சீர்பாத சேவைக்கு கைக்கோளர் நூறு குடிகள் நியமிக்கப்பட்டனர். நம்பி முதல் திருவலகு வரைக்கும் சரவணமுதலி என்பவருக்குக் கொத்து செய்யப்பட்டது. கோயில் மாணியம், கணக்குக்குக் கைக்கோளரில் முத்துமுதலி என்பவரை நியமித்து நிகுதி செய்யப்பட்டது.

2) கொடுமுடி

கொடுமுடி ஆலயத்தில் நம்பி முதல் திருவலகு பணி வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு செங்கோட முதலி நியமிக்கப்பட்டார். கோயில் மணியம் கணக்குக்கு அத்தப்ப முதலி என்பவர் நியமிக்கப்பட்டார். (பின்னாளில் கோபால முதலி என்பவரும் நியமிக்கப்படுகிறார்).

3) வெஞ்சமாங்கூடல்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளர் நூறு குடியை வைத்து அந்தக் கைக்கோளரில் நம்பி முதல் திருவலகு வரைக்கும் செல்லப்ப முதலியையும் கோயில் மணியம் கணக்குக்கு முருகப்ப முதலியும் நியமிக்கப்பட்டனர் (பின்னாளில் வேங்கிடபதி முதலியும் நியமிக்கப்படுகிறார்)

4) பவானி

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியச் சேவைக்கு கைக்கோளர் நூறு குடி வைக்கப்பட்டது. நூறு குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குச் செங்கோட முதலியையும் அந்தக் கோவிலுக்கும் கோவிலுக்குவிட்ட மானியங்களுக்கும் மணியம் கணக்குக்கு பழனியப்ப முதலியையும் நியமித்தனர். இவர்களுக்கெல்லாம் ஓலைப் பட்டயமும் பாக்கு வெற்றிலையும் கொடுக்கப்பட்டது. (பின்னாளில் நண்ணாவுடைய முதலியும் நியமிக்கப்படுகிறார்).

5) பழனி

பழனி - பழனாபுரி, தென்பழனி, பாலசமுத்திரம் என்று மூன்று பகுதியாக இருந்தது. சிவகிரி (மலை) ஆலயத்திற்கும், திருவாவினன்குடி (அடிவாரம்) ஆலயத்திற்கும் கொடைகள் கொடுக்கப்பட்டன.

சமயமுதலி திருவாவினன்குடித்தலம், பழனாபுரித்தலம், சிவகிரித்தலம் மூன்றையும் இனங்கண்டு மூன்று ஆலயங்களையும் ஒருமுகமாகச் சேர்த்து ஆலய ஊழியங்கட்கு நம்பி முதல் திருவலகு வரைக்கும் ஆட்கள் போட்டு திருவலகு, தண்டிகை, சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் நூறு குடியைப் பழனாபுரி நகரில் வைத்தார்.

நூறு குடிக் கைக்கோளர்க்கும் முதன்மை நாட்டாண்மைக்கு சரவண முதலியும் மூன்று கோயில் மானியக் கணக்கு மானியத்திற்கு வேலப்ப முதலியும் நியமனம் செய்யப்பட்டனர்.

6) கொண்டறங்கிமலை

பாண்டியனும் சேர, சோழர் போலத் திருப்பணி செய்ய வேண்டுமென்று எண்ணி ஆய்க்குடி, அமரபாண்டி நகரம் கண்டு

கொண்டறங்கி மலையில் வேலாயுதர் கோயில் கட்டினான். இடும்பாபுரிக் குளமும் கட்டி வைத்தார். ஆலய ஊழியத்திற்கு நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குத் திருவம்பலமுதலியை நியமித்தனர். ஐம்பது குடி கைக்கோளர் நியமிக்கப்பட்டனர். மணியம் கணக்குக்கு அமராபதி முதலி நியமிக்கப்பட்டார்.

## 7) பூம்பறை

பன்றிமலைப் பூம்பறையில் வேலாயுதர் கோயில் கட்டப்பட்டது. ஆலய ஊழியத்திற்கு திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளர் ஐம்பது குடிகள் நியமிக்கப்பட்டனர். ஐம்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குச் சண்முக முதலியும் கோயிலுக்கும், கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்கிற்கு முத்துமுதலியும் நியமிக்கப்பட்டனர். (பின்னர் இங்கு வேலப்ப முதலி என்பவரும் நியமிக்கப்படுகிறார்).

## 8) ஆனைமலை

ஆனைமலையில் அமணீசுவரம் உடையார் கோயில் ஊழியத்திற்குச் சமயமுதலி நம்பி முதல் திருவலகு வரைக்கும் ஆள் போட்டு திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியச் சேவைக்குக் கைக்கோளர் நூறு குடியை வைத்தார். ஆனைமலை நகரில் நூறு கைக்கோளர் குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மையாகக் கைக்கோளரில் பொன்னம்பல முதலியையும், கோயில் மணியம் கணக்குக்கு சோலையங்கிரி முதலியையும் நியமித்தனர்.

## 9) தென்சேரி

தென்சேரி மந்திரகிரியில் மலைவேலாயுதர் கோயில் கட்டப்பட்டது. திருத்தென்நகரம் ஏற்படுத்தப்பட்டது (தென்சேரிநகர்). வேலாயுதர் கோயில் ஆலய ஊழியத்திற்குக் கைக்கோளர் 50 குடியினர் நியமிக்கப்பட்டனர். நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக் கைக்கோளரில் சொக்கலிங்க முதலியையும் கோவிலுக்கும் கோவிலுக்கு விடப்பட்ட மானியத்திற்கும் மணியம், கணக்குக்கு கைக்கோளரில் மாரியப்ப முதலியை வைத்தனர்.

## 10) சென்னிமலை

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் ஐம்பது குடியை நியமித்து அவர்களில் கருப்பண்ண முதலியை முதன்மை நாட்டாண்மையாகவும், மணியங் கணக்குக்கு குப்பண்ண முதலியார் என்பவரையும் நியமித்தனர்.

### 11) வெள்ளையம்பதி

வெள்ளிமாநகரம் இரும்பிறை மூதூர் ஏற்படுத்தி நாகீசுவரர் கோயிலும், ஓதிமலை வேலவர் கோயிலும் கட்டினர். திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்துக்கு கைக்கோளரில் ஐம்பது குடியை வைத்து அந்த ஐம்பது குடி கைக்கோளற்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குச் சண்முக முதலி என்பவரையும், கோயில்கட்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு குமாரவேல் முதலி என்பவரையும் நியமித்தனர்.

### 12) சத்திமங்கை

கோயில் திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளர் முப்பது குடிவைத்து அந்த முப்பது குடிக்கும் பண்டாரம் முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குச் சுப்பிரமணிய முதலியையும் மணியம் கணக்கிற்கு கந்தப்ப முதலியையும் வைத்தனர்.

### 13) திங்களூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் எழுபது குடியை வைத்து அந்த எழுபது குடிக்கும் பண்டாரம் முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு நாகப்ப முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் செவந்தி முதலியை வைத்தனர்.

### 14) விசயமங்கலம்

சங்கரலிங்க உடையார் கோயிலுக்குத் திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்துக்குக் கைக்கோளரில் ஐம்பது குடியை வைத்தனர். முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் சிவகிரி முதலியை நியமித்தனர். விஜயபுரி அம்மன் கோயிலுக்குத் திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் இருபது குடியை வைத்தனர். மணியம் கணக்கிற்குத் தென்பழனி முதலியையும் கொடுமுடி வேலப்ப முதலியையும் நியமித்தனர்.

### 15) கீரனூர்

திருவாடு தண்டிகைச் சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் முப்பது குடிவைத்து முப்பது குடிக்கும் பண்டார முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் இருளப்ப முதலியையும் மணியம் கணக்கிற்குக் கைக்கோளரில் ராமலிங்க முதலியையும் வைத்தார்கள்.

### 16) கோனாபுரி

கோனாபுரியில் கோயில் கட்டி ஆலய ஊழியத்திற்கு திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் ஐம்பது குடியும் வைத்து இந்த ஐம்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு கைக்கோளரில் சாந்த முதலியையும் கோயில் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் திருமலை முதலியையும் வைத்தனர்.

### 17) நடுவச்சேரி

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்கு முப்பது குடி கைக்கோளரை வைத்து அந்த முப்பது குடிக்கும் பண்டார முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் காசிலிங்க முதலியையும் மணியம் கணக்கிற்கு அத்தப்பலிங்க முதலியையும் வைத்தனர்.

### 18) பல்லடம்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்கு ஐம்பது கைக்கோளக் குடியும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு கைக்கோளரில் பொன்னம்பல முதலியையும், மணியம் கணக்குக்கு கைக்கோளரில் சின்னய்ய முதலியையும் வைத்தனர்.

### 19) தணக்கன்பதி

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் ஐம்பது குடி வைத்து அந்த ஐம்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு கடைவரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு கைக்கோளரில் பொன்னம்பல முதலியையும், கோயில் மணியம் கணக்கிற்கு கைக்கோளரில் சின்னய்ய முதலியையும் வைத்தனர்.

### 20) குள்ளந்துறை

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் நாற்பது குடியும் வைத்து அந்த நாற்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகுகடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் கதிர்காம முதலியையும் கோயிலுக்கும், கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு கைக்கோளரில் அய்யாணி முதலியையும் வைத்தனர்.

### 21) வண்டிக்கோட்டை

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளர் முப்பது குடியும், அந்த முப்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் அமணலிங்க முதலியையும், அந்தக் கோவிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம்

கணக்கிற்கு கைக்கோளரில் ஆறுமுக முதலியையும் வைத்தனர்.

22) வெள்ளாதி

திருவாடு தண்டிகை ஊழியத்திற்குக் கைக்கோளரில் நாற்பது குடியும் வைத்து அந்த நாற்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் வெற்றிவேல் முதலியையும், கோவிலுக்கும், கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்கிற்குக் கைக்கோளரில் கச்சி வினைதீத்தா முதலியையும் வைத்தனர்.

23) கவையன்புத்தூர்

திருவாடு தண்டிகை ஊழியத்திற்கு கைக்கோளர் அறுபது குடியும் வைத்து அந்த அறுபது குடிக்கும் நம்பி முதல் திருவலகுகடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் திருத்தணி முதலியையும், கோவிலுக்கும், கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு கைக்கோளரில் விசுவநாத முதலியையும் வைத்தனர்.

24) சாமளாபுரம்

ஆலய ஊழியத்திற்கு நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் அமராபதி முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு கைக்கோளரில் தேவகிரி முதலியையும் வைத்தனர்.

25) வெள்ளலூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் நாற்பது குடியும் வைத்து அந்த நாற்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் ஆனந்த முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் புக்கொளி முதலியையும் வைத்தனர்.

26) சூலூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்துக்குக் கைக்கோளரில் இருபது குடியும் வைத்து அந்த இருபது குடிக்கும் நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் இருபது குடியும் வைத்து அந்த இருபது குடிக்கும் நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் தென்காசி முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் நஞ்சப்ப முதலியையும் வைத்தனர்.

## 27) இருகூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளர் இருபது முடியும் வைத்து அந்த இருபது குடிக்கும் நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் தனுக்கோடி முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் நயினா முதலியையும் வைத்தனர்.

## 28) இடிகரை

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் முப்பது முடியும் வைத்து அந்த முப்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் பெரியண்ண முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் ஆதிமூர்த்தி முதலியையும் வைத்தனர்.

## 29) துடியலூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் நாற்பது முடியும் வைத்து அந்த நாற்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் குட்டியண்ண முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் அதிகாரி முதலியையும் வைத்தனர்.

## 30) கோவன்புத்தூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் ஐம்பது முடியும் வைத்து அந்த ஐம்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் திருவம்பல முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குச் சோணாசல முதலியையும் வைத்தனர்.

## 31) பேரூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் தில்லை சிதம்பரத்து மூவாயிரம் குடி கைக்கோளரில் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு தில்லைச் சிதம்பர முதலியையும், கோவிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குத் தில்லை நல்லதம்பி முதலியையும் வைத்தனர்.

## 32) அவிநாசி, திருமுருகன் பூண்டி

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் நூறு குடியை அழைத்து வந்து அந்த நூறு குடி கைக்கோளருக்கும் நம்பி முதல் திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில்

புக்கொளி முதலி மகன் காசிலிங்க முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் காஞ்சிபுரத்துச் சமய சங்கோதி சோலையங்கிரி முதலி மகன் வாரணவாசி முதலி இவன் மகன் முத்துக்குமார முதலியை வைத்தனர்.

### 33) சேவூர்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் நூறு குடியும் வைத்து அந்த நூறு குடிக் கைக்கோளருக்கும் நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் முத்துக்குழந்தை முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் குமரகாழி முதலியையும் வைத்தனர்.

### 34) மன்னியூர்

மன்னியூர் என்பது இன்றைய அன்னூர் ஆகும். சமய முதலி மன்னியூர் ஆலயங்களுக்கு நம்பி முதல் திருவலகுவரை ஆள் போடுவித்தார். திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்கு சமய முதலி தன் தம்பி கச்சிக் கச்சாலையப்ப முதலி மக்கள் கச்சிக் கச்சாலைக் கந்தப்ப முதலியையும் இவனுக்கு இளையவன் கச்சிக் கச்சாலைப் பெருமாள் முதலியையும் இவர்களுக்கு உட்பட்ட நூறு குடியும், இவர்கள் மைத்துணராகிய சாமிசமயதள விசாரணை முதன்மைக்கு சூரியமூர்த்தி முதலி மகன் கொங்க மட்டும்கண்டன் என்கிற முதலியையும் வைத்தார். இவர்கட்கு உட்பட்ட நூறு குடியும் வைத்தார்.

சாதி சமயப் பட்டத்துத் தனி விசாரணை நாட்டுக் கருணீக முதன்மைக்கு கொங்கமட்டும் கண்டன் மைத்துணன் திருவேங்கட முதலி மகன் கச்சி வடமலையப்ப முதலி இவன் மகன் கச்சி அமராபதி முதலி, இவன் மகன் கச்சி வினை தீர்த்தா முதலி இவன் மகன் கச்சி அருந்தா முதலியையும் இவர்கட்குட்பட்ட நூறு குடியும் வைத்தார்.

சமய சங்கோதி விசாரணை முதன்மைக்கு மேற்படியார் மைத்துணனாகிய வாரணவாசி முதலி மகன் காசிவேல் முதலியையும் இவர்கட்கு உட்பட்ட நூறு குடிகளையும் வைத்தார்.

இவர்கள் ஐநூறு பேரையும் அழைத்து மன்னி மாகாளி துர்க்கை கேட்டபடி பன்னிரண்டு நரபலி யார் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். நரபலி கொடுக்க ஒப்புக் கொண்டனர். சமயமுதலி வெள்ளாதிக் கோயில் மனியம் கணக்கு முதன்மைக்கு நியமித்தார். நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கச்சிக் கச்சாலையப்ப முதலியை வைத்தார். மன்னியூர்க் கோட்டை பேட்டை நகரச் சீமை

கருணீகத்துக்கு கச்சி அருந்தா முதலியை வைத்தார். மன்னி மாகாளி, துர்க்கை இருவருக்கும் அபிஷேக ஆராதணை நடந்தது.

அப்போது கச்சி அருந்தா முதலி தன் வீட்டுச் சனத்தில் பன்னிரண்டு பாலகுமாரர்களை அழைத்து வந்து ஆடையுடுத்தி, ஆபரணங்கள் பூட்டி அலங்காரம் செய்து பாலசனமிடுவித்துப் பரிமள களப கஸ்தூரிகள் பூசி வீரசந்தனம் இட்டு பாக்கு வெற்றிலை கையில் கொடுத்து வீரகொம்பு வீரகாளம் வீரமல்லாரி வீரசேகண்டி வலம்புரிச் சங்குடனே வீரமேளவாத்தியம் முழங்க பஞ்சவர்ணக்குடை பஞ்சமுகத் தீவட்டி கைவிருது ரணவீர வரிவேங்கைப் புலிக்கொடியுடனே நடைபாவாடையுடனே நடை பாவாடை மேல் நடந்து சங்கீதராக மேளவாத்தியம் சூழ்ந்து வர மன்னியூரில் நாலு வீதியும் மெரவனை வந்து மன்னி மாகாளி துர்க்கை இருவருக்கும் அந்தப் பன்னிரண்டு பாலகுமாரர்களையும் எதிர் நிறுத்தி சமய முதலி "உங்களுக்கு முன் நான் சொன்ன பன்னிரண்டு நரபலியும் ஒருவருக்கும் ஆறு-ஆறுபலியாக வந்தது" என்றார்.

அந்தப் பன்னிரண்டு பாலகுமாரர்களையும் வெட்டிப் பலியூட்டி வைத்து அவ்வூரிலுள்ள குடிவரிசை சனங்களை ஆண்டு தோறும் திருநாள் நடத்தவும், விளக்கு வைக்கவும் ஆடு, பன்றி, கோழி முப்பலியும் கொடுக்குமாறு சமயமுதலி கூறினார். அந்த இரண்டு அம்மனுக்கும் பெரியம்மன், சின்னம்மன் என்று பெயர் வைத்து அவர்களுக்குத் தங்களைப் பலிகொடுத்துக் கொண்ட பன்னிரண்டு பாலகுமாரர்களையும் சாவாரக்கோல முஸ்தேதியாய் பன்னிரண்டு கல் சிலை விக்கிரகங்களும் அவர்களைப் பார்த்தாப் போல் செய்து வைத்தனர். அந்தச் சிலைகளுக்கும் சிவாலயப் பூசைக்கு முதல் பூசை என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆதி கருவூர் முதல் பேரூர் வரை கொங்கு ஏழு தலத்துக்கும் அதற்குட்பட்ட 360 சிவாலயம், விஷ்ணு ஆலயம், சுப்பிரமனியர் ஆலயம், மடாலயம், குரு ஆலயம், துர்க்கை ஆலயங்கள் கொங்கு 24 நாட்டுக்கும் மலையாளம் கொச்சிவரை சேர நாட்டுக்கும் சாதிசமயப்பட்டம், விசாரணை செய்துவர சமய முதலி தம்பி கச்சி கச்சாலையப்ப முதலி மகன் மூத்தவன் கச்சிக் கச்சாலைக் கந்தப்ப முதலிக்குப் பட்டம் கட்ட சிவன் கோயில் தென்வாசலில் சமயமண்டபம் கட்டி அலங்காரம் செய்து சமய முதலி தன் கையில் உள்ள அறுசமய முத்திரை மோதிரமும் அறுசமய சரமும் வீரவாளும் வெண்டாமரை நூல் பட்டு ஆசனமும் வெண்முத்து மணிக்கிரீடமும் அருந்தவச் செல்வியம்மன் பாதத்தில் வைத்து வணங்கி பட்டம் சூட்ட உத்தம தீர்த்தத்திற்குப் போய் தீர்த்தம் கொண்டுவந்து திருமஞ்சனம் ஆட்டித் திருநீறு இட்டு ஆடை ஆபரணங்கள் பூட்டி முத்திரைச் செங்கோல் கொடுத்து முடிசூட்டிப் பட்டம் கட்டினர்.

35) முட்டம்

திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் ஐம்பது குடியும் வைத்து அந்த ஐம்பது குடிக்கும் நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குக் கைக்கோளரில் மலையப்ப முதலியையும், கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு அயிராவதி முதலியையும் வைத்தனர்.

கொங்கு தாராபுரம் முதல்கொண்டு கொச்சி சங்கர நாராயணர் வரைக்கும் இதனுட்பட்ட சிவாலங்களும், விஷ்ணு ஆலயங்களும், சுப்பிரமணியத் திருவாலயங்களும், மடவாலயமும், குருவாலயமும் அதனடுத்த துர்க்கை ஆலயங்களுக்கும் அந்த ஆலயங்களுக்கெல்லாம் விட்ட வரிசை மானியங்களுக்கு ஆலயத்திற்கு மணியம் கணக்கிற்கு நம்பி முதல் திருவலகு கடை வரைக்கும் சமய முதலியே விசாரணை கர்த்தன் என்று சமய முதலிக்கு ஒப்புவித்துக் கட்டுச் செய்து உடுகரை பாக்கு வெற்றிலையும் கொடுத்து நிகுதி செய்து அதன் பிறகு சேரமான் பெருமாள் என்னும் சேரன் சமய முதலிக்கு கையில் அனுப்பித்துக் கொண்டு தன் இராணுவப் படையுடனே கொங்கு தாராபுரத்திற்குப் போனார். திருவாடு தண்டிகைச் சேவை சேய்த நாளில் நாளொன்றுக்கு முத்திரைப் படியில் இரண்டுபடி அரிசியும், அதற்குள்பட்ட சிலவும், மண்டபத்திற்கு ஐந்து பணமும் திருவிழாக் கட்டளைக்கு நாட்டாண்மைக்காரனுக்கு ஒரு உடுகரையும் கோயில் முந்தின தளிகைப் பிரசாதமும் கொடுக்க வேண்டியது.

சேரன் போன பின்பு சமய முதலி மன்னியூர் நகர் சமய மண்டபத்தில் இருந்துகொண்டு தன் சகோதரமாகிய கச்சிக் கச்சாலையப்ப முதலி இவன் மகன் கச்சிக்கச்சாலைக் கந்தப்ப முதலியும் தன்னாசாரத்திலிருந்து கொண்டு சாதி சமய தள விசாரனைக்குக் கச்சிக்கச்சாலைக் கந்தப்ப முதலிக்கு மைத்துனனாகிய சூர்யமூர்த்தி முதலி மகன் கொங்கமட்டுகிற முதலியும் சாதிசமயப் பட்டத்துத் தளவிசாரணை நாட்டுக் கருணீகத்திற்குக் கச்சிக்கச்சாலைக் கந்தப்ப முதலிக்கும் கொங்கமட்டுகிற முதலிக்கும் மைத்துனராகிய காஞ்சீபுரத்துச் சாதி சமய தள விசாரணைப்பட்டது நாட்டுக் கருணீகத்திற்குக் கச்சித் திருவேங்கட முதலி மகன் கச்சி வடமலையப்ப முதலி இவன் மகன் வெள்ளாதிக் கோவிலுக்கும் கோவில் மான்யத்திற்கும் மணியங்கணக்குக்கும் வைத்த கச்சி வினைதீர்த்தா முதலி இவன் மகன் கச்சி அருந்தாமுதலியும் சமய சங்கோதி விசாரணைக்குக் கச்சிக் கச்சாலைக் கந்தப்ப முதலிக்கும் கொங்குமட்டுகிற முதலிக்கும் கச்சி அருந்தா முதலிக்கும் இவர்கள் மூவருக்கும் மைத்துனனாகிய கச்சிச் சோலயங்கிரி முதலி மகன் வாரணவாசி முதலி இவன் மகன் காசிவேல் முதலியும் சமய இழந்தாரி

தனுக்கோடி முதலி மகன் ராமலிங்க முதலியும் சாதி சமய நாட்டுச் சோடிளந்தாரிக்கு நாகபாச சொக்கலிங்கன் மகன் சுந்திரலிங்கத்தையும் இவர்களை யெல்லாம் மன்னியூர்ச் சமய மண்டபத்தில் வைத்துக் கொண்டு,

கொங்கு இருபத்தி நாலு நாட்டு உறவின் முறையும் அழைப்பித்து மன்னியூர்ச் சமய மண்டபத்தில் வைத்துக்கொண்டு நாட்டுக் கொருவனைக் கொத்துப்பண்ணி நாடு காண்க, ஆறு நாட்டுக்குப் பெரிய வீடு சேவூரென்று கண்டு சேவூருக்கு முத்துக்குழந்தை முதலியை வைத்து வராக்க நாட்டுக்கு குமார வேலப்ப முதலியும், ஒடுவங்கத்திற்குச் செங்கோட முதலியும் பூந்துறை நாட்டிற்குப் பண்ணமுதலியும் அண்ட நாட்டுக்குச் சடையப்ப முதலியும் வெங்கல நாட்டிற்கு நல்லதம்பி முதலியும், காங்கேய நாட்டிற்கு அத்தப்ப முதலியும் பருத்திப் பள்ளி நாட்டிற்குப் பொன்னுதம்பி முதலியும், பொன்குலுக்கி நாட்டுக்குக் கந்தப்ப முதலியும் வைய்காலூர் நாட்டுக்குச் சரவண முதலியும், குருப்பு நாட்டுக்கு மோகாம்புரி முதலியும், கோசல நாட்டிற்குக் கந்த முதலியும், ஏழுகரை நாட்டுக்குத் தில்லை கோவிந்த முதலியும் அப்படி அதனுள்பட்ட இருபத்துநாலு நாட்டுக்கும் நாட்டாண்மைக்கும் வைத்து சமய முதலியின் தம்பி மகன் கச்சிக் கச்சாலைக் கந்தப்ப முதலியைக் கொண்டு நிகுதி செய்து பாக்கு வெற்றிலை கொடுப்பித்து அவரவர் ஊரிலுள்ள வாய்க்குற்றம் கைக்குற்றம் அவரவர் தீர்த்துக்கொண்டு வரச்சொல்லியும், அதற்கு மீறின குற்றம் ஒரு நாடு கூடி ஒரு நாட்டுக்குறுப்பான நாட்டாண்மைக்காரன் வந்து தீரும்போது மன்னியூருக்கு வந்து நம்முடைய கச்சிக்கச்சாலைக் கந்தப்ப முதலியும் சாதி சமய தள விசாரணைக் கொங்கமட்டுகிற முதலியும் சாதி தள விசாரணைப் பட்டத்து நாட்டுக்கர்ணிகம் கச்சி அருந்தா முதலியும் சமய முதலியும் சமய சங்கதி விசாரணைக்குக் காசிவேல் முதலியும் சமய இழந்தாரி இராமலிங்க முதலியும் சாதி சமய நாட்டுச் சோடிளந்தாரி நாகபாச சுந்திரலிங்கத்தையும்,

இவர்களை எல்லாம் வந்தழைத்துக்கொண்டு போய் இவர்கள் முன்படத்தீர்த்துக்கொண்டு வரவும். கனகுற்றங்களானால் நாலு நாடும் கூடித் தீரும்போது மன்னியூர்ச் சமய மண்டபத்திற்கு வந்து நாலு நாட்டு உறவின் முறையும் கூடிக்கொண்டு நமது தம்பிமகன் கச்சிக்கச்சாலை கந்தப்ப முதலியும் கொங்க மட்டுகிற முதலியும் நாட்டுச் சமய கருணீகம் அருந்தா முதலியும் சமய சங்கதி காசிவேல் முதலியும் இழந்தாரி ராமலிங்க முதலியும் சோடிளந்தாரி நாகபாச சுந்திரலிங்கத்தையும் அவர்கள் ஆறுபேரும் அவர்கள் முன்பட தீர்த்துக்கொண்டு போகவேண்டுமென்று அவரவர்க்கும் கட்டுச் செய்து அதன் பின்பு அந்தந்த ஊரிலேயும் நாட்டிலேயும் அந்தந்த நாட்டாண்மைக்காரர் வாய்க்குற்றம் கைக்குற்றம்

தீர்ந்து அபராதம் வாங்கி நல்லது செய்யும்போது முந்தின பாக்கு வெற்றிலை இரட்டை வேழையம் நாட்டுச் சமய முதலி பேர்க்கு எடுத்து வைத்து அதன் பின்பு சமய நாட்டாண்மைக்காரனுக்கு, அதன் பின்பு நாட்டுத் தளபதிக்கும், அதன் பின்பு இழந்தாரிக்கும் இப்படிக் இந்த ஆறு சேசை வரிசைக்காரருக்கு முந்தின பாக்கு வெற்றிலை எடுத்து வைத்து அவரவர்க்கும் கட்டுச் செய்து அதன் பின்பு சோடிளந்தாரிக்கு வெற்றிலை பாக்கு எடுத்து வைத்து அவரவரும் கிரமப்படிக் குற்றந் தீர்ந்து கொண்டு வாருங்களென்று அவரவர்க்கும் கட்டுச் செய்து அதன்பின்பு அந்தந்த ஊர்க்கோவில் வாசலில் வரிசை வந்தால் முந்தின பங்கு சமய முதலி பேர்ப்பட எடுத்து வைத்து அதனுள்பட்ட ஐந்து பேருக்கும் எடுத்து வைத்து அதன் பின்பு அவர்கள் பகிர்ந்து கொள்ளவும்.

சிதம்பரேசுவரர் சிவகாமிஅம்மன் விக்கினேசுரர் சுப்பிரமணியர் வள்ளியம்மன் தெய்வயானை சூலதேவர் சுந்திரப்பெருமாள் இந்த எட்டு விக்கிரகமும் சோடிசத்துடனே உண்டு செய்து அதை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு மேலைச் சிதம்பரத்திற்குக் கொண்டு போய் அவ்விடத்திலே ப்ரதிஷ்டையும் பண்ணிவைக்க வேண்டுமென்று கரிகாலச் சோழன் சமய முதலிக்கு எழுதி அனுப்பி வைத்தார். எழுதி அனுப்பித்த விவரம். இந்த விக்கிரகம் மேலைச் சிதம்பரத்திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகுவதற்குக் கைக்கோளரில் எழுநூறு ஆளனுப்பி வைக்கச் சொல்லி வந்தபடியினாலே சமய முதலியும் மெத்தச் சந்தோஷப்பட்டுக் கொண்டு குடிக்கொரு ஆள் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி மேலைச் சிதம்பரம் பேரூர் நாட்டாண்மைக்காரன் தில்லைச் சிதம்பர முதலிக்கும் அவினாசி நாட்டாண்மைக்காரன் காசிலிங்க முதலிக்கும் வரவோலை எழுதி அனுப்பித்தார்.

சமய முதலி எழுதி அனுப்பியபடிக்குத் தில்லைச் சிதம்பர முதலியும் தன்னூரில் இருக்கின்ற நூறுகுடி கைக்கோளரில் நூறாளும் காசிலிங்க முதலியும் தன் கையிலிருக்கின்ற நூறு குடிக்கு நூறாளும் இவர்கள் இருவரும் இருநூறு ஆளும் தாங்களும் மன்னியூருக்கு வந்தார்கள். வந்து சமய முதலியைக் கண்ட பின்பு சமய முதலி தன் தம்பி மகன் கச்சிக்கச்சாலைப் பெருமாள் முதலியை அழைத்து இந்த மன்னியூரிலிருக்கிற கைக்கோளர் ஐந்நூறு குடிக்கும் குடிக்கு ஓர் ஆள் முறைக்கு ஐந்நூறு ஆள் தருவிக்கச் சொல்லி கட்டுச் செய்தார். சமய முதலி கட்டுச் செய்தபின்பு கச்சிக் கச்சாலைப் பெருமாள் முதலியும் ஆக எழுநூறு ஆளும் சேர்த்து சமய முதலிக்கு எதிரே கொண்டு விட்டான். அதன் பின்பு சமய முதலியும், ஆக எழுநூறு ஆளும் சேர்த்து இந்த எழுநூறு ஆளுக்கும் இந்த மூன்று நாட்டாண்மைக்காரரையும் கூட்டி சமய முதலி திருவாரூருக்கு அனுப்பி வைத்தார்.

சமய முதலியும், அனுப்பிவைத்தபடிக்கு கச்சிக் கச்சாலை பெருமாள் முதலியும் தில்லைச் சிதம்பர முதலியும், காசிலிங்க முதலியும் இவர்கள் மூன்று நாட்டாண்மைக்காரர்களும் எழுநூறு ஆளும் திருவாரூருக்குப் போய் கரிகாலச் சோழனைக் கண்டார்கள். அதன் பின்பு கரிகாலச் சோழனை சடையப்பன் கத்தூரி ரங்கப்ப செட்டியும், அழைக்கவிட்டு அவர்களையும் கூட்டிக்கொண்டு கொங்குதாராபுரத்திலிருக்கின்ற சேரனையும் அழைத்துக் கொண்டு இந்த எழுநூறு ஆளுடைய கையில் அந்த விக்கிரகங்களையும் எடுப்புவித்துக் கொண்டு கரிகாலச் சோழன் சேரமான் பெருமாள் என்றும் சேரன் சடையப்பன் கத்தூரி ரங்கப்ப செட்டி இவர்கள் எல்லோரும் பேரையூர் நகருக்கு வந்தார்கள். வந்து பேரையூர் நகரிலிருந்து கொண்டு கரிகாலச் சோழன் மன்னியூருக்குச் சமய முதலியை உத்தமலிங்காசாரியரை அழைத்துக் கொண்டு வரச்சொல்லி பேரையூரிலிருந்து வரவோலை எழுதி அனுப்பி வைத்தார். அந்த வரவோலை சமய முதலி இருக்கிற மன்னியூருக்கு வரவும் சமய முதலியும் உத்தமலிங்காசாரியரையும் அழைத்துக் கொண்டு கச்சிக்கச்சாலைக் கந்தப்ப முதலியும் கொங்கமட்டுகிற முதலியும் கரினிக அருந்தா முதலியும் காசிவேல் முதலியும் மற்றுமுள்ள காரியப்பேரையும் கூட்டிக் கொண்டு மன்னியூர்நகர் கடந்து திருப்பேரையூர் நகருக்குப் போனார். போய் கரிகாலச் சோழன் சடையப்பன் கத்தூரி ரங்கப்ப செட்டியும் மற்றுள்ள கர்த்தரையும் கண்டார்கள்.

அதன்பின்பு கரிகாலச் சோழன் பேரூரில் சமய முதலியை அழைத்து இந்த எட்டுவிக்கிரகமும் விக்கிரகப் பிரதிஷ்டைபண்ணி வைக்கச் சொல்லி கரிகாலச் சோழன் பிரதிஷ்டை சமய முதலிக்குக் கட்டுச் செய்ய சமய முதலியும் அப்படியே உத்தமலிங்காசாரியரைக் கொண்டு சிதம்பரரேசுரர் சிவகாமியம்மன் விக்கினேசுரர் சுப்பிரமணியர் வள்ளியம்மை தேவயானை சூலதேவர் சுந்திரப் பெருமாள் இந்த எட்டுவித விக்கிரகத்தையும் பிரதிஷ்டையும் பண்ணிவைத்து அபிஷேக தூப தீபாறாதனை முடிப்பித்து எல்லோரும் தரிசித்துக்கொண்டு அதன்பின்பு சமய முதலியும் புட்பவிமானம் சோடித்து அதன் மேல் சிதம்பரேசுரரையும் சிவகாமி அம்மனையும் பதினெண் மேளவாத்தியத்துடன் பெரிய கடைவீதி மிறைவணை வருவித்துத் திருக்கோயில் புகுந்தபின்பு கற்பூர தூப தீபாறாதனை பரிமாறிச் சிதம்பரேசுவரரையும் சிவகாமி அம்மனையும் அதினுள்பட்ட ஆறு தேவதையும் நிலை நிறுத்தி அபிஷேக தூப தீபாராதனையும் முடிப்பித்து எல்லோரும் தரிசித்துக்கொண்டு எல்லோரும் தீர்த்தப்பிரசாதம் வாங்கிக்கொண்ட பின்பு,

கரிகாலச் சோழன் விருந்து விசாரித்து பாக்கு வெற்றிலை கொடுப்பித்து அதன்பின்பு காரிகாலச் சோழன் பேரூரிலுள்ள நூறு குடி

கைக்கோளருக்கும் நாட்டாண்மைக்காரனுக்கும் அரமனைச் சுங்க மில்லையென்று நிகுதிசெய்து அவர்களுக்குக் கோயில் வரிசை தட்டைச் சாக்கிரதை திருவாடுதண்டிகைச் சேர்வை செய்த நாளில் நாளொன்றுக்கு முத்திரைப்படியில் இரண்டுபடி அரிசியும், அதற்குள்பட்ட சிலவும், மண்டபத்திற்கு ஐந்து பணமும், திருவிழாக் கட்டளைக்கு நாட்டாண்மைக்காரருக்கு ஒரு உடுகரையும் கோவில் முந்தின தளிகை பிரசாதமும் கொடுத்து நடத்தி வரவென்று அந்தப் பேரூர் திருவாடுதண்டிகைச் சேர்வைக் கைக்கோள்வருக்கும் இந்தப்படி நடத்திவர அதிகாரக்காரருக்கும் கட்டுச் செய்து இந்தப் பேரூர்க்கேற்ற முறைக்கு முன்னூற்றறுபது சிவாலயத்திற்கும் கட்டுச்செய்து அதன்பின்பு பட்டீசுரர் பச்சை மரகதவல்லிக்கும் மற்றுள்ள தேவர்களுக்கும் அபிஷேக தூப தீபாராதனை முடிப்பித்துக் கரிகாலச் சோழன் சேரமாம்பெருமாள் என்னும் சேரன் சமய முதலி சடையப்பன் கத்தூரி ரங்கப்ப செட்டி எல்லாரும் தரிசித்துக்கொண்டு பேரையூர் நகர் கடந்து சேரமாம் பெருமாளென்றும் சேரன் கொங்கு தாராபுரத்திற்குப் போனார்.

கரிகாலச்சோழனும் சமயமுதலியும் மற்றுள்ளபேரும் பேரையூர் நகர் கடந்து மன்னியூருக்கு வந்து மன்னிநாதர் அருந்தவச்செல்வி அம்மன் மற்றுள்ள தேவதைகளுக்கும் அபிஷேக தூப தீபாறாதனை முடிப்பித்து எல்லோரும் தரிசித்துக் கொண்டு சமய முதலி தன் தம்பி கச்சிக்கச்சாலையப்ப முதலி இவன் மகன் கச்சிக் கச்சாலைக் கந்தப்ப முதலி இவன் தம்பி கச்சிக்கச்சாலைப் பெருமாள் முதலி மற்றும் வளைவிலுண்டாகிய சகல ஜனங்களுக்கும் சொல்லிக்கொண்டு நாட்டுக் கர்ணிகம் அருந்தா முதலி வளைவு சகல ஜனங்களுக்கும் சொல்லிக்கொண்டு. சமய சங்கதி காசிவேல் முதலி வளைவு சகல ஜனங்களுக்கும் சொல்லிக்கொண்டு மற்றும் அவ்விடத் திலுண்டாகிய உறவின் முறையாருக்கெல்லாம் சொல்லி அனுப்பிவைத்துக் கொண்டு உத்தமலிங்காசாரியர் பாதம் பணிந்து அனுப்பி வைத்துக் கொண்டு சகல ஜனங்களும் சுகமாய் இருக்க வேண்டும் என்று வாக்கு கொடுத்து சமய முதலியும் கரிகாலச் சோழனும் அவர்களுக்குட்பட்ட இராணுவப் படையுடனே மன்னியூர் நகர் கடந்து அருணாபுரிக்குப் போனார்கள்.

**பிற ஊர்களில் குடியேற்றமும் கோயில் பணிகளும்**

**சங்கர நாராயணர் கோயில்**

திருவாடு தண்டிகைச் சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோளரில் ஐம்பது குடியும் வைத்து அந்த ஐம்பது குடிக் கைக்கோளருக்கும் நம்பி நாகபாசத்தவருக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு முகரசுப்பிரமணிய முதலி என்கிறவனை வைத்தனர்.

**கொச்சி**

சமய முதலிக்குக் கொச்சி தேசத்தில் கப்பல் முதமையும் உண்டுசெய்து சேரன் கொச்சி புகுந்து போகிற கப்பலுக்கு அஞ்சு பொன்னும், வருகிறகப்பல் போகிற கப்பலுக்கு அஞ்சு பொன்னும், வருகிற கப்பலுக்குப் பத்துப் பொன்னும் என்று கண்டு சமய முதலிக்குச் சேரன் செப்புப் பட்டையம் எழுதிச் செப்பேட்டுப் பட்டயமும் பாக்கு வெற்றிலையும் சமய முதலி கையில் சேரன் கொடுத்தான்.

கொச்சியில் மணியம் கணக்கு சமய முதலி வைத்தவர் முத்துத் தாண்டவ முதலி.

**மோகாம்புரி**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக் கட்டுச் செய்யப்பட்டவர் அம்பிகை முதலி.

**நஞ்சுண்ட கூடல் (நஞ்சன் கூடு)**

கோயிலுக்கும், கோயில் மானியத்திற்கும் சமய முதலியால் நிகுதி செய்யப்பட்டவர் வசவலிங்க முதலி.

**தாராபுரம்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு வைக்கப்பட்டவர் அத்தப்ப முதலி.

**பூந்துறை**

கோவிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு நியமிக்கப்பட்டவர் சிவலிங்க முதலி.

**சிவகிரி**

கோவிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு நியமிக்கப்பட்டவர் மயிலப்ப முதலி.

**திருவண்ணாமலை**

கோயில் மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் அருணாசல முதலியை நியமித்தனர்.

**தஞ்சாவூர்**

தஞ்சைக் கோயில் மணியம் கணக்குக் கைக்கோளரில் இராமலிங்க முதலியை வைத்தனர். சிவலிங்கமுடையார் கோயிலுக்கு மணியம் கணக்குக்குக் கைக்கோளரில் ஆனை முதலியை வைத்தனர்.

*திருச்சிராப்பள்ளி*

கோயில் மணியம் கணக்குக்குச் சிரா முதலியை வைத்தனர். முன்னாளில் சோழவம்சத்தவர் நிகுதிபண்ணின முறைக்குக் கரிகாலச் சோழன் சமய முதலி மான்யங்கண்டு அந்தந்தக் கோயில் தூணில் கல்வெட்டும் போட்டு சமய முதலி வசம் அந்தந்தக் கோயில் மணியங்கணக்குக்கு நம்பிமுதல் திருவலகு கடைவரைக்கும் சகல விசாரணையும் கரிகாலச் சோழன் சமய முதலி வசம் ஒப்பித்துக்கொடுத்து அதன்பின்பு சமய முதலிக்குள்பட்ட பந்துஜனம் கைக்கோள்வருக்குச் சமய முதலி மணியங்கணக்குக் கொடுத்துச் சோளதேசத்தினுள்பட்ட சிவா லயத்திற்செல்லாம் கரிகாலச் சோழனும் சமயமுதலியும் நிகுதி செய்தபின்பு சமயமுதலி என்கிற கச்சிவீர காமாச்சிராய சிரச் சிங்காதனக் கர்த்தராகிய சமய முதலியும் அவர்களுக்குள்பட்ட காரியப்பேர் நடந்துவருவதற்குச் சாதிசமயப்பட்டனுக்கும் முதல் நாட்டாமைக்குக் கச்சிமுத்து வீர காமாச்சிராயச் சிரச்சிங்காசனக் கர்த்தராகிய சமய வெங்கடாசல முதலிக்குச் சகோதரமாகிய கச்சிக் கச்சாலையப்ப முதலி சாதி சமய தளவிசாரணைக்குக் கச்சிவீர காமாச்சிராய சிரச்சிங்காசனக் கர்த்தராகிய சமய கச்சிவீர வெங்கடாசல முதலிக்கும் இவர்கள் தம்பி கச்சிக் கச்சாலையப்ப முதலிக்கும் மைத்துனராகிய சூர்யமூர்த்தி முதலியும் சாதிசமய பட்டத்துத் தளவிசாரணை நாட்டுக் கர்னிகத்திற்குக் கச்சிமுத்து வீரகாமாச்சிராயச் சிரசிங்காசனக் கர்த்தராகிய சமயக் கச்சிவீர வெங்கடாசல முதலிக்கும் இவர்களுக்குச் சகோதரமாகிய கச்சிக் கச்சாலையப்ப முதலிக்கும் இவர்களுக்கு மைத்துனராகிய சுந்தரமூர்த்தி முதலிக்கும்,

இவர்கள் மூவருக்கும் மைத்துனனாகிய நாட்டுக்கர்ணிகம் அமராபதி முதலியும் சமய சங்கோதி விசாரணைக்கும் சமய முதலிக்கும் இவர்கள் தம்பி கச்சிக் கச்சாலையப்ப முதலிக்கும் இவர்களுடைய மைத்துனராகிய சுந்திரமூர்த்தி முதலிக்கும் இவர்கள் மூவருக்கும் மைத்துனராகிய நாட்டுக்கர்ணிக அமராபதி முதலிக்குமிவர் நால்வருக்கும் மைத்துனராகிய வாரணவாசி முதலியும் சமைய சோடிளந்தாரி தனுக்கோடி முதலியும் சாதி சமய நாட்டுச் சோடிளந்தாரி நாகபாச சொக்க லிங்கத்தையும் இவர்களை எல்லாம் வரச்சொல்லி வரவோலை எழுதி மன்னியூருக்கு ஆள் அனுப்பிவைத்துத் தருவித்துச் சமயமுதலியும் இந்தக் கார்யப்பேரும் கரிகாலச் சோழனுமாகச் சமய மண்டபத்திலிருந்து கொண்டு இந்த அருணாபுரிச் சமய மண்டபத்திற்குச் சோனாபுரியிலுண்டாகிய கைக்கோள்வரையும் நம்பி நாகபாசத்தவரையும் அழைப்பித்து அவர்களுக்கும் சமய முதலி நிகுதி செய்த பின்பு சோழ தேசத்தி லுண்டாகிய கைக்கோளருக்கு ஊர்க்கொரு நாட்டாமையும், நாட்டாருக்கொரு நாட்டாண்மையும் கண்டு,

நிகுதி செய்து பாக்கு வெற்றிலையும் கொடுத்து அவரவர் ஊரிலுள்ள வாய்க்குற்றம், கைக்குற்றம் அவரவர் தீர்த்துக்கொண்டு வரச் சொல்லியும் அவரவர் அதற்கு மீறின குற்றம் ஒரு நாடு கூடி ஒரு நாட்டுக்குக் குறிப்பான நாட்டாமைக்காரன் வந்து தீரும்போது காஞ்சிபுரத்திற்கு ஆளனுப்பிவைத்து நம்முடைய தம்பி கச்சிக்கச்சாலையப்ப முதலியும் தளபதி சூர்யமூர்த்தி முதலியும் நாட்டுக்கர்ணிகம் அமராபதி முதலியும் சமய சங்கதி வாரணவாசி முதலியும் சமய இழந்தாரி தனுக்கோடி முதலியும் சமய நாட்டுச் சோடிளந்தாரி நாகபாச சொக்கலிங்கத்தையும் இவர்களையும் அழைத்து வந்து இவர்கள் முன்படத் தீர்த்துக் கொண்டு வரவும். கனகுற்றங்கள் ஆனால் நாலுநாடுங் கூடித் தீரும்போது காஞ்சீபுரத்திற்குத் தமது சமய மண்டபத்திற்கு வந்து நாலு நாடு உறவின் முறையும் கூடி நமது முன்னிலையாகத் தீரவும் என்று அவரவர்க்கும் கட்டுச்செய்து அதன்பின்பு அந்தந்த ஊரிலும் நாட்டிலும் அந்தந்த நாட்டாண்மைக்காரர் வாய்க்குற்றம் கைக்குற்றம் தீர்ந்து அபராதம் வாங்கி நல்லது செய்யும்போது முந்தின பாக்கு வெற்றிலை ரட்டை வேளையும் நாட்டுச் சமய முதலி பேருக்கு எடுத்துவைத்து அதன் பின்பு சமய நாட்டாண்மைக்காரனுக்கும், அதன் பின்பு நாட்டுத் தளபதிக்கும் அதன்பின்பு நாட்டுக்கர்ணிகருக்கும், அதன்பின்பு சேசவரிசைக்காரருக்கும் முந்தின பாக்கு வெற்றிலை எடுத்து வைத்து அதன்பின்பு அவரவர்க்கும் வெற்றிலை பாக்கு கொடுத்து அதன்பின்பு சோடிளந்தாரிக்கும் வெற்றிலை பாக்கு எடுத்துவைத்து அவரவரும் இப்படி குற்றம் தீர்த்துக் கொண்டு வாருங்களென்று அவரவர்கட்கும் கட்டுச்செய்து அதன்பின்பு அந்தந்த ஊர்க் கோவில் வாசலில் வரிசை வந்தால் முந்தின பங்கு சமய முதலிபேர் படஎடுத்து வைத்து அதனுள்பட்ட ஐந்து பேருக்கும் சேச வரிசையாய் எடுத்து வைத்து அதன் பின்பு அவர்கள் பகிர்ந்து கொள்ளவும்.

### சீர்காழி

கோயிலுக்கும், கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு ஆனந்த முதலி நியமிக்கப்பட்டார்.

### சிதம்பரம்

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்கிற்கு சிவகாமி முதலியை வைத்தனர்.

### திருப்பதி

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் காஞ்சீபுரத்துச் சாதி சமய தள விசாரணைப் பட்டத்து நாட்டுக்கர்ணிகர் காஞ்சீபுரத்தின் கச்சி ஏகாம்பரர் காமாட்சி அம்மன் கோயில் மணியம் கணக்குக்கு நின்ற கச்சித் திருவேங்கிட முதலி கச்சி வடமலையப்ப முதலி

ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

**திருத்தணி**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கும் குருநாத முதலி நியமிக்கப்பட்டார்.

**காசி**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குச் சமய சங்கதி சோலையங்கிரி முதலி மகன் வாரணவாசி முதலியை நியமித்தனர்.

**கதிர்காமம்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குச் சரவண முதலியை நியமித்தனர்.

**காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கோயில்**

கோயிலுக்கும் கோயிலுக்கு விட்ட மானியத்திற்கும் மணியம் கணக்கிற்கும் சாதி சமய தள விசாரணைப்பட்டத்து நாட்டுக் கர்ணிகர் கச்சித் திருவேங்கட முதலி நியமிக்கப்பட்டார்.

**காஞ்சீபுரம் வரதராசப் பெருமாள் கோயில்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கச்சி ஏகாம்பரநாத முதலியை நியமித்தனர்.

**கந்தகோட்டம்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குக் கச்சி வேலப்ப முதலி நியமிக்கப்பட்டார்.

**கருமாரியம்மன் கோயில்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு சிராமலை முதலி நியமிக்கப்பட்டார்.

**விரிஞ்சிபுரம்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்கிற்கு மோகாம்புரி முதலியை நியமித்தனர்.

**ஊஞ்சலூர்**

கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்கு ஆறுமுக முதலியை நியமித்தனர்.

**பாபநாசம்**

திருவாடு தண்டிகை சேவைக்குக் கைக்கோளரில் ஐம்பது குடியும் வைத்து அந்த ஐம்பது குடிக்கைக்கோளருக்கும் முதன்மை நாட்டாண்மைக்கு வேத மூர்த்தியை நியமித்தனர். அந்தக் கோயில் மணியம் கணக்குக்கு ஞானமூர்த்தி முதலியை நியமித்தனர்.

**மதுரை**

கோயில் மானியத்திற்கும் மணியங்கணக்குக்கும் சமய சங்கதி சோலையங்கிரி முதலியை வைத்தனர். மணியங்கணக்குக்கு தானப்ப முதலியை வைத்தனர். சீர் ஆலவாயன் கோயில் மணியம் கணக்குக்குக் கந்தப்ப முதலியை வைத்தனர்.

**திருப்பரங்குன்றம்**

கோயில் மணியம் கணக்குக்குச் சொக்கலிங்க முதலியை வைத்தனர்.

**திருஏரகம்**

கோயில் மணியம் கணக்குக்குக் திருமுருக முதலியை வைத்தனர்.

**பழமுதிர்சோலை**

கோயில் மணியம் கணக்குக்குக் கோபால முதலியை வைத்தனர்.

**திருச்செந்தூர்**

கோயில் மணியம் கணக்குக்குக் அர்த்தபாக முதலியை வைத்தனர்.

**கன்னியாகுமரி**

கோயில் மணியம் கணக்குக்கு முத்துவேலப்ப முதலியை வைத்தனர்.

**படுக்கல் கோயில்**

கோயில் மணியம் கணக்குக்கு தாண்டவ முதலியை வைத்தனர்.

**கம்பம் கூடலூர்**

கோயில் மணியம் கணக்குக்கு கோபால முதலியை வைத்தனர்.

**ஊதியூர்**

ஊதியூர்ப் பொன்னூதிமலை வேலர் கோயிலுக்கு மணியம் கணக்கிற்குச் சாமிநாத முதலியை வைத்தனர்.

# 12. கொங்கு வரலாற்று ஆவணங்களில் செங்குந்தர்

### (1) கொங்கு காணியான பட்டயம்

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் இந்த ஓலைப்பட்டயம் உள்ளது.

கொங்கு வேளாளர் குலப் பெருமக்கள் சோழ நாட்டிலிருந்து குடியேறி கொங்கு நாட்டில் காணி, ஊர் இவைகளைப் படைத்துக் கொண்ட விபரம் இதில் கூறப்படுகிறது. குருக்கள் நியமனம் செய்து கோயில் கட்டி வழிபாடு செய்த விபரம் கூறப்படுகிறது. கொங்கு வேளாளர் குலத்துக் கவுண்டர்கள் பலர் கையொப்பமிட்டுள்ளனர். கவுண்டர்களைத் தவிரச் செங்குந்தர் குலப் பெருமக்கள் மட்டுமே இப்பட்டயத்தில் கூறப்பட்டுள்ளனர். செங்குந்தர்களும் கொங்கு நாட்டில் காணி, பூமி, பரிவட்டம் பெற்றுள்ளனர்.

> "செங்குந்தரில் மாலைமுதலி, நாராயணமுதலி, வெள்ளைமுதலி
> வித்தாரணமுதலி, அணஞ்சாமுதலி இந்தக் குடிகளில்
> உள்ள சகலமான குடிகளும் கூடி முந்திய சிவாலய
> மாகிய திருமுருகன் பூண்டி முருகநாதர் சன்னதியில்
> அடிவணங்கித் தெண்டனிட்டுக் காணி பூமி பட்டம்
> பரிவட்டங்களும் பெற்று"

என்ற பகுதியில் செங்குந்தர்கள் சிறப்புப் பெற்ற விபரம் தெரிகிறது.

### (2) இராமபத்திரன் பட்டயம்

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் இந்தப் பட்டயம் உள்ளது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் திருச்செங்கோட்டில் வாழ்ந்த அரசு அதிகாரி இராமபத்திரன், நாட்டுக் கணக்கு வேலை பார்த்தவர். இவரைப்பற்றிய குறிப்பு திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையில் வருகிறது.

கொங்கு நாட்டிற்குப் புதியதாகப் பட்டம் ஏற்ற விசயநகர அரசர் கொங்கு நாடு பற்றிய விபரங்கள் கேட்கிறார். இராமபத்திரன் கொங்குநாடு பற்றிய விபரம் கூறும்போது காணியுரிமை பெற்றுக் கொங்கு நாட்டில் நிலையாக வாழ்கின்ற மக்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

"முதலியார் முதலிய குடியிச்சைகள்"
கொங்கில் வாழ்வதாகக் கூறுகிறார்.

**(3) திருமுருகன் பூண்டிக் கிரைய சாசனம்**

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் இந்த ஓலைப்பட்டயம் உள்ளது. திருப்பூர் விசயபுரி வெங்கடாசலக் கவுண்டரிடம் செப்பேடும் உள்ளது. மதுரைச் சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிக் காலத்தில் அவிநாசிப் பகுதியில் வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர் அதிகாரம் செய்து வந்தார். அவர் பாலவேளாளரில் பயிசலிய கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவரால் மதுரை நாயக்கருக்கு உரிய வரியைச் செலுத்த முடியவில்லை. 24000 பொன் பாக்கி ஏற்பட்டு விட்டது. மூன்று நாட்களில் கட்டாவிட்டால் கைது செய்வதாக அரசன் அறிவித்தான்.

எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்துக் கொங்கு வேளாளர் தலைவர் பொய்ங்காக் கவுண்டர், மருதுறை ஆந்தை குலத்துச் செல்லப்ப கவுண்டர், கொற்றனூர் ஆந்தை குலத்துச் சரவணைக் கவுண்டர் ஆகிய மூவரும் வரிபாக்கிப் பணத்தைக் கொடுத்து வீர விக்கிரம சோழியாண்டாக் கவுண்டரைக் காப்பாற்றினர்.

தனக்குப் பணம் கொடுத்துக் காப்பாற்றிய மூவருக்கும் திருமுருகன் பூண்டி, அவிநாசிக் கோயில்களையும், திருமுருகன் பூண்டிக் கிராமத்தையும் வீரவிக்கிரம சோழியாண்டாக்கவுண்டர் கிரையம் செய்து கொடுத்தார். சுப்பிரமணியக் குருக்களும் உரிய குருவாக நியமனம் செய்யப்படுகிறார்.

இதைக் குறிக்கும் ஓலைப் பட்டயத்திலும், செப்பேட்டு நகலிலும் உள்ளூர்ப் பொதுமக்கள் அனைவரும் சாட்சிக் கையொப்பமிடுகின்றனர்.

"செங்குந்தரில் முருகநாத நாட்டாண்மைக்காரர், அவிநாசி நாட்டாண்மைக்காரர்" ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் திருமுருகன் பூண்டி, அவிநாசி தலத் தொடர்பான பெயர்களை வைத்துக் கொண்டுள்ளமை பாராட்டுதற்குரியது.

**(4) முகுந்தநல்லூர் பட்டயம்**

இந்த ஓலைப்பட்டயம் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது.

ஈரோட்டில் ஆளிதமகாராயர் ஆட்சி செய்யும் காலத்தில் கொங்கு வேளாளரில் பூந்துறை நாடு எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்துச் சோழியாண்டாக்கவுண்டர், தென்குறுப்பு நாட்டு ஊர்கள் சிலவற்றை கொங்கச் செட்டி காசிலிங்கம் செட்டியாரிடமிருந்து 1000 பூநாகரம்

கொடுத்து விலைக்கு வாங்கினார். முகுந்தனூர், நல்லூர், திருப்பூர், ஊத்தலூர், மண்ணறை ஆகிய 5 ஊர்கள் விலைக்கு வாங்கப்பட்டன. பலர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

"குறுப்புநாடு தென்முக வீரசோழபுர நாடு
படி பாலுக்குள்ள செங்குந்த கோத்திரம்
போக்கங்கூட்டம் சேதிராயப் புலவன்"

என்பவர் சிறப்பாகக் குறிக்கப் பெறுகிறார். அவர் வேளாளர் திருமணங்களில் பால் சாப்பிடும் உரிமையுடைய பரம்பரைப் புலவர் வழியில் வந்தவர்.

### (5) திருவாச்சிச் செப்பேடு

ஈரோடு வட்டம், பெருந்துறையை அடுத்துள்ள சின்னியம்பாளையம் சி.என்.வெள்ளியங்கிரி அவர்களிடம் இச் செப்பேடு உள்ளது.

மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் மாமன் மைத்துனன்மார்களாகிய பரஞ்சேர்வழி ஓதாள குலத்து குல்ல காளியப்ப கவுண்டரும், வெள்ளகோவில் ஆந்தை குலத்துச் சென்னிமலைக் கவுண்டரும் மேச்சல் பட்டிக்காக மேல்கரைப் பூந்துறை நாடு திருவாச்சிக்கு வந்தனர்.

இருவரும் கொங்கச் செட்டி வேலாயுதசெட்டி, பூவாணி வேட்டுவர் ஆகியோரிடமிருந்து 1500 பொன் கொடுத்துத் திருவாச்சிக் கிராமத்தை விலைக்கு வாங்கினர்.

இச்செப்பேட்டு வாசகத்தை எழுதியவர் "கெட்டி முதலியார்." செப்பேட்டைத் தயாரித்தவர் பல்லசித்த கொல்லன்.

### (6) கொங்குப் புலவர் பட்டயம்

கொங்கு நாட்டு முதுபெரும் புலவர் அமரர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுப்பிலும், தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையிலும், ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்திலும், ஈரோடு கொங்கு ஆய்வு மையத்திலும் இச் சுவடிகள் உள்ளன.

கொங்கு வேளாளர்கள் அனைவரும் மன்னர் தேவப்பராயரிடம் தங்களுக்குப் புலமை நிலைநாட்டுச் செய்ய வேண்டும் என்று முறையிட்டனர்.

தேவப்பராயர் பழைய ஆவணங்களைப் பார்த்து குலோத்துங்க சோழன் காலத்திலேயே வேளாளர்கட்குக் கம்பர் வாழிப் புலவர் நியமனம் செய்யப்பட்டனர் என்று கூறிக் கொங்கு 24 நாட்டுக்கும் புலவர்களை நியமனம் செய்தார்.

செங்குந்தர்கள், கம்பரின் கையேட்டுக்காரர், உவச்சன், பாலிடையன், தொழுவன், வேதியன், சேரகுல வேளாளர், மங்கலன், வணிகன், சோழியன், திருவம்படிக்காரன், பச்சைமலையாளன் ஆகியோர் புலவர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் பால் குடிக்கும் படிப் புலவர் என்று அழைக்கப்பட்டனர். பட்டன், புலவன், கூத்தாடி, பண்பாடி, தக்கைகொட்டி ஆகிய ஐவரும் ஐந்து படிக்காரர் எனப்பட்டனர். புலவர்கட்கு வர்த்தனைப் பணமும் பல சிறப்புக்களும் அளிக்கப்பட்டன.

அ) பூந்துறை நாடு, காங்கய நாடு, குறுப்பு நாடு இந்த மூன்று நாட்டுக்குச் செங்குந்த கோத்திரம் போக்கங்கூட்டம் நஞ்சராயப் புலவர்.

ஆ) தென்கரைநாடு, அண்ட நாடு, தென் பொங்கலூர் நாடு இந்த மூன்று நாட்டுக்கும் வணிகன் கொத்துக்கு வதள்க்கொத்து செங்குந்த கோத்திரம் ராசி கூட்டம் திருக்கை வேல்ப் புலவர், திருவாவினன்குடிப் புலவர், செல்லக்குமாரப் புலவர், மங்கலநாதப் பட்டன்.

இ) பொங்கலூர் நாடு, வாரக்க நாடு, ஆனைமலை நாடு இந்த மூன்று நாட்டுக்கும், செங்குந்த குலத்தில் செஞ்சி கூட்டத்தில் பிரமபட்டன், பூங்கோதிப்பட்டன்.

ஈ) ஆறு நாடு, நல்லுருக்கா நாடு இந்த இரண்டு நாட்டுக்கும் சவளன் கொத்துக்கு வதள்க்கொத்து செங்குந்தகோத்திரம் ஆறாங்கூட்டத்தில் செவளநாதபட்டன், ராசி கூட்டத்தில் ஆண்டிப் புலவர்.

உ) அரையநாடு, காஞ்சிக்கோயில் நாடு ஒடுவங்க நாடு, இந்த மூன்று நாட்டுக்கும் வேதியன் கொத்துக்கும், பச்சைமலையாளன் கொத்துக்கும் வதள்க் கொத்து செங்குந்த கோத்திரம் பூந்துறையான் கூட்டத்தில் கொள்ளலிங்கப் பட்டன், தீத்தாப் புலவர், சேஷப் பட்டன்.

ஊ) கிழங்கு நாடு, அரையநாடு, நரைய நாடு, எழுகரை நாடு இந்த நாலு நாட்டுக்கும் செங்குந்த கோத்திரம் சூரிய கூட்டத்தில் சாமிநாத பட்டன்.

எ) வடகரை நாட்டுக்கு செங்குந்த கோத்திரம் சூரிய கூட்டத்தில் சம்பைச் சாமிநாதன்.

ஏ) ராசிபுர நாட்டுக்கு செங்குந்த கோத்திரத்தில் ராசி கூட்டம் அமரிபட்டன், கெங்குப் புலவர்,

ஆகியோர் புலவர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் அவரவர்க்குள்ள கொத்து முறைமைப்படி வாழிச் சீருடனே படிபால் வருத்தனைப் பணம் வாங்கிக் கொண்டு நடந்துவந்தனர். இவர்கள் "கொங்குக் கைக்கோளர்" எனப்பட்டனர். படிபாலுக்குள்ள இக்கொங்குக்

கைக்கோளப் புலவர்களும், கொங்குச் செட்டிகளும், கொங்கு வேளாளரைப் போலவே கலியாணம் பண்ணுமிடத்தில் நாட்டார் கல்லுக்குக் கங்கணம் கட்டிக் குப்பாரி கொட்டும் சீரும், பெண்ணெடுக்கும் சீரும், வாழிச் சீரும், மங்கல வாழ்த்துடனே இப்படிச் சீரு முதலானது செய்துவர வேண்டுமென்று ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது.

கொங்கு 24 நாட்டாரும் கூடி இப்படி எழுதித் தந்தனர்.

**(7) குறுப்பு நாட்டுப் பட்டயம்**

இப்பட்டயம் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் ஓலைப்பட்டயமாகவும், செப்பேடாகவும் உள்ளது.

குறுப்பு நாட்டுக்குரிய புலவராக செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம் நஞ்சராயப் புலவரை நியமித்த விபரம் இப்பட்டயத்தில் கூறப்படுகிறது.

"இந்த முப்பத்திரண்டு கிராமத்தாரும் கூடி
செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம்
நஞ்சராயப் புலவனுக்கு எழுதிக் குடுத்த
எல்லைச் சதுர்மத்தியத்துக்குச் சாசனப்
பட்டயம்"

பலர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். 24 நாட்டுப் பட்டயத்திலும் இம்மரபினர் குறிக்கப்பட்டுள்ளனர். கம்பர் கையேட்டுக்காரர் செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம் நஞ்சராயப் புலவர், ராசி கூட்டத்தில் திருக்கைவேல்ப் புலவர், செல்லக் கொமாரப் புலவர் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

**(8) காங்கய நாட்டுப் பட்டயம்**

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் இப்பட்டயம் உள்ளது.

காங்கய நாட்டுக் கீரனூர்க் காணியாளர்கள் தங்களுக்கென்று புலவர்களை நியமித்துக் கொண்டதை இப்பட்டயம் கூறுகிறது.

"குருப்பை நாட்டில் பால் சாப்பிடும் செங்குந்தர்குலப் புலவரில்
பழனிமலைப்புலவன் மகன் சென்னிமலைப் புலவனை
நாங்களனைவரும் சேர்ந்து காங்கயநாடு கீரனூரு
கிராமத்துக்கு ஆதிகனாகவும், ராசபடி பால் வருத்தினையும்
வாங்கும்படி புலமை நிலைநாட்டுச் செய்து இருக்கிறோம்."

### (9) பொன்னிவாடிப் பட்டயம்

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் இப்பட்டயம் உள்ளது.

தாராபுரம் கோட்டையில் கொங்கு வேளாளரில் செகங் கூட்டத்தார் கூடித் தங்களுக்கு செங்குந்த கோத்திரம் ராசி கூட்டம் திருக்கைவேல்ப் புலவரைக் காணி உரிமை உடைய புலவராக நியமனம் செய்து அவருக்குப் பட்டயம் எழுதிக் கொடுத்துக் கொடுக்கவேண்டிய வரியையும் நிர்ணயம் செய்ததை இப்பட்டயம் கூறுகிறது.

"கொங்கு தாராபுரம் கெடியில் சேந்த தென்கரைநாடு
செங்குந்த கோத்திரம் ராசி கூட்டம் துர்க்கவியாழன்
திருக்கைவேல்ப்புலவனுக்கு மணக்கடவூர் செக குலன்
முப்பேரு பெற்ற கந்தன் தயிலி காட்டம்மை முன்பாகக்
கலியாணத்துக்கு படிபால் அவுசேக வர்த்தினை அரைக்கழஞ்சு
மாடைப் பணம் வெண்ணைநல்லூருச் சடையன் உண்டுபண்ணி
வச்சது.

தென் பொங்கலூர் நாடு சித்தாறு மணக்கடவூருச்
செகுலன் தயிலியணன், கொங்கூரு வெண்டுவன் நல்லமோறு,
பொன்னிவாடிச் செவ்வாய்குலன் வீரணன், நல்லியணன்,
மாரணன், குள்ளராசன் இவர்களெல்லோரும் கூடிச் சம்மதித்து
செங்குந்தரில் திருக்கைவேல் புலவனுக்கு எழுதிக்குடுத்த சாதினப்
பட்டய விபரம்.

கலியாணப்படி அரைக்கழஞ்சு மாடைப் பணம் வர்த்தனையும்,
ஏரு வர்த்தனை கட்டின ஏருக்கு நாலு வள்ளத் தவசமும்
குடுத்துக் கொண்டு வரவும், சந்திராதித்தர் உள்ளவரை
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதம் உண்டாள்வீர்"

என அப்பட்டயத்தில் எழுதப்பட்டுள்ளது.

### (10) சென்னிமலைப் புலவர் பட்டயம்

இப்பட்டயம் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையில் உள்ளது.

குறுப்பு நாடு தென்முகம் நல்லூர், திருப்பூர், அமுக்கயம், முதலிபாளையம், கங்கை நாய்க்கன்பாளையம் கிராமத்தார் அனைவரும் ஒன்றாகக்கூடிச் செங்குந்தரில் சென்னிமலைப் புலவர் என்பவரைப் பரம்பரைப் புலவராக நியமனம் செய்ததை இப்பட்டயம் கூறுகிறது.

"இந்தத் தாஸ்தாவதியில் எழுதியிருக்கிற பிரகாரம்
சென்னிமலைப் புலவனுக்கு படிபால் வருத்தனைப் பணமும்,
நாழிக்கம்பும் இதுவெல்லாம் நடப்பிவைத்துக் குடுக்க வேண்டியது.
இதுக்கு விகாதம் பண்ணிக் குடாத பேருகள் கங்கைக் கரையிலே
காராம்பசுவைக் கொண்ண தோஷத்திலே போவார்கள்"

இவர் வழியினர் செங்குந்த கோத்திரம் என்பது முன் பட்டயத்தால் பெறப்பட்டது.

**(11) கொடுமணல் பட்டயம்**

இப்பட்டயம் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையில் உள்ளது.

குறுப்பு நாட்டில் கொங்கு வேளாளர்கட்கும், படைத்தலைக் கவுண்டர்களுக்கும் ஒரே புலவர் இருந்தார். கொங்கு வேளாளர்கள் இது கூடாது என்று கருதித் தங்களுக்குத் தனியாகப் புலவரை நியமித்துக் கொண்டதை இப்பட்டயம் கூறுகிறது. சென்னிமலைப் புலவர் அவ்வாறு நியமிக்கப்படுகிறார். இவர் செங்குந்த மரபினர்.

"சுள்ளிப்பாளையம் சேனாபதிப் புலவனை நீக்கல்
செய்து வைத்து குருப்பு நாடு தென்முகம் பாதிப் பங்குக்
குள்ள கொடுமணலிலிருக்கும் பழனிப் புலவன் மகன் சென்னிமலைப்
புலவனைத் தென்திசை வேளாளருக்கு மாமூலுக்குப் படிபால்
வருத்தனைக்குள்ள தெல்லாம் நம்ம சென்னிமலைப் புலவனென்று
இந்த குருப்பு நாடு நகர் முப்பத்திரண்டு கிராமத்துக்கும் தென்திசை
வேளாளரனைவருக்கும் இவனே புலவனென்று நேமித்திருக்கிறோம்."

என்று பட்டயத்தில் காணப்படுகிறது.

***(12) காலிங்கராயர் அணைப்பட்டயம்***

இப்பட்டயத்தின் முற்பகுதி அமரர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுப்பிலும், பிற்பகுதி தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையிலும் உள்ளது.

காலிங்கராயனுடைய வாரிசு ஆன எண்ணமங்கலம் காளியண்ண-னுக்குப் பல்வேறு கொங்கு மக்கள் கொடுக்க வேண்டிய வரிகள் இப்பட்டயத்தில் சுட்டிக் கூறப்படுகிறது.

"செங்குந்தை கோத்திரத்தில் கைக்கோளனார்,
தேவாங்கு இவர்கள் மக்கத்துக்கு
வருஷத்திற்கு ஒரு பணமும் குடுத்து வரவும்"

இதில் ஆர் விகுதி சேர்த்தியிருப்பது சிறப்புக்குரியது.

**(13) பருத்திப் பள்ளிச் செப்பேடு**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப் பள்ளியை அடுத்த கூத்தாநல்லூரில் உள்ள கருப்பநாயக்கர் அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது.

பருத்திப் பள்ளியில் கொங்கு வேளாளரில் செல்ல குலத்தார் ஒன்றாகக் கூடிப் பருத்திப் பள்ளி வேளாளர் கூத்தாடிகளில் கந்த பட்டன் மகள் அத்திப் பெண்ணைச் செல்லகுல மாணிக்கியாக நிர்ணயம் செய்தனர். இதற்கு எல்லாச் சமூகத்தினரும் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். பல சமூகத்தார் பெயர்களைத் தொகுத்துக் கூறும்போது "முதலி" என்ற பெயரும் காணப்படுகிறது.

**(14) பூந்துறை நாட்டார் மேலோலை**

இப்பட்டயம் சென்னை அடையாற்றில் உள்ள உ.வே.சாமிநாதய்யர் நூலகத்தில் உள்ளது.

மதுரை முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கொங்கு தாராபுரம் சீமையில் காங்கய நாட்டுப் பழைய கோட்டைப் பட்டக்காரர் சீமையான காரையூருக்கும், மேல்கரைப் பூந்துறை நாட்டு அறச்சலூருக்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டு அதனால் விளைந்த சண்டையில் இருதரப்பிலும் பலர் இறந்தனர்.

நாயக்கர் அரசு அதிகாரிகள் எல்லைத் தகராறைத் தீர்த்தனர். 1617 ஆம் ஆண்டு இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

அப்போது "தாராபுரம் சீர்மைக்குக் கர்த்தராய்
வந்த அரமனை மனுஷர் திம்மப்ப முதலியார்"

இவ்வழக்கைத் தீர்த்து வைத்தார்.

"திம்மப்ப முதலியார் அவர்களும் இருபத்து நாலு நாட்டாரும்
குதிரையிலிறங்கி திம்மப்ப முதலியார் அவர்கள் ஆனையின்பேரிலே
ஏறிக்கொண்டு நாடனைவரும் குதிரையின்பேரிலே ஏறிக்கொண்டு
நடந்து கல் போட்டுக் குடுத்தது"

என்று பட்டயம் கூறுகிறது.

பழங்காலத்தில் பெண் யானைமீது ஏறிக்கொண்டு நடந்து எல்லை நிர்ணயம் செய்வது பழக்கம். கரிவலம் வந்த நல்லூர் என்று தென்பாண்டி நாட்டில் ஊர் ஒன்று உள்ளது. நாகைப் பௌத்தப் பள்ளிக்கு இராசராசன் விட்ட "ஆனைமங்கலம்" என்னும் ஊரும் இவ்வாறே அளக்கப்பட்டதாகச்

சோழர் செப்பேடு கூறுகிறது. நாயக்கர் காலத்தில் திம்மப்ப முதலியார் பெரிய அதிகாரியாகத் தாராபுரத்தில் இருந்துள்ளார்.

### (15) வேலூர்ச் செப்பேடு

நாமக்கல் மாவட்டம், வேலூர் கல்லூரிப் பேராசிரியர் பாரதி அவர்கள் மூலம் இச்செப்பேட்டின் நகல் கிடைத்தது. மிகச் சிறந்த புடைப்புச் சிற்பங்களுடன் உள்ள செப்பேடு, இது கிருஷ்ணதேவராயர் காலத்தது (கி.பி. 1512).

கொங்கு மண்டலத்து எழுகரை நாட்டு முதலிகள் வாழவந்தி நாட்டில் நரலோக சித்தர் மகன் சித்தன் சிற்றம்பலவனுக்கு "அயலானை வென்ற நட்டுக்கட்டுவான்" என்ற பட்டம் கட்டிக் கொடையும் அளித்தனர். சித்தருக்குப் பல சிறப்புக்கள் அளித்து இடங்கை 98 சாதியாரும் கொடுக்க வேண்டிய வரியையும் நிர்ணயம் செய்துள்ளனர்.

"எழுகரை நாட்டு முதலியாரும் வாழவந்தி நாட்டில்
வாழவந்தியில் நரலோக சித்தர் மகன் சிற்றம்பலவனை
அயலானை வென்ற நட்டுக்கட்டுவான் என்று பட்டமுங்
கட்டி சமையமும் கொடுத்தப்படி

குஞ்சி காளாஞ்சியும் தண்டிகையும்
சேறமுது கொடுத்து ஏறப்பாவாடையும் இறங்கப்
பாவாடையும் விடுதி மேற்கட்டியும் கொறத்திக்
கலியாணப்படியும் கட்டிக் கொடுத்து இந்த வரிசைப்படி
எல்லாம் கட்டளையிட்டோம். இந்தச் சமையப்படிக்கு
அன்பத்தாறு தேசத்தில் முதலிகளும், யிடங்கை தொண்ணூற்
றெட்டுச் சாதியும் பேரூர்க்கு அஞ்சு பணமும் சிற்றூர்க்கு
இரண்டு பணமும் ஆடினால் குடிப்பணமும் ஆடாதிருக்கில்
படிப்பணமும் யிந்தச் சமையப்படிக்கு நடத்திக் கொடுக்கக்
கடவதாகவும்"

இதில் "வெள்ளோட்டு முதலியள்" கையெழுத்திட்டுள்ளனர்.

### (16) மல்லிகுந்தம் செப்பேடு

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மல்லிகுந்தம் இராமகவுண்டர் என்பாரிடம் இச் செப்பேடு உள்ளது. (இச்செப்பேட்டின் வேறுவடிவம் இத்தொகுப்பில் உள்ள இடங்கைச் செங்குந்தர் செப்பேடு ஆகும்)

காஞ்சிபுரம் காமாட்சியம்மனுக்கு 13.5.1708 அன்று இடங்கையரான செங்குந்தர், வன்னியர், ஆசாரியர், நகரத்தார், தேவேந்திரப்பள்ளர் ஆகியோர் தேரோட்டம் நடத்தினர். வைணவரில் வலங்கைப் பிரிவைச்

சேர்ந்த சேணிய சிம்மப்புலி தேரை ஓடாமல் நிறுத்திவிட்டான்.

இடங்கைப் பிரிவினர் கொச்சி சென்று இடங்கை சிம்ம அனுமனை அழைத்துக் கொண்டு வந்து தேரோட்டம் நடத்தும்போது நரபலி கொடுத்தால் தேர் ஓடும் என்கிறான். யாரும் நரபலி கொடுக்க முன் வராதபோது சிம்ம அனுமன் தன் மனைவி ஆவல் தீத்தம்மாளைப் பலி கொடுத்துத் தேரைத் தன்னுடைய மூக்கினாலேயே இழுத்தான்.

இடங்கைப் பிரிவினர் அனைவரும் சிம்ம அனுமனுக்குத் கொடைபல கொடுக்கின்றனர். சிம்ம அனுமனை சாதிப்பிள்ளையாக்கிச் செப்பேடும் எழுதித் தந்தனர். "செங்குந்தியார் மஞ்சப்பாவாடையுடையவர்" தலைக்கட்டுக்கு முக்குறுணி அரிசி சிம்ம அனுமனுக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர். கலியாணத்தின் போதும் வரி கொடுப்பதாகக் கூறினர்.

### (18) நாரணபுரம் செப்பேடு

மத்திய அரசு தொல்லியல் துறை மூலம் இச்செப்பேடு கிடைத்தது.

வாரக்க நாட்டுப் பல்லடம் கஸ்பா நாரணபுரம் அங்காள பரமேசுவரிக்கு அளிக்கப்பட்ட கொடை பற்றி இச்செப்பேடு கூறுகிறது. 26.9.1800 அன்று இச் செப்பேடு எழுதப்பட்டது. குப்பபூசாரி மகன் சித்த பூசாரி என்பவர் கோயில் பூசாரியாக நியமிக்கப்பட்ட விபரம் கூறப்பட்டுள்ளது. கொங்கு நாட்டுக் குடி மக்கள் பலர் கையொப்பமிட்டுள்ளனர்.

"சமய முதலிப் பட்டக்காரத் தேவண முதலி"

என்பவர் கையெழுத்திட்டுள்ளார்.

### (19) அலைவாய்மலைப் பட்டயம்

நீதிமன்றத்தில் உள்ள இச்செப்பேட்டின் நகல் அளித்தவர் நாமகிரிப்பேட்டை புலவர் வெ.இரா. துரைசாமி அவர்கள்.

பல சமூகத்தினர் அத்தனூர் அம்மன் கோயிலில் பெரிய மாநாடாகக் கூடி அலைவாய்கிரி சுப்பிரமணியர்க்கு அளித்த கொடை பற்றிக் கூறப்படுகிறது. 27.3.1787 அன்று இச்செப்பேடு எழுதப்பட்டுள்ளது.

பலருடைய முன்னிலையில் இக்கொடை அளிக்கப்பட்டது. பலர் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. கொங்கு நாட்டுச் செங்குந்தகுலப் பெருமக்கள் பலர் கையொப்பமிட்டுள்ளனர்.

"சேலம் நாட்டுக்குச் சேர்ந்த தெட்சிணத்திலிருக்கும் அலையாகிரி பருவதத்தில் சுப்பிரமணிய சுவாமியாருக்கு திருவிழாப் படிக்கு..... கொமரசாமிப்பட்டி கணக்கு சுப்பிரமணிய முதலி, புதூர் கணக்கு ராமனாத முதலி, பாலப்பட்டி கணக்கு கொமரசாமி முதலி,

அம்மாப்பேட்டை கணக்கு வீரப்ப முதலியார், அண்ணதாரிப்பட்டி கணக்கு முத்தைய முதலி, வேலப்பம்பட்டி கணக்கு வினைதீத்தாமுதலி, ஓபளி ஆட்டையாம்பட்டி கணக்கு வெங்கடாசல முதலி, வீரபாண்டி கணக்கு உத்தண்டி முதலியார், கொமராபாளையம் கைக்கோள எழுகரை நாட்டுப் பட்டக்கார முதலி, கோரநத்தம் சிவசங்கர முதலியார், அலவாய்ப்பட்டி தயிலா முதலி, அக்கரைப்பட்டி பெருமா முதலி, சென்னகிரி கணக்கு பழனியப்ப முதலியார், வேம்படிதாளம் கணக்கு கணபதி முதலி, தயிலா முதலி, இளம்பிள்ளை கணக்கு அருணகிரி முதலியார், மல்லூரு சுங்கம் கயிலாச முதலி, மேல்மாகாணம் கணக்கு நாகப்ப முதலியார், முடிதுறை பிரமிச்ச முதலியார், கருக்கல்வாடி கொமறசாமி முதலி, குட்டை கணக்கு சுப்பிரமணிய முதலியார், தாத்தக்காரப்பட்டி சுங்கம் சாமிநாத முதலி, சிங்கிபுரம் கணக்கு குட்டியப்ப முதலி, வாழப்பாடி கணக்கு நயினா முதலி, அனுப்புரம் கணக்கு முத்து முதலியார், குறிச்சி கணக்கு சிவகுருநாத முதலி, பனமடல் கணக்கு கற்பக முதலியார், கம்மாளப்பட்டி சாமிநாத முதலி கணக்கு சுப்பைய முதலியார்."

செங்குந்த முதலியார்கள் பலர் கணக்கு அதிகாரிகளாகவும், சுங்கம் வசூலிக்கும் அலுவலர்களாகவும் இருந்துள்ளனர்.

# 13. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையில் செங்குந்தர்

கொடிமாடச் செங்குன்றூராகிய திருச்செங்கோடு கொங்கேழு தலங்களில் ஒன்று. திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட திருத்தலம்.

திருச்செங்கோடு கொங்குச் சமுதாயம் அனைத்திற்கும் பொதுவான திருத்தலம். "செங்கோடு" என்று சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்படுவது.

அத்திருத்தலத்திற்குப் பல்வேறு மன்னர்களும், பாளையக்காரர்களும், அரசு அலுவலர்களும், பல்வேறு சமூகத்தினரும் செய்த பல்வேறு திருப்பணிகளைப் பாடல் வடிவில் கூறுவது "திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை." இதைப் பாடத் தொடங்கியவர் "எழுகரைநாட்டு நம்பி" சதாசிவ பண்டிதர் என்பவர். செங்குந்தர் பலர் திருப்பணிசெய்துள்ளனர்.

இத்திருப்பணி மாலையில்

1. காளத்தியப்ப முதலியார்
2. வீரராகவ முதலியார்
3. நாயகத்தா முதலியார்
4. இராக்கியப்ப முதலியார்
5. மாவைக்குமாரசாமி முதலியார்
6. சின்னான் முதலியார்
7. செங்குந்தர் குலப் பெரியாள்
8. பலர் திருப்பணி
9. கருப்பண முதலியார்

ஆகியோர் செய்த திருப்பணிகள் கூறப்பட்டுள்ளன. முதலியார் சமூகத்தினர் வேறு பலரும் திருப்பணிகள் செய்துள்ளனர். அவைகளும் கூறப்பட்டுள்ளன. வீரராகவ முதலியார் இந்நூலாசிரியர் சதாசிவ பண்டிதரை ஆதரித்துள்ளார். எனவே இந்நூல் பாடுவதற்கு அவர் காரணமாகவும் இருந்திருக்கக்கூடும்.

செங்குந்தருக்கு வாழ்த்துக்கூறி இந்நூல் தொடங்குகிறது.

**செங்குந்தர்கட்கு வாழ்த்து**

திருவாழ்க கலைவாழ்க கௌரி வாழ்க
தினம்தினமும் மண்மடந்தை சிறந்து வாழ்க
குருவாழ்க பணிமலையும் குகனும் வாழ்க
கோதைஉமை பாகர்திருக் கோயில் வாழ்க

தருவாழ்க அரசர்கர ணிக்கர் வாழ்க
தானமுடன் குரவோரும் தழைத்து வாழ்க
மருவாரும் அகம்படிமைத் தளியி லாரும்
வாய்த்தசெங் குந்தருமே வாழ்க வாழ்க.

இலக்குமி, கலைமகள், பார்வதி, பூமாதேவி, குரு, பணிமலைக்காவலர், முருகன், அர்த்தநாரீசர், தருக்கள், அரசர், கணக்கர் சமயகுரவர், கோயில் பணியாளர்கள், செங்குந்தர் ஆகியோர் வாழ்க என்று இப்பாடல் கூறுகிறது.

திருச்செங்கோட்டுத் திருப்பணியிலும், விழாக்களிலும், வழிபாட்டிலும் செங்குந்தர் முதன்மையாளர்களாக விளங்கியதால் சிறப்புடைப் பொருளைப் பிறபடக் கிளத்தல் என்ற விதிப்படி செங்குந்தர்கட்கு இறுதியில் சிறப்பாக வாழ்த்துக் கூறுப்பட்டது.

**1) காளத்தியப்ப முதலியார்**

(அ) செயமுதல் விகாரி அந்தம் தமிழ்தெரி கிருட்ண பூபன்
இயல்புள காள கத்திக்கு ஈந்திட வந்த மன்னன்
பயனுறும் கொங்கு நாடு படைத்தரசு ஆளும் நாளில்
வயல்நிறை கோதை யார்க்கு மகாபடித் தரங்கள் ஈந்தான்.

மதுரை நாயக்கமன்னன் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595-1601) செய வருடம் முதல் விகாரி வருடம் வரை (1595-1600) கொங்கு நாட்டுக்குக் காளத்தியப்ப முதலியாரை அதிகாரியாக நியமித்தார். காளத்தியப்ப முதலியார் தம் அதிகார காலத்தில் திருச்செங்கோட்டுக் கோயிலுக்குப் படித்தரம் அதிக அளவில் கொடுத்தார்.

(ஆ) அந்தணர் பரவும் கோதை அர்த்தநா ரீசர் தம்மை
வந்தனை செய்து பட்டு வத்திரம் அனேகம் ஈந்து
கொந்தணி தூப நல்ல கோவினெய் தீபம் கந்தச்
சந்தனம் கதம்பம் எல்லாம் சாத்தினன் காள கத்தி.

காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரரை வணங்கிப் பட்டு வஸ்திரங்கள் பலவற்றைக் கொடையாக அளித்தார். தூபப் பொருள்கள், பசு நெய்த் தீபம், மணமிக்க சந்தனம், கதம்பம் ஆகியவற்றைக் கொடையாக அளித்தார்.

(இ) அரவா மலைக்கே காள கத்திபூ பதிஅன் பாகத்
திருவிழா அதிக பூசை திருப்பணி அநேக தானம்
பரிவுடன் நடத்தித் தானும் பரிசனத் தவர்க்கே இன்பம்
மருவினன் நூறு பொன்னும் வழங்கினன் தானி கர்க்கே.

காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோட்டில் திருவிழாவைச் சிறப்பாகச் செய்தார். பூசைகள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்தார். வேண்டிய திருப்பணிகள் செய்தார். பல கொடைகளை அளித்தார். கோயில் பரிவாரத்தார் பலரும் அதனால் இன்பம் அடைந்தனர். கோயிலின் பரம்பரைப் பூசை உரிமையாளர்கட்கு நூறு பொன்னைத் தானமாக அளித்தார்.

(ஈ) பெரும்பரி தாபி ஆதி பிங்கள வருடம் மட்டும்
திரம்பெறு முத்து வீரன் சிறந்தளித் திடவே செங்கோல்
அரும்பொருள் உணர்கா ளத்தி அகிலமென் கொங்கு நாடு
புரந்தனன் கோதை ஈசர் பூசனை மிகவும் செய்தான்.

மதுரை நாயக்க மன்னன் முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் (1609-1623) கொங்கு நாட்டு அலுவலராக மீண்டும் நியமிக்கப்பட்ட காளத்தியப்ப முதலியார் (1612-1618) திருச்செங்கோட்டிற்குப் பூசைகள் தொடர்ந்து நடைபெறப் பல ஏற்பாடுகளைச் செய்தார்.

(உ) வாசவன் முத்து வீரன் மந்திரி நயினான் பாலன்
தேசமென் காள கத்தி தென்கயி லாய ணார்க்குத்
தூசுடன் மாலை தீப தூபமோ டங்க ரங்க
பூசனை புரிந்து தெப்பம் பொருந்திய விழாவும் செய்தான்.

முத்துவீரப்ப நாயக்கரின் அமைச்சரான நயினா முதலியார் மகன் காளத்தியப்ப முதலியார் தென்கயிலாய ஈசுவரனுக்கு உயர் ஆடைகளும், மாலை, தீபம், தூபம், அங்கரங்க பூசை ஆகியவைகளைச் செய்து தெப்ப உற்சவத்தையும் நடத்தினார்.

(ஊ) திருக்குளம் நந்த வானம் திகழொரு தென்னந் தோப்பு
கருக்குள பனையும் உச்சிக் கட்டளை வேலன் பள்ளி
மருக்கொளு முடிசேர் கோதை வள்ளலுக்கு அளித்தான் ஏனோர்
வெருக்கொளப் பொருகா ளத்தி விண்ணவர்க்கு இறையொப்பு
ஆனான்.

காளத்தியப்ப முதலியார் திருச்செங்கோட்டில் வேலவர்க்கு திருக்குளம், நந்தவனம், தென்னந்தோப்பு, பனந்தோப்பு, உச்சிக்கட்டளை ஆகியவற்றை அளித்தார்.

(எ) தவமிகு சகாத்தமோ ராயிரத் தைஞ்ஞூறு
தன்னுடன்முப் பத்தொன்றினில்
சாதார ணத்தில்வரு சித்திரையில் ஏரகம்
தன்னில்வரு ணன்திசையினில்

சிவனுமை யிடத்தரனும் குகனும்மகிழ்வு எய்தியே
தெப்பரத மேறியிருபத்
திருநாள் நடத்தவும் தேவர்களி கூரவும்
சேவைமா னிடர்காணவும்

நவரசம் எனப்பலரும் நுகரமறை யவர்தினம்
நானபா னம்செய்யவும்
நாதர்கயி லாயருக்கு அழகுதிரு மஞ்சனம்
நடக்கநன் னாள்முழுகவும்

புவனமனு நீதிபுனை முத்துவீ ரன்தனது
புண்ணியம தாகியுதகப்
புனல்வாவி கண்டனன் கீர்த்திபுனை காளத்தி
பூபாலன் நன்மைபெறவே.

காளத்தியப்ப முதலியார் 1610 ஆம் ஆண்டு (சாலிவாகன சகாப்தம் 1531 சாதாரண வருடம் சித்திரை மாதம்) திருச்செங்கோட்டில் மேற்குப்பக்கம் சிவபெருமான், உமாதேவி, முருகன் ஆகியோர் தெப்பரதம் ஏறி 22 நாட்கள் விழா நடைபெறச் செய்தார். தேவர்கள் மகிழ, மானிடர் காண, புதுமை எனப் பலரும் பாராட்ட, இறைவன் திருமஞ்சன நீராட, நன்னாளில் முழுக்காட்டவும் அரசன் பெயரில் அவர் புண்ணியமாக ஒரு திருக்குளத்தை உருவாக்கினார்.

(ஏ) கண்டான் திருக்குளத்தைக் காளகத்தி கோதையிலே
வண்டாக சோலை மதுரேசன் - கொண்டாடும்
கீர்த்திமுத்து வீரன்எனும் கேள்விபரன் நானிலமும்
காத்தகர்த்தன் புண்ணியமா க.

காளத்தியப்ப முதலியார் அரசன் முத்து வீரப்ப நாயக்கள் அவர்களுடைய புண்ணியமாகத் திருச்செங்கோட்டில் திருக்குளத்தை ஏற்படுத்தினார்.

**2) வீரராகவ முதலியார்**

(அ) விற்பன விகாரி ஆண்டில் வீரரா கவபூ பாலன்
பற்பலர் உபயம் பாதி பாதிதன் உபயம் ஆகச்
சற்பமா மலைமீது ஏறத் தான்படி கட்டி வைத்துச்
சிற்பரன் தனக்கு நாலாந் திருவிழா நடத்தி னானே.

வீரராகவ முதலியார் விகாரி ஆண்டு (1599-1600) பலர் உபயமாகப் பாதியும், தம்முடைய உபயமாகப் பாதியும் ஆகத் திருச்செங்கோட்டு மலையில் படிகளை அமைத்தார். திருச்செங்கோட்டு விழாவில் நான்காம் திருநாள் விழாவைச் சிறப்பாக நடத்தினார்.

(ஆ) தண்டமிழ் முத்து வீரன் தனதுஎனக் கோதை யார்க்கு
விண்டலத்து இறைஒப் பான வீரரா கவபூ பாலன்
புண்டரீ கம்சேர் மேலைப் பூந்துறை நாட்டு ரேகை
உண்டுஎன அளித்தான் பண்ணைக்கு ஒருபணம் பயலாள் பாதி.

வீரராகவ முதலியார் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் உள்ள திருச்செங்கோட்டிற்கு மேல்கரைப் பூந்துறை நாட்டிலும் கொடை அளிக்கக் கட்டளையிட்டார். பண்ணை வைத்திருப்போர் ஒரு பணமும், பண்ணை இல்லாமல் உழைப்போர் அரைப்பணமும் அளிக்கக் கட்டளையிட்டார்.

(இ) பைந்தமிழ்த் தொண்டை நாடன் பகீரதி குலத்து வேந்தன்
விந்தைசேர் பரசு ராமன் வீரரா கவபூ பாலன்
எந்தையார் கோதை வாழும் ஈசர்சன் னிதிய தன்னில்
சந்ததம் இரண்டு சாதம் சதாசிவ குரவற்கு ஈந்தான்.

வீரராகவ முதலியார் திருச்செங்கோடு கோயிலில் பூசையின்போது சதாசிவ குரவர்க்கு இரண்டு பங்கு சாதம் அளிக்க ஏற்பாடு செய்தார்.

இச் சதாசிவ குரவர் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை பாடிய ஆசிரியர் ஆவார். வீரராகவ முதலியார் காலத்தில் இந்நூல் பாடத் தொடங்கியிருக்க வேண்டும்.

**3) நாயகத்தா முதலியார்**

நன்னிலம் மதிக்கவரு திருமலை நரேந்திரன்
நல்லவிப வருடத்திலே
நாடுபுக ழேந்தியாப் பிள்ளைக்கு அளிக்கவே
நாயகத் தாமுதலியார்

தென்னுலவு துருகம் புரக்குநா ளில்கருணை
சேர்அரவ கிரிஈசரைச்
செங்கைவடி வேலரைக் கண்டுவிர தத்துடன்
தினமண்ட லம்தொழுதனன்

மன்னுகிரி மிசைதாண்ட வக்குறடு செய்தனன்
வாணருக்கு அன்பீந்தனன்
மாறாமல் உறுமுயல கன்பிணி தொலைத்தனன்
மலடிசிலை மீதுதினமும்

தன்னுபய மாகஒரு தீபமும் நடத்தினன்
சந்நிதி சிறப்பித்தனன்
தனதுடைய வர்க்குஅதிக பலனும்உண் டாக்கினன்
சந்ததி யுடன்வாழ்கவே.

மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1623-1659) விபவருடம் (1628-29) நாயகத்தா முதலியார் சங்ககிரிக் கோட்டையில் அலுவலராக விளங்கினார். திருச்செங்கோடு அர்த்தநாரீசரையும், வேலவரையும் கண்டு நாள்தோறும் வலம் வந்து வழிபட்டார். மலையில் "தாண்டவக் குறடு" கட்டினார். தொழிலாளர்கட்கு அன்புடன் கொடை அளித்தார். முயலகன் பிணியை நீக்கினார். வரடி கல் மீது நாள்தோறும் ஒரு திருவிளக்குத் தன்கொடையாக வைக்க ஏற்பாடு செய்தார். சந்நிதிகள் சிறக்கச் செய்தார். அரசருக்கு நற்பலன் விளையுமாறு செய்தார்.

**4) இராக்கியப்ப முதலியார்**

(அ) தயவொடு இராக்க பூபன் தன்னிட அரசர்க்கு ஓதி
இயல்புடன் அர்த்த நாரி ஈசுரர்க்கு அதிக பூசை
பயனுற நடத்தி மேன்மேல் பாக்கியம் பெற்று வாழ்ந்தான்
மயல்புனை இரதி காந்தன் வடிவுள மன்னன் தானே.

இராக்கியப்ப முதலியார் தன் அரசரிடம் கூறி அவர் ஆதரவுடன் அர்த்தநாரீசுவரர் கோயிலில் பூசைகள் நடத்திடச் சிறந்த பல ஏற்பாடுகளைச் செய்தார்.

(ஆ) சீராரும் கோதை உமைபாகர் பூசைத் திருப்பணியும்
ஊரான தும்தலம் உண்டா னதும்அற வோர்மடமும்
பேரார் பரமன் திருநாளும் மேலும் பெருமைகளும்
காராளன் தென்புலி யூர்ராக்க பூபதி காலத்திலே.

இராக்கியப்ப முதலியார் அர்த்தநாரீசர் பூசை செய்து ஊரில் புண்ணியத் தலங்களில் மடம் ஆகியவைகளை ஏற்படுத்தினார்.

**5) மாவைக் குமாரசாமி முதலியார்**

(அ) நன்மைபெறு கலியுக சகாத்தம்ஆ யிரமிசை
நடக்கும்ஐஞ் ஞூற்றினுடனே
நலமான தொண்ணூ ற்றோடு ஒன்றுகீ லகம்மகர
நாள்இருப துடன்ஆறினில்

தென்மருவு திரவார மும்சதய மும்பெற்ற
திரிதிகைபரி யாயோகமும்
சீரான வாலமும் இடபலக் கினமுமாம்
சிறந்ததொரு மேனாளினில்

மன்முறைமை புரிவளவன் மாவைஆட் கொண்டவன்
மகிழ்குமா ரச்சுவாமி
வளர்அரவ கிரிமேலை வாய்தல்வட பாரிசம்
வருவிசுவ நாதர்தமையும்

இம்மையில் வரம்தரு விசாலாட்சி யும்பலியும்
இனியகண பதிநந்தியும்
இயைபினொடு பிரதிட்டை செய்தனன் பிறைஆ
யிரம்தொழுது மிகவாழ்கவே.

சாலிவாகன சகாப்தம் 1591 கீலக ஆண்டு தை மாதம் 26-ஆம் நாள் சனிக்கிழமையாகிய 23.01.1669 அன்று சோழநாட்டு மாவை ஆட்கொண்டான் மகன் குமாரசுவாமி முதலியார் என்பவர் திருச்செங்கோட்டு மலையில் மேற்குவாயில் வடபுறம் அமைந்துள்ள விசுவநாதர், விசாலாட்சி, பலிபீடம், கணபதி, நந்தி ஆகியவற்றை எழுந்தருளச் செய்தார்.

(ஆ) கீலகம் தைஇரு பத்தாறின் மந்தன் கிழமைஅன்று
மேலக வாய்தல் வடஅரு கேவிசு வேசுவரரை
மாலகம் செய்துஅருச் சித்தான் அரவ மலைமிசைபூ
பாலகன் மாவைக் குமாரச் சுவாமி பலன்பெறவே.

மாவைக் குமாரசுவாமி கீலக ஆண்டு தை மாதம் 26-ஆம் தேதி சனிக்கிழமை 23.01.1669 அன்று மேலை வாயில் அருகில் வடபுறம் விசுவநாதரை எழுந்தருளச் செய்து அருச்சனை செய்தார்.

(இ) பணிமலையில் வேலர்உமை பாகர்விசு வேசுரர்
படித்தரம் நடந்துவரவே
பரிவினொடு வெண்கலக் கிணறுநாற் பாங்கெல்லை
படியாதி பொத்தனூரும்

மணிகுலவு குண்டுக்கல் மகமையெழு கரைநாட்டு
மகமைமேல் கரைமகமையும்
வாங்கல்நிலம் ஆறுமா வும்பட்ட யந்தனை
வரைந்துகல் வெட்டும்எழுதி

அணிதவசு நித்தீச னுக்குதனி வதுவையுடன்
ஆச்சார்ய அபிடேகமும்
அரவகிரி தனிலோது வார்சம்ப ளக்கொல்லை
அனதான மடதருமமும்

**கணிதிரம தானபர தேசிமுத் திரையின்அதி**
**காரமொடு தாபித்தனன்**
**காரணிக மாவைக் குமாரசா மித்துரைக்**
**காராளர் குலதீபமே.**

குலத்தின் தீபம் எனத் தோன்றிய மாவைக் குமாரசாமி முதலியார் திருச்செங்கோட்டில் செங்கோட்டு வேலர், அர்த்தநாரீசர், விசுவநாதர் படித்தரம் நடத்த வெண்கலக் கிணறு நாற்பாங்குஎல்லையும், பொத்தனூர், குண்டுக்கல், எழுகரைநாடு, மேல்கரை மகமையும், வாங்கலில் நிலமும், அளித்து பட்டயம் எழுதிக் கல்வெட்டும் வெட்டினார்.

இவ்வறச் செயல்களை நித்தீசன் என்னும் கட்டளைப் பண்டாரம் நடத்துமாறு செய்து அவருக்குத் திருமணம் செய்வித்து, ஆச்சாரிய அபிடேகம் செய்து, ஓதுவார் சம்பளக் கொல்லை அளித்து அன்னதான மடம் ஏற்படுத்திப் "பரதேசி முத்திரை" அதிகாரத்துடன் அவரை நிலை நிறுத்தினார்.

(ஈ) அரவகிரி ஈசருக்கு அமுதுபடி அனுதினமும்
அய்யைந்தும் ஏழுதளிகை
ஆனகறி பயறுபடி ஆவின்நெய் பழம்வெல்லம்
அரும்அடைக் காயும்இலையும்

பரிவினொடு எண்ணெய்படி பழம்முப்பது இனியதயிர்
பாலும்எலு மிச்சம்பழம்
பசுவின்நெய் அரைப்படியும் மதுவரைப் படிமஞ்சள்
பலமொன்று சர்க்கரைபலம்

விரிவுபெறு காவேரி யுதகமொரு காவடியும்
மேவுசந் தனம்ஒருபலம்
வீறுகற் பூரசாம் பிராணிகள் வராகன்எடை
மிகுமஞ்ச ணத்திரவியம்

மருவமரு மாலைநற் கந்தமுட னேபுழுகு
மாறாமல் இவைதந்தனன்
மாவைஆட் கொண்டான் குமாரச் சுவாமிநிதி
வங்கிச மகாமேருவே.

மாவைக் குமாரசாமி முதலியார் திருச்செங்கோடு ஈசுவரனுக்கு ஒருநாள் பூசைக்கு 25 படி அமுதுபடிக்கும், ஏழு தளிகை, கறி, பயறு ஒருபடி, பசுநெய், பழம், வெல்லம், வெற்றிலைபாக்கு, எண்ணெய் ஒரு படி, முப்பது பழம், தயிர், பால், எலுமிச்சம்பழம், தேன்அரைப்படி, மஞ்சள் ஒரு பலம், சர்க்கரை ஒரு பலம், ஒரு காவடி காவிரி நீர், சந்தனம் ஒரு பலம்,

கற்பூரம், சாம்பிராணி ஒரு வராகன் எடை, மஞ்சணத்திரவியம், வாசனையுடைய பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை, வாசனையுடைய புழுகு இவைகளைத் தவறாமல் அளிக்கத் தக்க ஏற்பாடு செய்தார்.

(உ) ஆடரவ கிரிவேலர் சந்நதிமுன் ஒருமஞ்ஞை
அஞ்சடுக் குத்தீபமும்
ஆனதீ பங்கள்பல கிண்ணிபல தளிகைபல
அபிடேக கலசமணியும்

தேடரிய ஆலவட் டம்கவிகை கண்ணாடி
செப்புக் குடம்கண்டிகை
திருவாலி நீராதி தட்டுபல தூபமொடு
தீபதண் டுகள்கவரிகள்

நீடுதவ நித்தீச னுக்கும்இப் படிஈந்து
நியதிகள் மடமண்டபம்
நேயமட அடிமைபசு நந்தவன மும்தந்து
நிருவாக படிசம்பளம்

நாடரிய தானிகர் தன்வர்த்த னைக்கொல்லை
நன்றாக அருள்செய்தனன்
நன்மைபெறு மாவைக் குமாரசுவா மித்துரை
நதிகுல சிகாரத்நமே.

மாவைக் குமாரசாமி முதலியார் திருச்செங்கோடு வேலவர் சந்நதிமுன் ஒரு மயில்வாகனம், ஐந்தடுக்குத் தீபம், தீபங்கள், பல கிண்ணங்கள், பல தளிகை, பல அபிடேக கலசங்கள், மணி, பெரிய விசிறி, குடை, கண்ணாடி, செப்புக்குடம், உருத்திராக்கம், பல வழிபாட்டுப் பொருள்கள், தட்டுக்கள், தூபம், தீபத்தண்டு, கவரிகள் ஆகியவைகளை அளித்தார். தவயோகியாகிய நித்தீசனுக்கும் இப்படிப் பல பொருள்களைத் தந்தார். மடம், மண்டபம், மடத்தின் பணியாளர்கள், பசு, நந்தவனம், சம்பளமும் அளிக்க ஏற்பாடு செய்தார். எல்லோரும் அறியும்படியாக திருச்செங்கோடு தானிகர்கட்கு நிலக்கொடைகள் அளித்தார்.

(ஊ) சீரணியு மேடமா தத்தில்வரு பரணியும்
சித்திரையில் வருமதியமும்
திருவிழா மண்டபச் சிறப்பானி மூலமும்
திருவாடி யின்பூரமும்

வேரணியும் ஆவணிநன் மூலமும் கேதார
விரதமும் மகாநவமியும்
விசுவினபி ஷேகமும் மகாகந்த சஷ்டியின்
விரதமும் தீபாவளி

ஏரணிக் கிருத்திகையும் மார்கழியும் ஆதிரையும்
இனியசங் கிரமபூசையும்
இரவுசிவ பூசைமக மண்டபமும் மீனமும்
இலகுமுத் திரைபூசையும்

தாரணி புரக்கவரு மாவைஆட் கொண்டவன்
தருகுமா ரச்சுவாமி
சர்ப்பகிரி ஈசருக் கிப்படி நடத்தினன்
சந்ததமும் மிகவாழ்கவே

மாவை ஆட்கொண்டான் மகன் குமாரசாமி முதலியார் சித்திரை மாதப் பரணி, சித்திரா பவுர்ணமி, ஆனிமூலம், ஆடிப்பூரம், ஆவணிமூலம், கேதார விரதம், மகாநவமி, விசு, கந்தசஷ்டி விரதம், தீபாவளி, கிருத்திகை, மார்கழித் திருவாதிரை, சங்கிரமம், இரவு சிவபூசை, மீனம், முத்திரை பூசை முதலியவைகளைச் சிறப்புடன் செய்தார்.

(எ) மீனம்முதல் மிதுனம்அள வாகவும் அரவகிரி
வேலரையும் உமைபாகரை
மேனிகுளி ரும்படி சுகந்தகற் பூரமொடு
மிருகமதக் குழம்புசாத்தி

ஆனபரி வட்டமல் லிகைசாதி மல்லிகை
அணிந்தலங் காரித்தனன்
அமுதடைக் காயிலை வ்டைப்பருப் பாதிகள்
அமைத்துற நிவேதித்தனன்

பானுவொளி யானபிர தோடகட் டளையோடு
பலகார்த்தி கைப்படிகளும்
பரிவட்ட வகைநாலு நந்தியா தீபமும்
பலதீபம் மிகஏற்றினன்

மானபரன் மாவைஆட் கொண்டபூ பதிஅருள
வருகுமா ரசுவாமி
மாதரும மாகநித் தீசுரனும் இப்படி
வளம்பெற நடத்தினானே.

மாவைஆட்கொண்டான் மகன் குமாரசாமி முதலியார் மீனராசி முதல் மிதுனராசிவரை திருச்செங்கோட்டு வேலவர் அர்த்தநாரீசுரர் ஆகியோர் திருமேனிகள் குளிர்ச்சியடையும் வண்ணம் கற்பூரம் கலந்த கத்தூரிக் குழம்பால் அபிடேகம் செய்து பரிவட்டம் சாத்தி, மல்லிகை வகைகளால் அலங்காரம் செய்தனன். வெற்றிலை பாக்கையும் பருப்புவடையையும் நிவேதனமாகப் படைத்தார். பிரதோஷ கட்டளை கார்த்திகைப் படிகள்

பலவும் நான்கு பரிவட்டமும் நந்தியா தீபம் முதலிய பல தீபங்களையும் ஏற்றினர். குமாரசாமி முதலியார் பொருட்டு மேலேகண்ட முறைப்படி செய்தவர் நித்தீசன் என்பவர் ஆவார்.

(ஏ) மண்டலம் தொழுதேவ ராசய நரேந்திரன்
மந்திரி குமாரதளவாய்
மன்னன்உல காளுநா ளில்முத்து வசவய்யன்
வாவென்று நித்தீசனை

கொண்டலென உதவுமா வைப்பதி விளங்கிய
குமாரச் சுவாமிமகிபன்
கோதையுமை பாகருக் குத்தரு கிராமமும்
குலவுமக மையுமருளியே

அண்டையில் அழைத்துமுன் எப்படி நடந்துவரும்
அப்படி நடத்தென்னவே
அப்பணை தரத்திவ்விய லிங்கயன் சொற்படியின்
அந்தமுனி வன்பரிவுடன்

பண்டையில் வளம்பெறு படித்தரம் நடத்தினன்
பணிமலை அரன்கருணையால்
பாராள வந்தமகி சூராளும் மன்னவர்கள்
பலகாலும் மிகவாழ்கவே.

மைசூர் மன்னன் தேவராச உடையார் அரசாளும் நாளில் அமைச்சராக விளங்கியவர் குமார தளவாய் என்பவர். அப்போது அவருக்குட்பட்ட அலுவலராக இருந்தவர் முத்து வசவய்யன். மேகம் என உதவும் தன்மையுடைய மாவைக் குமாரசாமி முதலியார் நித்தீசன் அவர்களை அழைத்து திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு விடப்பட்ட மானியக் கிராமங்களில் மகமையைப் பெறுமாறு செய்தார். முன்பு பூசை முறைகள் எப்படி நடைபெற்றதோ அப்படியே நடத்துக என்று லிங்கையன் மூலம் அறிவித்தார். நித்தீசனும் அப்படியே பழையபடி படித்தரத்தை மிகவும் சிறப்பாக நடத்தினார்.

**6) செங்குந்தச் சின்னான் முதலியார்**

பாருலகென் கோதைப் பதிப்பேழைக் கல்லருகே
சீருலவு மண்டபமும் செய்தானே - ஏருலவு
சின்னான் குகனடியான் செங்குந்தன் ராசைவரு
மன்னாம் புகழபிரா மன்.

இராசிபுரத்தைச் சேர்ந்த செங்குந்த குலச் சின்னான் என்பவர் திருச்செங்கோட்டில் பேழைக் கல்லருகே சிறப்பான மண்டபம் ஒன்றை அமைத்தார். முருகன் அடியாரான அவர் இராசிபுர ஆட்சியாளர்.

**7) செங்குந்தர் குலப் பெரியாள்**

உத்தம வீர வாகின் உயர்குலப் பெரியாள் ஆண்டாங்
கொத்தரின் நிருதி மூலைக் குளம்இளங் கோயில் வேலர்க்கு
அர்த்தமண் டபமும் கர்ப்ப அகமகா கண்ட பங்கள்
பத்தியின் புரிந்து தானம் பலபணி மலையில் செய்தாள்.

வீரவாகு குலம் என்னும் செங்குந்தர் குலத்தில் தோன்றிய பெரியாள் என்பவள் தென்மேற்குத் திசையில் வேலவரின் இளங்கோயிலுக்கு கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைத் திருச்செங்கோட்டில் செய்தாள்.

**8. செங்குந்தர்**

அன்புநெறி பெருவீர வாகுமர பினில்உதித்து
அழகான நாககிரிவாழ்
அர்த்தநா ரீசர்வடி வேலரை வணங்கியே
அவர்பணி விடைக்கினியராய்த்

தென்பயிலு நட்டுவம் மத்தளம் பேரிகை
சிறந்தபதி னெண்மேளமும்
சீர்பாத சுமையினொடு அன்புமிகும் ஆண்மக்கள்
செய்யடிமை பெண்காணியும்

மண்புகழு நடனவித ராகவிசை தாளமும்
மதித்தமங் களநிர்த்தமும்
மாறுசந் திரகவுரி விருதுபல பாவாடை
மன்னும்அழகு ஆலாத்தியும்

இன்பமுடன் இன்னவைகள் சந்ததம் இயற்றியே
இளையவன் வரமெய்தியே
இயலான குரவோர்கள் ஏவுதொழி லாளரெனும்
இனியகைக் கோளர்இவரே.

வீரவாகு மரபினில் தோன்றி திருச்செங்கோட்டில் அர்த்தநாதீசு-வரரையும் வேலவரையும் வணங்கிப் பணிவிடை செய்துவருபவர்கள் செங்குந்தர்கள். நட்டுவம், மத்தளம், பேரிகை பதினெண்மேளம், சீர் பாத சுமை ஆகிய இறைபணியைச் செய்பவர்கள் அச்செங்குந்தர்குல ஆண்கள்.

நடனம், பல்வேறு இராகங்களில் இசை, தாளம், மங்கள நாட்டியம், விருதுகள், பாவாடை, ஆலாத்தி ஆகியவைகளைச் செங்குந்தர் குலப் பெண்கள் செய்வர்.

### 8) பலர் திருப்பணி

அரவகிரி ஆலயம் தனில்நிருதி மூலைதனில்
ஆனைமுக வன்தோவிலுண்
டாக்கியது கைக்கோள நல்லநயி னான்உபயம்,
அழகுகண பதிகோவிலும்

திருவழகு மடமடிமை ஆனதே வாள்பரிசு
சீர்பாத மண்டபமுடன்
சிகரமது விருமிஉப யம்பெரிய சவவனும்
செஞ்சொல்மல் லுடையர்உபயம்

பரவரிய நாகதீர்த் தத்தருகு சோபான
பதிமேலை வாய்தல்தனிலே
படியுநட மாளிகையும் இவைகுசச் செட்டிகள்
பணிந்தது நெடுஞ்சுனையில்

மருவிய கலிங்குகண பதிசுனை மதிற்கருணை
வாலரா சன்புண்ணியம்
மன்னுசன் பகவிநா கர்செம்ப குலமதனில்
வாய்ந்தபொம் மணன்உபயமே.

திருச்செங்கோட்டு மலையில் தென்மேற்கு மூலையில் விநாயகர் கோயில் கட்டியவர் கைக்கோளர்களில் நல்லநயினான் என்பவர்.

### 9) கருப்பண முதலியார்

பணிகிரி மேவிடு பாண்டீசர் கோவிலைப் பாங்குறக்கல்
பணியும் சுதைப்பணிச் சிகரமும் ஆக்கிப் பதிட்டைசெய்தான்
அணிமே விடுமுஞ் சின்னக்கவுண் டன்பா ளையத்தில்வரு
கணிசநற் செங்குந்த நல்லயன் ஈன்ற கருப்பணனே

சின்னக்கவுண்டன் பாளையம் செங்குந்தரில் நல்லய முதலியார் மகன் கருப்பண முதலியார் திருச்செங்கோடு பாண்டீசுவரர் கோயிலில் கற்பணியும் கோபுரத்தில் சுதைப் பணியும் உண்டாக்கி இறைவனை எழுந்தருளச் செய்தார்.

# 14. அவிநாசித் திருப்பணிப் பட்டயம்

மைசூர் மன்னன் கண்டீரவரசன் காலத்தில் அமைச்சன் காரமுசாவுதீன் கீழ் சேவூரில் இராமச்சந்திரன் அதிகாரம் செய்யும் காலத்தில் கொங்கு வேளாளரில் காடை குலப் பொன்னையன் மகன் தம்பணகவுண்டர் அவிநாசியிலும், திருமுருகன் பூண்டியிலும் நிர்வாகியாக இருந்தார். அப்போது (1813) செங்குந்தர்களில் தேவணன், மாரப்பன், செவளம்பூண்டி மாரப்பன் ஆகியோர் அவிநாசிச் சிவாலயத்தில் முன் கொடிக்கம்பத்தை நிறுவிய செய்தி பாடல் வடிவில் கூறப்பட்டுள்ளது.

சுருள் வடிவத்தில் இந்தப் பட்டயம் உள்ளது.

**மூலம்**

அவிநாசி லிங்கரும் பெருங்கருணையம்மனும் லட்சிக்கவும்.

துகைபெற்ற கலியுகம் நாலா யிரத்துத்
தொளாயிரம் ஈரேழுமேல்
தோன்றுசீ முகவருஷம் மிதுனநல் திங்களில்
துய்யமா வொன்பதனில்
சோதிபெறும் உயர்தசமி பாலவா கரணமும்
சுத்தசுப தினமதனில்


வகைபெற்ற மயிசூர் சமஸ்தானத் துக்கரசர்
வாள்வீர கண்டீரவன்
மன்னுகூ னம்பட்டியில் துரைசமுகன் மேற்பாதன்
வந்தகார முசாவுதீன்
மனமகிழ் பதாசேவை யூர்ராமச் சந்திரன்
மன்னவன் சுபதினத்தில்

செகமெச்சு முருகபுரி அவிநாசி நிலையரசு
செயவன்ன காடைகோத்திரம்
தீரனென வளர்பொன்னயன் ராசனருள் தம்பணன்
செங்கோல் செலுத்துநாளில்
செங்குந்த குலதேவ ணன்சித்திர மாரப்பன்
செவளைதரு மாரப்பனும்

மகமொற்ற புக்கொளிப் பதியீசர் சன்னதி
முன்வாய் துவசத்தம்பம்
வளருமுயர் கம்பமு நாட்டியே அவிநாசி
நாதரையும் அர்ச்சித்தபின்
மலைமகள் பெருங்கருணை அம்மனிரு தாளையும்
வணங்கமிக வாழ்கவென்றே!

**சிவமயம்**

காரமுசாவுதீன் அறிவேன்
சேவையூர் இராமச்சந்திரன் அறிவேன்
காடைகோத்திரம் தம்பணகவுண்டன் அறிவேன்
செங்குந்த கோத்திரம் தேவணன்முதலி அறிவேன்
மாரப்பமுதலி அறிவேன்
மாரப்பமுதலி அறிவேன்.




பல்லடம் நாரணாபுரம் கொங்கு வேளாளர் செப்பேட்டில்
கையெழுத்திட்ட

**ஆறுமுக முதலியார், சண்முக முதலியார், சமயமுதலிப் பட்டக்காரர்**

**தேவண முதலியார் ஆகியோர்**



செங்குந்தர் தலைப்பலி சிற்பம்
- விஜயமங்கலம்



1876 - 77 தாது வருடப் பஞ்சக் கும்மியில் செங்குந்தர்



## நூலாசிரியர் குறிப்பு

'கல்வெட்டறிஞர்'

**புலவர் செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் வெள்ளமுத்துக்கவுண்டன் வலசில் 02.01.1938 அன்று பிறந்தவர். பெற்றோர் சென்னியப்பகவுண்டர் - நல்லம்மாள். ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் 1955 ஆம் ஆண்டுபள்ளியிறுதிக் கல்வியை முடித்து, திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் 'வித்துவான் பட்டம்' பெற்றார். தான் பயின்ற ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார் (1959 - 1963).

பண்டைய எழுத்துக்களைப் படித்துக் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி ஆய்வு அனுபவத்தால் சி.எஸ்.ஐ. உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு தொல்லியல் துறையில் பணியில் சேர்ந்தார். பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றி (1982 - 1998) தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் நூலாகிய "தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்" தொகுதியை வெளியிட்டார் (1983). இந்நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றது.

ஓய்வு பெற்றபின் ஈரோட்டில் தங்கி ஐம்பதாண்டு கால (1959 - 2009) ஆய்வுகளை நூல்களாக வெளியிட்டு வருகிறார். சேதுபதிகள், தொண்டைமான்கள், மராட்டியர், இசுலாமியர், வேட்டுவர், வேளாளர், பாளையக்காரர்கள் பிற சமூக வரலாற்று ஆவணங்களை வெளியிட்டுள்ளார். நொய்யல்கரைக் கொடுமணல் நாகரிகத்தை வெளிப்படுத்தியதுடன் காலிங்கராயன், சின்னமலை வரலாறுகளையும் ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

"கல்வெட்டறிஞர்", "தொல் ஆய்வுக்காணியாளர்" உட்பட பல பட்டங்களையும், "தமிழக தொல்லியல்கழக விருது", "இந்தியக் கல்வெட்டாய்வுக்கழக விருது" உட்பட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

100 புத்தகங்களும், 200க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும், நூற்றுக் கணக்கில் கண்டுபிடித்த செப்பேடுகளும், கல்வெட்டுகளும் இவர் ஆய்வுத்திறனை வெளிப்படுத்துகின்றன. ஐந்து உலகத் தமிழ் மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்திய இவர் தொடர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இவர் முகவரி :
**புலவர் செ. இராசு,**
'புலவர் பூங்குடில்', 58/2 திரு. வி.க. நகர் சாலை, ஈரோடு - 638 011
தொலை பேசி : 0424 2262664

Saagar Prints, Erode : 94432 16877